# வரும் புயல் நாங்கள்

நெஞ்சம் நிறைந்த அய்யா இரா. இளவரசு அவர்கள் மறைந்து ஓராண்டு நிறைவுறுகிறது. அவரது முதலாம் ஆண்டு நினைவாக இந்நூல் மீள்பதிப்பாக வெளிவருகின்றது.

**முனைவர் இரா. இளவரசு**
மேனாள் பேராசிரியர் & தலைவர்
பாரதிதாசன் உயராய்வு மையம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்

அமிழ்தம் பதிப்பகம்

## நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **வரும் புயல் நாங்கள்** |
| ஆசிரியர் | : | முனைவர் இரா. இளவரசு |
| பதிப்பாளர் | : | இ. வளர்மதி |
| மறுபதிப்பு | : | 2015 |
| தாள் | : | 16 கி வெள்ளைத் தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 252 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. 230/- |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | மதர்போர்டு<br>சென்னை - 14. |
| அட்டை வடிவமைப்பு | : | டிராட்ஸ்கி மருது |
| அச்சிட்டோர் | : | வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>வடபழனி, சென்னை - 26. |
| வெளியீடு | : | **அமிழ்தம் பதிப்பகம்**<br>பி-11, குல்மொகர் அடுக்ககம்,<br>15பி, தெற்கு போக்கு சாலை,<br>தியாகராயர் நகர், சென்னை - 600 017. |
| விற்பனையகம் | : | **தமிழ்மண் பதிப்பகம்**<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர் நகர், சென்னை - 600 017.<br>9444410654, 044-24339030 |



**தோற்றம்: 12-6-1939**
**மறைவு : 22-1-2015**

# மீள்பதிப்பு

பேராசிரியர் இளவரசு என் நெஞ்சம் நிறைந்த தமிழ்ப் பேரறிஞர். திராவிட இயக்கக் கொள்கைகளிலும் தனித்தமிழியக்கக் கொள்கைகளிலும் பேரீடுபாடு கொண்ட பெருந்தமிழ் அறிஞர். தனித்தமிழியக்க முன்னோடிகளில் முன்னவர். தனக்கென வாழாது தமிழ்க்கென வாழ்ந்தவர். என் தமிழ் வாழ்வில் என்னைத் தூக்கி நிறுத்திய பெருமக்களில் இவருக்குப் பெரும் பங்குண்டு. கொள்கையில் உறுதியும், அஞ்சா நெஞ்சமும், எந்த நிலையிலும் யாரிடமும் தலைதாழா தன்மானப் பேராசான்.

இப்பெருந்தமிழ் அறிஞர் மறைந்து ஓராண்டு முடிந்து விட்டது. என்போன்றார்க்கு அவர் மறைந்தார் என்பதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவரோடு பழகிய நாட்கள் என் நெஞ்சில் என்றும் நிலைத்து நிற்கும் நினைவுகள். மலேசியத் திருமண்ணில் மொழிநூல் கதிரவன், மொழிஞாயிறு பாவாணர் நூற்றாண்டை ஒட்டி தமிழ்மண் பதிப்பகம் வெளியிட்ட நூல்களின் அறிமுக விழா 2002 இல் நடைபெற்றது. நாங்கள் இருவரும் கலந்துகொண்ட அந்த நிகழ்வுகளை எண்ணிப் பார்க்கிறேன். கண்களில் நீர்வழிய அவருடைய நினைவாக அவர் எழுதிய அறிவுச் செல்வங்களை தமிழ் கூறும் நல்லுலகம் பயன்கொள்ளும் வகையில் மீள் பதிப்புச் செய்வதை என் கடமையாகக் கொள்கிறேன்.

– **கோ இளவழகன்**

## வரும்புயல் நாங்கள்

தேனருவியாகக் குதித்திறங்கும் பாவேந்தரின் கவிதை மரபை உள்ளத்துள் ஏந்திய உயர்ந்த படைப்பாளி பேராசிரியர் இரா. இளவரசு அவர்கள்.

பள்ளிப் பருவம் தொட்டே ஒடுக்கப்பட்டோர் உரிமைக்கு வலிமை சேர்க்கும் செயல்பாடுகளை முன்னெடுத்தவர். அச்செயல்பாட்டிற்குத் தம் கவிதைகளைப் படைக் கருவியாக மாற்றிக் கொண்டவர்.

சாதி ஆணவத் திமிரடக்கும் கவிதைகளை எழுபதுகளிலேயே எழுதிய பெருமைக்குரியவர்.

பலநூறு நூல்களைப் படைக்கும் அறிவாற்றல் மிக்கவரானாலும் அதியமான் அவ்வைக்கு வழங்கிய நெல்லிக்கனி போல ஒருசில அரிய நூல்களை மட்டுமே தமிழுலக்கு வழங்கியுள்ளார்.

அரை நூற்றாண்டுக்கும் மேல் கவிதையாக்கும் கலைக்குத் தம் உழைப்பைத் தந்தவர். அவ்வுழைப்பின் நிறைபயனாக ‘வரும் புயல் நாங்கள்’ கவிதைத்தொகுப்பு விளங்குகிறது.

பேராசிரியர் இரா. இளவரசு மணி விழாக்குழுவின் முன்முயற்சியால் 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற மணி விழாவை ஒட்டி இந்நூல் அச்சு வடிவம் பெற்றது. பேராசிரியர் இளரவசு அவர்களின் நேரடிப்பார்வையிலே இது நடைபெற்றது.

பேராசிரியர் இளவரசு அவர்கள் 2015 சனவரி 22ஆம் நாள் நம்மை விட்டுப் பிரிந்தார். 2016இல் நடைபெறும். அவருடைய முதலாண்டு நினைவேந்தல் நிகழ்வை ஒட்டி ‘வரும்புயல் நாங்கள்’ மறுபதிப்புக் காண்கிறது.

எம் மண்ணும் வியந்து போற்றும் தமிழ்மண் பதிப்பகம் ‘வரும்புயல் நாங்களின்’ முதல் பதிப்பை வெளியிட்டது போலவே மறுதிப்பையும் பெருமிதத்துடன் வெளியிடுகிறது.

**– வைகறை**

## உள்ளே


| | |
|---|---|
| பதிவு | 8 |
| எண்ணம் வெளுக்க இவை | 17 |
| மனிதனை நாடி... | 26 |
| வேகின்றார் தமிழர் | 32 |
| பதைக்குமென் நெஞ்சம் | 34 |
| நாடு சிறந்திடவே நன்று | 35 |
| திருந்துவாரோ? | 37 |
| வரும் புயல் நாங்கள் | 39 |
| கருப்பன் சிவந்தான் | 42 |
| அன்றும்இன்றும் | 44 |
| பந்தாட்டம் | 45 |
| 'இன்னும் வரலியா?' | 46 |
| வருகிறோம் | 47 |
| பள்ளப்பயல் நான் | 48 |
| எழுச்சியூற்று | 49 |
| ஏன்? ஏன்? | 50 |
| புதிய உணர்ச்சி | 51 |
| உன்னெழில் | 52 |
| தனிப்பாடல் | 54 |
| இரவு பகலாகும் | 55 |
| வாழ்முறை சிறக்க... | 58 |
| சமத்துவம் | 59 |
| உயிரியற்கை | 60 |
| சாலை | 61 |
| முதல்வேலை | 62 |
| மானப்போர் | 64 |
| நிகரிலாத் தமிழ் | 65 |
| மானம் காப்போம் | 66 |
| சொல்லு போ போ | 68 |
| கொதித்தெழுவாய் | 70 |
| ஆர்த்தெழுவீர்! திராவிடத்தீர்! | 71 |
| கொட்டடா பெரும்பறை | 73 |
| பகுத்தறிவு | 75 |
| குடியாட்சி வாழ்க! | 77 |
| அறத்தைக் காக்கிறான்! | 79 |
| 'வந்தே மாதரம்' | 80 |
| 'அறிவாளர்கள்' | 81 |
| அம்மை அருள்! | 85 |
| வாழ்க இனநலம் | 86 |
| நமையுயர்த்தும்சீர் | 88 |
| நம்பாவாணர் | 90 |
| அண்ணா | 93 |
| திருக்குவளை மலரே! | 96 |
| மடம் | 98 |
| முன்னேற்றம் | 101 |
| பேருந்து | 102 |
| இராசா மனை | 105 |
| முகப்புல் | 107 |
| நான்தான் | 108 |
| நீங்களும் நாங்களும் | 109 |
| 'ஐயாவோ ஐயாவோ' | 110 |
| நெஞ்சு நேர்ந்தவளுக்கு | 113 |

மணியற்கு மடல் 120
புறா விடு செலவு (சாத்தற்கு மடல்) 122
நிலமகள் 125
உரிமை 125
கைதி 125
மலையாளம் 126
பாட்டாறு 126
வாயில் திறக்கும் 127
மன்றல் வாழ்த்து 128
அவ்வையார் - அழகப்பர் மணவிழா வாழ்த்து 130
காட்சி என்னே! 131
பொங்கல் வாழ்த்து 131
பொங்கல் நினைவு 131
பொங்கல் விழைவு 132
முன்னேற்றப் பொங்கல் 132
பொங்கலோ பொங்கல் 132
விடியலின் வினாக்கள் 133
அரசு - உறுப்புகள் 134
தமிழின் இனிமை 139
வருக! வாழ்க! 146
வரவேற்கிறேன் 150
பாவேந்தன் ஆற்றுப்படை 154
குழந்தை 157
முகம் - உறுப்புகள் 166

**விடுதலை**

எழுதினார்கள் 179
தாய்மொழி 197
புலரும் பொழுது 199
இறவாப் பெருஞ்சாவு 204
என்னடா நெஞ்சம் இது 207
கடல் நண்பா! 209
விடுதலை 212
கூப்பிடுகின்றேன் 214
ஏழையர் 216
வழிவிடு பெண்ணே 218
பைந்தமிழ்ப் பணி 221
நாளைதான் பிறவேலை 223
படைவேண்டும் 226
தம்பீ 229
தங்கையே! 231
துணி வெளுக்கின்றாள் 233
போதுமடா காதல் 235
மணப்பீர் போலும் 238
பிரிந்திடப் போகிறேன் 241
வரலாற்றில் முதல்வன் 245
வள்ளல் பாவேந்தன் 247
தென்பொதிகைப் பூங்காற்றே 249

## பதிவு

இன்றைக்கு நாற்பத்து மூன்று ஆண்டுகளின் முன் (1959) திருச்சிராப்பள்ளித் தூயவளனார் கல்லூரி மாணவர்களாக இருந்த நாங்கள் கண்ட தூய தமிழியக்கமே 'தமிழ்ப்பேராயம்'. அப்பேராயத்தின் முதற்செயலாளராக என்னைத் தேர்ந்தெடுத்தனர். பேராயத்தின் சார்பில் 'தமிழ்ஒளி' என்னும் கையெழுத்து ஏடு கொணர்வதாய் முடிவு செய்யப்பட்டது. அவ்வேட்டின் ஆசிரியப் பொறுப்பு பேராயத்தின் முதன்மையராகக் கருதத்தக்க தமிழ்க்குடிமகனுக்கு வழங்கப்பட்டது. அப்போது அவர் பெயர் சாத்தையா, என் பெயர் பிச்சை. பேராயத்தின் கொள்கைப்படி அனைவரும் தனித்தமிழ்ப் பெயர் பூண்டோம். தமிழக மாணவர் வரலாற்றில் தனித்துக் குறிப்பிடவேண்டிய நிகழ்வு இது.

'தமிழ்ஒளி' மூன்று அல்லது நான்கு இதழ்கள் வெளிவந்ததாக நினைவு. வண்ண ஓவியங்களுடன் பாடல்கள், நாடகங்கள், கதைகள், கட்டுரைகள் இடம் பெற்றன. எங்களுக்குப் பயில்களமாக விளங்கிய 'தமிழ் ஒளி'யில் தான் முதன்முதல் பாடல் எழுதத் தொடங்கி னேன். இதழ் இப்போது கிடைக்காத நிலையில் முதலில் எழுதிய பாடல்வரிகள் சிலவற்றை நினைவிலிருந்து பதிவு செய்ய விரும்புகிறேன்.

*''சேட்டுகளும் பூட்டுகளும் நமது நாட்டில்*
*செழிப்போடு கொழுப்போடு வாழும்போது*
*பாட்டன்வழி வந்தநமது அண்ணன் தம்பி*
*பஞ்சைகளாய்ப் பராரிகளாய்ப் பாரிலெங்கும்*
*ஒட்டினையே கையேந்தி ஒடுங்கி வாழும்*
*ஒப்பற்ற இழிநிலையை ஒழிப்போம் வாரீர்!''*

என்பது எண்சீர் விருத்தம் ஒன்றின் முதல் மூன்றடிகளாகும். பிள்ளைமைச் சொல்லாட்சி இப்போதும் மகிழ்ச்சி அளிக்கத்தான் செய்கிறது!

பொருளியல் இளங்கலை முடித்தபின் தமிழ் முதுகலை பயிலக் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் சேர்ந்தேன். செந்தமிழ்க்கழனியாகிய செட்டிநாட்டில் கவிதைப்பயிர் தழைத்தோங்கிய காலம் அது. கம்பன் கழகத்தில் கவியரங்கம், திருக்குறள் கழகத்தில் பாட்ட ரங்கம், தொடர்ந்து நடைபெறும் கல்லூரி விழாக்களில் நாடறிந்த பாவலர்களின் நற்றமிழ்க் கவிதைகள் அரங் கேற்றம் என எங்கு நோக்கினும் கவிதை அணிவகுப்பு!

கல்லூரியில் அறிஞர் வ.சுப.மாணிக்கனார் அமைத் திருந்த 'கலைக்கழகம்' மாணவர்களின் நினைவாற்றல், பேச்சாற்றல், எழுத்தாற்றல் முதலியவற்றை வளர்த் தெடுப்பதில், தமிழுணர்வைத் தழைக்கச் செய்வதில் அளப்பரிய பணியை அமைதியாகச் செய்தது. போட்டி களை நடத்தி அதற்கான பரிசுகளை நூல்களாக வழங்கியது. அந்நூல்களில், முத்து முத்தான எழுத்துகளில் தானே பரிசின் பெயரை எழுதி 'வ.சுப.மாணிக்கம்' என்று ஒப்பமிட்டு வழங்குவார். இப்படி என் பேராசிரியரின் கையெழுத்தைத் தாங்கிய பல நூல்கள் என் இல்லத்தை அணிசெய்கின்றன. அப்படி நடத்தப்பட்ட 'குழந்தைக் கவிதைப் போட்டி'யில் தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணத்தை எனக்குப் பரிசாகப் பெற்றுத்தந்த பாடலே 'விடியலின் வினாக்கள்' என்பது. 1961 தொடக்கத்தில் எழுதப்பட்ட அப்பாடலிலிருந்து 2002இல் எழுதப்பட்ட பாடல்கள் வரை இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. பாடல்களின் முடிவில் அவை எழுதப்பெற்ற ஆண்டுகள் குறிக்கப்பெற்றுள்ளன.

முதுகலை பயிலும்போது எழுதப்பெற்றவை 'உன்னெழில்' பாடலில் ஒலிப்பதைக் கேட்கலாம். மாணவர்களின் கேளிக்கைப் போக்கைக் கண்டு வருந்திச் சினந்து எழுதிய பாடலும் இதில் இடம்பெற்றுள்ளது. அந்தக் காலத்தில்தான் கவியரசு கண்ணதாசனின் 'தென்றல்' என்னும் தீந்தமிழ் இதழில் சில வெண்பாக் களையும் எழுதினேன் 'தென்னகத்தலைவன்' என்னும் இன்னொரு இதழில் அண்ணாவைப் பற்றிய கவிதைப் போட்டியில் முதற்பரிசும் பெற்றேன். அக்கவிதை

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. என் உணர்வுகளை ஆளும் அண்ணாவைப் பற்றி இன்னும் சிறந்த கவிதையை எழுதவேண்டும் என்னும் ஏக்கம் என்னுள் இருந்து கொண்டேயிருக்கிறது.

சட்டக்கல்லூரியில் பயின்ற ஓராண்டில் எழுதிய பாடல்கள் சில. உடன் பயின்ற குடகுப்பெண் ஒருத்தியின் தாராளப்பார்வை வீச்சில் நண்பர்கள் உள்ளம் பறிபோன அவலத்தை அடிக்கருத்தாக்கி ஒரு பாடல் புனைந்தேன். 1972இல் வெளிவந்த என் 'விடுதலை' தொகுப்பில் அப்பாடல் இடம்பெற்றுள்ளது. சட்டக்கல்லூரியின் நாடறிந்த தமிழ்ப்பேரவைப் பொறுப்பாளர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றேன். மாணவர்களிடம் ஆதரவைத் திரட்டும் அறிக்கைகளில் இடம்பெற எழுதிய பாடல்கள் சில. பெண்களின் ஒவ்வாத ஒப்பனைகளை வெறுத்தெழுதிய வெண்பாக்கள் சில. சிறுபிள்ளை விளையாட்டைப் போல் தீட்டப்பட்ட அவை இத் தொகுப்பில் இணைந்துள்ளன.

இந்தித்திணிப்பு எதிர்ப்புப் போராட்டம என்பது இருபதாம் நூற்றாண்டுத் தமிழின வரலாற்றில் பேரிடம் பெறுவதாகும். உலக வரலாற்றில் இதற்கு இணையான மொழிக்காப்புப்போரைக் காண முடியுமா என்பது ஐயமே. தமிழ் இலக்கியப் படைப்பாளிகள் பலர் இப் போராட்டத்தைக் கண்டுகொள்ளவேயில்லை. பாரதிதாசன் வழியினராகிய பாவலர் பட்டாளம் போராட்டத்தை வளர்த்தெடுக்கும் எழுச்சிமிகுந்த பாடல்களை இயற்றினர். நானும் பல பாடல்கள் எழுதினேன். அவற்றில் முன் தொகுப்பில் இடம்பெறாத பாடல்கள் இத்தொகுப்பில் இணைந்துள்ளன. இப்பாடல்களில் இடம்பெற்றுள்ள சில அடிகள் போராட்டக்காலத்தில் மாணவர்களின் துண் டறிக்கைகளில் என் பெயரின்றி எடுத்தாளப்பட்டன. எழுச்சியூட்ட அவை பயன்படுவதை எண்ணி மிகவும் மகிழ்ந்தேன்.

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பாட்டாற்றலைப் போற்றுபவன் நான். முனைவர் தமிழ்க்குடிமகனின் மணவிழாவையொட்டிப் பெருஞ்சித்திரனார் வெளியிட்ட

சிறுநூல் 'மகபுகுவஞ்சி'. பின்னர் விரிவுபெற்ற அந்நூல் வஞ்சிப்பாவுக்கு எடுத்துக்காட்டாய் இலக்கிய வரலாற்றில் இலங்குவதாகும். அதன் நடையில் நான் ஆட்பட்டிருப்பதை இந்த நூலில் இணைந்துள்ள 'புறாவிடுசெலவு' என்னும் என் பாட்டுவரிகள் காட்டும். என் துணைவி காதலியாக இருந்தபோது நான் எழுதிய கவிதைமடலும் இடம்பெற்றுள்ளது. அந்த மடலை எல்லோரும் படிக்க வேண்டுமா என்று முதலில் தயங்கினேன். உலக இலக்கியங்களில் இப்படி எழுதப்பட்டவை பல இணைக்கப்பட்டுள்ளன என்பதாலும் இம்மடலின் செய்திகளில் விலக்கத்தக்கவை இல்லை என்பதாலும் ஏக்கமும் காதலும் இடையூறும் எவ்வாறு கவிதையை ஈன்றெடுக்கின்றன என்பதை உணர்த்த வேண்டும் என்பதாலும் அக்கவிதை சேர்க்கப்பட்டுள்ளது.

தந்தை பெரியாரின் இறுதி ஊர்வல வருணனையை வானொலியில் கேட்டு முடித்தவுடன் எழுதிய பாடலே 'ஐயாவோ ஐயாவோ' என்பது. தமிழ்க்குடிமகனின் 'கைகாட்டி' இதழ் பெரியார் மலரில் இது வெளியிடப் பெற்றது.

பாட்டரங்குகளில் தலைவனாகவும், வரவேற்பாளனாகவும், பாவலர்களில் ஒருவனாகவும் நான் வழங்கிய கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. தலைமை ஏற்றுப்பாடும்போது பாவலர்கள் பாடி முடிந்தவுடன் அவர்களின் பாட்டளிப்புப் பற்றிச் சில அடிகள் உடனுக்குடன் இயற்றியளிப்பது என் வழக்கம். அதைக் கேட்டு வியந்து பாராட்டியவர் உளர். சிறு சிறு தனித்தாள்களில் அப்படி எழுதியவற்றுள் பல தொலைந்து போயின. ஆதலால் அத்தகைய பகுதிகள் தொகுப்பில் இடம்பெறவில்லை. பறம்புக்குடி உலகத்தமிழ்க் கழக மாநாட்டுப் பாட்டரங்கில் 'தமிழ் இனிமை' என்னும் தலைப்பில் நான் பாடிய பாடலின் சில பகுதிகள் முன் வெளிவந்த 'விடுதலை' நூலில் இடம்பெற்றிருந்தன. இத்தொகுப்பில் பாடலின் முழுவடிவம் தரப்பட்டுள்ளது.

என் கல்லூரி ஆசிரியப்பணியின் தொடக்கக் காலத்தில் (1970-76) தஞ்சை மன்னர் சரபோசி கல்லூரி

யில் பணியாற்றினேன் தஞ்சை மண்ணிற் பெற்ற பட்டறிவின் பயனாகப் பிறந்தவையே 'புதுப்பா'வைப் போல் தோற்றமளிக்கும் எளிய அகவற்பாக்கள். 'தோழன்' என்னும் புனைபெயரில் அறிவியக்கம், சிகரம் முதலிய இதழ்களில் இப்பாடல்களில் பல வெளிவந்தன. நடப்பு நிகழ்ச்சிகளை உரசிக்காட்டும் அப்பாடல்களை இப்போது கண்ணுறும் சிலர் 'இப்படியெல்லாம் எழுதியிருக்கிறீரு களா' என்று விழியை விரிக்கின்றனர். 'அப்போதே நூல்வடிவில் வெளிவந்திருந்தால் தமிழ்க் கவிஞர் உலகில் உங்களுக்குரிய இடம் கிடைத்திருக்குமே' என்று கேட்கின்றனர். இடம்பிடிப்பதற்காக எழுதப்பட்டவை யல்ல அவை, எளியவர்கள் எழுச்சிபெறவேண்டும் என்னும் ஏக்கத்தின் வெளிப்பாடுகள்!

'அம்மை அருள்' என்ற தலைப்பில் ஒரு பாடல். 'அறிவியக்கம்' இதழுக்கு அனுப்பினேன். என் மதிப்பிற் குரிய பேராசிரியர் சாலை இளந்திரையன் அவ்விதழின் ஆசிரியர். எனக்கு எழுதினார். ''தோழன்' என்னும் புனைபெயரில் இப்பாடலை வெளியிட்டால் பாடலை நான் எழுதியதாகப் பொதுவுடைமை இயக்கத்தோழர்கள் கருதுவார்கள். ஆதலால் உங்கள் இயற்பெயரிலேயே வெளியிடவா?'' என்று. பாடல் என் இயற்பெயரிலேயே வெளிவந்ததோடு தலைப்பும் 'வலதுபக்கம் போனவர்கள்' என்று மாற்றப்பட்டிருந்தது. இந்தச் சிறிய பாடலை அப்படியே பெரிய எழுத்துகளில் கட்டம் கட்டித் தான் நடத்திய 'காண்டீபம்' இதழில் எசு.எசு.மாரிசாமி என் இசைவு பெறாமலேயே வெளியிட்டிருந்தார். மார்க்சியப் பொதுவுடைமை இயக்கத் தலைவர்கள் சிலரும் இப்பாடல் தொடர்பில் என்னைக் கண்டு பேசினர். பாடல் மதுரையில் நடந்த, அனைத்திந்திய அளவிலான மார்க்சியப் பொதுவுடைமை இயக்கத்தின் மாநாட்டு நிகழ்வுகளை ஒட்டி எழுதப்பெற்றது. சிவப்புடை அணிந்த இயக்கத்தினர் பலர் அருச்சனைத் தட்டுகளோடு மீனாட்சி கோயிலில் அணிவகுத்ததைச் செய்தித்தாள்கள் வெளியிட்டிருந்தன. அச்செய்தியை மையமாக்கிக் கிண்டற்சுவையோடு கேள்வி எழுப்பும் வகையில் அமைந்த அப்பாடல் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

1975ஆம் ஆண்டின் தொடக்கம், தஞ்சை இராசாமிராசுதார் மருத்துவமனையில் என் மகன் பிறந்தான். அப்போது குடும்பக் கட்டுப்பாடும் செய்து கொண்ட நிலையில் என் மனைவி பட்டபாடு, மருத்துவர்கள், ஊழியர்கள் நடந்துகொண்ட விதம் என்னை உலுக்கிவிட்டது. அதற்கு முன்னரே, செருப்புத் தொழிலாளியாக இருந்த என் நண்பர் ஒருவரின் ஏழெட்டு அகவையுள்ள மகனொருவன் மருத்துவர்களின் பலமணி நேரப் பாராமுகத்தால் இறந்து போனான். இப்படிப்பட்ட நிகழ்வுகள் அந்த மருத்துவமனையில் அப்போதைய அன்றாட நடப்புகள்! அந்தக் கொடுமைகள் என்னுள் ஏற்படுத்திய கடுங்கொதிப்பின் தாக்கமே 'இராசாமனை' எனும் பாடல். விதிவிலக்காக இருக்கும் சில நல்லவர்கள் அப்பாடலின் கடுமையில் வெளிப்படும் உண்மையை உணர வேண்டுகிறேன்.

1994இல் மயிலாப்பூரில் சட்டப்பேரவை இடைத் தேர்தல்; பிறப்பெடுத்துச் சில ஆண்டுகளிலேயே களம் புகுந்தது ம.தி.மு.க.! ம.தி.மு.க.வின் தோற்றத்தை 'மாற்றம் விளையும்' என்னும் நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்த எனக்குப் பேரிடியாய் இடைத்தேர்தல் நிகழ்வுகள் அமைந்தன. அக்கட்சிசார் இதழ் உரிமையாளர் ஒருவர் காஞ்சி சங்கராச்சாரியாரின் ஆசியையும் சந்தன மாலையையும் பெற்று வந்ததும், வேட்பாளர் வடமொழி மந்திரத்தை ஓதித் தேர்தல் வேலையைத் தொடங்கியதும் இன்ன பிற நடப்புகளும் என்னை வாட்டின. ஓர் இடைத்தேர்தலுக்கே இப்படியென்றால்... எதிர்காலம் எப்படியிருக்கும்? இவ்வுணர்வை அக்கட்சியின் நண்பர்கள் சிலருடன் பகிர்ந்துகொண்டேன். 'அறிவாளர்கள்' என்னும் உரைப்பாவின் பின்புலம் இதுதான்.

'மனிதனை நாடி' எனும் நெடிய பாடல் கொடிய சாதிப் பிணைப்புகளை அறுத்தெறிந்து 'அனைவரும் உறவினர்' என்று பறையறைவது. மானிடப்பிறப்பின் மேன்மையை உரத்துக் கூவுவது. உலகத்தை ஒரு நகரமாகவும் தமிழ்நாட்டை அதன் ஒரு சிறிய தெருவாகவும் மாவட்டங்களை அத்தெருவில் அமைந்த

வீடுகளாகவும் உருவகப்படுத்தித் தமிழகத்தில் சாதி உணர்வு தலைதூக்கி நிற்பதைக் குறிப்பாகக் காட்டுவது. இப்பாடலை ஓர் இதழுக்கு அனுப்பினேன். பாடலுக்குள் வரும் சாதிக்குறிப்பு இதழாசிரியர் மனத்தை உறுத்தியதால் வெளியிடப்படவில்லை. பாடலின் பிற்பகுதி எழுத்தாளர் அகிலன் அவர்களால் ''முரட்டுப்பாடல்', இருந்தாலும் இதனைப் பதிவுசெய்வோம்'' என்று இசைவளிக்கப் பெற்றுச் சென்னை வானொலியில் ஒலிபரப்பப் பெற்றது.

நூலின் தொடக்கத்தில் இடம்பெறும் குறட்பாக்கள் பகுதி பகுதியாக எழுதி இணைக்கப்பெற்றவை. இவற்றைத் தனிநூலாக வெளியிட வேண்டும் என்று கருத்துரைத்தோர் பலர். தொடக்கத்தில் எழுதப்பெற்ற குறட்பாக்கள் 'பொறிகள் இருபது' என்னும் தலைப்பில் 'கல்லூரி ஆசிரியர் குரல்' என்னும் இதழிலும், 'தமிழும் தமிழரும்' என்னும் சிறு நூலிலும் இடம்பெற்றன. பின்னர் 'எண்ணம் வெளுக்க இவை' என்னும் தலைப்பில் ஐம்பது குறள்கள் 'விண்முகில்' என்னும் இதழில் வெளிவந்தன. இவ் விதழைக் கண்ணுற்ற தினமணி இதழார் இதிலிருந்து மூன்று குறள்களை எடுத்து, முன்குறிப்பு எழுதி, என் படத்தையும் இணைத்து 'ஊர்வலம்' பகுதியில் வெளியிட்டிருந்தனர். அதைப் படித்த பலர் என்னோடு தொடர்பு கொண்டனர். இத்தகு குறட்பாக்கள் இன்னும் வரும்.

பழைய ஏடுகளிலும் தனித்தனித் தாள்களிலும் கிடந்த பாடல்களைத் தொல்லை பாராது படியெடுத்து உதவியவர் என் இனிய மாணவர் முனைவர் ய.மணிகண்டன். முன்னர் எழுதிய பொங்கல் வாழ்த்து அட்டைகளைத் தேடி எடுத்து உதவியவர் புலவர் பி.தமிழகன். தனக்கு எழுதிய மடலை இத்தொகுப்பில் இணைத்துக் கொள்ளத் தயங்கித் தயங்கி இசைவளித்தவர் என் துணைவியார் பேராசிரியர் இரா.வேலம்மாள்.

'பாடல்களைக் கொடுங்கள். நூலாக்குகிறேன்' என்று பல்லாண்டுகள் பலமுறை கேட்டவர் வைகறை. 'தருகிறேன்' 'தருகிறேன்' என்று காலங்கடத்தினேன். 'மணிவிழா மலர் வெளியீடு' என நண்பர்கள் கூடி ஒரு முடிவெடுத்து அதனையொட்டி எனது படைப்புகளையும்

வெளியிடவேண்டும் என்றனர். குறிப்பாக வைகறையும் சந்திரசேகரனும் பெருஞ்சுமையைத் தாங்களே தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு என்னிடமும் வேலை வாங்கிவிட்டனர். நூலமைப்பு, நூல்தலைப்பு, பாடல்கள் வைப்புமுறை முதலிய பலவற்றையும் இந்த இருவரே பார்த்துக் கொண்டனர். அச்சு வடிவமைப்பு நண்பர் பாலமுருகனுடையது. பொருட்செலவைப் பொருட் படுத்தாமல் இத்தொகுப்பு வெளியிடுபவர் தமிழ்மதி பதிப்பகத்தார். பாடல்களை நூல்வடிவில் காணப் பெரிதும் விரும்பியவர் இனிய நண்பர் கோ.இளவழகன் ஆவார். அனைவரையும் நன்றியோடு நினைவு கூறுகிறேன்.

இத்தொகுப்பை ஒரு கதம்பமாலை எனல் பொருந்தும் அம்மாலையில் மலர்களும் இருக்கும். இலைதழைகளும் இருக்கும். மலர்களில் மணம் நிறைந்த வையும் உண்டு. குறைந்தவையும் உண்டு.

இருபத்திரண்டு அகவை இளைஞனாக நான் எழுதியவையும் அறுபத்து மூன்று அகவை முதியவனாக எழுதியவையும் இத்தொகுப்பில் உள. மாணவனாக, ஆய்வாளனாக, ஆசிரியனாகப் பல பணிநிலைகளில் என்னால் எழுதப்பெற்றவை இவை. இத்தொகுப்பு நாற்பதாண்டுகளுக்கு மேற்பட்ட என் உணர்வோட்டங் களின் ஊர்வலம்! கருத்து வளர்ச்சிக் கண்ணாடி!

என் இயக்கத்தின் ஊடாகப் பல இயக்கங்கள்; 'தமிழர் நலன்' என்னும் ஓர் அடிப்படையில் அந்த இயக்கங்களோடு இணைந்து பணியாற்றியதையும் அவ்வியக்கப் போக்குகளைத் தனித்து மதிப்பிட்டதையும் இப்பாடல்கள் காட்டும். ஓர் எழுத்தாளனின் படைப்புகள் அனைத்தையும் ஒரு தொகுப்பில் காணவேண்டும் என்னும் வேட்கை மிகுந்து வரும் காலம் இது. நண்பர்கள் என் பாடல்கள் அனைத்தையும் இத்தொகுப்பில் காணும் விருப்பினால் முன் வெளிவந்த 'விடுதலை' நூலையும், இத்துடன் இணைத்துள்ளனர். அந்நூலுக்கு எழுதப் பட்டுள்ள முகவுரையும் இணைப்புகளும் நூலின் பிற்பகுதியில் இடம்பெறுகின்றன.

நான்கு பேரோடு வாழ்வதுதான் வாழ்க்கை. நான்கு பேருக்குச் சொல்வது, நான்கு பேரிடம் கொள்வது என்பது சுவையான கொடுக்கல் வாங்கல்! எண்ணுகின்ற மாந்தனால் இவற்றைச் செய்யாமல் இருக்க இயலாது. சிலவற்றைச் சொல்லியிருக்கிறேன். எண்ணுங்கள். எழுதுங்கள்.

நிறைந்த அன்புடன்
**இரா.இளவரசு**

## எண்ணம் வெளுக்க இவை

*எடுத்த செயலைக் குறித்த பொழுதில்*
*முடித்தல் உயர்வின் முதல்*

*இறுதியில் பார்க்கலாம் என்றே இருப்பின்*
*குறிதப்பிப் போதலும்கூ டும்*

*அடிஎண்ணி வைப்பான் அடைவான்முன் னேற்றம்;*
*கொடிவளர்ச்சி நாள்தோறும் கூறு*

□

*எண்ணம் செயலின் முதலே; பொழுதெல்லாம்*
*எண்ணி இருத்தல் இழுக்கு*

*பேச்சே வினையாய்ப் பெருத்துப் பயன்என்ன?*
*மூச்சுமட்டும் உள்ள முடம்*

*எண்ணுதல் பேசல் இவையிரண்டும் நற்செயல்கள்*
*பண்ணவே பண்ணவே தான்*

*எண்ணம் கடலே; இயம்புவன காவிரியே;*
*பண்ணுவன கால்வாயே பார்*

□

*உண்ணல், புணர்தல், உழைத்தல் இவையுயிர்கள்*
*பண்ணும் பொதுவினைக ளே*

*நண்ணிப் பிறர்க்குதவல், நாணல் பழிசெயற்கே*
*எண்ணும் மனிதர் இயல்பு*

*சூழ்ச்சியே என்றுந் துணையென் றிருப்பவன்*
*வீழ்ச்சி விளம்புதல் வீண்*

நல்லவை நாடாமல் அல்லவை போற்றுவான்
வல்லிருட் கூகை வகை

பள்ளம் பறிப்பதில் உள்ளம் மகிழ்வது
குள்ள மனிதன் குணம்

❑

அய்யோ இருளென்(று) அலறாதே சற்றைக்குள்
துய்யஒளி தோன்றும் துணை

கண்ணில் ஒளியற்றார் காண்க கணக்கற்றார்
மண்ணில் அடைந்தனர் மாண்பு!

தொட்டால் சுடுகிறதே தூத்தூ நெருப்பென்பாய்
பட்டொளி உண்டே படிந்து

உதிரும் சருகெண்ணி ஓலமிட வேண்டா;
புதியதளிர் பூத்திடும் பொன்!

❑

பத்துப்பேர் கூடிப் பகலை இரவென்றால்
ஒத்துக்கொள் ளாதே ஒதுக்கு

இருபதுபேர் கூடி இரும்பைப்பொன் னென்றால்
ஒருவனாய் நின்றும் எதிர்

இல்லாத ஒன்றை இருப்பதாய்ப் பேசுவோர்
பல்லோர் எனினும் பகை

❑

பொன்னின் ஒளியைப் புறத்தேபோய்த் தேடுவதா?
உன்சிறப்பை நீயே உணர்!

போயொருவர் காட்டு புரையில்லார் இவ்வுலகில்;
நீயறிவாய் உன்றன் நிழல்

ஏச்சும் புகழ்ச்சியும் என் செய்யும்? உன்மன
வீச்சு விரிவடையுங் கால்

தன்மதிப்பு வேண்டும், உலகோர் தரும்மதிப்பு
உன்மதிப்பின் பின்னே உணர்

மண்ணா பிறர்தம் மனம்போல் வனைய? நீ
எண்ணுங் குயவன்; இயற்று

□

உனக்கும் எனக்கும் ஒரேமுகம் அன்றே;
பிணக்கேன் இதைஉணர்ந்த பின்?

உன் கருத்தின் மாறி மனைவி உரைத்தக்கால்
என்கொள்வாய் சீற்ற எரி?

என்வழியே செல்வான் மகன்என்னல் மற்றவன்
தன்வழியைத் தான்அடைக்கும் கல்

வண்ணமலர்க் காவில் வகைவகையாய்ப் பூக்கூட்டம்;
எண்ணவகை வாழ்வின் எழில்

இரண்டு கருத்தேனும் இல்லையேல் எங்ஙன்
சிறந்ததைத் தேர்தல்? தெளி

□

மண்ணைத் துளைத்தால் வரும்நீரை வேர்அறியும்;
உன்னைத் துளைத்தே உயர்

தட்டி இழைத்தால்தான் தங்கம் நகையாகும்;
குட்டிக்கொள் குற்றங் களுக்கு

மேகம் அழுவதால் விண்தெளிவாம்; கண்சொரிவால்
ஆகும் சுமையிறக்கம் தான்

□

விதையின் மறைவில் புதிய விளைச்சல்!
இதுவே இறப்பின் எழில்

இறந்தவை எல்லாம் எருவாம், அதனால்
வருந்துதல் சாவில் மடம்

வாதளிரே என்று வரவேற்றுத் தான்உதிர்ந்து
போதல் சருகின் புகழ் 35

மாங்கனியாய் வீழ்ந்தாலும் மாரடிப்பா? ஏன், அதனுள்
ஓங்குவிதை உண்டே உணர்

□

இல்லையே பிள்ளையென்(று) ஏங்குவதேன்? பிள்ளையால்
தொல்லையே என்பேன் துணிந்து

பெற்றெடுத்த தாயோ பெருஞ்சுமையாம்; நற்றந்தை
உற்றபகை என்னும் உலகு

நீயெனக் குத்தாயே, நானுனக் குத்தந்தை
சேயெதற்குப் பெண்ணே சிரி!

மகப்பெறாப் பெண்ணை மலடியெனல் குற்றம்;
தகைசட்டம் செய்தல் தகும் 40

பேற்றைக் குறைக்க மகவிலாப் பெண்டிரைப்
போற்றல் அரசின் பொறுப்பு

□

எதிர்ப்பில்லா வாழ்வு இனிப்பில்லாக் காரம்;
கதிர்சிறக்கும் காரிருளால் காண்

மாற்றி உலகை வளர்ச்சிக்குப் பாடுபட்டோர்
ஏற்ற எதிர்ப்புகளை எண்

உன்செயலைத் தீயார் எதிர்த்தால் உணர்ந்துகொள்
நன்செயல் என்னும் நயம்

எல்லோர்க்கும் நல்லவன் என்பான் நிறம்மாற
வல்லபச் சோந்தி வகை 45

ஆற்றல் வளர அயர்வகலத் தேவையாம்
தோற்றும் எதிர்ப்புத் துணை

□

வாய்பொத்தி நிற்காதே, தானாக வாராது;
சேய்அழுதல் கண்டு தெளி

கேட்டால் தனியாய்க் கிடைக்கா மலும்போகும்
கூட்டுக் குரல்கொடுக் கும்

தட்டித் திறக்கவில்லை யென்றால் தடிகொண்டு
முட்டி உடைத்துப் புகு

எடுத்தவன் தாரான் எளிதாய்; உதைக்கஞ்சிக்
கொடுத்தல் உலகின் குணம் 50

மாற்றங்கள் போராட்டம் இன்றி வருவதில்லை;
பேற்றிடரில் பிள்ளைப் பிறப்பு

□

பொன்னையோ தின்பாய்? பொருள்மேல் மிகும்ஆசை
உன்னையே தின்னும், உணர்

என்னடா மாடிமேல் மாடியென வீடுபல?
உன்படுக்கை ஓர்அறையில் தான்

பல்லோர் பசிக்க உணவைப் பதுக்கிவைத்தல்
கொல்லத் தகுங்குற்ற மாம்.

பல்லோர் உழைப்பில் ஒருவன் பணக்காரன்;
வல்லான் உறிஞ்சும் வகை. 55

இயற்றும் பொருளுக்கே ஏவலனாய்ப் போனாய்;
கயிற்றில் கழுத்துக் கதை!

பொருள்வேண்டும் வாழ; பொருளேதான் வாழ்வா?
மருள்நீக்கம் வாழும் வழி

□

எல்லோரும் ஓர்நிலை என்றும் இருந்ததில்லை;
நல்லோர் விழைவே அது

ஏற்ற இறக்கம் உலகின் இயற்கையாம்;
மாற்ற விழையும் மனம்.

*ஆண்பெண், பகல்இரா, ஆம்பகை நட்பெனக்
காண்இரு கூறின் கலப்பு!*

*இருளும் ஒளியும் இணைவா, முரணா?
முரண்கள் இணையும் முறை*

*முரண்கள் உலகை முடுக்கும்; அதனால்
திறன்கள் வளரும், தெளி*

□

*இம்மை, மறுமை, எழுபிறப்பு கற்பனையே;
உண்மை ஒருபிறப்புத் தான்*

*துறக்கம் நரகமெனச் சொல்வதெலாம் பொய்யே;
இறக்கும் பொழுதும் சிரி*

*கீழுலகம் மேலுலகம் ஏழுலகம் கற்பனையே;
வாழுலகம் ஒருலகந் தான்.*

*இறந்ததன் பின்னர் எதுவுமுனக் கில்லை;
சிறந்ததை மற்றவர்க்குச் செய்.*

□

*அவன்தொட்டால் தீட்டு, அவளை மறைவில்
இவன்தொட்டால் தீட்டில்லை யாம்!*

*கோயில் கருவறையைக் கட்டியவன் அக்கோயில்
வாயில் வெளிப்புறத்தி லாம்!*

*பள்ளன், பறையன் இழிவென்பான், அப்பறையன்
தள்ளுவான் சக்கிலியைக் கீழ்!*

*பார்ப்பனத்தி பெண்ணே, பறையனும் ஆண்மகனே;
சேர்ந்தால் பிறக்குமடா சேய்.*

*எல்லோரும் தாய்க்குலந்தான் ஈன்றெடுத்த பிள்ளைகள்;
இல்லை பிறப்பில் இழிவு*

*பிறப்பால் உயர்வென்று பேசுங் கயமை
செருப்பால் வரவேற்கும் சீர்த்து*

□

அளவிறந்து போதல் மதங்காண்! அதனால்
பிளவுபட்டுச் சாதல் பெரிது

கோயில் மணியோசை கொற்றவன் நாவோசை;
ஆ!இம் மதமே அரசு

அறிவுச் சுடரை அவிக்கும் மதநீர்
குறைவில் உயிர்கள் குடித்து

சீர்தூக்கின் நன்மை சிறிதே; பகையுணர்வில்
வேர்பிடித்து நிற்கும் மதம்

வந்தமதம் சொந்தமதம் எந்த மதமெனினும்
கந்தக வீட்டில் கனல்

□

காற்று சுழற்றும், கனலும் எரிமலையும்;
ஆற்றல் இயற்கை அறி

அந்தோ! நிலம்நடுங்கும். ஆ! வெள்ளம் மீறிவரும்
விந்தை இயற்கை வினை

இயற்கை இயக்கம் உலகம்; இறை யென்னும்
மயக்கம் அறுத்தல் மதி

இறை, கடவுள், தெய்வங்கள் இல்லவே இல்லை;
அறை! மாந்தன் ஆக்கம் அவை

அச்சமும் காப்புணர்வும் அந்நாளில் பெற்றெடுத்த
எச்சமே தெய்வம், இறை

□

கெட்டநாள் நேரம் எதுவும் கிடையாது;
கொட்டாதே குப்பையில் பொன்

போன பொழுது கிடைக்காது; நீயதை
வீணாய் விலக்கல் விடு

பூனை குறுக்கிட்டுப் போனால் தயங்காதே!
யானைமேல் ஏறுபவன் நீ

பல்லி ஒலிக்கும் பயண விளைவிற்கும்
இல்லை எதுவும் தொடர்பு

நரிமுகத் தில்விழித்தால் நல்லதாம்; நாட்டில்
நரியை வளர்த்தார் இலர்!

இளைத்த உளத்தில் முளைத்த களைகள்!
துளைக்க விடாதே, துரத்து

□

பிறக்கும் பொழுதும் மணக்கும் பொழுதும்
இறக்கும் பொழுதும் சடங்கு!

உண்ணுதற்கு முன்னும் உறைவிடத்தின் உட்புகவும்
பண்ணுவதேன் வீணாம் சடங்கு? 90

சாதிச் சடங்கு சமயச் சடங்கென்று
பாதிவாழ் நாள்ஆகும் பாழ்

பட்டையும் கொட்டையும் மொட்டையும் நாமமும்
வெட்டி வெளிவேட மே

சடங்கில் பொருள்தான் சரியும், வறுமைக்
கிடங்கில் முடக்கிடும் கீழ்

□

ஏழரை நாடாம், சனியாம்! இதற்காகப்
பாழாகும் வாழ்நாள், பொருள்

கைவரியும் கோள்நிலையும் காட்டா எதிர்காலம்;
பைநிறையப் பொய்விரித்தார்! மெய் 95

வருங்காலம் சொல்கணியன் வானூர்தி வீழ்ந்தே
இறந்தான்; அறியான் இறப்பு!

எவனும் தலையில் எழுதவில்லை; மூளை
சுவரோ? அறிவின் சுனை

நம்பிக்கை வேண்டும்; நமைத்தளரச் செய்மூட
நம்பிக்கை நீக்கல் நலம்

*சீர்தூக்கிப் பார்க்கும் சிறப்பறிவு பெற்றவன்நீ,*
*யார், எது சொன்னாலும் எண்*

☐

*அகவை, பொருள், பதவி, பட்டம் அவற்றால்*
*தகவைக் கணித்தல் தவறு* 100

*செயல்கள், எளியோர்க்குச் சேர்நலன்கள் கொண்டே*
*உயர்ந்தோர் இழிந்தோர் உணர்*

☐

*பேய் என்றால் அச்சம்; பிறிதில்லை, உன்மனத்தை*
*ஆய்! அதனுள் தூங்கும் அது.*

*மருளும் பொழுதில் மனத்துள் இருந்தே*
*இருளுருவாய்த் தோன்றும் எதிர்*

*சருகில் நெருப்பாய்த் தளர்நெஞ்சில் பேய்கள்;*
*உருகும் வெயில்கானல் நீர்*

2001

## மனிதனை நாடி...

உலக நகரின் ஒருசிறு தெருவாய்
நிலவும் தமிழக முகப்பினில் நின்றேன்

இனியஇவ் வுலகில் இணைதனக் கில்லா
மனிதன் என்னும் மாபெரும் ஆற்றலைக்

கண்டு நெஞ்சங் கலந்து 'தோழனே!
உண்டிவ் வுலகம் உன்னால்' என்றிடும்

வேட்கை துரத்த விரிந்த நெஞ்சொடு
உலக நகரின் ஒருசிறு தெருவாய்

நிலவும் தமிழக முகப்பினில் நின்றேன்.
நின்றவன் தெருவில் சென்றிட முனைந்தேன்.

தெருவின் முனையில் சிறியதோர் வீடு,
வீட்டைச் சுற்றிலும் விரிகுலைத் தென்னைகள்,

மலையாள முறையில் வகுத்தஅவ் வீடு
'குமரி' எனும்பெயர் கொண்டிருந்தது.

வீட்டை நோக்கி மெதுவாய் நடந்தேன்
வருகிற தேர்தலின் வாய்ப்புகள் பற்றி

உரத்த குரலில் உள்உரை யாடிய
ஏழெட்டுப் பேர்கள் எனைவர வேற்றனர்.

யானே என்னை அறிமுகஞ் செய்தேன்.
ஆன குழாயில் அவித்த பிட்டைப்

பப்படம் பயற்றொடு பரிவுடன் அளித்தனர்;
'எப்படித் தேர்தல் முடிவுகள் இருக்கும்?

செப்புவீர்' என்றேன். 'தெரியா தாஇது?
நாடார் நாங்கள், நாடார் பிறரைத்

தேடார், ஆதலின் வெற்றி தெரிந்ததே'
என்றனர், நன்றி இயம்பிக் கிளம்பினேன்;

அடுத்த வீடு, **'நெல்லை'** அதன்பெயர்,
உடுத்த வெள்ளுடை ஒருவர் வந்தார்

நெற்றியில் பட்டையாய் நீறு கிடந்தது
பையஎன் அறிமுகம் பணிவொடு செய்தபின்

'ஐயா, தாங்கள் யார்' எனக் கேட்டேன்,
'மெய்யாம் சைவப் பிள்ளைமார்' என்றார்

'பொய்யாம் பிள்ளைமார் உள்ளனர் போலும்'
என்று முனகினேன், 'என்னவே' என்றார்
ஒன்று மிலையென நின்றவன் நடந்தேன்

இடையில் ஓரிரு வீடுகள் ஏகின.

'கோவை' என்னும் கொட்டை எழுத்து
மேவிய பெரிய மெத்தை வீடு,

'என்னுங்க வாங்க' எனும்வர வேற்பை
முன்னே விடுத்துப் பின்னே வந்தார்

வாட்ட சாட்ட மான மனிதர்;
நீட்டிய வரவேற்பில் நெஞ்சு குளிர்ந்தது.

வணக்கம் செய்து வந்ததைச் சொன்னேன்

''ஏனுங்க மனுசன் எங்கிருக் கானுங்க
நானுங்க கவண்டங்க'' என்றவர் நவின்றார்.

**'திருச்சி'** என்றொரு வீடு சென்றது,

பச்சை வண்ணம் நெஞ்சைப் பறிக்க
மெச்சும் வகையில் கலையின் விளக்கமாய்த்

**'தஞ்சை'** என்று தடித்த எழுத்தொடு
நின்ற வீட்டை நெடிது நோக்கினேன்.

'யாரை யாஅது' எனுமோர் அதட்டல்,
முறுக்கிய மீசை முகக்கொம் பாக
உருட்டிய விழியினர் ஒருவர் வந்தார்;
அச்சம் மேவ அறிமுகம் முடித்தேன்
வீட்டி னுள்ளே கூட்டிச் சென்றார்
கூடத்தில் பலபேர் குழுமி யிருந்தனர்.

'மூவேந் தர்வழி முக்குலத் தோர்நாம்
யாவரும் அஞ்சும் ஆற்றல்நம் ஆற்றல்'
என்றார் ஒருவர். இன்னும் சிலபேர்
'இனஒற் றுமை' என ஏதேதோ பேசினர்.
அவ்விடந் தன்னை அகன்றேன் கமுக்கமாய்;

அடுத்த வீட்டை அணுகினேன் விரைவாய்
'வாயப் பயத்தை' வயிற்றில் தள்ளி
இருந்த ஒருவர் என்னைப் பார்த்தார்
வணக்கம் உரைத்து வகையாய்க் கேட்டேன்

'உங்களைப் பற்றி உரைக்கவேண் டும்' என;
'தென்னார்க் காட்டான் தெரிய வில்லையா?
வன்னியன்' என்றார். நன்றியை வழங்கிப்
பக்கத்து வீட்டைப் பார்க்க நடந்தேன்.

ஏழெட்டு மாடி இருக்குமவ் வீடு,
உள்ளே நடப்பதை உலகறி யாத
வெள்ளை மாளிகை, வெளியே காவலாள்
என்னை நோக்கி 'இன்னாப்பா' என்றான்
'சென்னை இது' எனத் தெரிந்து கொண்டேன்
அந்த நேரத்தில் அசையும் பூசணித்

தொந்தியை முன்னே தூது விட்டு
வெளியி லிருந்து வீட்டை நோக்கி
வந்தார் ஒருவர், வணங்கினான் காவலாள்,
என்னைப் பார்த்தார் இருகை கூப்பினேன்;
கதவு திறந்தது கையால் அழைத்தார்

அழகிய முன்னறை அமர்ந்தார் அமர்ந்தேன்
தொலைபே சிமணி தொடர்ந்து ஒலித்தது.
எடுத்தார் பெரியவர் இரைந்து பேசினார்
'என்னய் யாஇது? எவன்இதைச் சொன்னான்?
வெள்ளாளப் பயலை மேலே இருத்தி

முதலியா ரெல்லாம் முட்டி யடிப்பதா?
நாளைக்கு மாலை நமது சமூகக்
கூட்ட மொன்றைக் கூட்டுவோம்' என்று
பேசி முடித்தார் பெருஞ்சின முகத்துடன்;

'இருங்கள் வருகிறேன்' என்றெனக்(கு)உரைத்து
வீட்டினுள் சென்றார்; விளங்கா திருந்தயான்
'இதுதான் நேரம்' என் றேகினேன் வெளியே;
உலக நகரின் ஒருசிறு தெருவாய்
நிலவும் தமிழக நிலைமையைத் தெளிந்தேன்.

உலக நகரின் ஒருசிறு தெருவாய்
இலகும் தமிழகத் திருக்கும் தோழனே!

குறுகிய சாதிக் கூண்டினை உடைத்துப்
பெருகிய அன்புச் சிறகினை விரித்துப்
பாரெனும் வானில் பறக்க வேண்டாமா?
உலகமாம் நகரில் உலவ வேண்டாமா?

ஆர்க்கும் கடலின் அகட்டினைக் கிழித்து
வேர்க்கும் மழைமுகில் வீதியில் பறந்து

காற்றின் அலைகளில் செய்தியைப் பரப்பி
நாற்றிசை மாற்றி ஒருதிசை யாக்கிய
மானிடப் படையில் நீயுமோர் மறவன்!

கொள்ளை அரசரின் கூடா ரங்களை
வெள்ளப் புரட்சி நெருப்பால் எரித்துக்
குருதியைக் கொட்டிப் பசுமையை விளைத்துச்
செம்மலர்க் காட்டில் சிரிக்கும் மலர்கள்
உன்னுடன் பூத்தலை, உணர வேண்டாமா?

'இந்த மலர்களில் யானுமோர் மலர்' என
எண்ணும் போதே எழுச்சி பிறக்குமே!

தெய்வ நிலாவெனும் சேதியை மாற்றிக்
காலடி பதித்துக் கற்களைக் கொணர்ந்த
மனிதரில் நீயுமோர் மனிதன் அல்லவா?

'ஆண்டவன் தந்தான் ஐந்தாறு பிள்ளைகள்
வேண்டாம் என்றுநான் விளம்ப முடியுமா?'

என்று நாள்தொறும் மனைவியின் இதழைத்
தின்று கிடப்பான் செப்புவான், இன்றோ

சோதனைக் குழாயில் மகவினைத் தோற்றும்
சாதனைப் புதுமை தருகிறான் மனிதன்!

இந்த மனிதனோ(டு) உன்னையும் இணைத்தே
எண்ணும் போதே எழுச்சி பிறக்குமே!

'மனிதன், ஆகா! நானுமோர் மனிதன்!'
என்னும் போதே நின்னுளந் தன்னில்
கடலின் முழக்கமாய்க் களிப்பு முழங்குமே!

'மனிதன், ஆகா! நானுமோர் மனிதன்!'
என்னும் போதே நின்முகந் தன்னில்
ஆயிரங் கதிரவன் அலைஒளி பாயுமே!

'மனிதன் ஆகா! நானுமோர் மனிதன்!'
என்னும் போதே நின்உடல் தன்னில்
ஆயிரங் களிற்றின் வலிமை அடங்குமே!

உலக நகரத் தொருசிறு தெருவாய்
இலகும் தமிழகத் திருக்கும் தோழனே!

கள்ளன் முதலியார் கவுண்டன் என்னும்
குள்ள நினைவினைக் குழிதோண் டிப்புதை!

சாதிச் சருகினைச் சமயக் கந்தையைத்
தோழமைத்தீயில் தூக்கி எறியடா!

வன்னியன் அந்நியன் என்னும் போதுநீ.
சின்னதோர் புழுவினும் சீச்சீ இழிகிறாய்.

கண்படு மனிதக் கடலிலோர் துளியாய்
எண்ணும் போதே இமயமாய் உயர்கிறாய்.
அன்புச் சிறகால் உலகினை அணைத்தே
ஒற்றுமைப் பாட்டால் உயர்வினைச் சேர்த்துப்

புதுமைக் குஞ்சுகள் பொரித்துத் தந்து
மானிடக் குயிலே! மானிடக் குயிலே!
வான்மேல் பறநீ! மேன்மேல் உயர்நீ!

1976

## வேகின்றார் தமிழர்

குறிஞ்சி

*வானிருக்கும் முகிலணைய இயற்கை அன்னை*
*வடித்தஎழில் மலையிருக்கத் துள்ளி ஓடும்*
*மானிருக்க மயிலிருக்கப் பாட்டிக் கூந்தல்*
*மயிரிழைபோல் வருமருவி இருக்கக் கொம்புத்*
*தேனிருக்கத் தினையிருக்க மலர்கள் கூடும்*
*தென்றலெனும் ஆணிருக்க என்றன் நெஞ்சில்*
*ஏனின்பம் எழவில்லை? பண்டை ஏற்றம்*
*இயம்பிஅவை எனைக்கண்டு நகைத்த லானே!*

முல்லை

*குழலிசைக்குச் செவிகொடுத்தேன் பரந்த கானில்*
*குழுகுழுவாய் மேய்கின்ற மாடு கண்டேன்*
*கொழுத்தஇளங் கன்றொன்று தாயைக் கண்டு*
*குதித்தோடி 'மா' வென்றே அழைத்தல் கண்டேன்*
*குழவிக்குப் பாலூட்டி வரகுச் சோற்றைக்*
*கொழுநனுக்கு மலர்க்கையால் ஊட்டும் மிக்க*
*அழகொளிரும் இடையர்குலப் பெண்கள் கண்டு*
*அணுவளவும் என்நெஞ்சில் இன்ப மில்லை!*

மருதம்

*கீழ்வானில் கதிர்முளைக்கக் கலப்பை தூக்கிக்*
*கிழக்காளை மாடோட்டும் உழவன் பின்னே*
*கூழ்க்கலயம் தலைசுமந்து இடையில் தங்கக்*
*குழந்தையினை எடுத்தணைத்து மனைவி சென்றாள்*
*வாழ்ந்தநிலை தனைக்காட்டிக் கரும்பும் நெல்லும்*
*வாழையொடு எனைக்கண்டு சிரிக்க நெஞ்சம்*
*ஆழ்ந்ததடா பெருந்துயரக் கடலுள் தம்பீ!*
*அனற்பட்ட புழுவாகத் துடிக்கின் றேன்யான்*

## நெய்தல்

*கடற்கண்டேன் பரந்தஎழிற் கரையுங் கண்டேன்*
*கடற்கடந்த நாடுசெலுங் கலங்கள் கண்டேன்*
*கடற்செல்வி தருஞ்செல்வச் சங்கும் முத்தும்*
*கண்ணாடி போல்மின்னும் மீனுங் கண்டேன்.*
*கடைகள் பல ஆங்காங்கே கரையில் கண்ணைக்*
*கவ்வுகின்ற வண்ணஎழில் மாதர், இன்பக்*
*கடலாகும் இளஞ்சிறுவர் கண்டும் தம்பீ*
*கடுகளவும் களிப்பில்லை துயரம் நெஞ்சில்.*

## பாலை

*மலைமிடைந்த குறிஞ்சியுண்டு காடு சூழ்ந்த*
*மலர்முல்லை நிலமுண்டு வயல்கள் சார்ந்த*
*தலைசிறந்த மருதநில முண்டு பண்டைத்*
*தமிழ்நாட்டின் வளம்வென்றி கூறி நிற்கும்*
*அலைமுழங்கும் கடல்சார்ந்த நெய்தல் உண்டு*
*அவைஒழிந்த பாலைதனில் தமிழர் இன்று*
*கலையிழந்து நிலையிழந்து சாண்வ யிற்றைக்*
*கழுவிடவே வேகின்றார் சாகின் றாரே.*

*குறிஞ்சிமுல்லை மருதநெய்தல் பண்டே கண்டு*
*கூறுபுவிக் கொளிவிளக்காய் மிளிர்ந்தோன், வாழ்வை*
*உறிஞ்சுகின்ற வறுமையினால் நாடு நாடாய்*
*ஓடுகின்றான் உதைபட்டுத் திரும்பு கின்றான்*
*நறுஞ்சோலைத் தமிழ்நாடோ கொலைஞர் கையில்;*
*நற்றமிழ்த்தாய் வாழ்கவெனில் கைது வேட்டு*
*அறிந்திடுக துயர்க்கெல்லாம் விடிவு காண*
*அறுபத்தேழ் வருகிறது எழுக தம்பீ!*

1966

## பதைக்குமென் நெஞ்சம்

*தீயினிற் புழுவாய் ஆலையிற் கரும்பாய்ச்*
*செக்கினில் மாடாய்ப் பரிதி*
*காய்கிற வெயிலிற் கருகுவர் வியர்வைக்*
*கடலினில் குளித்துடல் சோர்வர்.*
*நோயினும் கண்கள் மூடிலர், வெம்பசி*
*நோயினைப் போக்கிட வேண்டி*
*நாயினுங் கீழாய் என்னுடன் பிறந்தார்*
*நலிந்திடல் கண்டுளஞ் சோர்ந்தேன்.*

*ஒய்விலை சற்றும் ஒழிவிலை குடல்பொதி*
*ஒருசாண் வயிற்றினை நிரப்பச்*
*சேயினைக் கொஞ்சி மகிழ்வதுந் துறந்து*
*செய்குவர் நாளெலாம் வேலை.*
*ஆயினும் வயிறு நிறைந்ததா? மெய்ப்பை*
*அணிந்திட வழிவகை உண்டா?*
*பாயொன்று கூடப் படுப்பதற் கிலையே*
*பார்த்திதைப் பதைக்குமென் நெஞ்சம்.*

1967

## நாடு சிறந்திடவே நன்று

பொய்யில் வழுவில் புனைந்துரையில் மற்றவர்தம்
மெய்யை வருத்தி மிகுபொருளைத் தேடுவதில்

போலிச் செயலில் புறங்கூறும் புன்னிலையில்
கூலி விரும்பித்தன் கொள்கை இழப்பதனில்

நீட்டி முழக்குவதில் நீளுரையைத் தன் செயலில்
காட்டும் துணிவில் கடைநிலையில், கைதன்னில்

தூவல் எடுத்துத் ''துவண்டனவோ நும்தோள்கள்
ஆவல் தமிழ்த்தாய்பால் அற்றதுவோ? செந்தமிழீர்!

கூவி யழைக்கின்றேன் கூடிடுவீர் நந்தாய்க்கே
ஆவி கொடுத்தே அழியாப் புகழ்பெறுவோம்

என்றே எழுதியவர் எங்கோவோர் மூலைதனில்
நன்றே துயின்று நலஞ்சேர் பொருள்சேர்க்கும்

பொய்ம்மை நிலையில், புகழார் தமிழ்த்தாய்க்கு
மெய்ம்மைப் பணியாற்றும் மேலோரைத் தாழ்த்துவதில்

வாயில் வயிற்றில் வளத்தமிழை வைத்துமனக்
கோயில் தனில்நிறுத்தாக் குள்ளமனம் உள்ளவரைப்

போற்றுவதில் வாழ்த்திப் புகழ்மாலை சூட்டுவதில்
ஏற்ற மிகுபொறுப்பில் ஏற்றி மகிழ்வதனில்

நாற்றை வளர்க்காது நாற்றை அழிக்கவருங்
கூற்றாங் களையைக் கொழுமையாய்த் தான்வளர்த்தே

என்னே அதன்திறமை என்றுபல பேசியதன்
பின்னே பொருளைப் பெறும்வகையை எண்ணுவதில்

பொன்னும் பொருளும் புகழும் மிகப்பெற்ற
பின்னும் தமிழ்த்தாயைப் பேணுவதற் கஞ்சுவதில்

தாயை மறந்து தரமில்லா இந்தியெனும்
பேயை வளர்க்கப் பெருந்துணையாய் நிற்பதனில்

ஈடு தமிழர்க்கே இப்புவியில் இல்லையெனப்
பாடு குயிலே! பசுங்கிளியே பேசுகநீ!

ஆடு மயிலே! அவைகண்டு பண்டிருந்த
பீடு தனைப்பேசிப் 'பீத்துகின்ற' இந்நாட்டார்

ஓடி ஒளிக ஒழிந்திடுக இல்லையெனில்
சூடு பெறுக துடித்தெழுக நாட்டிலுள்ள

கேடு களைக கிளர்ந்தெழுக பண்டுபோல்
நாடு சிறந்திடவே நன்று.

1962

## திருந்துவாரோ?

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் என்று
பறையறைந்து சொன்னவன்யார்? தமிழன்; இன்று
மண்புக்கு மாய்ந்ததடா தமிழர் மானம்;
மாணவர்கள் பண்பின்றி மரங்கள் ஒத்தார்.
கண்வீசிக் கயமைமிகு செயல்கள் செய்து
கன்னியர்கள் கண்ணிமையைப் போல்வார் உள்ளம்
புண்படவே புன்மொழிகள் மகிழ்ந்து கக்கிப்
பொழுதெல்லாம் கழிக்கின்றார்; திருந்து வாரோ?

மாணவர்யார்? மாண்பினையே காக்க வேண்டும்
மாணாக்கர் என்பதனை மறந்தார் கொல்லோ?
காணுவதில் பேசுவதில் செயலில் எல்லாம்
கயமைதனைக் காண்கின்றேன் கவல்கின் றேனே;
தூணாக நின்றுதமிழ் மானங் காக்கும்
துணிவணுவும் அற்றவராய்த் துன்பம் சேர்க்கும்
வீணான செயல்களிலே இறங்கித் தம்மை
வேகடித்துக் கொள்கின்றார் அறிந்தார் இல்லை.

வள்ளுவரின் வழியெங்கள் வழியாம் என்று
வாய்விட்டுச் சொல்லிடவோ உள்ளம் கூசும்;
தெள்ளுதமிழ்ப் புலவோர்கள் தீட்டித் தந்த
தீந்தமிழின் புதையலெம துரிமை என்றால்
எள்ளிடுவார்; இல்லையும தென்றே சொல்லி
இகழ்ந்திடுவார் நாமிருக்கும் இழிமை எண்ணி!
எள்ளளவும் தாய்மொழியை இனத்தை நாட்டை
எண்ணாது கன்னியர்முன் பல்லைக் காட்டி

இருக்கின்றார் இறந்திடுதல் மேலே அன்றோ?
இக்கால மாணவர்தாம் நாட்டைக் காக்க
இருக்கின்ற மன்னரென அறிஞர் சொல்வார்;
இம்மொழியை நன்மொழியாய் ஆக்க வேண்டின்
உருக்குலைந்த நம்மினத்தை மொழியை எல்லாம்
உயர்த்திடவே வேண்டுமெனில் பயில்வீர் ! புன்மை
ஒருவியுடன் ஒழுக்கமதை உயிராய்க் கொண்டு
உழைத்திடவே வேண்டுமதை மறந்தால் மாய்வீர்!

1961

## வரும்புயல் நாங்கள்

தயக்கமின்றிச் சொல்கின்றோம்
தாழ்த்தப்பட்டவர் நாங்கள் - பிறரால்
தாழ்த்தப்பட்டவர் நாங்கள்.

தலைநிமிர்த்திச் சொல்கின்றோம்
தாழ்ந்தவரல்லர் நாங்கள் - எவர்க்குந்
தாழ்ந்தவரல்லர் நாங்கள்.

தீண்டத்தகாதவர் எனச்சொல் கின்றீர் - நீர்
தின்பவை அனைத்தும்எம் தீண்டலின் விளைச்சல்!
தோண்டினோம் கிணற்றை; நீர்குடிக் கின்றீர் - அதைத்
தொட்டால் தீட்டெனத் துள்ளுகின் றீரே.
உழைப்பவர் நாங்கள்
உண்பவர் நீங்கள்

(தயக்கமின்றி...)

விலங்குகள் திரிந்த காட்டை அழித்தோம்
விளைபொருள் நிலமாய் மாற்றிக் கொடுத்தோம்
மலையென நிமிர்ந்த மேட்டைத் தகர்த்தோம்
மருத நிலங்களை நாட்டில் படைத்தோம்
மருதத்தில் நீங்கள்
பாலையில் நாங்கள்

(தயக்கமின்றி...)

பிறந்தது முதலாய் எங்களின் உழைப்பைப்
பிழிந்ததில் செல்வப் பயணம் நடத்துவீர்.
இறந்த பின்னரும் ஏறிச் செல்வது
எங்கள் கைகள் கட்டிய பாடையில்.
இளைத்தவர் நாங்கள்
ஏறுவோர் நீங்கள்

(தயக்கமின்றி...)

கொட்டு முழக்கொடு பாதுகாப் பாகக்
குழிக்குள் உடலைப் புதைப்பவர் நாங்கள்.
வெட்டியான் ஆகி நாற்றம் வீசாமல்
விறகை அடுக்கி எரிப்பவர் நாங்கள்.
காப்பவர் நாங்கள்
களிப்பவர் நீங்கள்

(தலை நிமிர்த்தி)

தோலை உரித்தோம் பதப்ப டுத்தினோம்
தொகைதொகை யாகச் செருப்புகள் செய்தோம்
காலில் அவற்றை மாட்டிக் கொள்கின்றீர்!
கை, மேல் பட்டால் 'தீட்டு' என் கின்றீர்.
தொட்டால் தீட்டு
தோலுக் கில்லையா?

(தயக்கமின்றி...)

வெட்டுதல் காட்டையும் மேட்டையும் மட்டுமா?
வேகுதல் எங்களின் உடல்கள் மட்டுமா?
கொட்டுதல் எங்களின் குருதி மட்டுமா?
கொதிக்கும் மனத்தின் கொப்புளக் கேள்விகள்!
விழித்தோம் நாங்கள்
வினா தொடுக் கின்றோம்

(தலை நிமிர்த்தி)

அறுப்பதும் களத்தில் அடிப்பதும் நாங்கள்
அந்தநாள் முதலாய் அறிந்த தொழில்களே.
மறுப்பின்றிப் பாடைகள் கட்டவும், எளிதாய்
மாட்டுத் தோலையே உரிக்கவும் தெரியும்.
எமக்குத் தெரிந்தவை
உமக்கும் புரியுமே

(தலைநிமிர்த்தி...)

குழிகளை வெட்டிப் புதைக்கவும் தெரியும்
கொள்ளியை மூட்டி எரிக்கவும் தெரியும்.
வழிவழித் தொழில்களை மறந்திடு வோமா?
வரும்புயல் நாங்கள், சருகுகள் நீங்கள்.
அடிப்பவர் நாங்கள்
பறப்பவர் நீங்கள்

தயக்கமின்றிச் சொல்கின்றோம்
தாழ்த்தப்பட்டவர் நாங்கள் - பிறரால்
தாழ்த்தப்பட்டவர் நாங்கள்.

தலைநிமிர்த்திச் சொல்கின்றோம்
தாழ்ந்தவரல்லர் நாங்கள் - எவர்க்குந்
தாழ்ந்தவரல்லர் நாங்கள்.

1976

## கருப்பன் சிவந்தான்

''என்னடா கருப்பா! உன் மகன் காளிக்கு
ஆறேழு வயது ஆகி யிருக்குமே,
நமது பண்ணையின் நாலைந்து மாட்டினை
மேய்க்கவும் எடுபிடி வேலையிற் பழகவும்
கூட்டிவா அவனை'' கூறினார் பண்ணையார்;
எதுவும் பேசாமல் இருந்தான் கருப்பன்.

''என்னடா கேட்டதா சொன்னது'' என்றார்.
''கேட்டது கேட்டது'' என்று கிளத்தினான்.

இதுவரை மாடு மேய்த்த இளைஞன்
மேய்ச்சல் காட்டில் விரியன் கடித்ததால்
இரண்டு நாள்முன் இறந்து போனான்.
ஆதலால் புதிய ஆணை பிறந்தது!

பண்ணையார் ஆணையால் பற்பல அலைகள்
கருப்பன் மனக்குளக் கரைகளைத் தாக்கின.

சென்ற ஆண்டுதான் சேர்த்தான் பள்ளியில்,
இந்த ஆண்டு எழுதவும் படிக்கவும்
தெரிந்ததை அறிந்து மகிழ்ச்சியில் திளைத்தான்.
ஒரேஒரு பிள்ளை, உருப்படி யாகப்
படிக்க வைத்துப் பலர்மெச்ச வாழ்வதைக்
கற்பனைக் கோட்டையில் கண்டு களித்தான்.

அந்தக் கோட்டை ஐயகோ சாய்வதா?
சிந்தனை கருப்பனைச் சிறைப்படுத் திற்று.

பற்பல ஆண்டுகள் பண்ணை அடிமையாய்ப்
பாடு பட்டுப் பலன்என்ன கண்டோம்?

தந்தையும் பாட்டனும் பாட்டனின் பாட்டனும்
இந்தப் பண்ணையில் எருதாய் உழைத்தனர்.

அந்த வழியிலே நானும் உழைக்கிறேன்.
எந்தப் பயனை இதுவரை பெற்றோம்?

பாம்புக் கடியும் பசியுமே பரிசு!

இருந்த நிலைமை இம்மி உயர்ந்ததா?
ஒருசாண் வயிறும் நிறைவதைக் காணோம்.

பண்ணையின் செல்வமோ பற்பல மடங்கு
ஒவ்வொரு தலைமுறை உயர்வதைக் காண்கிறோம்.

ஏன் ஏன் இந்நிலை ? இனியும் தொடர்வதா ?
மாடு மேய்க்க மகனை விடுக்க
மாட்டேன் மாட்டேன் என்ற மனத்தொடு
சென்றான் கருப்பன் சிவந்தவ னாகவே!

1974

## அன்றும் இன்றும்

நான்காண் டுகள்முன் நடந்த நிகழ்ச்சி!

கருப்பன் வேலைக் களைப்பினால் வயலின்
வரப்பு மேட்டு மரத்து நிழலில்
உறங்கினான் என்பதை ஒருநாள் அறிந்த
பண்ணையார் செருப்பால் பல முறை அடித்தார்.

அப்போது கருப்பன் ''அடிக்கவும் உதைக்கவும்
உங்களுக் கில்லா உரிமையா எசமான்
உங்கள் உப்பைத் தின்ற உடம்பிது''
என்று பணிந்து நின்றான் குனிந்து.

இன்று காலை எதிர்பா ராத
நடுங்கல் ஒன்றினால் சற்றுச் சுணங்கி
வயலுக்குக் கருப்பன் வந்ததைக் கண்ட
பண்ணையார் வசைமொழி பற்பல பாடினார்.
கண்ணால் எதிர்ப்பைக் காட்டினான் கருப்பன்.

''என்னடா பார்வை, ஏ! பற நாயே
தின்னஎன் உப்பால் வந்த திமிரோ''
என்று செருப்பை எடுக்கக் குனிந்தார்.
நின்று குன்றென நிமிர்ந்தான் கருப்பன்.

''உங்கள் உப்பினால் உடம்பு வளர்ந்ததாய்
எண்ணிய காலம் மலையே றிற்று
எங்கள் மேனி இறக்கிய வியர்வை
உப்பினால் பெருத்ததே உங்களின் தொந்தி.

உங்கள் உடைமையின் ஒவ்வொரு பகுதியும்
எங்கள் வியர்வையின் விளைச்சலே'' என்றான்.

1974

## பந்தாட்டம்

பண்ணையார் படுக்கையில்!
என்னையா காரணம்?

இரண்டுபல் கன்றாய்
இருக்கும் போதே

மணப்பாறைச் சந்தையில்
வாங்கிய காளையாம்

நான்கைந் தாண்டாய்
நன்றாய் உழைத்ததாம்

நேற்று வண்டியில்
நிறைய பொருள்களை

ஏற்றிச் செல்கையில்
கால்கள் இடறி
விழுந்ததால் பொருள்கள்
வீணா யினவாம்.

செய்தியைப் பின்னர்
தெரிந்த பண்ணையார்
கட்டுத் தறியில்
காளையைக் கண்டே

மூங்கில் கழிகள்
முறியத் தாக்கவே
கதறிய காளை
கயிற்றை அறுத்ததாம்

பண்ணையார் உடலைப்
பந்தா டியதாம்
பந்துடல் பண்ணையார்
படுக்கையில் கிடக்கிறார்!

## 'இன்னும் வரலியா?'

*செப்டம்பர் 17
திரளாய்த் தொண்டர்கள்!*

*'அய்யா'வின் சிலை
அடுக்கிய பூமலை.*

*மாவட்டச் செயலரின்
மல்லிகை மாலைதான்
யாவற்றையும் விட
யானையாய்க் கனத்தது!*

*கூடிய தொண்டர்கள்
குலவிப் பிரிந்தனர்!*

*மாளிகை வந்த
மாவட்டச் செயலர்*

*கட்டிய வாறே
பட்டியில் கிடந்த
மாடுகள் பார்த்தார்!*

*மதிய மாகியும்
மேய அவிழ்த்து
விடவில்லையே என
வந்தது பெருஞ்சினம்!*

*வாழ்த்தினார் இப்படி:*

*'எங்கே பறப்பயல்
இன்னும் வரலியா?'*

1974

## வருகிறோம்

''மாடு தின்னும்
பறைப்பயல் மகனே!
காலில் செருப்பொடு
கண்முன் நடப்பதா?
தோலை உரிப்பேன்
போடா தொலைவில்''
பொங்கினார் பண்ணையார்!

நெருப்புக் கதிரவன்
நேர்மேல் நின்று
வெய்யிற் குழம்பை
வீசும் நடுப்பகல்;
செருப்பைக் கழற்றித்
தெருவினில் நடந்தான்
நெருப்பு ஊர்வலம்
நெஞ்சினில் நடந்தது.

''மனிதனைத் தின்னும்
மதிப்புடை யோரே!
கையில் செருப்பொடு
கண்முன் வருகிறோம்

மாட்டுத் தோலை
மாற்றிப் பறைக்கு
மனிதத் தோலை
வாங்க வருகிறோம்''

1975

## பள்ளப்பயல் நான்

பள்ளப் பயல்நான்
பள்ளப் பயல்தான்!

மேட்டுக் காட்டினை
வெட்டி வீழ்த்திப்
பள்ள நிலங்களைப்
படைத்தவர் பேரன்!

பள்ள வயல்களில்
தழையுரம் பதித்து
வெள்ளப் பயனை
விளைத்துக் கொடுத்தவர்
பிள்ளை நான்!

மேட்டினை வெட்டிய
பாட்டனின் வழிநான்!
தழையுரம் மிதித்த
தந்தையின் மகன்நான்!

பசுமைப் புரட்சி
பரவுமிந் நாளில்
பழைய உரத்தால்
பயனிலை, ஆதலால்
தழை யுரம் மாற்றித்
'தலையுரம்' போட
எண்ணி வருகிற
இந்தத் தலைமுறைப்
பள்ளப் பயல்நான்!
பள்ளப் பயல்தான்!

1976

## எழுச்சியூற்று

*நெளிந்திடும் பாம்பெனும் நீண்ட கருங்குழல்
நிலந்தொட நடக்கையிலே - அடீ!
நெளிந்திடும் உணர்வுகள் நெகிழ்ந்திடும் நெஞ்சம்
நீ இதை அறிந்திலையோ?*

*மாலைப் பொழுதினில் மேலைக் கடல்புணர்
மாணிக்கச் செங்கதிராம் - உன்
கோலப் பிறைநுதல் குங்குமப் பொட்டினில்
குழைந்திடும் என்னகமே!*

*ஒளிமழை பொழியும் நிலவெனும் உன்றன்
உருண்டை முகந்தனிலே - அடீ
களியிசை முரலும் அளியென இரண்டு
கருவிழி ஏனடியோ?*

*வளியென உலவிய ஒளிமுகக் காளையெ.
மனத்தினைத் துளைப்பதற்கோ - கூர்
உளியினுங் கொடிய சுழல் இரு விழிகள் ?
ஊமையோ சொல்லடியே...!*

*குங்குமக் கதுப்பில் குழிவிழ இளநகை
கொழிப்பதைக் கண்டலவோ - எழில்
மங்கையே! நெஞ்சம் மறிகடல் போல
மகிழ்ச்சியில் முழங்குதடி!*

1967

## ஏன்? ஏன்?

நாடொறும் தொலைவில் நான்வரப் பார்த்து
நடையினில் நின்றிருப்பாய் - உன்
வீடணை பொழுதில் வெடுக்கென மறைந்தென்
வேட்கையைக் கூட்டுவிப்பாய்.

சாலையில் தனியாய் வருகையில் தலையேன்
தரையினைப் பார்க்கிறது ? - பசுஞ்
சோலை மயிலெனத் தோழியர் சூழ்கையில்
சுழல்வதேன் பூவிழிகள்?

நெஞ்சில் முளைத்து நிமிர்த்து மதர்த்த
நிறையெழில் காணுதற்கோ - அடீ
அஞ்சுகமே! நீ அடிக்கடி விலகா
ஆடையைத் திருத்துகின்றாய்?

நீயெனைக் காணும் நினைப்புட னன்றோ
நிதநிதம் வகைவகையாய் - ஒளிர்
தூயநல் ஆடைகள் சொக்கிட உடுப்பது?
சொல்லித் தெரிவதிதோ?

நாளொன்று கண்ணே! நாவல் விழிச்சுடர்
நான்பட வில்லையென்றால் - கொடும்
வாளொன்று நெஞ்சை வகிர்ந்ததைப் போல
வாடிப் புலம்புவதேன்?

தோழியர் தம்மிடம் 'காளை இவன்' எனச்
சொல்லி மகிழ்ந்தனையோ? -அவ்
ஏழையர் என்னைக் காணும் இடந்தொறும்
ஏன்விழி பூக்கின்றனர்?

உன்மன மேடை மன்னவன் ஆக
உலவுதல் நினைத்தலவோ - அடீ
என்மனந் துள்ளி எகிறிக் குதிக்கவோர்
எழுச்சி பிறக்குதடி.

1966

## புதிய உணர்ச்சி

தருமுகிற் கருமை வென்று
தரையினைக் கூட்டுங் கூந்தற்
றிருவுடை யாரைக் கண்டுஞ்
சிந்தையைத் தந்தேன் அல்லேன்;
ஒருமுழக் கூந்தல் கொண்ட
உன்னையே என்றன் நெஞ்சம்
மருவுதல் என்னை? பின்னை
மயங்குதல் என்னை கொல்லோ?

நின்முகங் கண்ட மற்றோர்
நீள்முகம் என்றார்; மற்றுன்
மென்மொழி தன்னைக் கேட்டு
மெருகிலை என்றார்; நானோ
இன்புவி தன்னை, மேலாம்
இறைதனை, உயிரை யெல்லாம்
நின்முகந் தன்னிற் காண்பேன்!
நிகரிலா வுன்றன் பேச்சில்

குழலிசை கேட்பேன்; யாழின்
குளிரிசை மடுப்பேன்; மேலாம்
மழலையிற் குளிப்பேன்; தாயாம்
மறுவிலாத் தமிழின் தீஞ்சொற்
கழலினை, சிலம்பைக் கேட்பேன்!
கனிதமிழ் அனையாய்! ஈதோ
பழந்தமிழ்ப் புலவோர் கண்ட
பத்தெட்டுங் காட்டுங் காதல்?

1961

## உன்னெழில்

முகிலெனுங் கூந்தற் கொண்ட
மொய்யெழில் வான மங்கை
அகிற்புகை யூட்டு முன்றன்
அடர்கருங் கூந்தற் கண்டே
உகுத்தனள் மழையாங் கண்ணீர்;
உயிர்கொளும் வேலை நெஞ்சில்
புகுத்திய தென்ன அன்னாள்
புலம்பினள் இடியாய் மாதோ!

நெற்றியைக் கண்ட பின்றை
நீலவான் பிறையோ, 'யானே
உற்றனென் தோல்வி' யென்றே
ஒளிந்திடும் முகிலாஞ் சோலை;
வெற்றிதான் கிடைத்த தென்றே
விரைந்திடு மீன்கொத் திப்புள்
பெற்றதோ தோல்வி கண்ணைப்
பிழைபடக் கயலாய் எண்ணி!

சிரிக்கிறாய், பற்கள் கண்ட
சிப்பியோ கடலுள் வெண்மை
எரிக்கிற முத்தை ஈன
ஏகிடும்; கழுத்தைக் கண்ட
புரிவளை போட்டிக் கஞ்சிப்
புகுந்திடும் பரவை; உள்ளே
இருக்கிற பவளம் சங்கே!
இதழ்எனைத் தூரத்திற்(று) என்னும்.

மங்கையுன் கொங்கைத் தோற்றம்
மரைமுகை காலை கண்டே
பொங்கிடும் துயரால் உள்ளம்
புலம்புதல் மலர்ச்சி என்பார்.

கங்குலில் என்றன் கைக்குள்
கன்னிநீ துயில்வ தாலே
கொங்கைபோல் தாம ரைப்பூ
குவிந்தெழில் காட்டும் போலும்!

நாட்டினில் உன்றன் சாயல்,
நடவிழி, பேச்சு, பாட்டு
ஊட்டிடும் இன்பம் ஓர்ந்தே
ஊரதன் புறத்தே உள்ள
காட்டிடை மயிலும் மானும்
காவிடைக் கிளியும் காக்கைக்
கூட்டிடைக் குயிலும் தோன்றல்
கூறிட வேண்டுங் கொல்லோ?

1961

## தனிப்பாடல்

மானே மயிலே மரகதமே கொல்லிமலைத்
தேனே கனியே தெவிட்டாத நல்லமுதே
நீயின்றி நானில்லை நீள்புவியில் எந்நாளும்
தாயின்றிச் சேயில்லை யால்.

முகத்தில் இளமை; மொழியில் மழலை
அகத்தில் உணர்ச்சி அடக்கி உயிரை
இழுத்துப் பிடித்தே இயக்கித் துயரில்
விழுத்திய தேனோ விளம்பு?

□

உதட்டிலே சாயம் ஒழுகக் குழலோ
குதிரைவால் என்றே குதிக்கக் - குதியுயர்ந்த
காலணியைப் பூட்டிக் கரிக்குட்டி போல்பெண்மை
ஏலமிட்டு வந்ததும் ஏன்?

கூந்தலில் நூலும் குளிர்முகத்தில் வெண்மாவும்
காந்த விழிக்கீழ் கலயக் கரு'மை'யும்
காட்சிதரப் பெண்மைக் கவின்தொலைத்து என்முன்னே
காட்சிதரல் ஏனோ கழறு.

1962

## இரவு பகலாகும்

ஓ, அது எங்கே?
ஊரிலே மூத்தது.
நீண்ட காலமாய்
நின்று கொண்டிருந்தது.

எட்டுத் திசையிலும்
இரைதேடும் பாம்பாய்
நெளிந்து துளைத்தன
நீண்டவேர்கள்!
ஓ, அவை எங்கே!
ஒளிந்து கொண்டனவோ?

பெரும் பெருந் தூண்களாய்ப்
பிள்ளை விழுதுகள்!
தாய்க்குப் பாலூட்டித்
தாங்கி நின்றன.
அவற்றைக் காணோமே,
அழிந்து போயினவோ?

அகப்படும் அனைத்தையும்
வாரிச் சுருட்டும்
ஆசையாய் நீண்ட
ஆயிரங் கிளைக்கை!
ஓ, அவை எங்கே?
ஒடிந்து போயினவோ?

இருள்செறி காட்டிடை
ஏற்றி வைத்த
சின்ன அகலின்
திரிநுனிச் சுடர்போல்

பச்சை இலைகளின்
பரப்பின் ஊடே
செக்கச் சிவந்த
சிறு சிறு பழங்கள்!
ஓ, அவை முன்னரே
உதிர்ந்து போயினவோ?

இன்றுயிர் வாழ்வோர்
எவரும் பிறவா
அன்றே முளைத்த
ஆல மரமது!
ஓ, அது எங்கே?

நிழலிருள் பரப்பி
ஒளிக்கதிர் மறைத்து
ஆந்தையும் பாம்பும்
அடைந்து கிடந்த
ஆல மரத்தை
அழித்து விட்டார்கள்.

எவரால் அழிக்க
இயலும்? என்றே
தருக்கி நின்றது
தரையட்ட மானது.

இருட்குடை கவிந்த
இடத்தினில் இன்றோ
உழைப்பு மின்சார
ஒளிமழைப் பாய்ச்சல்!

ஒரு மரம் அரசு
ஓச்சிய இடத்தில்
பெரும்பல கட்டிட
மக்கள் தலைவர்கள்!

ஆந்தையும் கூகையும்
அரற்றிய இடத்தில்
வேளையை விளம்பும்
ஆலைச் சங்கொலி!

பச்சை இலையிடைப்
பதுங்கிய சிவப்பாய்ச்
சின்ன பழங்கள்.
தெரிந்தன முன்னர்

நீல வானிடை
நெருப்புத் துண்டெனக்
குருதிச் செங்கொடி
கூப்பிடும் இன்று!

பகலை இரவாய்ப்
பண்ணிய மரமில்லை
இரவைப் பகலாய்
இயற்றினர் தோழர்கள்.

1980

## வாழ்முறை சிறக்க...

*வானத் தோழனே!*
*மின்னல் வாளினை*
*உறைகழித் தெடுப்பாய்!*

*இடிக்குரல் முழக்கினை*
*எங்கணும் பரப்புவாய்!*

*உறிஞ்சி உலாவும்*
*முகில்முத லாளியை*
*வெட்டி எறிவாய்*
*வீழ்மழைக் குருதியால்*
*வாழ்முறை சிறக்கும்.*

1974

## சமத்துவம்

'என்னைச் சுமக்கும்
இனிய செருப்பே!

ஓடும் நீரில்
உன்னுடல் நனைந்தால்
நடுங்குவாய் என்பதால்
நான் உனைச் சுமக்கிறேன்

இது தான் சமத்துவம்
இல்லையா?' என்றேன்.

செருப்பு சிரித்துச்
செப்பியது இப்படி :

''கல்லிலும் முள்ளிலும்
காயும் வெயிலிலும்
உம்மைச் சுமந்தே
உருக்குலைந் தேன்நான்.

நீரினில் நனைந்தால்
நீண்ட காலம்
உழைக்க மாட்டேன்
என்பதை உணர்ந்தே
கைகளில் எடுக்கிறீர்

கரைதனை அடைந்ததும்
போடுவீர் கால்களில்
புரியுமே சமத்துவம்.''

1975

## உயிரியற்கை

ஒருபந்து,
ஓங்கி அடித்தேன்.

உயர எழுந்தது வானை நோக்கி!
ஆழநீரில் அமிழ்த்தினேன் பன்முறை;
மேலே மேலே எழுந்து மிதந்தது!

அடிப்பினும் அமிழ்த்தினும்
துடிப்பாய்ப் பந்தெழல்
உள்ளுயிர்க் காற்றால்
என்பதை உணர்ந்திலேன்

உயிராம் காற்றை
உடைய கோழைநான்!

1973

## சாலை

நெருப்புச் சூரியன் நேர்மேல் நின்று
வெய்யிற் குழம்பை வீசும் நடுப்பகல்!

நெளியும் பாம்பாய் நீண்ட சாலையில்
பாம்பின் வயிறாய்ப் பருத்த ஓரிடம்!

விறகுப் பிள்ளைகள் 'தீ' யவன் வெகுளியில்
விடும் உயிர் மூச்சாய்க் கரும்புகை மேய்ச்சல்!

மறையொலி கோயில் மந்திர வொலிகளைக்
குறையொலி யாக்கும் உழைப்பின் கூச்சல்!

சாலையைத் திருத்தும் வேலையில் நைந்த
சேலைகள், வேட்டிகள், சிற்றுடைக் கந்தல்கள்!

காலைக் கதிரொடு வேலையில் வெதும்பும்
பாலையின் சேய்கள், மருதத்தின் தாய்கள்!

கருகிய மேனியின் வியர்வைக் கண்ணீர்
பெருகி வழிந்திடப் பெரியதோர் கலத்தில்

உருகிய தாரொடு சரளையைக் கலந்தே
இறுகிய கைகளால் இழுத்துச் சுழற்றுவர்!

துடைப்பக் கட்டையால் சாலையில் தொற்றிய
தூசித் துரும்பைத் துப்புர வாகத்

துடைக்கும் வேலையைத் தொடர்ந்து செய்வார்.
தூசி உடம்புத் தோழியர் சிலபேர்!

கந்தற் கோணியைக் கால்களிற் சுற்றிக்
கனத்த சுமட்டைத் தலைதனிற் கட்டி
வெந்த கலவையைக் கூடையில் ஏந்தி
வேக வேகமாய்ச் சாலையில் கொட்டுவர்.

1974

## முதல்வேலை

மந்தியை நரிகள் கூடி
மறப்புலி அரிமா வேங்கை
தந்திகள் பிடிகட் கெல்லாம்
தலைவனாய் ஆக்கு தற்போல்
இந்தியத் துணைக்கண் டத்தில்
இனிமையுஞ் சிறப்பும் வாய்ந்த
செந்தமிழ் வங்கம் மற்றுந்
திராவிட மொழிகள் தள்ளி

இந்தியை இருக்கை தன்னில்
ஏற்றினார் வடவர்; இங்குத்
தொந்தியை வளர்த்து வெற்றுச்
சுகத்தினை நாடி நிற்கும்
மந்திரி மார்கள் எல்லாம்
மதிமிக்க செயல்தான் ஈதால்
நந்தமிழ் செழிக்கும் என்றே
நவில்கிறார் என்ன சொல்வேன்

விந்தியம் வடக்கே உள்ளார்
மேனிலை யுறவும் என்றும்
விந்தியத் தெற்கே உள்ளார்
வீதியில் அலைந்து நாயாய்
மந்தியாய் ஆடு மாடாய்
மரமிரும் புள்ளாய் மாறத்
தந்திரத் திட்டம் போட்டார்
தம்பிநீ அறிதல் வேண்டும்.

தாய்மொழி வளர்த்த பண்பு
தரணியிற் சிறந்த பண்பு
தாய்தமிழ்க் கலைக ளெல்லாம்
தன்னிக ரிலாத வையாம்

தாய்மொழி அழிந்த அன்றே
        தமிழினம் அடிமை யாகும்
தாய்மொழி காக்கும் வேலை
        தம்பிநம் முதல்வே லையாம்.

தென்னவர் வாழ்வு மேன்மை
        சிதைத்திடல் தடுக்கும் போர்க்குத்
தென்னகத் தலைவன் அண்ணா
        தெரிவிப்பான் திட்டம் தேதி
முன்னவன் நானே என்று
        முந்துநீ களத்தை நோக்கி
வன்னக வடவன் தாழ்வான்
        வாகைநாம் சூடு வோமே.

1965

## மானப்போர்

*பறையறைக! முரசார்க்க! எல்லை நோக்கிப்*
*பறந்திடுக, பாய்ந்திடுக தோழா இன்றே*
*முறையிறந்து நெறிபிறழ்ந்து நாடு வவ்வும்*
*மூர்க்கர்களின் தலையறுக்க உயிரைப் போக்க;*
*கறைபடவோ தமிழ்மானம்? எறும்புக் கண்ணன்*
*காலடியும் துணைக்கண்ட மீதிற் பட்டுக்*
*குறைபடவோ நம்வீரம்? சப்பை மூக்கன்*
*கூறுபட வீறுடனே எழுக பாய்க!*

*புலியெனவே பாய்ந்திடுக; பகைவர் தம்மைப்*
*புயல்மரங்கள் சாய்ப்பதுபோல் சாய்க்க; நம்மை*
*எலியெனவோ நினைக்கின்றான் நஞ்சு நெஞ்சன்*
*இடிவீழ்ந்த மரமெனவே கருகிச் சாக;*
*கிலிகொள்ள வேண்டுமவன்; ஓட வேண்டும்*
*கிழக்கெழுந்த ஞாயிறுமுன் இருளைப்போல*
*வலிமிகுந்த புகழ்செறிந்த வழியில் வந்தோய்*
*மானப்போர் ஈதறிக எழுக பாய்க.*

1962

## நிகரிலாத் தமிழ்

ஈரைந்து திங்கள் எனைச்சுமந்து பெற்றெடுத்துப்
பாரை அதில்சிறக்கும் பான்மையினைக் காட்டுவித்த
பெற்றோரை வேண்டேன் பெறற்கரிய செந்தமிழே
உற்ற உனையன்றி யான்.

தாயாக என்னுயிரைத் தாங்கித் தளர்வுற்றால்
சேயாக என்மடியில் சேர்ந்தின்பம் கூட்டுகின்ற
இல்லாளை வேண்டேன் இறப்பற்ற செந்தமிழாம்
நல்லாய் உனையன்றி நான்.

வண்டுவிழி கண்டுவிரல் வாய்மலரின் தேன்மழலை
கொண்டென் மனமேடை கூத்தாடும் நன்மகவும்
வேண்டேன் உலகின் விளக்கான செந்தமிழே
ஆண்ட உனையன்றி யான்.

ஈன்றவளாய் என்னை வளர்த்தவளாய் இவ்வுலகில்
ஆன்ற துணையாய் அமைந்த மனையாளாய்ப்
பெற்ற மகவாய்ப் பிறங்குதலால் செந்தமிழே
மற்றவரை வேண்டேன் மனம்.

அன்னை நீ தந்தைநீ அன்புத் துணைவியொடு
பின்னை மகவும்நீ பேச்சும்நீ மூச்சும்நீ
நீயின்றி நானில்லை நீள்புவியில் எந்நாளும்
தாயின்றிச் சேயில்லை யால்.

## மானம் காப்போம்

கதிரவனின் ஒளிவெள்ளம் தோற்கு மாறு
கைவிளக்கு ஒளிநல்கும் என்று சொன்னால்;
கொதியனலைக் கூரையிலே கொட்டி விட்டுக்
குறையேதும் நேராது என்று சொன்னால்;
மிதியடியைத் தலைமீது தூக்கி வைத்து
மேன்மைதரும் முடியென்று சொன்னால் தம்பீ!
மதியுடையான் ஒப்புவனோ? மாட்டான், ஆனால்
மந்திரிகள் ஒப்புகின்றார், அறிவு என்னே!

'ஆங்கில'த்தை அகற்றிடுவோம் இந்தி மூலம்
அரசாட்சி செலுத்திடுவோ மானால் நாட்டில்
ஓங்கிவிடும் ஒற்றுமையே என்று கூறி,
உயர்ந்ததமிழ், பண்பு, கலை அழிக்க இன்று
தீங்குமன வடவர்களும் திட்டம் போட்டார்
'தேன்சொட்டும் திட்டமது' என்று கூலி
வாங்குகின்ற தமிழ்நாட்டு அமைச்ச ரெல்லாம்
வாய்கிழியக் கத்துகின்றார் என்ன சொல்வேன்?

மந்திக்கா விலங்குகளின் தலைவன் என்ற
மணிமுடியைச் சூட்டுவது? ஏது மற்ற
இந்திக்கா ஆட்சிமொழி இருக்கை தன்னில்
இடங்கொடுத்துச் சிறப்பிக்க வேண்டும்? இன்றே
சிந்திக்கா விட்டால்உன், மொழியும் பண்பும்
சிறப்பான நாகரிகம் கலைகள் யாவும்
செந்தீயில் விழுந்திட்ட தாளாய் மாறும்
செல்லரித்த பழம் ஏடாய்ப் போகும் தம்பீ!

உண்டிக்கா நாம்பிறந்தோம்? மெத்தை தன்னில்
உறங்குதற்கா இவ்வுடலம்? சேற்றில் வாழும்
நண்டுக்கும் உணவுண்டு உறக்க முண்டு
நம்வாழ்வு பகுத்தறிந்து மானங் காக்க;

கண்டுக்குச் சுவைஇனிமை உண்மை. வானக்
கருமுகிற்கு மழையாதல் இயற்கை, பூவின்
செண்டுக்கு மணமீதல் இயற்கை மானம்
செந்தமிழர் காத்திடுதல் வேண்டும் தம்பீ!

கண்டிக்க மொழிப்போரை நடத்திக் காட்டக்
கழகத்தார் முடிவெடுத்த நாளே ஆள்வோர்
தண்டிக்க யாமுள்ளோம் பார்த்துக் கொள்வோம்
தடியுண்டு படையுண்டு என்பர், தம்பீ!
குண்டுக்கா நாம் அஞ்சி ஒளிந்து போவோம்
குற்றுயிரும் வெற்றுடலும் பெரிதோ? முன்னர்
எண்டிக்கும் வெற்றிமகள் அணைத்து நின்றார்
எவர்? தமிழர், அவர்வழி நாம் உணர்த்து தம்பீ!

1965

## சொல்லு போ போ

இங்கிருந்து வரிப்பணத்தைத் தில்லி நோக்கி
எடுத்தேகும் அடிமைகளாம் அமைச்சர் மான
பொங்குகடல் நீர்மொண்டு வடக்குத் திக்கில்
போகின்ற கருமுகிலே! உனக்குச் சொல்வேன்
எங்குவரும் எதிர்ப்பென்ற இறுமாப் பாலே
இந்தியினை எம்மீது திணித்து மேலும்
பொங்கியெழும் விடுதலைசேர் உணர்ச்சி மாய்க்கப்
புதுச்சட்டம் போட்டுவிட்டோம் எனம கிழ்ந்து

செங்கோட்டை கொலுவிருக்கும் அமைச்சர் மற்றுஞ்
சிந்தையிலே இந்திவெறி கொண்டோர் காதில்
கங்கையரின் தலைமீது கல்லை ஏற்றிக்
காவிரியர் புகழ்சுமந்த பண்டைக் காட்சி
கங்குலிலே கிடந்துழன்ற தமிழர் கண்ட
கதிரவனாம் கழகத்தால் மீளும் என்றே
பொங்குமொளி மின்னலினை வீசி உன்றன்
போர்முரசாம் இடிமுழக்கிச் சொல்லு போபோ.

வானத்து மீன்களையும் வையை யாற்று
வரிமணலின் தொகுப்பினையும் விஞ்சி வெய்ய
கானத்துப் புலிப்போத்து அரிமா வெல்லாம்
காளையரின் வீரம்முன் தோற்கும் என்ன
மானத்தை உயிராகக் கொண்டு வாழும்
மறத்தமிழர் பெரும்படைமுன் வடக்கு நாட்டீர்!
வானத்துத் தேய்மதியாய்ப் போவீர் என்றே
வல்லோசை இடிமுழக்கிச் சொல்லு போபோ.

ஏடெல்லாம் போர்ப்பரணி, அறிஞர் தம்மின்
எழுத்தெல்லாம் போர்க்கருவி வாள்கள் வேல்கள்,
வீடெல்லாம் போர்மறவர், வீடு சேர்ந்த
வீதியெலாம் போர்முரசு, தென்னர் வாழும்

நாடெல்லாம் பாசறைகள் பெருமா நாடு
நடத்துகிறார் போர்முழக்கம் அறிவீர் என்றே
நாடெல்லாம் தமதென்றே ஆளு கின்ற
நச்சுமன வடவரிடம் சொல்லு போபோ

இருக்கின்ற நாள்கள்சில அதற்குள் ளேநீர்
இந்திமொழிச் சட்டமதைத் திருத்தா விட்டால்
இருக்கின்ற உயிர்ஒன்றே மொழியைக் காக்க
ஏகுவதே பெறும்பேறு அறிஞர் அண்ணா
இருக்கின்றார் வழிகாட்ட எனமு ழங்கும்
இளைஞர்குழாம் படையெடுக்கும் உங்கள் ஆட்சி
இருக்கின்ற இடத்தில்புல் முளைக்கும் என்றே
இடியோசை செவிதுளைக்கச் சொல்லு போபோ.

1965

## கொதித்தெழுவாய்

இந்தியினைக் கற்றார்க்கே நாட்டில்
இருக்குமிடம் என்றநிலை ஆக்கச்
சிந்தையினில் கொண்டன்றோ வடவன்
தீட்டுகிறான் தீயபல திட்டம்!

மொழிக்குரிய நிலையழித்தால் வாழ்வு
முடிந்துவிடும் நமக்கென்றே எண்ணி
விழிதன்னைப் பறித்திடவே திட்டம்
வேற்றானும் போட்டுவிட்டான் இன்று!

அமிழ்தான தமிழிடத்தில் இந்தி
அமர்ந்திருக்குங் கல்லூரி தன்னில்!
உமிழ்காறி தனையமிழ்தாய் ஆக்கி
உயர்வடையச் செய்திடவே எண்ணம்.

வரிவடிவம் நாகரியில் இருந்தால்
வாழ்ந்திடலாம் ஒற்றுமையாய் என்று
நரித்திட்டம் வகுத்திட்டார், தமிழை
நசுக்கிநமை அடிமைகளாய் ஆக்க!

கொதித்தெழுவாய் திராவிடத்தின் மறவ!
கொத்தடிமை தீர்வதற்கே இன்றே
உதித்துவிட்ட இளம்பரிதி வாழ்வில்
ஒளியூட்டி வாழ்விப்பான் என்றே!

1965

## ஆர்த்தெழுவீர்! திராவிடத்தீர்!

இந்தியினைப் பொதுமொழியாய் ஆக்கி விட்டோம்
ஏற்றிடுவீர் இஃதெமது ஆணை யென்று
முந்தியநாள் மொழிந்திட்டார் பிரசாத், பந்து
முனைந்திட்டார் திணிப்பதற்கு வடவர் அன்றே
நந்தமிழர் தென்னாட்டார்ப் பள்ளி எங்கும்
நாற்பதுக்குங் குறையாமல் மதிப்பெண் பெற்றால்
தந்திடுவோம் தேர்வென்று தகுதி போட்டார்;
தமிழ்நாட்டுப் பணிமனையில் உள்ளோ ரெல்லாம்

மந்திமொழி இந்தியினில் தேர்வு பெற்றால்
மையவர சின்சலுகை கிடைக்கு மென்றார்;
இந்தியினைக் கல்லூரி வணிகங் கற்பார்
இரண்டாம் 'நன்' மொழியாக ஏற்கச் செய்தார்;
இந்தியினை நாணயத்தில் அஞ்சல் போன்ற
இன்னபிற துறைகளிலும் புகுத்தி விட்டார்;
சொந்தமொழி செந்தமிழை ஒதுக்கி இந்திச்
சொத்தைமொழி கற்பார்க்கே சலுகை என்றார்!

கேட்டோம்நாம் அவராணை! திராவி டத்தைக்
கீழ்நிலையில் அழுத்திடவே திட்டம் இன்று
போட்டீரா எனக்கேட்டோம் எழுத்தால் பேச்சால்
புன்னகைத்தார் மறுமொழியும் தந்தா ரில்லை.
நாட்டிற்காம் குடியர்சு பெற்ற நாளில்
நம்நாட்டுத் தலைநகரில் பிரசாத் கூட்டம்
போட்டிருந்த நிலைகண்டோம் பொங்கி ஆர்த்தே
போட்டோம்நாம் மாநாடு முடிவு செய்து

காட்டிடுவம் கறுங்கொடிதான் நுமது ஆணை
கண்ணியமாய்த் திரும்பப்பெறல் வேண்டு மென்றோம்
காட்டாத மதிப்பெல்லாங் காட்டி நேரு
'காட்டாதீர்' எமதாணை மீறி இந்தி

நீட்டாது வாலென்று தீட்டி னார்காண்!
நெஞ்சத்தில் உரைத்ததுபோல் பிரசாத் முன்பு
ஆட்டாத நாவாட்டி ஐதரா பாத்தில்
அறைந்தாரே இந்தியினி நுழையா தென்று.

வரிவடிவம் ஒன்றாக இருந்தால் நாமே
வாழ்ந்திடலாம் ஒற்றுமையாய் என்று கூறிப்
புரியாத நாகரியின் எழுத்தை இன்று
புகுத்திடவே முதலமைச்ச ரெல்லாங் கூடிச்
சரியென்றே ஒப்பிவிட்டார்; சங்கங் கண்ட
தாய்த்தமிழின் தொன்மைநிலை ஆவ தென்ன?
நரித்திட்டம் போட்டுவிட்ட பின்னர் இன்று
நாட்டினரே! சட்டமது வல்ல வென்று

மொழிகின்றார் மோதிலால் பெற்ற பிள்ளை
முன்பிந்தித் திணிப்பதற்குச் சொன்ன தேபோல்!
மொழியென்றால் என்னவென்று தெரியா தோனை
மூங்கையினை முதலமைச்சாய்ப் பெற்று விட்டோம்
இழிநிலையில் இணையான மனைவி தன்னை
இன்னொருவர்க் கடகுவைத்து வாழ்தல் வாழ்வா?
அழிகின்ற திராவிடத்தீர் மொழியைக் காக்க
ஆர்த்தெழுவீர் விடுதலையைக் காண்போம் இன்றே.

1965

## கொட்டடா பெரும்பறை

கோட்டைகள் தகர்ந்தன கொடிமரம் வீழ்ந்தது
கொடுங்கோல் ஆட்சி குப்புறக் கவிழ்ந்தது
நாட்டை ஆளப் பிறந்தவர் நாங்களே!
நாட விடோம்பிற கட்சியை என்றுதம்
பாட்டன் வீட்டுச் சொத்தெனப் பேசியோர்
பதைத்திடப் பஞ்சாய்ப் பறந்திட மக்கள்
சீட்டைக் கிழித்து வீட்டுக் கனுப்பினர்
செழித்தது மெய்ம்மை. சிரித்தது வையம்!

ஏறிய விலைகளை இறக்குக என்றோம்
எண்ணிலாத் தோழரைச் சிறையுட் புகுத்தினர்;
சீறினர். சென்னை மணி, பொற் செழியனைச்
செத்த பிணங்களாய்த் திருப்பித் தந்தனர்
கூறு தமிழ்நிலம் 'தமிழ்நாடு' ஆகிடக்
கொள்ளை கொடுத்தோம் சங்கர லிங்கனை
மாறிய தாபெயர்? 'வயிற்றுக் கின்றி
மாண்டனன் சங்கர லிங்கன்' என்றனர்!

அன்னையைத் தந்தையை ஆருயிர்த் துணைவியை
'அப்பா' எனுமிள மகவினைத் துறந்தே
முன்னை முகிழ்த்த அன்னைத் தமிழின்
முழுநலக் காப்பே மொய்த்த நெஞ்சொடு
கன்னெய் ஊற்றிக் கடுந்தீக் கொளுவிக்
கனிதமிழ் வாழ்க வாழ்கென மாய்ந்த
தென்னவ மறவரை 'நோய்நொடி யாலே
செத்தனர்' என்றனர் சிந்தை யிலாதவர்.

தென்றமிழ் வாழ்க. தீமொழி வீழ்கெனத்
தெருத்தொறும் முழக்கிய சிறாரை இளைஞரை
அன்று பிறந்த ஆட்டுக் குட்டியை
அணுஅணு வாகத் துணிப்பது போல

நன்று விரிந்த தாமரை மலரினை
நளியெரி தீயில் எறிவது போலக்
கொன்று குவித்துக் கொக்கரித் தனரே
கொஞ்சமோ அவர்தம் கொடுஞ்செயல் கூற?

வண்டமிழ் மறந்து வரன்முறை துறந்து
மற்றவர் தம்மை மதித்திட லின்றிக்
கிண்டலும் ஆணவக் கீழ்த்தரப் பேச்சும்
கேட்பதற் காளிலை எனுந்திமிர்த் தருக்கும்
கொண்டு திரிந்து கூத்தடித் தனரே!
கூர்ந்து நோக்கினர் மன்னராம் மக்கள்
'கண்டது துயர்தான் கடையினைக் கட்டுக
கழகத் தார்க்கே அரியணை' என்றனர்.

தமிழ்த்தாய் மகிழ்ந்தாள், தமிழினம் சிரித்தது.
தாங்கருந் துயர்க்கோர் விடுதலை வந்தது
அமிழ்துநம் அண்ணன் ஆட்சியை ஏற்றான்
அன்பும் அறமும் சிரித்தன காணாய்!
கமழ்நறுங் கொள்கை காத்திட மாய்ந்த
கன்னெனுந் தோழர்தம் நினைவினைப் போற்றி
இமிழ்முர சார்க்க! ஊதுக சங்கம்!
[illegible]த் திசையிலும் கொட்டடா பெரும்பறை.

1967

## பகுத்தறிவு

எதிரில் வந்தவர் இப்படிப் பேசினார்
''அவரை இதுவரை பகுத்தறி வாளர்
என்று தான்நான் எண்ணி யிருந்தேன்
ஆனால் ....'' இழுத்தார்.

என்னை வியப்பு இழுத்தது. கேட்டேன்
''கோயி லுக்குள் போய்வந் தாரா
கோயிற் சிலையைக் கும்பிட் டாரா?''

''இல்லை. இல்லை''

'பட்டை நெற்றியில் பளிச்சிட்டதா?
கொட்டை கழுத்தில் கோத்துக் கிடந்ததா?''

''இல்லை. இல்லை''

''சாதிச் சேற்றில் சாய்ந்து விட்டாரா?
சாதிப் பெயரைத் தன்பெயர் பின்னே
ஒட்டிய வாலாய்க் கட்டிக் கொண்டாரா?''

''இல்லை. இல்லை''

''ஏற்றத் தாழ்வை மாற்றும் முயற்சியில்
ஈடு படாது மாறி விட் டாரா?
எல்லோரும் ஓர்நிறை என்னும் கொள்கை
நல்ல தன்றென நவின்றாரோ அவர்?''

''இல்லை. இல்லை''

''எதனால் பின்னர் இப்படிச் சொல்கிறீர்?''

''அய்யா வின்பின் பகுத்தறி வாளர்க்கு
மெய்யாய்க் கிடைத்த மிகுதிறன் கொண்ட
தமிழினத் தலைவரைத் தாக்கிப் பேசினார்.

எப்படி அவரைப் பகுத்தறி வாளராய்
ஒப்புக் கொள்வது? உணர்க'' என்றார்!

1975

## குடியாட்சி வாழ்க!

வானவில் போன்ற
வளைவுகள் பற்பல
'தானைத் தலைவரே,
தமிழின வேந்தரே!
ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் காண்கிற
சோழரே வருக' எனச்
சொல்லி நின்றன!

களிறுகள் இரண்டு
பிளிறிமுன் சென்றன!

படைநடைக் குதிரைகள்,
பட்டாள உடையினர்
எண்மரைச் சுமந்தே
ஏகின தொடர்ந்தே!

வானைக் குலுக்கும்
'வாழ்க' முழக்கம்;
ஒருபெருங் காடாய்
இருநிறக் கொடிகள்!
காலாட் படையாய்க்
கட்சித் தோழர்கள்!

அழகுத் தேர்களாய்
ஐந்தாறு வண்டிகள்
வந்தன, அந்த
வரிசையின் கடைசியில்
ஆரூர்த் தேரின்
அழகிதோ என்று
கண்டவர் வியக்கக்

கவின்கலைக் கூடமாய்
வந்தவோர் தேரினில்
வாய்ந்த அழகொடு
கலையறி தலைவர்
காட்சி நல்கினார்!

ஏழ்வகை மகளிரும்
ஏனைய மாந்தரும்
நன்றாய்க் காண
நால்வகைப் படையொடு
நடந்தது திருஉலா!

கோனாட்சி வீழ்த்திய
குடியாட்சி வாழ்க!

1973

## அறத்தைக் காக்கிறான்!

கல்லூரிப் பருவம், களிற்றுப் பெருமிதம்!
உள்ளூறிப் பழகிய தோழன் ஒருவன்
சுந்தரம் என்பது சூட்டிய அவன்பெயர்,
'அழகன்' என்றதை மாற்றி அமைத்தான்!
கோயிலின் வாயிலில் காலடி வைக்கவும்
கூடாது என்கிற கொள்கை உடையவன்!
'உள்ள பெயரொடு ஒட்டிய சாதியாம்
வாலினை நறுக்குவோம், வலிக்காது' என்றவன்!

கல்லூரிப் பருவம் கால மானது;
சட்ட மன்றந் தனிலோர் உறுப்பினன்
ஆனான் நண்பன்; அடைந்தான் உயர்வு!
'திறந்து வைத்துச் சிறப்புரை யாற்றுவார்
அழகன் எம்.எல்.ஏ' என்றோர் அறிக்கை
சாதிமா நாட்டைச் சாற்றுவ தாக
ஒட்டி யிருந்தது, ஊர்ச்சுவ ரெல்லாம்!

அய்ந்தாறு நாள்முன் செய்தித் தாள்களில்
வந்தவோர் அறிவிப்பு வந்தது நினைவில் :
நிறையச் சொத்துடைப் பெரிய கோயிலின்
அறங்கா வலர்குழுத் தலைவராய் அழகன்
அமர்த்தப் பட்ட அறிவிப் பேஅது!

1975

## 'வந்தே மாதரம்'

*ஊராட்சி ஒன்றியம்
உயர்ந்த கம்பம்!*

*தேசியக் கொடியைத்
திருமிகு தலைவர்
ஏற்றி வைத்துச்
சிலசொல் இயம்புவார் :*

*''வேற்று நாட்டான்
வெள்ளைக் காரன்
சுரண்டினான் நம்மை
துரத்தினோம் அவனை,
அந்நாள் இந்நாள்
அனைவரும் அறிவீர்
வந்தே மாதரம்''*

*வந்தே மாதரம்
வானைப் பிளந்தது!*

*நடவுக் கூலியில்
நாலணா உயர்த்திக்
கேட்டதை நேற்றுக்
கிடைக்காமல் செய்த
ஒன்றியத் தலைவரின்
உரத்த முழக்கம்*

*'வந்தே மாத்துறோம்
வந்து ஏமாத்துறோம்'
என்று விழுந்ததே
ஏழையின் செவியில்!*

1975

## 'அறிவாளர்கள்'

பதவிநகருக்குப் போகப்
பல்லக்கு ஏறுகிறோம்.
பல்லக்கையே
பாடையாக மாற்றும்
முட்டாள் தனத்திற்கு
இரையாக மட்டோம்!

அறிவகத்தில்
ஆண்டுகள் பலசென்றபின்
அடைந்த 'இன்பங்களை'யெல்லாம்
தாயகத்தில்
மிகவிரைவில்
அடைய விரும்புவது
தவறாகுமா?

காஞ்சித் திருத்தலத்தின்
கடைக்கண் பார்வைதான்
கடைத்தேற்றும்
இதிலென்ன ஐயம்?
அன்று அண்ணா!
இன்று 'ஆச்சார்ய சுவாமிகள்'!
'அ'னாவிற்குப் பிறகு
'ஆ'வன்னா தானே?
இந்த அரிச்சுவடிகூட
உங்கட்குத் தெரியவில்லையென்றால்
நாங்கள் என்ன செய்வது!

கோபாலபுரத்துக்கு
மறைமுக அருளாசி!
மறுமலர்ச்சிக்கோ
வெளிப்படையாய்ச் சந்தனமாலை!
காஞ்சிக் கொடையே கொடை!

அண்ணா புகழ் ஓங்குக!
அண்ணா நாமம் வாழ்க!
அண்ணாவின் பெயரைச் சொல்லியே
அவர்க்கு
நாங்கள் போட்ட நாமம் என்று
நீங்கள் பொருள் கொண்டால்
அதற்கு
நாங்கள் என்ன செய்வது?

அரங்கங்களிலேயே
சுழன்று கொண்டிருந்த
நடிகர்களை
ஆட்சிக் சக்கரத்தையே
சுழற்றவைத்த
மாட்சிக்குரிய மரபினர் நாங்கள்!
நடிகர் வேறு நாங்கள் வேறு அல்ல
சுவரொட்டிகளிலேயே
சொக்கிப்போகும் திறனைத்
தமிழர்களிடம் வளர்த்த பெருமை
எங்கள் உரிமை!

ஞானசம்பந்தர்
எலும்பைப் பெண்ணாக்கிய
மயிலைக் குளக் கரையில்
சொல்கிறோம் -
எங்கள் வேட்பாளர்
'கபாலீசுவரர்'!
என்ன விழிக்கிறீர்கள்?

பெற்றோர் வைத்தபெயர் அதுதான்.
பின்னர்தான் 'கபாலி' ஆனது!
கபாலீசுவரரை
நீங்கள் மறக்காதவர்கள் என்பதை
நாங்கள் நினைவுவைத்திருக்கிறோம்!

எங்கள் வேட்பாளர்க்கு
இருக்கும் தகுதிகளில்
குறிப்பிடத்தகுந்தது
அவர் 'பக்தர்' என்பது!
எங்களைப்
பகுத்தறிவாளர்கள் என்று
தவறாகக் கருதிப்
புறக்கணித்து விடாதீர்கள்
என்பதை
வெளிப்படையாகவா
சொல்ல முடியும்?

சமஸ்கிருதம்
எங்களுக்குச்
சண்டைமொழி யன்று.
அது
'சாமி'களின் மொழி.
இதைச் சரியாகத்
தெரிந்துகொண்டதால்தான்
தேர்தல் பயணத்தைத்
தேவமொழி சுலோகத்தொடு
தொடங்கினார்
எங்கள் வேட்பாளர்!

இடைத் தேர்தலுக்கே
இப்படியா என்கிறீர்களா?
எண்ணிய எண்ணியாங்கு எய்த
எதையுமே செய்யலாம்!

மானத்தை விற்றுப்பெற்றது
என்று
நாற்காலியில் எழுதியா இருக்கிறது?
கோட்டைப் பயணத்தில்
குறுக்கே வரும்
கொள்கைப் பூனையைக்
கொல்லாதவன் முட்டாள்!

*இதைத்*
*தொடக்கத்திலேயே*
*நேர்மையாகவும்*
*தூய்மையாகவும்*
*உறுதியாகவும்*
*உணர்ந்து கொண்ட*
*'அறிவாளர்கள்' நாங்கள்!*

1994

(சென்னை மயிலாப்பூர் இடைத்தேர்தலில் போட்டியிட்ட ம.தி.மு.க.வினர் மேற்கொண்ட செயல்முறைகளின் அடிப்படையில் எழுதப்பெற்றது.)

## அம்மை அருள்!

மாநாடு மதுரையில்!
சதுர வீதிகள்
அதிர ஊர்வலம்!
செங்கொடிப் படையால்
சிவந்தது வானம்!
தோளிலும் சிவப்புத்
துண்டுகள் ஒளிரப்
பாட்டாளித் தோழர்
படைநடை போட்டனர்!..

அடுத்தநாள் மாலை,
அவர்களில் பலபேர்
மீனாட்சிக் கோயிலுள்
மெதுநடை போட்டனர்;
காப்புக் காய்த்த
செங்கொடிக் கைகளில்
அம்மை மீனாட்சி
அருச்சனைத் தட்டுகள்!
மனித சக்தியின்
மாட்சிகள் பாடி
முழங்கிய வாய்கள்
மூடி யிருக்க,
'வழங்குக அம்மையே வாழ்வு'
என வேண்டியோ,
கருவறை முன்னே
கைகளைக் கூப்பினர்?!

1975

## வாழ்க இனநலம்

தெருமுனைத் திருப்பம்.
ஒருபுற மிருந்து
கருப்பனும் காளியும்
கந்தனும் நேற்று
ஆறடிக் கம்பொடு
நேரெதிர் வந்தனர்

''யாரை அடிக்க?
கூறுக'' என்றேன்

''நாயை அடிக்க
நாங்கள் போனோம்
வெறிநாய் ஒன்று
வீதியில் நால்வரைக்
கடித்தது அதனை
அடித்திடச் சென்றோம்''

''அடித்து விட்டீர்களா
அழிந்ததா வெறிநாய்?''

''அதுதான் இல்லை
அடிப்போ மாஅதை''

''எதற்குப் பின்னே
இந்தக் கம்புகள்?''

''நாயைத் துரத்தி
நாங்கள் செல்கையில்
ஏழெட்டுப் பேரொடு
எதிரில் வந்த
தலைவரைப் பார்த்தோம்;
தாள்பணிந் திட்டோம்

''மெய்யில் வியர்வையும்
கையில் கழியுமாய்
உடன்பிறப் புக்களே
ஓடுவ தெங்கே?''

கேட்டார் தலைவர்
கிளுகிளுப் புற்றோம்!
நாயைக் காட்டி
நடந்ததைச் சொன்னோம்
உற்றுப் பார்த்தார்
ஓடிடும் நாயை!

'அந்த நாயையா
அழிக்கப் போகிறீர்?
வந்தநா யாஅது?
வண்டமிழ் நாட்டுச்
சொந்தநாய், தமிழகச்
சொத்து தெரியுமா?
இனவுணர் விலாதவன்
பிணந்தான்' என்றார்.

''மனத்தெளி வோடு
இனநாய் விடுத்து
வருகிறோம்' என்றனர்
வாழ்க இனநலம்!

1976

## நமையுயர்த்தும்சீர்

*அடர்ந்தமுடி நெற்றி அகலம், செறிந்து*
*படர்ந்த அறிவைப் பகரும் - சுடரும்*
*விழிகள் செழுந்தமிழின் வேரகழ்ந்து காட்டும்*
*கழிகூர் கருவிவேல் காண்.*

*குள்ள உருத்தெரியாக் கோளரியின் நீள்மீசை;*
*வெள்ளை முழுக்கையில் மேல்மடிப்புக் - கொள்மெய்ப்பை;*
*தாறுபாய்ச்சி வேட்டி தனையணியும் பாவாணர்*
*வீறுகொள் தோற்றம் வியப்பு!*

*குப்பாயம் பூண்டு குறுமடிப்புத் துண்டுடன்நம்*
*அப்பன்பா வாணர் அடியொன்றும் - தப்பாமல்*
*போர்மறவன் போலப் புறம்போந்த பேரழகு*
*நீர்விழியில் நிற்கும் நிலைத்து.*

*வறுமை நிலையில் வளந்தமிழ்க்குச் சேர்த்த*
*பெருமையர், மானப் பிறப்பர் - சிறுமை*
*நினையார், செய்ந் நன்றி நினைந்துபா வாணர்*
*புனையும்பா ஒவ்வொன்றும் பொன்.*

*எந்நேர முந்தமிழின் ஏற்றம் நிறுவுமனத்*
*தன்னேரில் பேரறிஞர் பாவாணர் - சின்னேரம்*
*கைக்குழந்தை போலக் கலகலவென் றேநகைத்து*
*மெய்குலுங்குங் காட்சி விருந்து.*

*வீழ்ச்சி ஒழிய வினையாற்றி ஆரியச்*
*சூழ்ச்சியின் தோலுரித்த பாவாணர் -பாழ்மனத்தர்*
*சின்னேரம் செய்சூழ்ச்சி தேராமல் போவதுண்டு!*
*பின்வருத்தம் கொள்வார் பெரிது.*

வான்கொண்ட ஞாயிறாய் வாழ்ந்தநம் பாவாணர்
தான்கொண்ட கொள்கை தனைஒவ்வாக் - கூன்மாந்தர்
தம்மை அறைகூவி மேடைத் தருக்கமிட
வம்மின்என் றார்செம்மாந் து.

நாமெல்லாம் உண்டு நலமாய் உறங்குகையில்
தாம்பசித்தும் கண்விழித்தும் தன்னலத்தை - ஓம்பாமல்
மன்னு தமிழ்நலமே வாழ்வியலாய்க் கொண்டிருந்தார்
கண்மணி பாவாணர் காண்.

ஏட்டு வழக்கை இனிய தமிழ்வழங்கும்
நாட்டு வழக்கையும் நன்றாய்ந்து - கூட்டுத்தேன்
சொல்வளத்தை நம்மரிய சொத்தாய் வழங்கியதில்
இல்லைபா வாணர்க்(கு) இணை.

அந்தமிழின் நீளம் அகலம் அறிந்தவர்கள்
செந்தமிழ் நாட்டில் சிலருளரே - நந்தமிழின்
ஆழம் அறிந்தவர்யார், வேரை அகழ்ந்தவர்யார்
வேழம்பா வாணர்போல் வேறு?

யார்தமிழர் என்பதையும் ஞால மொழிமரத்தின்
வேர்தமிழே என்பதையும் நேர்நாட்டிச் - சேர்பகையைப்
பார்தமிழா என்றொளியைப் பாய்ச்சி நமையுயர்த்தும்
சீர் தலைவர் பாவாணர் சீர்.

2002

## நம் பாவாணர்

என்சாதிக் காரர்இவர் என்ப தாலோ
என்சமயம் இவர்சமயம் எனநி னைத்தோ
என்கட்சிச் சார்புடையார் எனம கிழ்ந்தோ
எவரும்பா வாணர்தமைப் போற்ற வில்லை.
தொன்மொழியாம் தமிழ்மொழியை மீட்ப தற்காய்த்
தோன்றியவர் பாவாணர் எனத்தெ ளிந்தே
'என்தலைவர் தமிழ்த்தலைவர் இவர்தான்' என்றே
ஏற்றிவைத்துத் தமிழ்நெஞ்சர் போற்று கின்றார்.

பொருள்திரட்ட வேண்டுமெனும் ஆவல் கொண்டோ
புகழ்சேர்க்க வேண்டுமெனும் நோக்கத் தோடோ
வரும்பதவி விருதுகளை மனத்தில் வைத்தோ
வரைந்தவரா பாவாணர்? இல்லை, இல்லை
இருள்நிறைந்த பெருங்குகையில் உழலு கின்ற
எந்தமிழர் புதுவாழ்வு பெறுதல் வேண்டும்
ஒருநோக்கே பெருநோக்காய் எடுத்தார் தூவல்
உருவான படைப்பெல்லாம் அறிவின் பாய்ச்சல்!

'கூலி'யெனும் சொல்லறிவோம்; இச்சொல் லேதான்
கூறுபல மொழிகளிலும் ஏறி நிற்கும்
கூலத்தைத் தவசத்தைத் தானி யத்தைக்
கொள்ளும்உடல் உழைப்பினுக்குப் பகர மாக
ஞாலத்தார் பண்டுமுதல் கொடுப்பர்; இந்த
நல்லதொரு வரலாற்றைக் 'கூலி' காட்டுங்
கோலத்தைப் பாவாணர் விளக்கக் கேட்டே
குதிபோடும் தமிழ்நெஞ்சம் புதுமை கண்டே!

கற்கையிலே நமைமருட்டும் அரிய சொற்கள்
காண்அகர முதலியினால் எளிய வாகும்;
நெற்கதிரின் மணிகளைப்போல் சொற்பொ ருள்கள்
நிகண்டுகளில் பதிந்திருக்கும்; இவற்றில் காணாச்

சொற்கள்தம் பொருள்மூலம் காட்டிப் பின்னர்
தோன்றிவளர் மாற்றத்தை நிரல்ப டுத்தி
விற்கணையின் கூரறிவுப் பாவா ணர்தாம்
விளக்குகையில் ஆ! ஆ! ஆ! வியக்கின் றோம்நாம்!

கிளைபார்ப்பார் பூகாய்கள் கனிகள் பார்ப்பார்
கீழிருக்கும் அடிமரத்தின் வேர்கள் தம்மின்
நிலைபார்ப்பார் அரிதாவார்; வைக்கம் வீரர்
நிலம்புதைந்த வேர்பார்த்தார், வெந்நீர் ஊற்றும்
'கலை'வல்லார் சூழ்ச்சிதனை எதிர்த்து நின்றார்
கனிதமிழின் ஆணிவேர் பக்க வேர்கள்
அலைஅலையாய் உலகெங்கும் பரந்து செல்லும்
அருமையினைப் பாவாணர் ஆய்ந்து சொன்னார்!

'நாவுதல்'என் றால்'கொழித்தல்'; சுளகு கொண்டு
நல்லரிசி யுடன்கலந்த கல்லை நீக்க
நாவிடுவார் மேல்கீழாய்த் தமிழப் பெண்டிர்;
நாவிக்கொண் டேகடலில் செல்க லத்தை
'நாவாய்'என் றதனால்தான் குறித்தார்; இச்சொல்
நவில்ஆங்கி லம்இலத்தீன் வடமொ ழிக்கண்
'நேவி''நேவிசு''நவ்' வென்று திரிந்த வாற்றை
நெஞ்சங்கொள் வகையுரைத்தார் தேவ நேயர்!

'தாழ்வுணர்ச்சி வயப்பட்டே குனிந்து நிற்கும்
தமிழ்மகனே! தென்குமரிக் கண்டம் இன்று
ஆழ்கடலுள் சென்றாலும் உலகில் மாந்தன்
அங்கேதான் பிறப்பெடுத்தான், அவன்உன் முன்னோன்;
வாழ்உலக முதன்மொழிஉன் தாய்த மிழ்தான்;
வடமொழியின் மூலம்,அதே திரவி டத்தாய்;
தாழ்வுணர்ச்சி விட்டொழிப்பாய், நிமிர்வாய்' என்றார்
தமக்குவமை இல்லாத நம்பா வாணர்!

பழம்பெருமை மட்டும்அவர் பேச வில்லை;
பண்பாட்டுச் சிதைவுகளை, தமிழ ரைக்கீழ்
விழச்செய்த சூழ்ச்சிகளைத் துருவிக் காட்டி
வேற்றவர்யார்? நம்மவர்யார்? வருங்கா லத்தில்

எழுத்தமிழர் என்னென்ன செய்ய வேண்டும்
என்பவற்றைத் தெளிவாகக் காட்டும் நூல்கள்
தொழத்தகுநம் பாவாணர் தொடர்ந்து தந்தார்
தூங்கியிருந் தோர்விழித்தார்; எழுச்சி கொண்டார்!

எத்தனையோ மொழியறிந்த பாவா ணர்தாம்
எழுதுவதும் பேசுவதும் தூய்த மிழ்தான்!
முத்தனைய பழமொழிகள் உவமைப் பூக்கள்
மொய்த்துமணங் கமழும்நடை அவர்ந டைதான்!
எத்திசையின் தமிழ்வழக்கும் அவரைப் போலே
எவர் அறிந்தார்? கருவியிசை நான்கும் வல்லார்!
தித்திக்கும் பன்னூறாம் இசைப்பா டல்கள்
தீட்டிஇசைத் தமிழ்க்குவளம் கூட்டி நின்றார்!

இருபதாம் நூற்றாண்டுத் தமிழி யக்கம்
இவர்உழைப்பால் செழித்ததுகாண்! இந்திப் போர்க்கே
எருவாகப் பலநூல்கள் இயற்றித் தந்தார்;
இயக்கத்தில் தமைஈடு படுத்திக் கொண்டார்;
வரும்எதிர்ப்பை வரவேற்றார்; வறுமைத் துன்பம்
வாட்டுகின்ற நிலையினிலும் மானம் காத்தார்!
கரும்பொன் பாவாணர்ஓர் இயக்க மாகக்
கனிதமிழ்வாழ் காலமெலாம் வாழ்வார், வாழ்வார்.

2001

## அண்ணா

தென்னவ ரிதயப் பொய்கைத்
தேன்மல ரொத்தோ னன்னோன்
தென்னவா! வேற்று நாட்டுத்
தெருவெலாம் இரந்து வாடும்
உன்னவன் நிலையை நாட்டை
உயர்மொழி தமிழைச் சற்றே
உன்னுவாய் உயர்வாய் என்ற
உருவினில் குறளன் அண்ணா!

மன்னவத் தமிழில் மாற்றார்
மயங்கிடக் கேளா தாரும்
என்றுயாம் கேட்போம் என்றே
ஏங்கிடப் பேச்சு வல்லார்
இன்றியாம் தோற்றோம் என்றே
இரங்கிட நாட்டு மக்கள்
நன்றினி அண்ணா பேச்சு
நாட்டினை உயர்த்தும் என்றார்

நாட்டினை மொழியை எங்கும்
நலிவுறு இனத்தார் தம்மின்
கேட்டினைப் போக்கும் எண்ணம்
கிஞ்சிற்றும் இல்லா ராகி
வீட்டினில் துயின்றார் தம்மை
வீரராய் ஆக்கி நாட்டை
மீட்டிடும் பணியில் நாட்டி
மிளிர்ந்திடச் செய்தான் அண்ணா!

எடுத்தனன் கையில் பேனா
இருட்குகை தன்னில் தூங்கப்
படுத்தநம் மாந்தர் மாட்டுப்
பழம்புகழ் தன்னைக் காட்டித்

தொடுத்தனன் கணைகள், உண்மை
துலங்கிடத் துயிலும் நீங்க
விடுத்தனன் அறிவைத் தீட்ட
வேண்டுகோள் மக்கட் கெல்லாம்;

எழுந்தனர் பண்டை ஏற்றம்
எண்ணினர் இற்றைத் தாழ்வை
ஒழித்திட வேண்டு மென்றே
உளத்தினில் உறுதி பூண்டு
அழுந்திய மடைமை வாழ்வை
அமிழ்த்திய வறுமைத் துன்பம்
விழுந்திட வழியாம் நாட்டு
விடுதலை வேண்டு மென்றார்!

சாதிகள் ஒழியப் போலிச்
சமயமும் சாக ஏய்க்கும்
வேதியர் வீழ உண்மை
விதையினை விதைத்துத் தாழ்ந்த
சாதியர் கலைஞர் என்னும்
தவறுடை எண்ணந் தாழ
ஓதினான் பேச்சால், கற்றோர்க்
குணர்த்தினான் எழுத்தால் அண்ணா.

கடலிரும் முத்தே! சான்ற
கண்ணிரும் மணியே! தாழை
மடலிரும் மணமே! தாயின்
மணமிரும் அன்பே! நெஞ்சத்
தடமிரும் குலையே! இன்பத்
தமிழிரும் சுவையே! என்றன்
உடலிரும் உயிரே! அண்ணா!
உலகினும் வாழி வாழி!

(வேறு)

மண்டியபல் அறிவுடைய வானே! நாட்டின்
மடமையிருள் போக்கியொளிர் கதிரே! தன்னை
அண்டியவர் அணைத்துமகிழ் தாயே! மாற்றார்
அனைவருக்கும் அருள்சொரியும் நிலவே! பண்டு

கொண்டிருந்த மண்டுபுகழ் வேண்டுந் தோற்றக்
குறுமையினில் பெருமையுடை குறளே! உன்னைத்
தண்டனையால் அடக்கிவிட வீழ்வார் நாணத்
தமிழேபோல் பல்லாண்டு வாழ்க! வாழ்க!

1961

## திருக்குவளை மலரே!

அருளோடு பொருள்தன்னைப் பெயரின் உள்ளே
அடக்கியுள்ள எம்முதல்வ! கலைஞர் ஏறே!
இருளோடும் கதிர்கண்டால்; ஞாயிற் றைப்போல்
இயங்குகிற உமைக்கண்டால் அலுவலர்கள்
குறையோடும், நிறைசேரும் நம்பு கின்றோம்.
கொழுந்தஞ்சை மாவட்ட என்.ஜி. ஜி.ஓ.
நிறைசங்கச் சார்பினிலே வணங்கு கின்றோம்!
நெடுங்காலம் வாழ்கவென வாழ்த்து கின்றோம்!

ஈரோட்டு வெண்தாடி வைக்கம் வீரர்
ஏற்படுத்தி யிருக்கின்ற பள்ளி தன்னில்
வேரோடு மடமையினை வெட்டி வீழ்த்தும்
வித்தையினைக் கற்றவர்நீர்! பொன்னி யாற்றின்
நீரோட்டம் போலினிய நெஞ்சர் அண்ணா
நிறுவியநற் கல்லூரி புகுந்தீர் ஆட்சித்
தேரோட்டும் கலையினிலே உவமை யில்லாத்
திறம்பெற்றீர் திருக்குவளை மலரே! வாழ்க!

மேலதிகா ரிகள்கையில் ஊழி யர்கள்
விளையாட்டுப் பொம்மைகளாய், அவர்கள் கொண்ட
நாலுவகை விருப்புக்கும் வெறுப்பு கட்கும்
நாள்தோறும் ஆளாகி 'எங்கே இந்த
ஆள்நம்மைப் பழிவாங்கு வாரோ' என்றே
அஞ்சுதற்குக் காரணமாய் விதியில், நீண்ட
காலமதாய் இருந்து வந்த கொடுமை இந்தக்
கமுக்கநெறிக் குறிப்பெழுதும் முறைமை யாகும்.

எதிர்க்கட்சி யாயிருக்கும் போதே 'ஆட்சி
ஏறுகிற நிலைமையினை எமக்க ளித்தால்
புதிர்க்குறிப்பு வரைகின்ற முறையை நீக்கும்
புதுமையினைச் செய்திடுவோம்' என்று சொன்னீர்

அதைச்செய்து வாக்குறுதி காத்தீர்! எங்கள்
அகமெல்லாம் பால்வார்த்தீர்! உரிமை சேர்த்தீர்!
இதை வாழ்த்த மறந்தால்எம் இதயம் பொய்யாம்
இன்றமிழாய் எந்நாளும் வாழ்க! வாழ்க!

தாய்போலக் காவிரிப்பெண் நீரை ஊட்டும்
தஞ்சையெனும் மாவட்டம் பெற்றெ டுத்த
சேய்நீங்கள்! அம்மண்ணைச் சார்ந்த நாங்கள்
திளைக்கின்றோம் மகிழ்ச்சியிலே; இயற்கை யன்றோ?
தாய்நீங்கள் எங்கட்கு; சேயின் துன்பம்
தாங்காது தாயுள்ளம் தவிக்கு மென்பார்
சேயழுதால் பால்கிடைக்கும் என்ப தாலே
சிறிதெங்கள் குறைகளையும் சொல்லு கின்றோம்.

'படி' என்பாள் பிள்ளையினை வீட்டில் நற்றாய்;
'படி' என்போம் தாயும்மைச் சேய்கள்; ''இந்தா
'பிடி' பஞ்சப் படி உயர்வு, நோயைப் போக்கப்
பெறுகமருத் துவாட்டுப் படியை'' என்றே
கொடுப்பீர்கள் மிகவிரைவில், இன்னும் உள்ள
குறைகளையும் களைவீர்கள் அறிவோம் நாங்கள்
முடிக்கின்றோம் இதழ்வாழ்த்தை நெஞ்ச வாழ்த்தோ
முடிவில்லாப் பெருவாழ்த்து, என்றும் உண்டே!

(தஞ்சை மாவட்ட மையத் தமிழ்நாடு அரசிதழ்ப் பதிவுறா அலுவலர் ஒன்றியம்
அளித்த பாராட்டு இதழ் - 5.4.71)

## மடம்

கட்டுக் காவல்
கன்னியர் மடம் அது!

உயர்ந்த மதிலினை
வேட்டியாய் உடுத்து
நிமிர்ந்த கட்டடம்
மறவனாய் நிற்கும்!

வாயில், சுவர்கள்,
மாடக் குடுமிகள்
எங்கும் சிலுவைகள்!

ஏசு சுமந்ததை
இவை சுமக்கின்றன.

சிலுவை வாயிலைத்
திறந்து நுழைந்தால்
அமைதியின் அச்சம்!
ஒலிகளின் 'அடக்கம்'!

அரைவட்ட வடிவில்
அமைந்த முன்றிலில்
நிறைமலர்ச் செடிகள்!

விரிந்தும் விரியா
வெள்ளை, சிவப்புக்
கொள்ளை வனப்பு
மலர்களின் கூட்டம்!

மதுவை உள்ளடக்கி
மலரவே தயங்கும்
புதுப்பூ மொட்டுகள்!

திருட்டு வண்டுக்குத்
தேன், மணம் அளித்துத்
திளைத்துச் சிலிர்க்கும்
சிலமலர்!

காற்றினில் மணமெலாம்
கரைய நிலமிசைச்
செத்துக் கிடக்கும்
சில மலர்!

கூந்தலைச் சாராது
மூக்கினைக் கூடாது
இறந்த மலர்கள்
எத்தனை! எத்தனை!

முற்றத்தின் நடுவில்
சற்றுயர் மேடை;
மேடையின் மீது
வெண்பளிங்குச்சிலை!

கன்னியாயிருந்தே,
அன்னையாய்ச் சிறந்த
மரியாள் ஏந்திய
மகவொடு நிற்கிறாள்!
உள்ளே நடப்பதை
உலகறி யாத
வெள்ளை மாளிகைப்
பின்புறம் மேவினால்
மாட்டுத் தொழுவம்!
ஏழெட்டுச் சீமை
மாடுகள் இருக்கும்.

தாங்கிய கருவால்
வீங்கிய வயிற்றொடு
ஒற்றை மாடு
ஓரத்தில் நின்றது!

சுரந்த பாலைக்
கறந்து சென்றார்க்கு
முற்றும் தராமல்
முட்டிய கன்றுக்குச்

சுரந்த மடியினைச்
சொரியும் ஒருபசு!

துள்ளிக் குதிக்கும்
பிள்ளைக் கன்றினை
விழியால் அள்ளி
விழுங்கும் ஒருபசு!

கயிற்றை அறுத்துக்
கன்றொன்று திரியும்!

கட்டுக் காவல்
கன்னியர் மடம் அது!

நேற்று மடத்துக்
காற்றிலோர் துயரம்!
கன்னி ஒருத்தி
காலமானாளாம்!

அன்னையாக்கும்
அரும்பைச் சுமந்ததால்
தற்கொலைச் சாவைத்
தழுவிக் கொண்டாளாம்!

சுரக்கும் பசுவொடு
துள்ளும் கன்றுகள்!
கன்னி மரியாள்
கையினில் மகவு!
மலர்களை உறிஞ்சும்
வண்டுகள் சுழற்சி!
கட்டுக் காவல்
கன்னியர் மடம் அது!

1976

## முன்னேற்றம்

மாட்டு வண்டியில்
பல நாட் காலம்
திருப்பதி சென்று
திரும்பினர்
அன்று;
மொட்டை அடித்தனர்
தம்தலை மட்டுமே;
தம்நெற்றியில்தான்
சார்த்தினர் நாமம்;

ஒரு நாட்குள்ளே
திருப்பதி சென்று
திரும்புவர்
இன்று;
அடிக்கிறார் மொட்டை
அகப்படு தலையெல்லாம்
பட்டை நாமம்
பலருக்குப் போடுவார்
என்னே முன்னேற்றம்!

1973

## பேருந்து

ஓ, ஓ, ஓ மாந்தர்களே!
ஓரறிவும் இல்லாநான்
ஆறறிவுப் பிறவியுமை
அழைக்கின்றேன் கேளுங்கள்.

தொழிலாளர் பெற்றெடுத்த
சுமைதூக்கும் பிள்ளைநான்;

எண்ணெய்வகை உணவால்
இரும்புமர வுடல்மேல்

பன்னூறு கற்கள்
பலர்சுமந்து செல்வேன்நான்.

நடந்து பழக்கமில்லை,
நகர்வேன் சிலநேரம்

ஓடிக்கொண் டேயிருப்பேன்
உயிருள்ள நாள்வரைக்கும்.

யாரும் எனைமதியார்
யாவர்க்கும் நானுடைமை;
பேரென்ன வோஅரசுப்
பேருந்து, பெரும்பேர்தான்!

ஓ, ஓ, ஓ மாந்தர்களே
ஒன்றும்மைக் கேட்கின்றேன்

இன்றுமக்கு நோய்வந்தால்
இல்லந் தனிலிருந்தே

நன்றாய் மருந்துண்டு
நலமான பின்னர்தான்

சென்றிடுவீர் வெளியில்
செய்திடுவீர் எப்பணியும்

எனக்குநோய் வந்தாலோ
ஏதோ மருந்திடுவர்

முற்றிலும் நோய்போகா
முன்னரே மேலேறி

ஓடென்று சாலையிலே
உதைத்துத் துரத்திடுவார்.

எப்படியோ ஓடிநான்
இடைவழியில் நின்றுவிட்டால்

'இப்படித்தான் அரசுவண்டி
இழுபறிதான்' என்றிகழ்வீர்

அடியேன் படுந்துயரை
அணுவளவும் உணர்வீரோ?

ஏ ஏ ஏ மனிதர்களே!
இரண்டாவது கேள்வி.

'இந்த' ஊர் விட்டே
ஏழரை மணியளவில்

நான் கிளம்ப வேண்டுமெனில்
நடத்துநரும் ஓட்டுநரும்

எட்டு மணியளவில்
எனைக்கிளப்ப வந்திடுவார்

காலங் கடந்தபின்னே
காற்றாய்ப் பறந்திடுவேன்

காலங் கடப்பதற்குக்
கடுகளவும் நான்பொறுப்போ?

எப்போதும் அரசுவண்டி
இப்படித்தான் வரும்என்பீர்

தப்பேது என்மேலே
தவறாகச் சொல்லுவதோ?

ஏ, ஏ, ஏ மாந்தர்களே
இன்னுமொரு கேள்வி
ஊருக் கிளைத்தவன் நான்.

உங்களுக்கும் அரசுக்கும்
ஏதேனும் 'வம்பு தும்பு'

என்றைக்கு வந்தாலும்
ஏதும் அறியாமல்

இயங்கும் எனைமறிப்பீர்

கல்வீசி என்னைக்
காயப் படுத்திடுவீர்
சொல்எழுதி என்மேனித்
தூய்மை கெடுத்திடுவீர்

அம்மவோ அம்மட்டோ!
ஐயகோ என்உரைப்பேன்?
வெம்மைக் கொடுந்தீயில்
வேகவைத்துச் சாகடிப்பீர்

ஆர்த்துக் களிப்பீரே
ஆறறிவு பெற்றவரே
ஓரறிவு மில்லாநான்
உங்களுக்குச் செய்ததென்ன?

1975

## இராசா மனை

அஞ்சும் வறுமையும் பசியெனும் அவலமும்
தம்சா வூரெனச் சாற்றிய தாலே
அன்று தஞ்சாவூர் ஆகிய நகரிது!
இன்று, பிணியினால் இளைத்த மாந்தர்
தம்சா வூர்என வரவே தயங்கும்
நெஞ்சிலா மருத்துவ நாய்களின் நிலையமாய்,
இராசா மிராசுதார் மருத்துவ மனைதான்
இருப்பதால் அப்பெயர் பொருத்தமாம் என்க!

இருகால் நாய்கள் இருந்து கொண்டு
சுரண்டல் தொழிலைச் சுளுவாய் நடத்தும்
'இராசா' மனை அது! இறைச்சித் துண்டாம்.
காசைக் கொடுத்தால் கவனிப் பிருக்கும்.
கொடுக்கா விட்டால் குரைக்கும், கடிக்கும்;
செருப்படி மண்முதல் தலைமுடி நுனிவரை
உருப்படி யாக நடத்தும் ஒருதொழில்
சுரண்டல்; 'மிராசுதார்' மனைக்கது சொந்தமே!
உள்ளக் கருப்பை உலகறி யாமல்
வெள்ளைச் சட்டை; விலைக்கு வாங்கிய

'பட்ட'வால், நெஞ்சத் துடிப்பு மானி
கட்டிய உரிமமாய்க் கழுத்தினில் தொங்க
மருத்துவ நாய்கள் மதிப்புடை நாய்களாய்
வருவதும் போவதும் வாடிக்கைக் காட்சிகள்!
தலைமை மருத்துவ நாய்கள் தனிவகை.
புலால்பணம் மிகுதியாய்ப் புசிக்கக் கேட்கும்.
படுக்கைஒன் றுக்குப் பதிவாய்ப் பெருந்தொகை
கொடுக்க வேண்டுமிந் நாய்கட்கு வீட்டில்!
சீமை நாய்கள் 'இவை' யெனச் செப்பலாம்.

மருத்துவ மனைக்கே அடிக்கடி வாரா!
எவ்வெவ் வழியிலும் இறைப்பணம் கறக்கும்
ஒவ்வொரு பிரிவுக்கும் ஒதுக்கப் பட்ட,
நாட்டு நாய்களோ நாள்தொறும் வருவன
துணைமருத்துவ நாயினைச் சொல்கின்றேன்.

தலைமை நாய்க்குத் தந்தநோ யாளிமேல்
இந்த நாய் கட்கே எரிச்சல் பிறக்கும்.
ஐந்தாறு படுக்கை ஆளின்றிக் கிடக்கும்,
வந்த நோயாளிகள் வரிசையாய்த் தரையில்
தாழ்வா ரந்தனில் தங்கித் தவிப்பர்;

இறைச்சித் துண்டை எறிந்தபின் னன்றோ
மருத்துவ நாயின் மனமிக இளகும்.
பின்னரே படுக்கை பற்றிப் பேசலாம்.

குட்டி நாய்களாய்ச் செவிலியர் கூட்டம்!
எலும்புத் துண்டுகட் கேங்கி யிருக்கும்!
மருந்தில் கலப்படம் அதுவும் கடத்தல்.
வாயிலா ஏனுக்கும் வரியினைச் செலுத்தியே
நோய்நிறை கிடங்கினுள் நுழைந்திட முடியும்!

அத்தனை நாய்களும் ஆட்சி நரிக்கு
வேண்டிய ஆளெனில் விழுந்து வணங்குமே!

எங்கள் வியர்வையில் முங்கித் திளைக்கிற
மருத்துவ நாய்களே! மந்திரி நரிகளே!
'ஆடுகள் இவை' என அடித்தே உண்கிறீர்.
'மாடுகள் இவை' என மடியைக் கறக்கிறீர்.
கூட்டினைத் தகர்க்கும் கொல்புலிக் குழாம்யாம்
வேட்டை நடத்துவோம் வெற்றியும் பெறுவோம்.

1979

## முகப்புல்

உமிழ்ந்தேன் காறி
ஒதுங்கிப் போனான்;

அடிப்பேன் என்றேன்
அமைதியாய்ச் சென்றான்;

'என்னடா மயிரே!'
என்றேன் ஒருநாள்.

பொங்கி எழுந்தே
போட்டான் சண்டை!

மழித்தால் முளைக்கும்
முகப்புல் மாண்போ?

1973

## நான்தான்

*பத்து மாதமாம்!*
*பத்தியமாம்!*
*பாதுகாப்பாம்!*
*பைத்தியக்காரப்*
*பழமை உளறல்!*

*விந்து விழுந்தது,*
*கரு துளிர்த்தது!*

*உடனே பெற்றேன்*
*ஒரு குழந்தை!*

*கால்கை இல்லையாம்,*
*கண்மூக்கு நொள்ளையாம்,*
*மெய்வடிவில்லாத*
*வெறுந்தசைப் பிண்டமாம்,*
*கிணற்றுத் தவளைக்*
*கிறுக்கரின் கத்தல்!*

*வடிவமின்மையே*
*வடிவமென்றறைக!*

*புரியவில்லையா?*
*நான்தான்*
*'நவயுக சிருஷ்டிகர்த்தா'*

1973

## நீங்களும் நாங்களும்

*எறிந்தவேல் மெய்யதா வால்குழைப்பவர்கள் நீங்கள்*
*இட்டசோறு வயிற்றதாக் கழுத்தறுப்பவர்கள் நாங்கள்*

*நீங்களோ மலத்தையும் உணவாக்கிக் கொள்ளுகிறீர்கள்*
*நாங்களோ உணவையே மலமாக்கித் தள்ளுகிறோம்*

*அகத்தையும் புறத்தில் நடத்தி அணைத்துக் கொள்வது உங்கட் பழக்கம்.*
*புறத்தையும் அகத்தில் நடத்திப் பொருது கொள்வது எங்கள் வழக்கம்.*

*ஒன்றைச் சொல்லி அதற்கெதிராகச் செயல்பட உங்கட்குத் தெரியாது.*
*சொல்லவே தெரியாத மூங்கைகள் நீங்கள்.*

*நாங்களோ வாயால் வாழ்த்திச் செயலால் ஒழிப்போம்*
*மொழியென்னும் ஆற்றல் வாய்ந்த கருவி எங்களிடம் உண்டு.*

*அன்பிருந்தால் வாலை ஆட்டுவீர்கள்.*
*எதிர்ப்பிருந்தால் குரைத்துக் காட்டுவீர்கள்.*
*வெளிப்படையாகவே உணர்ச்சியை வெளியிடும்*
*வேடிக்கைப் பிறவிகள் நீங்கள்.*

*இரட்டை வாழ்க்கையில் இனிமைகாணும் நாங்களோ*
*உணர்ச்சிகளை உள்முகமாகவே கற்பழித்துவரும்*
*வாடிக்கைப் பரத்தர்கள்.*

*நீங்களோ ஐயறிவு அஃறிணை விலங்குகள்.*
*நாங்களோ ஆறறிவு உயர்திணை விலாங்குகள்.*

1968

## 'ஐயாவோ ஐயாவோ'

வெய்யிற் கொதிப்பில் மிகவாடிப் போயிருந்த
செய்யின் பயிர்க்குச் செழிப்பான வான்மழையே!

கொட்டும் பனியில் குலைநடுங்கிக் கொண்டிருந்த
நெட்டைக் கிழவர்க்கு நேர்ந்தவொரு கம்பளியே!

பட்டினியால் நாளும் பதைப்புற்ற ஏழையர்க்குத்
தட்டுப்பா டின்றிவந்த கட்டித் தயிர்ச்சோறே!

ஒண்டச் சிறுகுடிசை ஒன்றுமே இல்லார்க்கு
அண்ட நிழல்தந்த ஆலமரம் நீயன்றோ!

உன்றன் விழுதுகளே ஒவ்வோர் திசையினிலும்
நின்று நிழல்தந்த நேர்த்தி உரைப்போமா?

'அண்ணா' என் றோர்விழுது, 'சீவா' என் றோர்விழுது
இன்னும் பலவிழுதை ஈன்றெடுத்த தாய்மரமே!

நாளும் சிறகால் நலியாமல் காத்ததாய்க்
கோழி தனைப்பருந்து கொண்டுசெல நின்றழுத

குஞ்சுப் பறவைகளாய்க் கோடிகோ டித்தமிழர்
நெஞ்சங் கரைய நினைவிளித்தல் கேளாயோ?

மூடர் தமையெதிர்த்து முட்புதரைப் பேர்த்தெடுத்துக்
காடு திருத்திக் கடுமுழைப்பில் நீபோட்ட

சாலை தனிலன்றோ தமிழர் நடக்கின்றோம்
ஓலம் அதனால்தான் உச்சத்தில் கேட்கிறது;

சாதி நரியும் சமயக் கொடும்புலியும்
மோதித் தமிழ்நாட்டின் மூலையெலாம் கொக்கரித்த

வேளையிலே தோன்றி மிடுக்காய் முழக்கமிட்ட
காளை அரிமாவே! கண்ணுறக்கம் கொண்டாயோ?

இல்லை கடவுளென இந்துமத மூடரிடை
கல்லை உடைத்தாய் கடவுள் கதையெரித்தாய்!

இந்தத் துணிச்சல் எவர்க்குவரும்? இப்புவியில்
அந்தக் கடவுள் அடியார்கள் வாழ்ந்ததினும்

பல்லாண்டு வாழ்ந்து பரம்பொருளைப் பொய்ப்பித்தாய்!
நில்லா உலகில் நிலைத்த புகழ்படைத்தாய்!

பார்ப்பனத்தீ ஊரெங்கும் பற்றி எரிகையிலே
நீர்ப்பெருக்காய் வந்து நெருப்பைத் தணித்தவனே!

நீர்ப்பெருக்கைக் கண்ணில் நெருப்பைத் துயர்மனத்தில்
சேர்த்துப் பிரிந்தாயே, தேம்புகுரல் கேட்கிலையோ!

பூசி மெழுகிப் புதுக்கோலம் தீட்டியநீ
பூசி மெழுகிப் புனையாமல் மேடையிலே

வெட்டொன்று துண்டிரண்டாய் வேந்தச் செருக்கோடு
கொட்டியநற் பேச்சில் குளித்துச் சிலிர்த்தோமே!

கொட்டிய வாய்மலர்தான் கூம்பிக் கிடக்குதய்யோ
மட்டிலாத் தேன்மழலை மாந்த வழியிலையே;

எல்லோரும் கேட்க இரண்டுமணி மூன்றுமணி
நல்ல கருத்தருவி நாவாலே பாய்ச்சியநீ

எல்லோரும் கூவியழும் ஏக்கக் குரல்கேட்டும்
பொல்லாப் பெரும்பயணம் போகின்றாய், சாகின்றோம்!

தூங்கிக் கிடந்தோரின் தூக்கத்தைப் போக்கியநீ
ஏங்கி அவர்துடிக்க ஏனய்யா தூங்குகிறாய்?

நாடே உறங்குகையில் நாளும் விழித்திருந்தாய்
நாடே அழுதிருக்க நல்லுறக்கம் கொண்டாயோ?

பள்ளிப் படிப்பையும் பாதியிலே விட்டவன்நீ
கல்லூரி கண்டவரும் காலடியில் வந்திருந்தே

பாடம் படித்துப் பகுத்தறிவில் தேர்ந்தனரே!
பாடம் நடத்தியநீ வாடவிட்டுப் போகின்றாய்,

பல்லாண்டு வாழ்ந்து பணிகள் பலபுரிந்து
மெல்லநீ சென்றாலும் வேகுதய்யா எம்நெஞ்சம்

நீயிருந்த போது நினையணுகாத் தோழரெலாம்
நீயிறந்த பின்னே நினைப்புகழ்தல் கேட்கிலையோ?

வெய்யிலில் தானே விளங்கும் நிழலருமை
அய்யா, உன் தொண்டின் அருமை இனிபுரியும்

பார்ப்பான் நரித்தனத்தைப் பச்சையாய்ச் சொன்னவன்நீ
ஊர்ப்பணத்து வானொலியில் உன்மறைவைச் சொல்லுகையில்

'நாயக்கர்' என்றே நவில்கின்றான் பார்ப்பனியன்!
பாயும் புலித்தமிழர் பட்டாளம் தோன்றுமிங்கே.

பொல்லா இழிவுகளைப் போக்கும் மருந்தாக
நல்ல தமிழ்மண் நமக்காக வேண்டுமென்றே

சொல்லில் எழுத்தில் துணிவாகச் சொன்னவன்நீ
கல்லில் எழுத்ததுகாண்! காட்டுப் புலித்தமிழர்

நெஞ்சுள் கிடந்து நிகழ்த்துமொரு 'வங்கப்போர்'!
பஞ்சில் நெருப்பைப்போல் பற்றுமொரு செந்நாளில்.

நேற்றிருந்தாய், நாளை நிறைவாய் அமைவதற்கே
ஆற்றுப் படைதந்தாய், ஐயா! தமிழரின்றோ

உன்நினைவில் நெஞ்சம் உருகுகிறோம். நீவிதித்த
பின்வினையோ உண்டு பெரிது.

1973

## நெஞ்சு நேர்ந்தவளுக்கு

வாரி எனைஎடுத்துக் கொண்ட வடிவழகே!
ஓரிரு நாட்களின்முன் உள்ளத் துணர்ச்சிகளை

அள்ளி விடுத்தமடல் அங்கோடி வந்ததுவா?
கள்ளி! அதைப்படித்தே உள்ளம் குளிர்ந்தனையா?

'பாட்டுப் பறவையினால் பாவையெனக் கோர்மடலைத்
தீட்டி விடுக்கத் திருவுளமோ' என்றுமுனே

கேட்டிருந்தாய். பாட்டென்ன கிழங்கா, வடை, முறுக்கா?
கேட்டவுடன் காசு கிடைத்தவுடன் வாங்கிவிட!

வானக் கருமுகில்கள் வையத்தார் கேட்டவுடன்
தானப் பெருமழையைத் தந்து விடுவதில்லை

'எங்கே, ஓர் தீம்பாடல் இசை' என்று கேட்டவுடன்
கங்குல் நிறக்குயில்கள் கானம் பொழிவதில்லை;

'பாதருக, பூநெஞ்சே! பாவைக்குத் தருக' வென
நீதுயிலும் நீயியக்கும் நீதிருடிக் கொண்டிருக்கும்

நெஞ்சத்தைக் கேட்டேன்; நிறைதமிழும் தூங்குகின்ற
மஞ்சத்தைக் கேட்டேன்; ''மடையா! அரிவையர்கள்,

முத்துச் சிலையோ, முகையவிழா மல்லிகையோ,
கொத்துக் கனியோ எனும்நற் குழந்தையினைப்

பத்துமா தம்சுமந்து பக்குமாய்ப் பெற்றெடுக்கும்
வித்தையினை நீயறிவாய், வெல்பாட்டும் ஓர்மகவே.

எண்ணிய வுடன்மகவை ஈனுதற்கே இவ்வுலகில்
பெண்ணொருத்தி இன்னும் பிறக்கவில்லை; பாட்டெழுத

உள்ளம் கருக்கொள்ளல் உயிர்த்தேவை, பின் உணர்ச்சி
வெள்ளம் பெருக்கெடுத்தே பிள்ளைக் கவிதையினை
அள்ளி வெளிக்கொணர ஆகும் சிலகாலம்''
என்றவோர் நீண்டவுரை நெஞ்சம் இசைத்ததுவே!
மன்றினில் மூங்கையனாய் மாதரிடை ஆடவனாய்
ஒன்றும் புரியாமல் ஓய்ந்திருந்தேன், பின்துணிந்தேன்.

தாயாக என்னுயிரைத் தாங்கித் தளர்வுற்றால்
சேயாக என்மடியில் சேர்ந்தின்பம் கூட்டுதற்காய்

உள்ளவளே! இப்பாட்டின் உள்ளே சிலபிழைகள்
பிள்ளை நடையாய்ப் பிதற்றலாய்த் தானிருக்கும்

தத்தி நடந்து தரையில் விழும்மகவை
முத்தி எடுத்தணைப்பார் மொய்குழலார் யானறிவேன்.

பித்துப் பிடித்தவனாய்க் காளை பிதற்றுவதைப்
பத்துப்பாட்டின் சுவையோ, பாவேந்தன் பாச்சுவையோ

என்றே மகிழ்ந்திருப்பாள் ஈட்டி விழியெறிந்து
கொன்றேஅக் காளைமனம் கொய்த திருடிமகள்!

உள்ளம் பறித்தவளே! உள்மூச்சின் நற்றுடிப்பே!
பிள்ளைக் கனிவுடையாய்! பேதைமை சேர் மேதையளே!

கொள்ளை அழகையெலாம் கூட்டிப் படையாக்கி
வெள்ளச் சிறுதுரும்பாய் வீழ்த்தியெனைப் போட்டவளே!

சங்கத்துப் பாடல்களின் சாறாய் இனிப்பவளே!
நுங்கின் சுவைநீர் நுவலும் மொழியுடையாய்!

பெற்றார் மறுத்திடினும் பின்னுள்ளார் தூற்றிடினும்
மற்றார் மறித்திடினும் வாளால் அறுத்திடினும்

உற்ற வுனைமறவேன்! ' உறுதி உறுதி' யெனப்
பற்றிப் படர்கொடியே! நாஞ்சிற் பழக்குலையே!

அன்றொரு நாள்மாலை ஆறுமணி சென்றிருக்கும்
நின்றிருக்கும் தென்னை நிறைந்த இயற்கையெழில்

பின்னிக் கிடக்கும் அனந்தைப் பெரும்பதியில்
அன்னை தமிழ்க்காய் அழகப்பர் கண்டதுறை

தன்னில் அமர்ந்திருந்தேன், தையல் நீ தம்பியுடன்
சின்னத் துளிகள் சிதறும் மழையினிலே

என்னை வியப்பாக்கி மின்னை உடல்தேக்கிச்
சின்னுதலில் குங்குமப் பொட்டு சிரித்திருக்க

நீராடிக் கூந்தல் நிரவி முடிபோட்டுச்
சீராடும் கருப்புச் சிவப்பில் உடையணிந்து

வந்தாயே; சின்னேரம் வாயாடிப் பேரின்பம்
தந்தாயே; தேயாத் தரைநிலவே! பின்ஓர்நாள்

உச்சிக் கதிரோன் உருத்தெழுந்த நண்பகலில்
பச்சை மயிலுன்னைப் பார்ப்பதற்கு நான்வந்தேன்.

வாழைஇலைவிரித்து வடித்துவைத்த சோறெடுத்தே
ஆழமனச் சாந்தியொடு அன்னை அருகிருக்க

ஏழையெனக் களித்தாய், என்றும்யான் தின்னாத
வாழைக்கா யின்கறியை வாரிப் புசித்தேனே!

உண்ட இலையெடுத்தாய், உள்ளத்தில் தேனாறு
வண்டலிட்டுக் காதல் பயிரை வளர்த்ததுவே.

ஒன்றிரண்டா? பாட்டில் உரைக்க, விரித்தெழுத?

வீட்டுக்கு வந்ததுவும், ஆளைவிடு என்றிருக்கும்
கூட்டுக் கிளிமாமா கூறியதும் கேட்டதுவும்,

வாட்ட முகத்தோடு 'வாருங்கள்' என்றழைத்தே
நாட்டு நடப்போடே ஏட்டுக் கருத்தையெல்லாம்
கூட்டிக் கழித்துக் குறைநிறை கண்டுரைத்த
உன்னை எனக்களித்த உத்தமியாம் அத்தையொடு
பன்னாட்கள் பேசிப் பழகியதும் நெஞ்சகத்தே

கன்மேல் எழுத்தாய்க் காலமெல்லாம் நின்றிருக்கும்.
என்செய்ய ஒல்லும்? எவர்தான் அழித்திடுவார்?

வீட்டுக்குள் என்னுயிரைப் பூட்டியவர் உள்ளமெனுங்
கூட்டுக்குள் தூங்கும் குளிர்நினைவை என்செய்வர்?

அந்த நினைவே அடியே! என் பெண்மயிலே
இந்த மணிவரையும் என்னுயிரைக் காத்திருக்கும்.

எந்தத் துயர்வரினும் எட்டித் துரத்திவிடும்
அந்தி நிலவாய் அணைத்திருக்கும், அந்நினைவோ

கள்ளங் கரவுகளால் கிள்ளவொணா எண்ணமலர்!
வல்லூறு வான்பருந்தால் வவ்வவொணாக் குஞ்சுப்புள்!

கோட்டைச் சிறைக்கதவால் கொத்தவொணா நெஞ்சடிமை!
வேட்டின் ஒலியால் விரட்டவொணா உள்மூச்சு!

எண்ணத்தால் வாழ்கின்றேன், என்றென்றும் வாழ்ந்திருப்பேன்,
கிண்ணத்தேன் உன்னையிரு கண்வாயால் உண்ணுதற்கே

ஓராயிரஞ் சிறகை உடனே விரித்துமன
நாரை பறந்துவர நாளும் துடிக்கிறது.

நீயழைத்தா யில்லை, நினைத்திருப்பாய் என்வருகை
தாயறிந்தால் பின்னுந் தடைபோட நேருமென்றே;

தம்பிதிரு மாறன் தனக்கெழுதி னாயன்றி
வெம்பும் எனக்கு விடுத்த மடலெதிலும்

வாருங்கள் என்றழைக்கும் வாசகத்தை யான்காணேன்.
தேருங்கால் நீயழைத்த செவ்வாய்க் கிழமையன்று

கல்லூரி வேலைநாள்; கன்னி உனைக்காண
உள்ளூறும் ஆவல் உரைக்க இயலுவதோ?

காலைப் பனிவிழுமுன் கண்விழித்த தாமரையே!
சோலை மலரைச் சொரியும் சிரிப்புடையாய்;

ஆலம் பழச்சிவப்பை அள்ளிவைத்த கன்னத்தாய்!
வேலம்! பெயரோடு கண்களிலும் வேலுடையாய்!

தேவர் கடைந்தார் திரண்ட (து) அமிழ்தென்பார்!
யாவர் அதையறிவார்? யானறிந்த தெள்ளமிழ்தே!

கூவிப் பறக்குங் குயிலோ கரியதென்பார்!
ஆவிஇயக் குமிசை அளிக்கின்ற செங்குயிலே!

மேவியென் நெஞ்சில் விளையாடும் மான்குட்டி!
பாவியம் கண்டுணர்த்தாப் பண்பார் கதைத்தலைவி!

நெஞ்சக் கடலெங்கும் நீந்தும் ஒரேமீனே!
பிஞ்சு நிலவைப் பிடித்துவைத்த நெற்றியினாய்!

மாலைப் பொழுதில் மனைவி யொடுகணவன்
சாலைதனில் நடக்கும் தனிக்காட்சி நெஞ்சகத்தை

ஆலைக் கரும்பாய் அழுத்திப் பிழியுதடி!
பாலை நிலச்சோலைப் பாவையே! நாமிருவர்

கைபிணைத்துச் செல்லுகின்ற காலத்தைப் பாம்புகளாய்
மெய்பிணைத்து வானில் மிதப்பதனை எண்ணியெண்ணிக்

கட்டிப் பலகோட்டை உள்ளம் கரைந்துருகி
எட்டிஇருக்கும் உன்னால் இளைப்பதனை நீயறியாய்

நாளிரண்டின் முன்னே மதுரை நகர்சென்று
மீளுகையில் பல்வகைப்பூ விற்கின்ற ஆளொருவன்

'பூவேண்டுமா' என்றான், புன்னகைத்தேன் பின்நினைத்தேன்.
பூவைத் தலைநிறையப் பூவை உனக்குவைக்க

ஆவல் மிகுந்தாலும் அருகில்நீ இல்லையடி.
ஏவலிட்டு 'நெஞ்சே! இனையாதே' என்றுரைத்தேன்.

காட்சிகள் எத்தனையோ கண்முன் உனைநிறுத்தி
ஆட்சி செய் தென்னை அலைக்கழித்துப் போடுவதைச்

சொல்லவோ வேண்டும்? துயர்த்தீயில் நானுன்னைத்
தள்ளவோ வேண்டும்? தடைபோட்டுக் கொள்கின்றேன்

ஓடைக் குளிர்மலரே! உன்பெற்றோர் தீவிரமாய்க்
கோடை விடுமுறையில் கூட்டத் திருமணத்தைத்

திட்ட மிடுவார்கள், திட்டந் தகர்ப்பதற்கே
திட்ட மிடல்வேண்டும் திண்மை மிக வேண்டும்.

ஆண்டொன்று போகுமுன்னே, அச்சினிலே நூலிரண்டைக்
காண்டல் துடிப்புண்டு, கட்டுரைகள் தீட்டிடுவோம்

எல்லோரும் பார்த்ததனை 'ஆகா' எனவியக்கச்
சொல்லாத செய்திகளைத் துலங்காப் பகுதிகளை

வெல்லும் வகையில் விளக்கி உலகின் முன்
கொள்ளைப் புகழைக் குவித்தாக வேண்டுமடி!

ஊதிய சங்கை ஒலிமாறா தப்படியே
ஊதிக் கிடக்கும் உலகத்தில் புத்திசையைப்

பாடுதற்காய் நாம்பிறந்தோம். பஞ்சையர்க்கு நல்வாழ்வு
கூடுதற்காய் நாம் உழைப்போம், கும்பிபெரி தில்லையடி!

எத்தனையோ முத்துக்கள் என்றன் மனக்கடலில்,
அத்தனையும் சேர்த்தெடுத்தே ஆரங்க ளாக்குதற்கும்

உன்றன் அறிவில் உறங்குகின்ற செய்திகளை
நன்றாய்ப் பகுத்திந்த [illegible] பதற்கும்

தத்தையே! என்றன் தடந்தோளில் பூவைப்போல்
தொத்திக்கொள், புத்துலகம் தோன்றல் உறுதியடி!

ஆவின்தோல் போர்த்தே அவைமுன் வரும்புலியைப்
பூவாய் இதழ்மணக்கப் புன்மலமாய் நெஞ்சிருக்கும்

போலிகளை எல்லாம் பொசுக்கும் எரிமலையாய்
வேலம்மாள்! என்தலைவி! வினையாற்ற வேண்டுமடி!

நெஞ்சை அரிக்கும் நினைவுகளைத் தூக்கியெறி!
அஞ்சியஞ்சிச் சாகும் மடமை அகற்றிவிடு!

மாமரத்தை விட்டு வருவதுவோ என்றெண்ணித்
தேமாங் கனியெதுவும் சிந்தித் திருப்பதில்லை

வந்தால்தான் ஈன்ற மரத்திற்கு நற்பெருமை.
வந்தால்தான் பின்னோர் மரமாகும் மாங்கனியும்

வந்துவிடு! சாந்தள்ளி மார்பினிலே பூசிவிடு!
பந்தொன்று சேற்றில் பதிவதைப்போல் நாமிருவர்

இன்பத்துள் தோய்வோம், இளமைப் பயனறிவோம்
துன்பத்தை எட்டித் துரத்தி யடித்திடுவோம்

என்றன் உடலில் இயக்கம் இருக்கும்வரை
ஒன்றுக்கும் அஞ்சாதே, கண்ணீர் உகுக்காதே!

நின்றன் துயரென்றன் நெஞ்சைப் பொசுக்கிவிடும்;
இன்றலர்ந்த தாமரையாய் எங்கே, சிரி பார்ப்போம்,

ஆரும் அறியாமல் ஆட்டுக் கறிதன்னில்
ஊறும் சுவையறிந்தே உள்ளூரத் தான் திளைக்கும்

பார்ப்பனத்தி போல மடலைப் படிப்பவளே!
பார்ப்பனத்தி வண்ணம் பழிக்கும் பொலிவுடையாய்!

காண வரவா? சொல்; கண்மலரால் போர்த்தியுனைப்
பேண வரவா? நான் பேசுவதைக் கேட்டு நீ

நாண வரவா? என் நாயகியே! நெஞ்சின்பம்
பூண வரவா? நீ போடு மடல் உடனே!

என்அத்தை என்மாமா எல்லோரும் நன்னலமா?
உன் அத்தை உன்மாமா உற்றாரெ லாம்நலமே!

சென்னை நகர்ப்பயணம் திங்கட் கிழமையடி!
பின்னை வருவேன், பெரியமடல் தீட்டிடுக!

மின்வைத்த மேனி வெயிலில் வதங்காமல்
பொன்வைத்துக் காப்பதினும் போற்றிநலங் காத்திடுக!

விண்வைத்துக் கொண்டிருக்கும் மீன்களெலாம் இவ்வுலகோர்
கண்பொத்தித் தூங்கும் கவினளந்து கொண்டிருக்கும்

நள்ளிரவை நோக்கி நடக்கின்றாள் காலமகள்,
அள்ளிக்கொள் என்றே அழைக்கின்றாள் தூக்கப்பெண்;

பூவிழிகள் மூடிப் படுக்கை தனிற்புரளும்
பாவையுனை உள்விழியால் பார்த்து மயங்குகின்றேன்.

தேன்கனவில் நீந்தித் திளைத்திடுக! சின்னேரம்
நான்துயில நல்லவிடை தா.

1970

## மணியற்கு மடல்

அழகன் கோயிலுள் அடியேம் உளத்தே
அழியா இடத்தை அடைந்த முருகே!*

பெற்றனன் மடலே பெரிதுவந் தனனே
நற்றமிழ் வானில் நாமெல்லாம் விண்மீன்

எனும்நிலை பெற்றிட இன்றே தொடங்கித்
தனித்தமிழ் உயிராய்த் தளரா துழைப்போம்

நிலவாய்ச் **சாத்தன் நிலவுவன் நமக்கே;
கலந்துரை யாடினம் கண்டாம் தென்மொழிப்

பெருஞ்சித் திரர்க்கே பெருந்தொகை யொன்றை
விருப்பொடு விட்டேம் விட்டேம் மடலே;

நான்கு நாட்கள் நானவன் ஊரில்
தேன்குடஞ் சுவைக்கும் சுரும்பெனத் தங்கி

இருபதாம் நாளில் ஏகினன் காரை
இருபத் தொன்றில் எம்மூர் அடைந்தேன்

கழகக் கொடிகள் காணு மிடந்தொறும்
அழகாய்ப் பறக்கும் அழகே தனியெனத்

தீட்டி யிருந்தீர். தென்மொழிச் சாத்தனும்
கூட்டம் பலவினும் குமுறும் மலையென

நாட்டின் நிலையை நன்றே விளக்கி
ஓட்டுவன் தமிழரின் ஓயாத் துயிலை.

சிறப்பாய்க் கழகம் சீருடன் வளரினும்
பொறுப்பை ஏற்றுளார் பொறுப்புடன் பணியில்

---

* வெ.சி.சுப்பிரமணியன்

** சாத்தையா

*கருத்தைச் செலுத்தக் கண்டிலன்; கழகம்*
*திருவுடன் வளரத் திக்கெலாம் தோழர்*

*இருப்பதால் தோழ! இனிமேல் நம்மின்*
*கருத்தெலாம் தனித்தமிழ் வளர்ச்சியில் காட்டுவம்;*

*அண்ணா நம்முயிர்; அவர்வழி தன்னில்*
*கண்ணாந் தனித்தமிழ் கருத்தில் கொண்டு*

*கழகப் பொழிவில் கனிதமிழ்ப் பெற்றியை*
*அழகாய் விளக்குதல் அன்பீர்! நம்பணி;*

*செய்தி ஏதுஞ் சிறப்பா யீண்டிலை*
*உய்தி தமிழர்க் குண்டோ*
*செய்க தனித்தமிழ்ச் செவ்விய பணியே!*

1962

## புறா விடு செலவு

**(சாத்தற்கு மடல்)**

*வெண்பெடைப் புறவே! வெண்பெடைப் புறவே!*
*கண்படாஅத் தொலைவில் கண்ணினுள் மணியாய்*

*நண்ணிய ஒருவற் கியான்விடுஞ் சேதி*
*வெண்பெடைப் புறவே விளம்புதி விரைந்தே!*

*தளிர்மென் கொடியாள் தமிழெனும் பெயராள்*
*குளிர்விழி நோக்கால் கொண்டனள் அவனை;*

*இருள்செறி முழைஞ்சாய் இருந்திடு மென்னுளம்*
*அருள்மடல் விழைந்தது அவன்றன் உயிராய்*

*இருந்து மறைமலை இன்றமிழ் பரப்பும்*
*பெருஞ்சித் திரனெனும் பெயரின ரிடத்தில்;*

*உள்ளிருங் குலையாப் உயிருறை செப்பாய்*
*விள்ளருந் தூய்மை விளங்கிடுந் தனித்தமிழ்*

*உள்ளுறை சாத்தற் குறுமடல் கண்டே*
*விடலாம் மடலென விருந்தேன் இதுவரை;*

*மடலைக் கண்டிலேன் மாளாத் துயரக்*
*கடலில் மிதப்பினும் கரைசேர் கலமாய்ச்*

*சாத்தன் இருப்பத் தயக்கம் எனக்கென்?*
*பூத்த மலரிற் போயுணும் வண்டு*

*மொட்டாம் என்னிடம் மொய்க்குமோ? சொல்க.*

*சாத்தன், அவனுயிர்ச் சாருஞ் செல்வி*
*ஆத்தாள், மலைக்கண், அறத்தின் வாழி,*

அண்ணன் ஐயர், அவருடைச் செல்வன்
பன்னீர்ச் செல்வம் பலரும் நலமா?

கண்டே யெனக்குக் காற்றின் விரைந்தே
விண்டிடு செய்தி வெண்பெடைப் புறவே!

தென்மொழி ஆசான் தீட்டினார் கொல்லோ?
நன்முறை கூட்டம் நடந்தது கொல்லோ?
என்றே கேட்டீ, எண்மலர் மேனீ!

அரவுக் கரசாய் அனைத்தமிழ் வேண்டா
அரசுக் கரவாய் இருக்கும் அவனைக்
கண்டேன் கலந்துரை கொண்டேம் என்க;

இங்கவன் அண்ணி இருபது நாண்முன்
தங்கச் சிலையாய்த் தமிழ்மகன் பெற்றாள்
சேயும் தாயும் செவ்வன் உளரால்,

தெரிவி! கடலூர்ச் செல்லுங் காலை
வருக இவ்வழி; வருவ துறுதி

இல்லை யாகலின் இருந்து கலந்து
செல்லலா மென்றே சொல்லிடு புறவே'

வளைசிறு மூக்கீ! வளைசிறு மூக்கீ!
சளைப்பில் அன்பினன் சாத்தை யாவின்

உளமார் கோயில் உறையும் உரிமை
வளமார் எழிலும் வள்ளுவப் பண்பும்
உடையா ளொருத்தி உண்டாங் கறிவாய்,

நின்றுணைச் சேவலோ, நீயோ விருந்தை
இன்முகங் காட்டி நன்னகம் மலர

ஓம்புவ திலையென வென்னிடம் உரைக்க
ஓம்புவை செல்வியின் உயர்குணங் கண்டால்

என்றியான் எண்ணிச் சேவல் இருந்திட
நின்றன் செவியில் நிகழ்த்துவன் சொல்லே!

*செல்லேன் பாரேன் செல்வியை, தாயை*
*ஒல்லையில் மீண்டிட உளம்வரா தெனினும்*

*நள்ளுநப் பெடையே நாயேன் என்னுளம்*
*பள்ளம் நோக்கிப் பாயும் வெள்ளமாய்*

*விரைந்திடு தாகலான் விரைந்திடு விரைவில்*
*கரையில் அன்புடைச் சேவலுங் கலங்கும்*

*சாத்தனைக் கண்டதும் சாற்றி யவன்புகழ்*
*ஏத்தி யிசைப்பேன் எனநீ கிளம்பி*

*வரும்வழி தன்னில் இரும்ஊர் எல்லாம்*
*இருந்து, சிறப்பினை இசைத்து வரும்வரை*

*இருக்கா தென்னுயிர் ஆகலின்*
*சுருக்கென வருதி சுண்ணச் சிறகீ!*

1962

## நிலமகள்

பருவ வெம்மையில்
பயிர்நிலம் வெடித்தது
நிலவாய் வெடிப்பில்
நிறைநீர் பாய்ந்தது
புத்துயிர் பெற்றுப்
பொலிந்தனள் நிலமகள்.

1974

## உரிமை

கருத்த வெள்ளாட்டில்
கத்தியைப் போட்டான்
சிவந்த கருப்பன்!
அடிமைக் கருப்பு
அறுந்து வீழ்ந்தது
உரிமைச் சிவப்புக்
குருதியை உண்டான்!

1975

## கைதி

பெட்டிச் சிறையில்
குச்சிக் கைதி!
விடுதலை பெற்றான்;
சிறையின் தொடர்பால்
சேர்ந்தது அறிவொளி!
அறிவொளி கொண்டே
சிறையினை அழித்தான்.

1975

## மலையாளம்

ஏது மலையாளம்?

மண்ணில் பசுமை
மனையில் வறுமை
உடலில் செழுமை
உளத்தில் பொதுமை
உடையதாகி

மலையும் ஆழமும்
மலிந்த நிலமெதோ
அது மலையாளம்.

1975

## பாட்டாறு

பாட் டாற்றின்
யாப்புக் கரையை
உணர்ச்சிக் குளிர்ச்சியை
உள்ளடக்கிய
கருத்து வெள்ளம்
கட்டிப் புரண்டு
ஒலிநயங்காட்டி
ஓட்டமெடுத்து
நெஞ்ச வயல்களை
நெகிழச் செய்யும்!

1974

## வாயில் திறக்கும்

பெண்கள் கல்லூரி!
அமைச்சரின் பேச்சு!
ஒன்றன்பின் ஒன்றாய்
ஊர்திகள் நுழைந்தன!

நான்கு தோழர்கள்
நடந்து சென்றனர்;

வாயிலாளன்
வழியை மறித்தான்;
வருந்தித் திரும்பியோர்
வாடகை யுந்தில்
சென்றனர் மீண்டும்
திறந்தது வாயில்!

1974

## மன்றல் வாழ்த்து

கரும்பிடைச் சுவையைப் போன்று
    கனலிடைச் சூட்டை ஏய்ப்ப
இரும்பிடை வலிவு மான
    இணைந்துள நீவிர் வாழி!
அரும்பிடை மணத்தைப் போன்றே
    அன்னையுந் தந்தை தாமும்
பெரும்பொழு தும்மைக் காத்துப்
    பெரியவ ராக்கி னார்கள்.

இதுவரை அன்னை தந்தை
    எனுமிவர் அணைப்பின் கீழே
மதுவிடை மயக்கம் மான
    வளர்ந்தநீர் இன்று வேற்றுப்
புதுமணம் என்னும் வீட்டில்
    புகுதலான் பொறுப்பை யெண்ணி
எதுசெய வேண்டும் செய்வ
    தெவன்செய வேண்டு மென்றே.

எண்ணிப்பல் லறத்திற் றூய
    இல்லறஞ் செய்மின் நன்றே!
கண்ணிடைத் தூசு போலக்
    காதலீர் நுமது வாழ்வில்
எண்ணிலா இடுக்கண் வந்தே
    எதிர்கொள்ளும் போதும் நீவிர்
கண்ணிமை சோரா, நெஞ்சம்
    கலக்குறாத் துணிவைக் கொள்வீர்!

அன்பெனும் படகில் ஏறி
    அறமெனுந் துடுப்பைக் கொண்டே
மன்பதை வாழ்க்கை யென்னும்
    மாக்கடல் செலுத்தி ஞாலம்

இன்புறும் மழலை சிந்தி
இதழினால் அமுதைக் கொட்டும்
நன்மணி மக்கட் பெற்று
நடத்துக நலமாய் வாழ்வே!

அணங்கிவள் ஒன்றை வேண்டின்
ஆண்மகன் சலுகை காட்டி
மணமகன் ஒன்றை வேண்டின்
மாதிவள் விட்டுத் தந்து
பிணங்குதல் இன்றி ஊடிப்
பெருங்களி எய்தி என்றுங்
கணவனும் மனைவி யானீர்
கண்ணிமை போலே வாழ்வீர்.

சிக்கனம் வேண்டும் தீய
செற்றமுந் தணிக்க வல்ல
பக்குவம் வேண்டும்; தூய
பைந்தமிழ்ப் பண்பு ஏய
தக்கன செய்து ஓம்பத்
தகுவன ஓம்பித் துன்பச்
சிக்கலைத் தவிர்த்தே என்றுஞ்
செந்தமிழ் போலே வாழ்வீர்.

1966

## நாகர்கோயில் அவ்வையார் - அழகப்பர் மணவிழா வாழ்த்து.

*அந்தநாள் ஒருத்தி ஔவைப் பெயரினள்
எந்தநாள் முகிழ்த்தது என்றறி யாத்தமிழ்
செழித்திடப் பற்பல செய்தனள்; இற்றை
விழித்திட லின்றி வீட்டினுள் முடங்கி
மொழியை நாட்டை முற்றிலும் மறந்து
கழியும் காலம் கணக்கிடு மாதர்
நிலையை எண்ணி வருந்துமென் நெஞ்சம்;
இலையின் ஊடே எழுந்தா மரையாய்
முகிலின் ஊடே பொங்கொளிச் சுடராய்
அந்தநாள் ஔவை பைந்தமிழ் காக்க
வந்தனள் வந்தனள் வந்தன ளேஎனக்
கண்டது உம்மைக் கவின்மண மகளே!
வண்டிசை செந்தமிழ் வாவிஉம் நெஞ்சில்
ஆடித் திளைத்தே அகப்பொருள் தெளிந்து
நாடி உலகின் நன்மையைப் பேணத்
தேடித் தேர்ந்துன் செழுங்கை பற்ற
ஓடி வந்தார் உடலுரஞ் சான்ற
'அழகப் பர்' எனும் ஆற்றல் மறவர்!
பழகுதேன் தமிழைப் பயிற்றுக அவர்க்கே!
மல்லிகை நறுமணம், மழைநீர்த் தூய்மை
வெல்லத் தமிழின் வீயா இளமை
எல்லாம் இயைக! இல்லறம் செழிக்க!
பொல்லாக் குறும்புசெய் புதல்வரைப் பெறுக!
ஆட்டுக தொட்டில் அதுபே ரின்பம்!
நாட்டின் மேன்மை வீட்டின் சிறப்பில்;
நல்ல குடும்பமோர் பல்கலைக் கழகம்
என்பதை உணர்த்தும் வகையில் இருவரும்
மன்பதை சிறக்க வாழிய நன்றே!*

1967

## காட்சி என்னே!

*பனித்துளியில் பலவண்ணக் காட்சி தீட்டி,*
*பறவைகளின் உள்ளவின்ப யாழை மீட்டி*
*இனியிருளிற் கில்லையிடம் என்றே ஓட்டி*
*இன்றுயிலில் ஆழ்ந்தாரைப் பணியில் நாட்டி*
*நனிகமலம் நகைசெயவே இன்ப மூட்டி*
*நன்றாடிப் புணர்ந்தாரின் உள்ளம் வாட்டிக்*
*கனியொன்று பழுத்ததுவோ கடலில் என்ன*
*காலையிளம் பரிதிதருங் காட்சி என்னே!*

1963

## பொங்கல் வாழ்த்து

*பொங்கிடுக அன்பு பொலிந்திடுக நும்மனையே*
*தங்கிடுக இன்பம் தரணியெங்கும் - பொங்கலின்று*
*தாய்தமிழும் நாடும் தமிழினமும் மீட்சியுற*
*வாய்மொழிந்து செய்வோம் வகை.*

1964

## பொங்கல் நினைவு

*பொங்கிற்றே செங்குருதி, போயினவே பல்லுயிர்கள்;*
*இங்கென் பயன்கண்டோம்? ஏ, தமிழா! - பொங்கலின்று*
*நேற்றை நினைவிருத்தி நாளை நிலையுயர்த்தும்*
*ஆற்றல், அறிவு பெறு.*

1966

## பொங்கல் விழைவு

*தாங்கருந் துயர்மடு தவித்துழல் கின்ற*
*ஓங்கிய மலைமுகட் டுலவிய தமிழா!*
*நேற்றை அழுக்கை நீக்கினை வீட்டில்;*
*மாற்ற வேண்டாமா நாட்டிரும் மாசை?*
*அறுவடைப் பயன்நுகர் திருவிழா நாளில்*
*உறுதுய ரெல்லாம் ஒழிய*
*அறுவடை செய்யும் ஆற்றல் பெறுகவே!*

1967

## முன்னேற்றப் பொங்கல்

*நெஞ்ச அடுப்பில்*
*நிறைதமிழாம் பானைவைத்தே*
*அன்புநீர் ஊற்றி*
*அறிவாம் அரிசியிட்டுச்*
*சாதி விறகடுக்கித்*
*தன்மானத் தீக்கொளுத்தி*
*முன்னேற்றப் பொங்கல்*
*முதற்பொங்கல் செய்திடுவீர்.*

1969

## பொங்கலோ பொங்கல்

*வாழ்க பெரியீர்! வணக்கம், நலந்தானே?*
*சூழ்க வளங்கள்; சுடர்க பகுத்தறிவே;*
*வீழ்க பகைபார்ப்பும் மேட்டுக் குடிப்போக்கும்;*
*ஆள்க தமிழ்த்தாய் அனைத்துத் துறைகளையும்;*
*தேர்க தமிழாட்சி பொங்கலோ பொங்கல்!*
*சிறக்க எதிர்காலம் பொங்கலோ பொங்கல்!*

1971

## விடியலின் வினாக்கள்

என்னைக் கண்டதும் வானத்தில்
இருக்கும் அம்புலி மேகத்தில்
தன்னை மறைத்துக் கொள்வதுமேன்?
தருவாய் விடையே தங்கம்மா!

ஆல மரத்துக் கிளியைப்போல்
அம்மா இக்கிளி பறக்காதோ?
நீல நிறத்துக் கூண்டினிலே
நீயேன் இதனை அடைத்திட்டாய்?

அம்மா என்று தன்தாயை
அழைக்கும் கன்று பேசாமல்
சும்மா இருக்கும் காரணத்தைச்
சொல்லிடு வாயே என் அம்மா!

நம்ம வீட்டில் ஓர்தாத்தா
நன்றாய்ப் பெருத்துத் தூங்கிடவும்
அம்மா! காந்தியைத் தாத்தாவாய்
அப்பா சொல்வதும் ஏன்சொல்வாய்?

வாராய் அம்மா வாராயே
வானத் துள்ள மின்மினியைத்
தாராய் பிடித்துத் தாராயே
தாவிக் குதித்து ஆடிடவே.

1962

## அரசு - உறுப்புகள்

வளர்கின்ற ஓவியமே! பேசுகின்ற சிலையே!
மணக்கின்ற பொற்பூவே! எனைவளைத்துக் கொண்ட
கிளர்கின்ற எழிற்கனியே! தென்றிசையின் வயிற்றைக்
கிழித்தெழுந்த கதிர்ப்பிழம்பே! கிழக்குமரீ! நெஞ்சந்
தளர்கின்ற போதெல்லாம் எனையணைத்துக் கொள்ளும்
தமிழ்ப்பெண்ணே! இளங்கிழவீ! கடைவிழியைப் பாய்ச்சு!

பேசுதற்கு வந்தவன்நான்; எனைப்பி ணித்துப்
பெருங்கவிஞர் முடியரசன் பொறுப்பை யேற்று
வீசுசில பாட்டென்று வேண்டிக் கொண்டார்
விடாக்கண்டர் வளனரசு! பாட லென்ன
வீசைவீசை யாய்க்கிடைக்கும் பொருளா, காசை
வீசிவிட்டு வாங்கிவர? முதலிற் கொஞ்சம்
கூசிநின்றேன். பின்துணிந்தேன் குழந்தைப் பேச்சில்
குறைகாணார். மகிழ்வடைவார் என்ப தாலே!

கொட்டுதற்குப் பாமழையைத் தேக்கி நிற்குங்
கொண்டல்களாய் எனைச்சுற்றி அமர்ந்தி ருக்கும்
சிட்டுகளே! நான்குஞ்சு! பறப்ப தற்குச்
சிறகின்னும் முளைக்கவில்லை. தந்தை தோளில்
ஒட்டிக்கொண் டிருக்கின்ற சிறுவ னைப்போல்
உங்களுக்கு நான்தலைவன்! என்றன் பாட்டில்
தட்டுப்பா டிருந்தாலும் பொறுத்துக் கொள்வீர்!
தமிழ்தந்த அருள்நெஞ்சம் உங்கட் குண்டே!

மொண்டுமொண்டு கொடுத்தாலும் குறைத லில்லா
மொண்டு மொண்டு குடித்தாலும் தெவிட்ட லில்லா
மண்டுசுவை செந்தமிழ்த்தேன் வாரி யுண்ண
வந்திருக்கும் வண்டுகளே! ஒருசொல் கேளீர்!
உண்டதன்பின் மயக்கம் வரும், பார்த்துச் செல்க!
உளநோய்கள் பறந்தோடும். வலிமை கூடும்!

பண்டறிந்த உண்மையைநான் கூறு கின்றேன்.
பகல்போல என்கூற்றின் மெய்ம்மை காண்பீர்!

காட்டினில் விலங்கு கள்போல்
காலத்தைச் கழித்த மாந்தர்
கூட்டமாய்ச் சேர்ந்தார் அங்கே
குதித்தது பதவிச் சண்டை!
கூட்டத்துள் வலிமை யோனைக்
கொண்டனர் 'தலைவன்' என்றே!
நாட்டிலும் அவனே பின்னர்
அரசன் நான் எனமொ ழிந்தான்!

அரசனின் கூற்றை யெல்லாம்
ஆண்டவன் மொழியாய் ஏற்றுப்
பரசினர், குமுகா யத்தில்
படிந்தன நெறிமு றைகள்!
அரும்பிற்று அரசு ஆங்கே
அச்சத்தின் குழந்தை யாக!
அரும்பின நாக ரிகப்பண்
பாட்டின் இளந்த ளிர்கள்!

கூட்டத்தில் பிறக்கும் இன்பம்,
குழந்தையும் பிறக்கும் பண்டைக்
கூட்டத்தில் அரசு என்னும்
குழவியைக் கண்டார் மாந்தர்!
ஈட்டிய அரசின் கீழே
எல்லோரும் ஒன்று பட்டு
நாட்டுமுன் னேற்றத் திற்காய்
நாள்தோறும் உழைக்க லானார்!

ஒன்றுபட் டன்னா ரெல்லாம்
உழைத்ததின் பயனா கத்தான்
இன்றுநாம் எத்தனையோ
ஏந்துக ளெய்தி யுள்ளோம்!
நன்றொடு தீதும் முன்பும்
நடந்தன; வேற்று நாட்டை
வென்றிடும் எண்ணத் தாலே
விளைந்தன கோடி தீமை!

முடியாட்சிக் கொடுமையினைத் தாங்கித் தாங்கி
மூண்டுவிட்ட எழுச்சியினால் ஒன்று சேர்ந்து
முடியாட்சி இன்றுமுதல் முடிந்த ஆட்சி
முழுவுரிமை யோடுநமை நாமே ஆளக்
குடியாட்சி வேண்டும்எனத் திட்ட மிட்டார்
கொற்றவனும் பகலில்விண் மீனாய்ப் போனான்!
விடியாட்சி எனநினைத்த ஆட்சி தன்னில்
வினாக்குறியாய்த் தலைவர்சிலர் தோன்ற லானார்!

பட்டாளத் துணையோடு, மன்னர் என்னும்
பழம்பெயரைப் பூணாது ஆத்தோல் போர்த்தி
'இட்டதுதான் சட்டம், இதை எதிர்த்துப் பேசின்
இடுகாட்டுப் புதைகுழிதான் எஞ்சும்' என்றே
கெட்டமனப் பேர்வழிகள் பதவிக் கள்ளால்
கிறுகிறுத்து மதிமயங்கி ஆட லானார்!
'குட்டக்குட் டக்குனியின் முட்டா ளாவோம்
குதித்தெழுக' எனக்கொதித்தே எழுந்தார் மக்கள்!

போர்க்களத்தில் குதித்தார்கள்! வாக்குச் சீட்டாம்
புதுவாளால் பகைவருடல் புண்பட ாது
நேர்க்குநேர் போரிட்டுத் தோற்க டித்து
நீர்செல்க எனவனுப்பி, ஏற்றார் கையில்
ஊர்த்தலைமை ஒப்படைத்தார்! 'ஒழுங்கா யின்றேல்
உம்நிலையும் இப்படித்தான், உணர்க' என்றார்
பார்க்குங்கால் குடியரசே ஏற்ற தென்று
பண்பாடிக் குதித்தாடி மகிழ்ந்தார் வாழ்க!

வள்ளுவன் குறித்த கொள்ளற் குரிய
ஆறு உறுப்புகள் அன்றும் இன்றும்
என்றும் ஆட்சிக் கின்றியமை யாதன!
முடியர சாயினும் குடியர சாயினும்!
குடிகொண் டிருக்க வேண்டிய குணமிவை;
என்பதென் எண்ணம் ஈண்டுள பாவலர்
எண்ணந் தன்னை இனிக்காண் போமே!

**படை – கிரிகோரி**

*படைகள் பற்பல சிரங்குப் புடையாய்
நடைபோ டுகின்ற காலம்நம் காலம்!
பாட்ட ரங்கின் தலைப்புப் படையை
நடத்த வேண்டிய நண்ப ரிலாததால்
அச்சம் எதற்கு? அடியேன் இருக்கிறேன்
படையைச் சிறிதும் தடையொன் றின்றி
நடத்துகின் றேனென நண்பர் வந்தார்.
நடத்திடப் படையை நண்பரே! வருக!*

**'குடி' – சிங்கார வடிவேலன்**

*சிங்கார வடிவேலன் குடியர், காரைக்
குடிசார்ந்தார்; 'செந்தமிழாம் தேனை அள்ளி
இங்காரே இவர்போலக் குடித்தார்' என்றே
எல்லோரும் வியப்படைவோம்! குடம்குடமாய்
மங்காத தமிழ்த்தேனை நமக்குக் கொட்ட
வாருங்கள் என அவரை அழைக்க லாமா?*

**கூழ் – குருசாமி**

*கூழென்றால் நல்லுணவு! உணவை விட்டால்
கூடுவதோ உயிர்வாழ்க்கை? மேலை நாட்டில்
கூழாலே அரசுபல வீழ்ந்த காதை
கொண்டதுதான் வரலாறு! கேர ளத்தில்
நாள்தோறும் கூழ்வேண்டிக் கிளர்ச்சி, கூச்சல்!
நண்பர்குரு சாமிதரும் கூழைப் பெற்று
ஆழ்பசியில் வீழ்ந்திருக்கும் மலைஞா லத்தின்
அன்பர்கட்குக் கொடுப்போமா? தருக நண்பீர்!*

**அமைச்சு – முத்தரசு**

*அன்பென்னும் உயிர்நிலையை அறிவாள் நற்றாய்!
அமைச்சியல்பை அரசன்தான் அறிவான் நன்றாய்!
நன்முத்தைப் பெயர்க்குள்ளே அடக்கிக் கொண்ட
நண்பரிவர் ஓரரசர்! பாட்டால் நெஞ்சை
நன்றாகத் திருடுபவர்! அவர்தம் பாட்டில்
நனைந்திடுவோம், நெஞ்சழுக்கு நீங்கி ஓடும்!*

**நட்பு – தாவீது**

*உள்ளமோ வேம்பு; ஆனால்*
*உதட்டிலோ கரும்பு; எங்கும்*
*கள்ளமே ஓங்கி நிற்கும்*
*காலத்தில் நட்பைப் பற்றி*
*வெள்ளம்போல் பாப்பொழிய*
*விரைக 'தாவீது' நண்பா!*

**அரண் – காந்திராசன்**

*காடும் மலையும் கடலும் அகழியும்*
*நீடுயர் மதிலும் நிலவும் அரண்கள்!*
*அரண்கள் பற்றிப் பாட வருபவர்*
*அரணாய் நாட்டிற்கு அமைந்த காந்தியின்*
*அரசர் என்னும் பெயரினர்; அவர் தரும்*
*பாட்டரண் தமிழைப் பாதுகாக் கட்டும்!*

**முடிப்பு**

*ஏறத் தாழ இருமணி நேரம்*
*மொண்டு கொடுத்த முதுதமிழ்க் கள்ளை*
*உண்டு மயங்கி இன்னொரு நிகழ்ச்சியைக்*
*கண்டு மகிழக் காத்திருக் கின்ற*
*வண்டுகாள்! பாவலர்காள்! வணக்கம் நன்றி!*

(14.4.68 காலை நிகழ்ந்த நெல்லை தனித்தமிழ் இலக்கியக்கழகப் பாவரங்கில் திடீர்த்தலைமையேற்றுப் பாடியது.)

## தமிழின் இனிமை

**தலைவர் வணக்கம்:**

*வேங்கைக்குக் காலிரண்டு, வியக்கின் றீரோ?*
*வீற்றிருக்கும் தலைவர்தமிழ் வேங்கை யன்றோ?*
*மூங்கைக்கும் அரங்கேறி முழக்கஞ் செய்யும்*
*மொழியாற்றல் தரும் ஊற்றாம் இவரின் பாட்டு*
*தூங்குபவன் தொடையினிலே போடும் சூடு*
*தூயதமிழ்க் காளைக்கோ தேனின் கூடு*
*தீங்குசெயும் பகைச்சருகின் நெருப்புக் காடு!*
*தென்மொழி[1] யால் நாம் அருந்தும் தமிழ்ச்சாப் பாடு!*

*மண்மூடிக் கொண்டிருக்கும் வைரம் போன்று*
*மறைந்திருக்கும் தமிழ்ப்புகழைத் துலக்க வேண்டிக்*
*கண்மூடிக் கொண்டிருக்கும் தமிழக் கூட்டம்*
*கடுமுழைப்பில் 'குடிமகன்'[2] போல் முனைய வேண்டி*
*விண்ஓடிக் கொண்டிருக்கும் ஞாயிற் றைப்போல்*
*வினையாற்றும் குறுந்தாடித் தலைவ! உன்முன்*
*பொன்கோடி படைப்பதற்கு விரும்புகின்றேன்*
*பொன்னிலை, புகழ்க்கோடி வணக்கம் வைத்தேன்.*

**தமிழ் வணக்கம் :**

*மயிலிறகைப் பொத்தகத்துள் மறைத்து வைத்து*
*மறுநாளில் அதைக்குட்டி போடச் செய்து*
*பயின்றிருந்த அப்பொழுதே என்றன் நெஞ்சைப்*
*பறித்துக்கொண் டாளொருத்தி, பிடித்துக் கொண்டேன்;*
*தயிர்ப்பேச்சுக் காரியினைப் புலவோ ரெல்லாம்*

---

1. தென்மொழி - தாளிகைப்பெயர்
2. குடிமகன் - தமிழ்க்குடிமகன் (சாத்தையா - மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர்)

*தண்டூன்றா இளங்கிழவி[3] என்பர்; என்றன்*
*உயிர்மூச்சாய் உலகத்தின் இனிமை ஊற்றாய்*
*உள்ளவள் யார்? செந்தமிழ்தான்; வணங்குகின்றேன்.*

**பாவலர் – கேட்பாளர் வணக்கம் :**

*அண்ணாவைச் சுற்றிநின்ற தம்பி யர்போல்*
*அரங்கத்தின் தலைவர்தமைச் சுற்றி யுள்ள*
*பண்ணாவை உடையதமிழ்ப் பாவ லர்காள்!*
*பழத்தமிழின் இனிமைநிறை வணக்கம் செய்தேன்.*
*தண்ணீரே இல்லாத கடலொன் றுண்டு*
*தரைதழுவும் அலையில்லை, நம்ப மாட்டீர்*
*கண்முன்னே திரண்டிருக்கும் நீங்க ளெல்லாம்*
*கடலன்றோ? ஒலிக்காதீர், வணக்கம் ஏற்பீர்!*

## இனிப்பு இனிமை வேறுபாடு

*இனிப்பென்ப தொருசுவையே; இனிமைப் பண்போ*
*ஏறிவரும் அறுசுவையின் மீதும்; பள்ளித்*
*தனிப்போக்குச் சிறுவர்களோ நெல்லிக் காய்கள்*
*தரும்துவர்ப்புச் சுவையினிலே இனிமை காண்பர்!*
*கனிப்பேழை யாயிருக்கும் வயிற்றுக் காரி*
*கண்டிடுவாள் புளிப்பினிலே இனிமை! நாளும்*
*பனிப்புயலில் வெயில்நெருப்பில் உழைப்போன் பானைப்*
*பழங்கஞ்சி உவர்ப்பினிலே இனிமை காண்பான்!*

*உண்டறியும் நாப்புலனில் இனிப்பு தோன்றும்,*
*உயர் இனிமை ஐம்புலனுங் களனாய்த் தோன்றும்*
*கண்டறியும் கட்புலனால் இனிமை தோன்றும்*
*கண்டறிந்தீர் ஊர்வலத்தில்[4]; அறிஞர் பேச்சைக்*
*கொண்டறியும் செவிஇனிமை; மல்லி கைப்பூ*
*கொடுக்குமணம் மூக்கினிமை; பெற்றோர் மெய்க்கு*
*வண்டுவிழி மகவினுதை இனிமை; நெஞ்சை*
*வளர்தமிழோ உள்உயிரின் இனிமை யன்றோ?*

---

3. இளங்கிழவி - முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் இருப்பது தமிழ்.
4. மாநாட்டு ஊர்வலம்

**தமிழே அமிழ்து :**

*அமிழ்தென்றோர் பொருளுண்டா உலகில்? உண்டு!*
*அதைஉண்டோர் சாவதில்லை யாமே? ஆமாம்!*
*''எமை ஏய்க்கப் பார்க்கின்றாய் தம்பி, எங்கே*
*எடு அமிழ்தை'' எனக்கேட்க நினைக்கின் றீர்நீர்:*
*தமிழ்தமிழென் றைந்தாறு முறைகள் சொல்க!*
*தயிர்க்குள்ளே வெண்ணெயைப்போல் அமிழ்தைக் காண்க!*
*தமிழேதான் அமிழ்தாகும், வாரி யுண்க!*
*சாக்காட்டைத் தவிடுபொடி யாக்கி வெல்க!*

**தமிழே இனிமை :**

*இங்கிருக்கும் பாவலர்காள்! ஒன்று கேட்பேன்*
*இனிமையெனும் பொருள்படவே புலவோ ரெல்லாம்*
*நுங்கிருக்கும் நீர்போன்ற 'தமிழ்'என் சொல்லை*
*நுவன்றார்கள்[5] அதைநிகண்டார் உறுதி செய்தார்[6]*
*உங்களையேன் கைவிட்டார்? சினங்கொள் ளாதீர்*
*உண்மையைத்தான் சொல்கின்றேன், இனிமை ஒன்றே*
*பொங்கிவரும் காவிரியாம் மற்ற[7] வெல்லாம்*
*பூணூலைப் போலிருக்கும் ஓடை கள்தாம்!*

**சொல்லினிமை :**

*'அப்பா'வில் வல்லினந்தான், ஆண்மை கூறும்;*
*'அம்மா'வில் மெல்லினந்தான் பெண்மை காட்டும்*
*இப்போதே 'பூ' என்று சொன்னால் உங்கள்*
*இதழிரண்டும் பூப்போலக் குவியும், ஓசை*
*அப்படியே பொருளியல்பைக் காட்டும் 'மான்' 'தேன்'*
*'அழகு' 'பழம்' 'எழில்' 'குழவி' 'மழலை' நோக்க!*
*'அப்பு! எப்பவந்தீக?' முகவைப் பேச்சில்*
*அடைகாக்கும் இனிமையெனும் பெட்டைக் கோழி!*

---

5. 'தமிழ்தழீஇய சாயலவர்', (சிந்தாமணி) முதலான இலக்கியப்பகுதிகள்
6. 'இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்' - பிங்கல நிகண்டு
7. மற்ற - தொன்மை, தூய்மை, தாய்மை முதலிய பிற பாட்டரங்கத் தலைப்புகள்.

*மல்லிகைப்பூ வாங்கிவர வில்லை யென்றே*
*மனைவியெனை ஊடிநிற்க அருகில் சென்றே*
*முல்லைப்பூ பல்லினிலே, மூக்கில் எட்பூ,*
*மொய்வண்டுத் தாமரைப்பூ கண்ணில், காதில்*
*வள்ளையொடு கைவிரலில் காந்தட் பூவை*
*வைத்திருக்கும் பெண்கொடியே! இனியோர் பூவா?*
*பல்வகைப்பூ மாலைநீ, கோதை என்றே*
*பாவையரை அதனால்தான் சொல்வர் என்றேன்!*

*''நாவீச்சால் தமிழ்ச்சொல்லால் வீழ்த்தப் பார்க்கும்*
*நாயகரே! உமையொன்று கேட்கின் றேன்யான்,'*
*பூவையென ஏன் சொன்னார்? கமழக் கூந்தல்*
*பூவைக்க வேண்டுமெனுங் கருத்தா லன்றோ?*
*தேவைவிடை'' எனக்கேட்டாள். திகைத்துப் போனேன்*
*தீந்தமிழ்ச்சொல் தேன்கனையில் தூக்கிப் போட்ட*
*பாவைக்குப் பூவாங்கப் பறந்து போனேன்*
*பழந்தமிழ்ச்சொல் எனைத்தூக்கிப் போன தண்ணே!*

**சொற்களின் தொடர்பினிமை**

*வெற்றியிலே நடுவிழந்தால்[8] வெறியாய் மாறும்;*
*வித்துகிற கூடலிலே[9] ஒன்று[10] சேர்ந்தால்*
*பெற்றிடலாம் புதுக்கூட்டல்[11]; மாது காலை[12]ப்*
*பெற்றிருக்கும் மதுவன்றோ! கல்வி தன்னைப்*
*பற்றியிரும் ஒற்றிலையேல்[13] கவியாய்[14] போகும்*
*பாட்டையிலே[15] மெய்விழுந்தால்[16] பாடை சேரும்*
*முற்றியநல் தேங்காய்க்குள் நெய்யை யொப்ப!*
*முதிர்ந்ததமிழ்ச் சொற்களிலே இனிமை தூங்கும்!*

---

8. நடு - நடுவிலுள்ள 'ற்' எனும் எழுத்து, நடுவுநிலைமை.
9. கூடல் - புணர்தல்.
10. ஒன்றுசேர்ந்தால் - 'ட்' எனும் ஓர் எழுத்து சேர்ந்தால், உடலும் உள்ளமும் இணைந்தால்.
11. கூட்டல் - கூட்டல் எனுஞ் சொல், குழந்தை
12. கால - 'ா' எனும் துணை எழுத்து, உறுப்பு.
13. - ஒற்று - 'ல்' எழுத்து, தொடர்பு
14. கவி - குரங்கு.
15. C பாட்டை - பாட்டை எனும் சொல், வாழ்க்கைப் பாதை.
16. மெய் - 'ட்' எனும் மெய் எழுத்து, உடல்.

**ஆங்கில வன்மை:**
(Put cut)

*'புட்' 'கட்' சொல் ஆங்கிலமே, சொல்லின் ஈற்றில்*
*பொல்லாத வல்லினமெய் தமிழில் இல்லை.*
*'புட்டு' தனைப் பக்குவமாய்ப் புட்டுப் புட்டுப்*
*புசித்தறிவோம். 'கட்டு' வினை, பெயர்ச்சொல் லாகிச்*
*சுட்டி வரும் பலபொருள்கள்; ஆங்கி லத்தில்*
*சொல்முதலில் மெய்யிணைந்து 'tree, strong' போலத்*
*தொட்டடுத்து வருங்கடுமை தமிழில் இல்லை.*
*சுவையூறும் தேன்தமிழோ இனிமை எல்லை.*

**வடமொழிக் கடுமை;**

*வடமொழியில் எழிலில்லை ஒளியும் இல்லை*
*வரும் 'எஒ' உயிர்களில்லை என்று சொன்னேன்*
*அடிவயிற்றைப் பிடித்திழுக்கும் ஒலிகள், மேலும்*
*அப்படியே குரல்வளையை ஆரோ கையால்*
*பிடித்தழுத்து வதைப்போன்று மூச்சு முட்டப்*
*பெரும்பாடு படுத்துகின்ற நான்கு 'வர்க்கக்'*
*கடுமொலிகள் வடமொழியில் நிறைய உண்டு*
*காற்றோடு பிறந்ததமிழ் ஒலிகற் கண்டு.*

**பொருளினிமை:**

*கடைக்கண்ணால் கொல்வான்போல் நோக்கி அந்தக்*
*கன்னிமனம் கொய்தவன்தான் கள்வன், ஆனால்*
*படைக்கண்ணாள் 'கள்வன்மகன்' என்றே நெஞ்சைப்*
*பறித்தவனின் தந்தையையேன் வைதல் வேண்டும்?*[17]
*அடங்காத பிள்ளையினைத் தந்தை வைதான்*
*'அட, முட்டாள் பயல்மகனே' என்று; மேலே*
*அடங்கியுள்ள பொருளினிமை வைத போதும்*
*அடைத்தேனாய்த் தமிழினிக்கும் அருமை ஓதும்.*

---

17. குறிஞ்சிக் கலிப்பாடல்

**இருபொருளினிமை :**

*'காசில்லை பழந்துணியும் கசக்க வில்லை*
*கவலையின்றிப் படுத்திருக்கும் அத்தான்' என்றாள்*
*காசில்லை[18] என்றாலே குற்ற மில்லை*
*கவலைவிடு கசக்கவில்லை[19] துணியும்' என்றாய்*
*தோசையினைத் தின்பதைப்போல் துணியைத் தின்று*
*தொலைத்தாயா? கசக்கவில்லை என்கின்றாயே!*
*மோசமடி இச்செய்கை' என்றேன் மஞ்சள்*
*முகத்தினிலே இளஞ்சிவப்பு நாணம் தந்தாள்.*

**தாலாட்டு, ஒப்பாரி:**

*மோனையின திலக்கணமும் அறியாப் பெண்டிர்*
*முழுநிலவு விழிமலரை மூடு தற்காய்*
*ஏணையிலே கிடத்தித்தம் தாலை ஆட்டி*
*இசைக்கின்ற தாலாட்டு பழத்தேன் கூட்டு!*
*ஆனையைப் போல் வாழ்ந்திருந்த நண்பர் ஓர்நாள்*
*அடைந்தார்மேல் சிவனுலகில் பதவி, அந்நாள்*
*தேன்தமிழில் பெண்டிரெலாம் ஒப்பா ரிப்பா*
*தீட்டியதை என்னென்பேன் இனிமை என்பேன்!*

**இனிமையின் இயக்கம்:**

*சாவேந்திச் சென்றாலும் நமது நெஞ்சத்*
*தாமரையில் உயிர்த்துடிப்பில் வாழு கின்ற*
*நாவேந்தன் அண்ணாவின் அருவிப் பேச்சில்*
*நடமாடும் தமிழினிமை; தமிழின் தூய்மை*
*தாவேந்தி[20]க் கெடுநிலையில் தடுத்துக் காத்த*
*தமிழ்மலையின்[21] தூய்நடையில் இனிமை தூங்கும்;*
*பாவேந்தன் புலிஉறுமல் பாட்டி லெல்லாம்*
*படைமறவன் நடைபோடும் இனிமை என்பேன்.*

---

18. காசு - பணம், குற்றம்
19. கசக்கவில்லை - துவைக்கவில்லை; கசப்புச் சுவையில்லை.
20. தா - கேடு, குற்றம்
21. தமிழ்மலை - மறை மலையடிகள்

## முடிப்பு

*பாவாணர்[22] அறிவினைப்போல் இனிமை எல்லை*
*பரந்து பட்டுக் கிடக்கிறது, பாடும் நானோ*
*கூவுதற்குப் பழகுகின்ற குயிலின் குஞ்சு*
*கூறியவை மிகச்சிலவே, நேரம் என்னைப்*
*போவாய்நீ என்கிறது; போகு முன்னே*
*பொறுமையொடு கேட்டிருந்தீர் ஒன்று சொல்வேன்*
*நாவீச்சால் பயனில்லை பகையைக் கொய்து*
*நாள்தோறும் செயல்புரிக! வணக்கம் நன்றி.*

■

(தி.பி.2000 சிலை 13 (28.12.69) ஆம் நாள் ஞாயிறன்று பறம்புக்குடி உலகத் தமிழ்க்கழக மாநாட்டில் பெருஞ்சித்திரனார் தலைமையில் பாடப்பட்டது)

22. பாவாணர் - மொழிநூற் பேரறிஞர் ஞா.தேவநேயப்பாவாணர்.

## வருக! வாழ்க!

*நெஞ்சங் கனிந்த நிறைவணக்கம் எல்லோர்க்கும்;*
*கொஞ்சம் செவிமடுப்பீர் கூர்ந்து.*

*ஏழுலகம் உண்டென்பார், இல்லை இல்லை*
*ஈரேழு பதினான்கு உலகம் என்பார்*
*வாழுலகம் ஒன்றேதான் அறிவோம், இந்த*
*வளமான பேருலகில் முதிய கன்னி[1]*
*ஆளுகின்ற தமிழ்மண்ணில் வாழ்வோ ரெல்லாம்*
*ஆர்வமொடு 'தம்செய்இது தம்செய்' என்றே*
*சூழுகின்ற காரணத்தால் தஞ்சை[2] யாகும்*
*சுடுநெருப்பாம் பசிப்பிணியும் வறுமைப் பேயும்*

*'தம்சாலூர்[3] தம்சாலூர் இந்த மண்ணில்*
*தலைகாட்ட மாட்டோம் யாம்' என்றே ஓடும்*
*தஞ்சாலூர்க் கலைநகரில் 'கோட்டை'[4] ஒன்று,*
*தரையுலகில் நாம்காணா வகையில் ஆங்கே*
*அஞ்சாமல் ஆயிரத்தி எண்ணூற் றுப்பேர்[5]*
*அரசாள்வர், அவரின்கீழ்க் குடிக ளாக*
*அஞ்சியஞ்சி நூற்றிருபத் தைந்து பேர்கள்*
*ஆசிரியப் பெயர்பூண்டு வாழ்கின்றார்கள்!*

*கல்லூரிக் கோட்டையினை ஆளு கின்ற*
*காளையரே கன்னியர்காள்! வருக! வாழ்க!*
*பல்லோரின் பெரும்பான்மை ஆளுங் காலம்,*
*பலர் நீங்கள், முதன்முதலில் வரவேற் கின்றேன்.*

---

1. முதிய கன்னி - தமிழ்
2. தம்செய் > தஞ்செய் > தஞ்சை, செய் - நிலம்
3. தம் + சாலூர் > தஞ்சாலூர்.
4. கல்லூரி.
5. மொத்த மாணவர்கள்

*சொல்லூரப் பேசாமல் பாட்ட ரங்கின்*
*சுவைதேர்க! இறுதியிலே அமர்ந்தி ருக்கும்*
*நல்லோரே! ஆசிரிய நண்பீர் உங்கள்*
*நல்லடியில் வரவேற்பு மலர்கு வித்தேன்.*

**தலைவர் வரவேற்பு**

*கவிஇயல்பு தாவுவது, கவிஞர் கூட*
*கண்முன்னே காணுகின்ற உலகை விட்டுப்*
*புவிபலவும் போய்வருவர், கோள்க ளோடு*
*போரிடுவர், மாறிடுவர், மாறா வாழ்க்கைக்*
*கவியரங்கப் பெருந்தலைவ! பாலர் அல்லீர்*[6]
*காட்சிக்குச் சுந்தரர்நீர், கரந்தைக் கோவை*[7]
*சுவையொழுகத் தந்தவரே, வருக, பால*
*சுந்தரப்பேர் கவிஞர்கோ! வருக! வாழ்க!*

**கவிஞர்கள் வரவேற்பு**

*செலவுக்குச் சிறந்ததெது? நிறைந்த செல்வம்,*
*சிறிதுகூ டத்தயக்க மின்றிச் சொல்வோம்.*
*செலவென்றால் பயணமிங்கே, செல்வம் மாறிச்*
*செல்பயணந் தான் செலவு, கவிஞ ரெல்லாம்*
*செலவின்றிக் கற்பனைத்தேர் ஏறிச் செல்வர்*
*செந்தமிழ்த்தீங் கவிஞர்களே! தேர்தான் எங்கே?*
*உலவுபிற ஊர்திகளைப் பாட வந்தீர்*
*உலகமிசைக் கற்பனைத்தேர் ஓடா தென்றோ?*

**நாவாய்– நா. பாத்தசாரதி**

*நா, வாயின் உமிழ்நீரில் மிதக்கும் தோணி;*
*நாவாயோ கடல்நீரில் மிதக்கும் கப்பல்,*
*நாவாயால் நாவாயைப் பாட வந்தீர்*
*நற்குறிஞ்சி மலரோடு பொன்வி லங்கை*

---

6. பாலர் - பாலசுந்தரம்
7. கரந்தைக்கோவை - தலைவரின் நூல்

*மூவாத இலக்கிமாய்த் தந்தீர், ஏனோ*
*முகில்வண்ணன்[8] பெயர்பெற்றீர், கரியர் அல்லீர்!*
*நாவாது செயவல்லீர் வருக, 'தீப'*
*நா. பார்த்த சாரதியே வருக, வாழ்க!*

**புகைவண்டி – சிவஞானம்**

*எவர்விடுவார் உமைஐயா[9] தவழ்ந்த வீடாம்*
*இதைவிடுத்துச் சென்னைநகர்சென்ற போதும்,*
*சிவஞானப் பெரியவரே! சென்னை நின்று*
*சிறந்தபுகை வண்டியிலே வந்த தாலோ*
*எவற்றினிலும் புகைவண்டி செலவு செய்ய*
*ஏற்றதெனப் பாடுகிறீர்! வருக! வாழ்க!*
*கவியரங்கம் புகைவண்டி ஒக்கும், காலங்*
*கடந்ததன்பின் தொடங்குவத னாலே என்பேன்.*

**பேருந்து – கலியபெருமாள்**

*பேருந்தை, நாமறிவோம் ஏழின் பத்தின்[10]*
*பேர் உந்து, பலநேரம் பெயரா உந்து*
*காருந்[11]தன் நிறந்தோற்கும் பெருமாள் ஊர்தி*
*கருடனென்பர். இவர்கலிய பெருமா ளேனும்*
*பேருந்தே சென்றுவரச் சிறந்ததென்று*
*பீரங்கிப் பாட்டாலே முழங்க வந்தார்*
*வாருங்கள் என்றவர்க்கே உங்கள் சார்பில்*
*வரவேற்பு கூறுவதில் மகிழ்ச்சி கொள்வேன்.*

**மிதிவண்டி – தொல்காப்பியன்:**

*மிதிவண்டி தான் இறுதி, குழுமி யுள்ள*
*மிகப்பலரின் ஊர்தியது, பயணஞ் செய்ய*
*அதுவேதான் சிறந்ததெனப் பாட வந்த*
*அருமைத்தொல் காப்பியரே! உலகம் போற்றும்*

---

8. பார்த்தசாரதி, மணிவண்ணன்
9. உமை ஐயா - சிவன் என்னும் பொருளும் வரும்
10. ஏழு, பத்து - கல்லூரி வரும் நகருந்துகள்
11. முகில்

முதியதமிழ் நூல்தந்தோன் பெயரைக் கொண்டீர்
முதிராத வயதுடையீர்! பாட்டால் உங்கள்
மிதிவண்டி தனைஅவையோர் நெஞ்ச மீது
மிகவிரைவாய்ச் செலுத்திடுக, வருக. வாழ்க!

விருந்தினரும் சிலரிருப்பார் அவரை யெல்லாம்
விருப்போடு வருகவென வரவேற் கின்றேன்
இருந்தமிழர் நெஞ்சமெல்லாம் ஆட்சி செய்யும்
இளங்கிழவி தமிழ்த்தாயே உன்றன் பிள்ளை
திருந்தாத மழலையிலே வரவேற் கின்றேன்
திரண்டிருக்கும் அவையோரே உயிர்வ ளர்க்கும்
மருந்தாகும் தமிழ்த்தேனை மாந்தி வாழ்க!
மகிழ்ச்சியெனும் பெருங்கடலில் நீந்தி வாழ்க!

'செலவுக்குச் சிறந்தது! என்னும் தலைப்பில் தஞ்சை மன்னர் சரபோசி அரசு கல்லூரியில் 23.2.71இல் நிகழ்ந்த பாட்டரங்க வரவேற்பு

## வரவேற்கிறேன்

ஐம்பொறிக்கும் இன்பமளி தஞ்சை மண்ணில்
ஐம்பொறியைப் பாடவந்தீர். அவையீர் வாழ்க!
ஐம்பொறிக்கும் இன்பமளி தஞ்சை மண்ணா?
'அது என்ன!' வியப்பீர்நீர், விளக்கு கின்றேன்.

நீர்நாக்கால் வயல்தடவி உலகைக் காக்கும்
நிலம்நெளியும் காவிரிப்பெண், வியர்வை உப்பு
நீர்பூக்கும் ஊற்றின்ப நிலை மான
நிணம்பூக்கும் மெய்க்கின்பந் தருவாள்; தஞ்சைப்
பார்பூக்கும் நெல்கரும்பு வாழை, முல்லைப்
பல்பூக்கும் வாய்க்கின்பம் பயக்கும், அந்தக்
கார்பூக்கும் நெடுவானை அளந்து நிற்கும்
கலைபூத்த பெருவுடையார் கோயில் மற்றும்

ஏர்பூத்த கலைமகளின் கூடம் எல்லாம்
இமைக்கதவுக் கண்களுக்கே இன்பஞ் சேர்க்கும்
நீர்ப்பூவும் நிலப்பூவும் கோட்டுப் பூவும்
நிறைந்திருக்கும் பூக்காரத் தெருவில் சென்றால்
நீர்க்கோவை மூக்கிற்கும் இன்பங் கிட்டும்
நிறைநாத சுரமெடுத்தே இராச ரத்னம்.
தேர்க்கோவைப் போலமர்ந்தே இசைத்த தோடி
செவிக்கின்பம் பாய்ச்சுமிந்தத் தஞ்சை மண்ணில்!

ஐம்பொறியும் இன்பமடை தஞ்சை மண்ணில்
ஐம்பொறியைப் பாடவந்தீர் ஒன்று சொல்வேன்

மருதநிலத் தஞ்சையிலே முல்லைக் காடு,
மரங்களிலே முந்திரிதான் அதிகம் ஆங்கே
பொருதவரும் வாலில்லாக் கால்இ ரண்டு
புலிகளொடு பேசுகின்ற மான்கள் உண்டு!

*ஒரு பசுவின் தலைமையிலே இவற்றைக் காக்க*
*உளந்தளர்ந்த ஆடுகளோ நூறி ருக்கும்*
*ஒருபசுதான் எம்முதல்வர் ஆடு நாங்கள்*
*உரமிகுந்த மாணவர்கள் புலிகள் மான்கள்.*

*புலிக்குலமே மாணவர்காள்! புடவை மான்காள்!*
*புரிந்தவன்நான் உம்வலிமை, ஆத லாலே*
*ஒலியெழுப்பி முதன்முதலில் வருக வென்றே*
*உங்களையே வரவேற்பேன், அமைதி காப்பீர்!*
*மலிபொறுமை ஒளிமுதல்வ! பயிற்றும் நண்பீர்!*
*வந்திருக்கும் விருந்தினரே! ஏனை யோரே!*
*பலமுறைநான் வருகவென வரவேற் கின்றேன்*
*பாமழையில் நனையுங்கள் துவட்ட வேண்டாம்!*

**தலைவர் சுரதா**

*பாரதிக்குத் தாசனெனப் பெயர்பூண் டாலும்*
*பாரதியைச் சிலவகையில் விஞ்சு கின்ற*
*பாரதிதா சனின்தாசர் தலைவர்; இந்தப்*
*பாரினிலே வேறெவர்க்கும் தாச ரல்லர்!*
*நீரோட்டக் கவிதைகளில் உவமைப் பூக்கள்*
*நிறைந்திருக்கும், சொல்விளக்கம் மின்னும், பாட்டுத்*
*தேரோட்டித் தேன்மழையைச் சாவின் முத்தத்*
*தித்திப்பை நல்எச்சில் இரவைத் தந்தார்.*

*தலைநகராம் சென்னையிலே தங்கி யுள்ளார்;*
*தம்பெயரால் இதழொன்று நடத்து கின்றார்;*
*நிலைகுலையா மலைபோல உயர்ந்த தோற்றம்,*
*நேரசையாம் பூப்போல மலர்ந்த கண்கள்,*
*கலைநகராம் தஞ்சைநகர்க் கோபு ரம்போல்*
*கலையாத புகழ்இவற்றின் சொந்தக் காரர்!*
*அலைவரிசை போல் முன்னே அமர்ந்தி ருப்பீர்!*
*அவரையுங்கள் சார்பினிலே வரவேற்கின்றேன்!*

*பொட்டுவைத்த ஒருமாதைப் பார்த்துச் சொல்வார்*
*'புள்ளிகொண்ட மெய்யெழுத்தைப் போலே சாந்துப்*
*பொட்டுவைத்த கட்டழகி' - புதுமை தானே!*

*பாட்டரங்கில் முறையாகத் தலைமை யேற்கப்
பாவலர்நல் சுரதாஇன் றியலா தென்று
தீட்டிவிட்டார் ஓர்மடலை, திண்டாட் டந்தான்;
திகைத்திருந்த நமக்கெல்லாம் துணையாய் வந்தார்
வேட்டுமொழி நம்நாட்டுப் புலவர். கட்டி
வெல்லத்தைத் தோற்கடிக்கும் பாடல் வல்லார்
நீட்டியிரு கைகூப்பி வரவேற் கின்றேன்
நிறைதொல்காப் பியப்புலவீர் வருக வாழ்க.*

**மெய் – புலவர் மரியதாசு**

*மெய்யோடே உயிர்சேர்ந்தால் உயிர்மெய் தோன்றும்
வித்தையிதைக் கீழ்வகுப்பில் அறிந்த வர்நாம்!
மெய்யோடு மெய்சேர்ந்தும் உயிர்மெய் தோன்றும்,
வியப்பெதற்கு? நாமெல்லாம் அதற்குச் சான்று!
மெய்பற்றிப் பாடவந்தார் பொய்யும் சொல்வார்
மேற்குநகர் திருச்சியில்வாழ் மரிய தாசு!
நெய்ச்சோறு அவர்பாடல் அவையின் சார்பில்
நெஞ்சார வருகவென வரவேற் கின்றேன்.*

**வாய் – பார்த்தசாரதி**

*வாய்நன்றாய் இருப்பதனால் பேசு கின்றோம்
வறுத்துவைத்த கறியினையும் வெட்டு கின்றோம்
வாய்என்னும் சொல்லுக்கே உண்மை என்று
வழங்குபொருள் உண்டுஎனினும் பொய்யே சொல்வோம்
வாய்பற்றிப் பாடுபவர் பார்த்த னுக்கு
வாய்த்தவொரு சாரதிபோல் கரிய ரல்லர்.
பாயருவிப் பாட்டரிவர் கருவூர் உள்ளார்
பார்த்தசா ரதியாரை வரவேற் கின்றேன்.*

**கண் – கண்ணப்பன்**

*கண்ணெடுத்துச் சிவன்முகத்தே அப்பி வைத்தான்
காளத்தி வேடன்அவன் கண்ணப் பன்தான்
கண்ணெடுத்து எவன்முகத்தும் அப்பா இந்தக்
கண்ணப்பர் கண்ணைப்பாத் தேரில் ஏற்றிப்*

*பண்ணெடுத்துப் பாடிடுவார் அழகன் வாழ்ந்த
பதிகாரைக் குடிகாரர், முருகன் அன்பர்,
பண்பாட்டுக் கவிஞரையான் வருக வென்றே
பழம்பாட்டுத் தமிழாலே வரவேற் கின்றேன்.*

**மூக்கு – சிங்கார வடிவேலன்**

*'மூக்கின்மேல் கோபம்வரும்' என்று சொல்வார்
மூக்கின்மேல் பாடல்வரும் கேட்போம் பின்னர்,
பூக்கின்ற மலர்வாடும். வாடாப் பூவாம்
புகழ்மணக்கும் அழகப்பன் மண்ணில் வாழும்
நாக்குழவர் சிங்கார வடிவேல் பேரர்.
நலிவின்றி உணர்வென்னும் தென்னை ஏறி
பாக்கள்ளைக் கொணர்வார்நன் மணம்இ ருக்கும்.
பரிவோடு நானவரை வரவேற் கின்றேன்.*

**செவி – சிற்பி பாலசுப்பிரமணியம்**

*கவிவானில் ஒளிப்பறவை பறக்க விட்டு
கவின்நிலவுப் பூப்பறித்துச் சிரித்த முத்தைப்
புவிபோற்ற அளித்தவர்தாம் சிற்பி, கோவைப்
பொள்ளாச்சிக் காரர், கண் ணாடிக் காரர்.
செவிபாட வந்துள்ளார் செவியில் இன்பத்
தேன்பாய்ச்சும் பாட்டாளி, வருக வென்றே
அவைசார்பில் நானவரை வரவேற் கின்றேன்
அனைவர்க்கும் என்நன்றி விடையுங் கொண்டேன்.*

'ஐம்பொறிகளில் சிறந்தது' என்னும் தலைப்பில் தஞ்சை மன்னர் சரபோசி அரசு
கல்லூரியில் 22.1.72இல் நிகழ்ந்த பாட்டரங்கின் வரவேற்பு

## பாவேந்தன் ஆற்றுப்படை

வேட்டு மழைபொழியும் விண்முகிலோ காரெருமை;
பாட்டு மழைபொழியும் பாவலரோ மண்முகில்கள்!

நாட்டில் மழையின்றி நலிந்திருக்கும் சோழர்களே!
பாட்டு மழைதருவோம் பணம்வேண்டாம் குளிராது!

ஆடை நனையாமல் 'ஆச்' 'ஆச்' சென் றிருமாமல்
பாடுந் தமிழ் மழையில் பறவைகளாய் நீந்துங்கள்!

இருபதாம் நூற்றாண்டு எத்தனையோ புதுமைகளால்
ஒருவாத பெரும்புகழை உள்ளடக்கிக் கொண்டதுகாண்!

'ஆகா மனிதனால் ஆகாத தில்லை' யெனும்
வாகை வரலாற்றை வரைந்துவரும் காலமிது!

இக்காலத் தமிழகத்தின் ஏற்றத்துக் குரியவரில்
தக்கார் சிலரைத் தகுதிநிறை செந்தமிழால்

தீட்டுகிற பாட்டரங்கின் திறமான பெருந்தலைவ!
பாட்டுக்கள் தந்து பழகியகை கொண்டவரே!

சோணாட்டு வடக்காலத்தூர் இளந்நாடி நெடுஞ்செழியன்
தானே நீர்? இப்பெயரில் தானேநீர் பாவரைந்தீர்

வெள்ளையன் நாட்டினின்று வெளியே றியநாளில்
அல்லவோ நீர்தாடி அகற்றினீர்? அல்லவா?

சோழ நெடுஞ்செழிய! சென்னையிலோர் நாடகத்தில்
*காளை செங் குட்டுவனாய்க் கணக்காய் நடித்தவரே!

மதுரையிலே கறுஞ்சட்டை மாநாட்டில் எதிரிகள்தாம்
அதிர்ந்தோடக் கோல்தூக்கி அடித்துவென்ற பாண்டியரே!

* முதல் தி.மு.க. மாநாடு 'கல் சுமந்த கசடர்' 1946

மூவேந்தின் மொத்த உரு! முன்னிருக்கும் கூட்டத்தில்
பாவேந்தன் பாட்டைப் படையேந்து மறவனைப்போல்

நாவேந்தி முழக்கிவரும் நலமேந்தும் நெஞ்சுடையோய்!
பாவேந்தன் பற்றியென் பாஏந்தி வந்தவன்நான்

அந்தப்பா ஏழையினை ஆற்றுப் படுத்தும்பா
இந்த அவை முன்னே எளியேன் படைக்கின்றேன்.

உள்ளம் இளைத்தே உடல்வெளுத்துக் கண்ணிருண்டு
பள்ளந் தனில்கிடந்து பட்டினியை உண்டிருக்கும்

நொள்ளைத் தமிழ்மகனே! நூறுநூ றாண்டுகளாய்க்
கொள்ளை யடிப்பவர்க்குக் குருதி வடிப்பவனே!

மருதத்தைப் பிறர்க்காக்கிப் பாலையிலே வாழ்பவனே!
உறுதிபெற வாழ்வில்நீ உய்ய வழியுரைப்பான்

தமிழ்த்தொண்டன் சாவதில்லை என்னுந் தறுகண்ணன்
அமிழாப் புகழாளன் அனல்பூக்கும் இமயமலை!

செல்க அவனிடம்நீ; செல்லும் வழியினிலே
நல்லதமிழ்ச் சாப்பாடு நல்கும் 'தமிழியக்கம்'!

சஞ்சீவி மலையொன்று தடையாய் எழுந்திருக்கும்
அஞ்சாதே. அவ்விடத்து வஞ்சி மகள்வருவாள்;

வல்ல பகுத்தறிவாம் வானூர்தி யில்ஏறிப்
பொல்லாப் பெருமலையின் புறம்போக வழிசொல்வாள்;

அந்த மலைகடந்தால் அடர்ந்திருக்கும் பேரிருள்போல்
வந்துநிற்கும் இருண்ட வீடாம் வளர்காடு!

காட்டைக் கடப்பதற்குக் கை குடும்ப விளக்கேந்த
ஆட்டமயில் போல் தங்கம் அங்குவரு வாள் அறிக!

காட்டைக் கடந்தாலோ கண்ணில்விழும் ஊரதனில்
கோட்டைப் பவுன்உருக்கிச் செய்தகுத்து விளக்குகளாம்

இளைஞர் இலக்கியத்தை எடுத்துண்ணும் கல்வியகம்!
மலைவாழைக் கல்வியினை வழங்குகின்ற ஓராசான்

படிதேன் எனும்பாக்கள் வடிப்போன், எவர்க்குங்கீழ்ப்
படியாதான் ஆனாலும் படிந்த தலைமுடியன்!

பரந்திருக்கும் இவ்வுலகைப் பார்த்திருக்கும் வான்போலப்
பரந்திருக்கும் ஒளிநெற்றி; பவள இதழ்மேலே

வண்டிரண்டு தமிழ்படிக்க வந்தமர்ந்த தைப்போலே
கொண்டிருப்பான் குறுமீசை; கூர்மை விழிகளினால்

அரிமாவைப் பணிகொள்ளும் ஆற்றல் மிகவுடையான்.
வரிமாக் குரலுடையான்; வாரி உனை அணைப்பான்.

சற்றும்எதிர் பாராத முத்தமொன்று தந்திடுவான்
பற்றுக இப் பாண்டியன் பரிசென் றுனக் களிப்பான்

உன்றன் உழைப்பாலே உலகம் மலர்ந்ததடா
என்று கிளர்ந்தெழுவாய்? ஏழையப்பா என்றிடுவான்.

ஓடப்பனாய் இருப்போய் உதையப்ப னாய்மாறு
வாடும் நிலையொழிய வழிபிறக்கும் என்பானே.

தஞ்சை இராமநாதன் மன்றத்தில் 21.11.74 அன்று நடந்த பாட்டரங்கு

## குழந்தை

அவை :

இன்று குழந்தைகளை ஏந்துகிற தந்தையரும்
நாளை குழந்தைகளை நாடுகிற மாணவரும்
நேற்றைக் குழந்தைகளாய் வீற்றிருக்கும் இவ்அவையே
நாற்றுக் குழந்தைகளின் நற்பெருமை கூறிடுமே!

பெரியார் :

தாடிக் குழந்தை தளர்ந்த நடைக்குழந்தை
வாடி உதிரும்வரை வறண்ட தமிழர்களைத்
தேடி மணிக்கணக்காய்த் தெவிட்டா மழலையினால்
ஓடி அறிவுமழை உரந்தளிர்க்கப் பெய்குழந்தை
வேரோடும் சூழ்ச்சி விசையின் நரம்பறுத்த
ஈரோடை பூத்த எரிமலையாம் அக்குழந்தை
நினைவை மனத்திருத்தி நெஞ்சுயர்த்திப் புத்துலகக்
கனவை நனவாக்கக் காளைகளே படியுங்கள்...

தமிழ் :

இன்னும் குழந்தையாய் இருக்கும் தமிழ்க்கிழவீ
என்னுள் திகழ்பவளே! உன்னை வணங்குவதா?

இல்லாத தெய்வமென்றே இருட்டறையில் உனைப்பூட்டிப்
பொல்லாதார் சிலரின்றும் பூசையிட நினைக்கின்றார்.

வாழ்த்தேன் வணங்கேன் வளர்ப்பேன் உனைநாளும்
பாழ்த்த மதியாரும் பாராட்டச் செய்திடுவேன்.

முக்கால் சிறுதேராய் முப்பாலைக் கொண்டவளே
மிக்கதிறல் கம்பன் மிடைஊஞ்சல் ஆடிடுவோய்;

பற்றறுத்தோன் சிலம்புப் பற்றியுள்ள மெல்லடியோய்;
சிற்றிலக்கி யச்செல்வச் சிற்றில் பலவுடையோய்;

சங்கத்துத் தொட்டிலிலே தாலாட்டப் பெறுபவளே!
இங்குன்னைத் தாயென்றே இயம்பல் பிழையாகும்

கூட்டத் தமிழர்களின் குரலில் பிறந்தவள்நீ
நாட்டோர் பலருக்கும் நன்கமைந்த ஒரு குழந்தாய்!

**காலமும் இடமும் :**

குழந்தையா ஐயையோ கூடாது கூடாது
அழுந்திக் கிடக்கும்நாம் அனைத்துலகின் முன்னிலையில்

எழுந்து நடப்பதற்கே இக்கணமே மக்கள்தொகை
விழுந்து கிடப்பதன்றி வேறுவழி இல்லையென

ஒருவண்ண முக்கோணம் இருமகவு வேலியிட்டு
நான்கு திசைகளிலும் நமைநோக்கி அச்சுறுத்தும்

சிவப்பு விளக்காகத் தெரிகின்ற காலமிது
காலமோ சரியில்லாக் காலம்அது போகட்டும்

நாளை மணம்முடித்தால் நறுக்காகப் பதின்மாதக்
காலத்தில் மகவொன்றைக் கைகளிலே தரவல்ல

காளை இளைஞர்பலர் கண்முன்னே வீற்றிருக்கும்

இந்த அவையில் எழிற்கனியாம் குழந்தையினைச்
செந்தமிழில் பாடச் சிறிதுநான் அஞ்சுகிறேன்.

முக்கோணக் கொள்கை முடம்பட்டுப் போகுமெனப்
பொக்கென்று கைவிலங்கு பூட்டச் சிலர்வரலாம்.

வந்தால் கவலையில்லை வழியறிவேன் இத்தலைப்பைத்
தந்தார் தவறென்றே தப்பித்துக் கொள்வேன்நான்.

**தலைவரைப்பற்றி :**

நான்மூன்றாம் மகவாகப் பிறந்தேன் ஆனால்
நன்மகவு இரண்டோடு நிறுத்திக் கொண்டேன்
ஏன்இந்தக் கருப்பாதை சாத்தல் என்றே
எனையொருவர் சினத்தோடு வினவி நின்றார்
கூன்நிமிர்த்தி ஓருலகைக் காணு கின்ற
கொள்கைப்போர் தனைநடத்தி வெற்றி சேர்க்கத்
தான்புதல்வர் பலர்வேண்டும் என்னும் கொள்கைத்
தறுகண்கா விரிநாடர் இவர்தாம் அன்னார்!

புற்றெல்லாம் நாகம்வாழ் பட்டிக் காட்டார்
பொதுமைநலம் விரும்புங்கா விரிபாய் நாட்டார்
அன்றைக்கே தேனிலவை அழைத்து வந்தார்
அறிவியல்சேர் நாடகங்கள் ஆக்கித் தந்தார்
சற்றேனும் புதுமையின்றி எதையும் செய்யாத்
தனித்தன்மை கொண்டஇவர் குழந்தைப் பித்தர்.
இற்றைக்குப் பாட்டரங்கத் தலைமை ஏற்றார்
இளவரசின் வணக்கத்தை ஏற்பார் சோழர்.

**குழந்தையும் நிலவும் :**

நிலவுக்கும் குழந்தைக்கும் நெடுநாள் தொட்டே
நிலவுகின்ற தொடர்புண்டு 'நீல வானில்
உலவுகிற வெண்ணிலவே! குழந்தை யோடு
உண்ணுதற்கும் ஆடுதற்கும் வா, வா' என்றே
பலவாறு அழைத்தார்கள். வந்தா யில்லை
பார்அங்கே வருகின்றோம் என்று கூறிக்
குலவுபுகழ் மாமனிதர் உனைப்பி டித்தார்
குழந்தையைநீ புறக்கணித்துத் தோற்றுப் போனாய்.

தனிவீடு, புதியமண மக்கள், வானில்
தவழ்கின்ற முழுநிலவு, தலைவன் 'என்றும்
இனியவளே! முழுநிலவே, இன்பம் சேர்ப்பாய்'
என்றுரைத்தான், நின்றமயில் முகந்தி ருப்பிப்
'பனிமதியம் மறுநாளே குறையும்' என்றாள்
'பாவையெழில் குறைவதில்லை, அறிவேன் கண்ணே
இனிநிலவை உனக்குவமை சொல்லேன்' என்றான்
இணையுடலில் சுவைக்கனிகள் பறித்துத் தின்றார்.

**குழந்தையும் அறிவியலும் :**

*குடல்தன்னை வெளிக்கொணரும் நாற்ற ஊற்றாம்*
*குடந்தைநகர் மாமாங்கக் குளத்தில் மூழ்கி*
*மடத்தலைவர் கால்கழுவி வழியும் நீரை*
*வாயூற்றித் தலைதூவி மகிழும் பேர்கள்*
*அட, தோழா! மருத்துவத்தைக் கற்பிக் கின்ற*
*ஆசிரிய ராய் உள்ளார், அறிவை மாய்க்கும்*
*மடச்செயலைக் கடைப்பிடிப்பார் அறிவி யல்தான்*
*மாணவர்க்குக் கற்பிக்கும் விந்தை என்னே!*

*இந்தநிலை அறிவியல்தான் நமது நாட்டில்*
*இருக்கின்ற குழந்தைநிலை என்பார் சில்லோர்,*
*எந்தவொரு குழந்தையும் இரட்டை வாழ்வில்*
*ஈடுபட்ட கதையேனும் கேட்ட துண்டா?*
*எந்தவொரு விருப்புவெறுப் பின்றி உண்மை*
*எடுத்துரைத்தல் அறிவியலின் முறையாம், இங்கே*
*அந்தமுறை குழந்தையிடம் இயல்பாய் நிற்கும்,*
*அறிவியலின் அடிப்படையைக் காணு கின்றோம்.*

**குழந்தையும் காதலியும் :**

*இவன்சிறுவன், அத்தைமகள் குழந்தை யாக*
*இருக்குங்கால் எடுத்தணைத்து முத்தங் கோத்தான்;*
*இவனுக்கே அவளென்று வளர்த்து வந்தார்*
*எழில்திரள உறுப்பெல்லாம் பூத்து நின்றாள்;*
*அவளின்றி நானில்லை என்றான் காளை*
*அவ்வுரையை வழிமொழிந்தாள் அழகுச் சோலை*
*எவருமிலா ஒருபொழுதில் அவளைக் கண்டான்*
*'எரிகின்றேன், குளிர்புனலே! அணைத்துக் கொள்வாய்'*

*என்றுரைத்தான், அவள்வெட்கி விலகிச் சென்றாள்*
*எழும்ஆசை துரத்தியதால் கைப்பி டித்தான்.*
*'நன்றல்ல உம்செய்கை வெளியில் சென்ற*
*நமர்வருவர் மணம்முடித்துப் பெறலாம்' என்றாள்.*
*'அன்றுன்னைக் கையேந்தி முத்தஞ் சேர்த்த*
*ஆள்தானே நானெ'ன்றான் 'குழந்தை யாக*
*நின்றிருந்த காலமென்'றாள். அந்தக் காலம்*
*நீளாமல் போயிற்றே என்று போனான்!*

**மழலை மாண்பு :**

என்மகவு மழலையிலே 'த்த, த்த' என்றான்.
எவரிதற்குப் பொருள்சொல்ல வல்லா ரென்றே
என்மனைவி யுடன்பேசிக் கொண்டி ருந்தேன்
எதிர்பார்த்த விருந்தாயென் தங்கை வந்தாள்
பன்னலமும் உசாவிக்கொண் டிருந்த நேரம்
பார்த்தென்றன் மொக்குள்மகன் 'த்தத்த' என்றான்
என்தங்கை இதைக்கேட்டாள் 'அத்தை அத்தை'
என்கின்றான் எனமகிழ்ச்சித் தேரில் ஊர்ந்தாள்.

பின்னையொரு நாளினிலே ஊர்க்குச் சென்றோம்
பிள்ளையிவன் பேசுகின்ற 'த்தத்த' கேட்டு
முன்னையெனைப் பெற்றெடுத்த அன்னை, இன்பம்
மொண்டவளாய் என்தந்தை அண்டை சென்றே
'என்னங்க நம்பேரன் 'தாத்தா' என்றே
இயம்புகிறான்' எனப்புதிய விளக்கஞ் சொன்னாள்!
'கண்ணல்ல வாடா' என் றவனை வாங்கிக்
கனிமுத்தம் பதித்தார்கள் இரண்டு பேரும்!

இனியும்நான் முட்டாளா? 'தாதா' என்னும்
ஈரசைச்சொல் 'தந்தை' யெனும் பொருளில் பின்னைத்
தனிப்பாடல் ஒன்றினிலே தவழக் கண்டேன்;
தயங்காமல் மனைவியினை அழைத்துக் 'கண்ணே
எனையன்றோ நம்புதல்வன் 'தாதா' என்றே
இதுவரைக்கும் அழைத்துள்ளான்' என்று சொன்னேன்
'இனிநீங்கள் தாத்தாதான்' முதுமை தன்னை
எப்படியோ மகனறிந்தான்' என்றாள் கள்ளி!

ஒரு 'த்தத்த' இவ்வாறு பலபொ ருள்கள்
ஊறிவரும் மணற்கேணி என்றால், பிள்ளை
தருமழலைச் சொற்களினை அறிய மட்டும்
தனியாக அகராதி போட வேண்டும்.
சிறுகுழந்தை போல்மழலை பேசு வோமா?
தெருவில்நமைக் கல்லெடுத்துத் துரத்து வார்கள்!
அருமறையாய் மழலையினை வாரி வீசும்
அக்காலம் பொற்காலம் வாழ்க்கை யேட்டில்.

**இளமைக் குறும்புகள் :**

*தந்தையின் மார்பிலே தாளத்தைப் போட்டவர்நாம்;*
*தொந்திப் பெருவயிற்றை மிதித்துத் துவைத்தவர்நாம்;*

*எட்டித் தலைமுடியை இழுத்துப் பறித்தவர்நாம்;*
*எட்டி உதைத்தஉதை எத்தனைஎத் தனையோ!*

*போதா(டா) என அவரைப் புகன்றமுறை பற்பலவாம்.*
*வாதா(டா) எனவுரைத்தோம் வந்துமுத்தம் தந்தார்கள்.*

*காலால் உதைத்தோம்நாம் கண்ணிலொற்றிக் கொண்டார்கள்!*
*கையால் அடித்தோம்நாம் களிப்பில் மிதந்தார்கள்!*

*சுட்டித் தனங்கள் தொகை தொகையாய்ச் செய்தாலும்*
*கட்டிக் கரும்பென்றும் கண்ணின் மணியென்றும்*

*வாரி யெடுத்ததுவும் மகிழ்ச்சித்தேன் நெஞ்சத்தில்*
*ஊறிப் பெருக்கெடுக்க உதட்டைப் பதித்ததுவும்*

*எக்காலம்? தோழர்களே! இன்பக் குழந்தைகளாய்*
*எக்காள மிட்டே இருந்தவொரு காலமன்றோ!*

*இன்றை நிலைஎன்ன? இந்தியாவின் நிலைதான்,*
*அன்றை உரிமைநிலை அமைதியாய்ச் சென்றதுகாண்!*

*''என்னருமைத் தந்தையரே என்றனுதை பெற்றவரே*
*முன்னம் நடந்தகதை முழுதும் மறந்தீரோ*

*போடா எனஉம்மைப் புகன்றிருந்த அப்பொழுதே*
*கூடாது தவறென்றே ஏன்ஐயா கூறவில்லை?*

*இன்றோ உமைச்சிறிது எதிர்த்துநான் பார்த்தாலும்*
*கொன்று விடுவதாய்க் கூறிக்கை ஓங்குகிறீர்*

*இல்லாத சிவனைப்போல் எரித்துவிடப் பார்க்கின்றீர்*
*நில்லாதே போஎன்று நெருப்பாய் எரிகின்றீர்*

*ஏன்இந்த மாற்றம்' எனக்கேட்க முடிகிறதா?*
*தேன்மழலைக் காலம் திரும்ப வருவதுவோ?*

அந்நாளின் பலவுரிமை ஆகாகா நம்பெருமை!
எந்நாளும் குழந்தைகளாய் இல்லாமல் போனோமே!

**ஆடையும் அகமும் :**

தீதெதுவும் தம்மனத்தைச் சேராத வேளையில்தான்
ஆதாமும் ஏவாளும் ஆடையின்றித் திரிந்தனராம்.

'ஏதேன்' எனுந்தோட்டத்(து) இருந்த நடுமரத்தில்
மாது பறித்தகனி மனத்தைக் கெடுத்ததனால்

அத்தியிலை யைத்தைத்தே அரையில் உடுத்தனராம்.
தத்தித் தவழ்மகவு தந்ததிந்தக் கற்பனையே!

மாசெதுவும் நெஞ்சை மருவாத காலம்வரை
ஆசைக் கனிகுழந்தை ஆடையின்றி ஓடியது.

மண்கண்ட மழைத்துளிபோல் மாசுடைய பெற்றோர்கள்
முன்கண்ட ஆடையினால் மூடி மறைத்ததனைப்

பின்கண்ட குழந்தைமனம் பேதலித்துத் தனைமாற்றார்
கண்கண்டால் என்னாகும் என்றாடை கட்டியதே!

இன்றைக்குப் பெற்றோராய் இருப்பவரே! நாளைக்குக்
கன்றுக் குழந்தைகளைத் தரப்போகும் காளையரே!

ஒன்றுமக்குச் சொல்வேன்நான் உங்கள் குழந்தைகளை
நன்றுதழு வத்தென்றல் நாடி வருகிறது,

குன்றின் மலர்மணத்தைக் கொண்டு வருகிறது,
ஆதலால் மேனியினை ஆடையால் மூடாதீர்

பாதமலர் சூடுதற்குப் பார்மகளும் தவிக்கின்றாள்
ஆதலால் காலணியால் அடிமலரை மூடாதீர்.

**இரு குழந்தைகள் :**

நாமெல்லாம் கல்வியெனும் நலம் வாய்ந்த பேர்வழிகள்
ஊமைகளாய் நாளும் உழைப்போரைப் பார்ப்போமே

நெஞ்சைத் திறந்து நிகழ்காலக் காட்சிகளைப்
பிஞ்சு மகவுகளைப் பிரிக்கின்ற வேற்றுமையை

உன்னிப்பாய்க் காண்போமா? ஓஅங்கே பாருங்கள்!
சின்ன ஒருகுடிசை, தேம்பும் சிறுகுழந்தை

அன்னை அதைவிடுத்தே அன்றாடக் கூலிக்குச்
சென்றதனால் அக்குழந்தை தேம்பி அழுகிறதோ?

மண்மூடிச் சுரங்கத்தில் மாண்டுவிட்டார் தந்தையென
விண்மீன் விழிசிவக்க வெம்பித் துடிக்கிறதோ?

அந்தத் துயரெல்லாம் அறியாச் சிறுகுழந்தை
எந்தத் துயர்பின்னே? இவள்யார்? அதன்தமக்கை

ஏழு வயதிருக்கும் ஏன்பள்ளி செல்லவில்லை?
கூழுக்கே தாளமிடும் குடும்பத்தில் தோன்றியவள்

பள்ளிக்குச் சென்றால்அப் பிள்ளையினைப் பார்ப்பவர்யார்?
உள்ளே கலயத்தில் ஒட்டிக் கிடந்ததனை

அக்காள் சிறுமி அரித்தெடுத்து நீரூற்றி
மொக்குள் சிறுகுழந்தை முன்வைக்க அக்கணமே

சட்டென்று கண்ணீர் தனைநிறுத்திக் கொண்டதுவே!
பட்டினியை உண்டே பசிபோக்கும் வித்தையினை

அந்தக் குழந்தை அறிவதற்கு நாளாகும்.
இந்தத் திசைபார்ப்போம், ஈரடுக்கு மாடிமனை

வாயிலுக்குப் பின்னே மலர்த்தோட்டம், நீரூற்று
தாயைப்போல் தோட்டந் தனைக்காக்கும் காவலரின்

கூனல் முதுகேறிக் குழந்தை சிரிக்கிறதே!
'ஏனடா பிள்ளையினை இறக்கிவிடு' என்றதட்டிப்

பானை வயிறொன்று யானையாய் நடக்கிறதே!
சின்ன குழந்தை சிரிப்பை உதிர்க்கிறதே

என்ன அதன்பொருளோ? எதிர்கால மந்திரியாய்த்
தன்னை நினைத்துத் தனியுவகை கொள்கிறதோ?

*ஏழை முதுகின்மேல் ஏறிப் படைநடத்தும்*
*காலத்தின் கோலத்தைக் காட்டுகிற தோநமக்கு?*

*தந்தையோ அன்னையோ தலைவராய் உள்ளனரோ?*
*அந்தத் தலைமை அடுத்துத் தமக்குவரும்*

*என்ற விதிமுறையை எண்ணி மகிழ்கிறதோ?*
*அன்றன்று, பாவம் அறியாச் சிறுமொட்டு.*

*நாளை அதன்மனத்தில் நரிகள் புகுந்துவிடும்*
*ஆளை அடித்துண்ணும் ஆற்றல் பிறந்துவிடும்*

**முடிப்பு :**

*கண்ட குழந்தைகளைக் காட்டிவிட்டேன் தோழர்களே!*
*உண்டு மனத்தில் அவை உண்டாக்கும் சிந்தனைகள்;*

*எண்ணிச் செயல்புரிந்தால் இருக்கும் நிலை மாற்றிடலாம்*
*நண்ணியுமைச் சிலகூற நல்லதொரு வாய்ப்பளித்த*

*பேரவைப் பொறுப்பினர்க்கும் பேசாமல் கேட்டிருந்த*
*சீரவையோர் உங்கட்கும் தெரிவிக்கின் றேன்நன்றி.*

'நடந்தாய் வாழி... குழந்தை' என்னுந் தலைப்பில் திருச்சிராப்பள்ளி பெரியார்
ஈ.வெ.ரா. கல்லூரியில் 24.2.76இல் நிகழ்ந்த பாட்டரங்கப் பாடல்

## முகம் - உறுப்புகள்

என்றோ பிறந்தவளே! என்றும் இருப்பவளே!
இன்றும் இளையவளே! ஏடீ, தமிழ்க்கிழவீ!
இனத்தின் முகங்காட்டும் உன்னை மனத்திருத்தி
முகவுறுப்புப் பாட்டரங்கை முன்னின்று நடத்துகிறேன்.

**முகம்.**

தங்கம் ஒளிவீசும், *தங்க முதல்வரின் கீழ்
உங்கள் முகங்கள் ஒளிர்வதனைக் கேட்பானேன்?

வானில் ஒருநிலவு வருமிரவுப் போதினிலே,
பட்டப் பகலில் பலநிலவைப் பார்க்கின்றேன்!

அழுக்கிரவை வெளுக்கின்ற அந்தநிலா தேய்வதுண்டு
தேயா நிலவுகளாய்த் திகழ்வனவாம் உங்கள்முகம்!

ஆசிரியை கலாதாக்கர் அறிமுகப் படுத்துகின்ற
புதியமுகம் நான்தான். புதுமுகம் அல்ல அல்ல

புதுமுகம் திரையில்வரும் பூச்சுமுகம், திரைவிலக்கி
மதுமுகத்தைக் காணும் மனமுடைய பாரதியின்

புதுவழியை விரும்புகின்ற புதியமுகன் நானாவேன்.

முகத்தை நிலமாக்கி முளைத்த உறுப்புபற்றிப்
பகல்போல் ஒளிக்கவிதை பாய்ச்சுமிந்தப் பாட்டரங்கின்

தலைவன்நான். நாட்டிலுள்ள தலைவர்களின் பொய்ம்முகத்தைக்
காட்டுவதில் பெருவிருப்பம் காட்டுகின்ற ஒருமனிதன்.

முகமென்னும் சொல்தமிழா? இல்லையில்லை எனமொழிந்த
அகங்கறுத்த பேர்வழிகள் ஆராய்ச்சி அடங்கியது.

---

* தங்கம் - கல்லூரி முதல்வரின் பெயர்.

முகத்தல் அளவையினை மொய்த்திருக்கும் நீரறிவீர்.

நெல்லை அளக்க நிறைநாழி உதவுதல்போல்
உள்ளம் அளக்க உதவும் முகமலர்கள்.

முகம்வாடி நெஞ்சத்தில் மொய்த்த துயர்காட்டும்.
முகம் மலர்ந்து உள்ளத்தில் முகிழ்த்த நகைகாட்டும்.

ஒருவர் உணர்ச்சிகளை உள்ளபடி யேமுகந்து
தருவதனை முகமென்றே தமிழில் குறித்தார்கள்!

முன்னிருக்கும் ஒன்றை முகமென் றுரைப்பதுண்டு.
முன்னுரையை நூன்முகம் முகவுரை என்றுரைப்பர்

ஒரு கொடியில் பலமலராய் உடலில் அமைந்திருக்கும்
உறுப்புக்கள் அத்தனைக்கும் முன்னமைந்த ஒருறுப்பை

முகமென்றே நம்முன்னோர் மொழிந்தார்கள், அதையெளிதாய்ப்
புரிந்துகொள ஒருவழியைப் புகல்கின்றேன் கேளுங்கள்!

கையிரண்டைக் காலாக்கிக் காட்டு விலங்குகள் போல்
மெய்வளைய நின்றால் விளங்கும் முகம்முன்னே.

ஆனைபுலி கரடி அரிமாநாய் நரிவீட்டுப்
பூனை இவற் றைப்பார்த்தால் புரியும் எளிதாக
முன்னமைந்த ஒருறுப்பை முகமென் றுரைத்தவகை!

பலமலர்கள் தனக்குள்ளே பூத்து நிற்கப்
பாரிலொரு மலரைநீர் பார்த்த துண்டா?
குளத்தில்வளர் தாமரைக்குள் குவளைப் பூக்கள்
கொடிமுல்லை மொட்டுக்கள் செடியின் எள்பூ
நிலத்தில்வளர் பஞ்சுமர இலவம் பூக்கள்
நிறைந்திருக்கக் கண்டதுண்டா? காண்பீர், உங்கள்
பளிங்குமுகத் தாமரைக்குள் குவளைக் கண்கள்
பல்முல்லை, இலவமிதழ் எட்பூ மூக்கை!

**வண்டுகளின் வரிசையைப்போல் புருவ வில்கள்;**
வளைந்தேநெற் கதிரறுக்கும் அரிவா ளைப்போல்
**துண்டுநிலா ஒளிநெற்றி; உமிழ்நீ ரின்மேல்**
**தோணியைப்போல் மிதக்கின்ற பேச்சா ளன்நா;**

துண்டுசெயும் கத்திரிகைப் பிடிபோல் தோன்றிச்
சுவர்மறைவில் ஒற்றறியும் செவிகள்; நெஞ்சைச்
சுண்டிமுத்த விதைவாங்கும் நிலக்கன் ஊங்கள்!
சுவைத்தமிழில் இவைபற்றிப் பாடக் கேட்பீர்!

**கண் – அறிவுமதி**

காலிலே முள்ளா கையிலே வெட்டா
கண்கள் ஏன் அழுகின்றன?
மேலான மாந்தரின் வாழும் முறையினை
விழிகள் மொழிகின்றன.

மற்றவர் துயரினைத் தன்துயராய்க் கொள்ளும்
மனிதத்தைச் சொல்கின்றன - அதைக்
கற்றஎன் நண்பன் அறிவுமதி இங்கே
'கண்' ணினைப் பாடவந்தான்.

பாலின் எளிமையும் பயனும் தருகின்ற
பாக்கள் வடிக்கின்றவன்.
ஆலின் விதைபோல் குறுமையுள் பெருமையை
அடக்கி மொழிகின்றவன்.

இருமுறை தமிழ்நா டெங்கிலும் உள்ளவர்
இடம்பெற்ற பாப்போட்டியில்
பெருமைப் பரிசினைப் பெற்றவன் பெருமையைப்
பேசிட வேண்டுவதோ?

'பிரிய வசந்தமே' அவன்நூல் பேரிது,
பிரியான்தன் நண்பர்களை.
'முருகன் வழிபாடு' முனைவர் பட்டத்திற்காய்
முனைந்துசெய் ஆராய்ச்சியாம்.

காலிலே முள்ளா? கையிலே வெட்டா?
கண்கள் ஏன் அழுகின்றன?
மேலான மாந்தரின் வாழு முறையினை
விழிகள் மொழிகின்றன.

*மற்றவர் துயரினைத் தன் துயராய்க் கொள்ளும்*
*மனிதத்தைச் சொல்கின்றன - அதைக்*
*கற்றஎன் நண்பா! அறிவுமதி இங்கே*
*கண்ணினைப் பாடவா வா!*

**புருவம் – பிரேமா சம்பத்**

*இயற்கைப் புருவத்தை எவ்வெவ்வா றோமழித்துச்*
*செயற்கை உருவத்தைச் செய்துகொள்ளும் காலமிது.*

*கண்ணென்னும் அம்பைக் கட்டிளையார் மேல்பாய்ச்சித்*
*துண்ணென் நடுக்கத்தைத் தோற்றும்வில் புருவத்தைப்*

*பெண்ணொருவர் பாடுகிறார். பெரிதும் வரவேற்பீர்!*
*(உங்கள் குலமன்றோ உரைக்கவோ நானதனை)*

*பாடுபவர் பொருளியலில் முதுகலைப்பட் டம்பெற்றார்*
*கூடியுள்ள தங்கையரே! குறித்துக்கொள் ளுங்கள் இதைப்*

*பல்கலைக் கழகமெங்கும் படித்தவர்கள் அனைவரிலும்*
*இளங்கலையில் முதுகலையில் இவர்தாம் முதல்மதிப்பெண்*

*அனைத்திந் தியஅளவில் ஆங்கிலத்தில் கட்டுரைகள்*
*எழுதி முதற்பரிசை ஏந்தியவர், கல்கியிலே*

*இவரின் சிறுகதைகள் இரண்டுவெளி யாயினவாம்.*

*பாடல் எழுதிய பழக்கம் இருந்தாலும்*
*இதுதான் முதலில் அவர்ஏறும் கவியரங்கம்!*

*கன்னி யரங்கமிது. திருமதி பிரேமா சம்பத்*
*புருவக் கவிதைதரப் புறப்படுக, புகழ்பெறுக.*

**நெற்றி – அக்கினிபுத்திரன்**

*நெற்றி விழிதிறந்து நிற்கையிலும் ஓர்புலவன்*
*குற்றமே குற்றமென்று கூறியதாய்க் கதைகேட்போம்*

*நெற்றிபற்றி யிங்கே நெருப்புக் கவிகிடைக்கும்*
*தொற்றுநோயாய் ஒட்டிச் சுரண்டிவரும் வர்க்கத்தைப்*
*பற்றி யெரிக்கும் பாக்கனலைப் பாய்ச்சுபவர்*

அக்கினி புத்திரர் அவரை அறியார்யார்?
இக்காலம் புதுக்கவிதை ஏற்றம் பெறும்காலம்.

புதுக்கவிதைக் கவிஞர்களில் புகழ்பூத்த இக்கவிஞர்.
எதுவந்த போதினிலும் இளைத்தவர்க்காய் வாதிடுவார்.

வானம்பா டித்தாயின் மடியில் இவர்வளர்ந்தார்
நானவரைப் பல்லாண்டாய் நன்கறிவேன் நாடறியும்

அரங்கரா சன்இவர்பேர், நாம மிடஅறியார்.
சுரங்கக் கவிதைச் சொடுக்குகளால் மற்றவர்க்கு

நாமமிடும் பேர்களையே நன்றாகச் சாடுபவர்.
நாமமிலார். நெற்றிபற்றி நல்லகவி தைதருவார்.

**நா – ஜெயஸ்ரீ**

பெயருக்கும் செயலுக்கும் பொருத்த மில்லாப்
பிள்ளைகளைக் காண்கின்றோம். அறிவுச் செல்வி
பெயரிருக்கும், பெயரில்தான் அறிவி ருக்கும்!
பெயர்க்குள்ளே வெற்றியையும் செல்வத் தையும்
செயற்பொருத்தம் விளக்கும்வகை பெற்றி ருக்கும்
செல்விஜெய ஸ்ரீபற்றி அறிவீர் நீங்கள்.
பயின்றவிந்தக் கல்லூரி வரலாற் றேட்டில்
பரிசுகளால் தம்பெயரைப் பதித்துக் கொண்டார்.
பயிற்றுவித்த ஆசிரியர் மகிழும் வண்ணம்
பலதிறமை பெற்றிருக்கும் வெற்றிச் செல்வி
அயில்வேலின் கூரியதாம் நாவைப் பற்றி
அருங்கவிதை தரவருக உயர்க வாழ்வில்!

**இதழ் – அரிகிருஷ்ணன்**

நல்லூர் இலக்கிய வட்ட நண்பர்
உலகக் கவிதை இயக்க உறுப்பினர்

வள்ளுவர் வள்ளலார் வழியினிற் செல்பவர்
பாரதி தாகூர் பள்ளியில் பயின்றவர்

வெட்டிக் கத்தல் விரவா வகையில்
பட்டி மண்டபப் பாங்கறிந் தேறுவோர்

நல்ல பாட்டரங்குகள் நடத்திய செயலர்
கல்லூரி அரங்குகள் பற்பல கண்டவர்

அவர்யார் என்பீ ராயின் அவரே
அரிகிருஷ்ணன் -
பெயரில் கருப்பர் உடலில் சிவப்பர்.

கருப்புக் கண்ணனின் பெயருடை கவிஞர்.
சிவப்பு இதழ்பற்றிச் சிறப்புக் கவிதருவார்.

**செவி – பொன். சுசீலா**

உங்கள் கல்லூரி ஒரு சுரங்கம்
மாணவி யர்களை மாணிக்கக் கற்களாய்

உலகு ஒளிபெற உதவுவ தாலே
உங்கள் கல்லூரி ஒரு சுரங்கம்

'ஐயோ அப்பா' என்னுமோர் ஒலியே
திரும்பு திசையெலாம் கேட்குமிந் நாளில்

ஆகா ஆகா எனப்பிறர் வியந்து
பாகு மொழிகளால் பாராட்டும் வண்ணம்

தோகை மயில்களை வாகை சூடிட
உலகப் பூங்காவில் உலாவர விடுப்பதால்

உங்கள் கல்லூரி ஒரு சுரங்கம்

அந்தச் சுரங்கத்து மணிகளில் அழகாய்ப்
பொன் சுசீலா மின்னிப் பொலிகிறார்.

பள்ளிக் கல்வி இயக்ககப் பணியில்
இளநிலை உதவி யாளரா யிருப்போர்

மாதந் தோறும் கடற்கரை மணலில்
நடக்கும் கவியரங்க நிகழ்ச்சி இவரின்
பாடல் மணிகளால் பளிச்சிடல் அறிவோம்

வானொலி கேட்கும் வாடிக்கை யாளர்
தேனொலி அதுவெனச் செப்பிடும் வகையில்

செவிகளில் தித்திப்பைச் சேர்க்கும் தோழியே!
செவியைப் பற்றிச் செவியில்தேன் பாய்ச்சுக.

**கன்னம் – மதிவண்ணன்**

ஆனந்த விகடன் அமுத சுரபி
கல்கி தீபம் கணையாழி தாமரை
கண்ண தாசன் கவிதா மண்டலம்
இப்படிப் பற்பல இதழ்கள் இவரின்
எழுத்தைச் சுமந்து ஏற்றம் பெற்றன.
வானொலிக் கும்வளங் கூட்டி யுள்ளார்.

பாரதி கலைக்கழ கத்தின் பணியில்
இணைச்செய லாளராய் இருந்து வருபவர்
பாட்டரங் கங்கள் பட்டிமன் றங்கள்
நூறுக்கு மேலே ஏறிய இவரை
இலக்கிய 'கவாஸ்கர்' எனச்சொல்ல லாமா?
ஆரிவர்? ஆரூரில் பிறந்த ஆளிவர்
பெயருக்குச் செயலால் பெருமை சேர்க்கும்
மதிவண்ணன் கன்னத்தின் வண்ணம் பற்றிப்
புதுமுத்தக் கவிதைகள் புனைந்து தருவார்.

**பல் – சரசுவதி**

கலைமகளின் பெயர்கொண்ட தங்கை, உங்கள்
கல்லூரிப் பேரவையின் செயலர் இங்கே
அலைஅலையாய்ப் பெருக்கெடுக்கும் ஆர்வத் தாலே
அரிசிப்பல் வரிசையினைப் பாடு தற்குத்
தலைநிமிர்ந்து உங்களின்முன் வருவார் நீங்கள்
தரவேண்டும் பேருக்கம் - ஆங்கி லத்தின்
இலக்கியங்கள் பயில்சரசு வதிதன் வாழ்வில்
ஏற்றமெலாம் பெற்றுலகம் போற்ற வாழ்க!

வருக கவிதை தருக.

**மூக்கு – அழகப்பன், வனிதா**

*மூக்கின்மேல் கோபம்வரும் சிலர்க்கு, நாட்டில்*
*மூக்கின்மேல் பாடல்வரும் கேட்போம் இங்கு*
*நாக்குழவர் இரண்டுபேர் மூக்கின் மேலே*
*நலஞ்சேர்க்கும் உயிர்வளியாய்ப் பாடல் நூற்பர்*
*மூக்கில்லா முகம்பாழாம் என்னும் உண்மை*
*மொழிந்துநிற்பாள் சூர்ப்பநகை; அந்த மூக்கைத்*
*தேக்குமரச் சொற்களினால் சிறப்ப மாக்கித்*
*திரண்டிருக்கும் அவைமுன்னே வைப்பர் கேட்போம்*

*உடலுக்கு முன்னுறுப்பு முகமென் றேன்நான்*
*ஒளிமுகத்தின் முன்னுறுப்பு மூக்கே யாகும்.*
*ஆதலினால் மூக்குபற்றி இரண்டு பேர்கள்*
*ஆர்வமுடன் பாடவந்தார். என்மா ணாக்கன்*
*அழகப்பன், சுரதாவின் தலைமை யின்கீழ்*
*அரங்கங்கள் ஏறியவன். வானொ லிக்கும்*
*அருமைமிகு செவிப்பூவால் மணமும் சேர்த்த*
*அழகப்பா அழகுப்பா தர வருக.*

*இரண்டு துளைகள் இருக்கும் மூக்கை*
*ஒருவர் பாடினால் உயிர்க்கும் மூக்கு*

*வேலை நிறுத்தம் செய்து விடுமோ*
*என்று அஞ்சித்தான் இருவரைப் பாடச்*

*சொல்லினர் போலும் - செல்வி வனிதா*

*உங்களில் ஒருவர் இங்கிப் போதே*
*இரண்டாவ தாக முதல்தரக் கவிதையை*

*உங்களின் முன்னர் உயிர்க்க வருகிறார்*
*ஊக்கம் கொடுத்து மூக்கை உயர்த்துக.*

**நிறைவு**

*நல்ல உவமைகள், நயங்கொழிக்கும் கற்பனைகள்,*
*வெல்லுந் தமிழ்மொழியின் மேன்மையினைக் காட்டும் வகை*

முல்லை அரும்புகளாய் மொய்த்திருக்கும் சொல்நயங்கள்
எல்லாம் நமையெங்கோ எடுத்தோடிப் போனாற்போல்

பாட்டு மழையில் பாவாடை தாவணிகள்
நீட்டப் புடைவை நிறச்சட்டை நனையாமல்

நீந்திக் கிடந்தோம்நாம். நிகழ்காலச் சிந்தனைகள்
ஏந்திவந்த பாடல்உங்கள் இதயத்தை நனைக்கட்டும்.

பாட்டுப் பறவைகளே! உங்கள் சிறகுகட்கு
நாட்டுத் துயர்போக்கும் வலிமை நனியுண்டு.

வீட்டின்பம் பற்றியே வினையாற்றிக் கிடக்காமல்
நாட்டுநலம் கருதிநாம் கவிதை வாளெடுப்போம்.

கூட்டப் பறவைக் குஞ்சுகளாய் முன்னிருக்கும்
ஏட்டைச் சுமக்கும் இளைய தலைமுறையே!

உலகமென்னும் ஏட்டை உற்றுப் படியுங்கள்
பலருழைப்பைச் சிலருறிஞ்சும் பகற்கொள்ளை தெரியவரும்.

காலமெலாம் பாடுபட்டுக் கஞ்சிக்கு வழியின்றி
ஓலமிடும் தாய்க்கிழவி உங்களின்முன் வந்திடுவாள்.

அந்தக் கிழவியின் அழுக்கு முகத்தினிலே
வந்திருக்கும் சுருக்கங்கள் வரலாற்றுச் சோகங்கள்;

பொன்முகத்தைப் பார்த்துப் பூரித்தது போதும்,
மண்முகத்தில் படுமாறு மாடாய் உழைப்பவனின்

கருத்தமுகம் பக்கம் கவனம் திருப்பிடுவோம்.
உருத்தெழுந்து ஏழையர்கள் ஒன்றுபட்டுக் குரல்எழுப்பிச்

சிவந்த முகத்தர்களாய்ப் போருக்குச் சென்றால்தான்
உவந்து வரவேற்கும் ஒருகாலம் உருவாகும்.

அக்காலம் உருவாக அனைவரும் திரண்டெழுவோம்.
மிக்கநன்றி வாய்ப்புக்கு, வெல்க பொதுமைநலம்.

சென்னை வைணவ மகளிர் கல்லூரி
1989



# விடுதலை

## எழுதினார்கள்

முப்பதாண்டுகளுக்குமுன் வெளிவந்த என் முதல் கவிதைத் தொகுப்பின் இரண்டாம் பதிப்பு இது. 1962 முதல் 1972 வரையிலான பத்தாண்டுக் காலப்படைப்புகள் 'விடுதலை' எனும் பெயர் பூண்டு வெளிவந்தன. அப்போது நான் எழுதியிருந்த பல பாடல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களே இத்தொகுப்பாகும். இப்போது என் பாடல்கள் அனைத்தையும் ஒரு தொகுப்பில் காண விரும்பும் நண்பர்கள் 'விடுதலை'யையும் இணைக்க வேண்டும் என்றனர். ஏனைய பாடல்களின் இடையே பாடுபொருள் அடிப்படையில் இப்பாடல்களையும் சேர்க்காமல் முன்னர் வெளிவந்த வடிவிலேயே இத்தொகுப்பில் இணைக்கலாம் என முடிவு செய்யப் பெற்றது. முதல் தொகுப்பில் பாடல்களுக்கு முன் அவற்றின் தோற்றுவாய்க் குறிப்புகள் தரப்பட்டிருந்தன. பலராலும் வரவேற்கப்பட்ட - படைப்பாளியையும் படைப்பையும் இணைத்துக் காணப் பயன்படக்கூடிய அத்தோற்றுவாயுரைகள் சிதையாமல் இடம்பெற வேண்டும் என்னும் நோக்கத்தின் அடிப்படையிலேயே வடிவம் மாறாமல் 'விடுதலை' நூல் ஈண்டு இணைக்கப் பெற்றுள்ளது.

கவிதை நூல்கள் எளிதில் விற்பனையாவதில்லை என்று பதிப்பகத்தார் பலரும் ஒதுங்கிக்கொள்ளும் காலத்தில், எப்படியும் இத்தொகுப்பை வெளியிட்டுவிட வேண்டும் என்று முனைப்புக் காட்டித் தனது 'இலட்சுமி புத்தக நிலையம்' வாயிலாய் முதற்பதிப்பைக் கொணர்ந்தார் மறைந்த எழுத்தாள நண்பர் கே.எசு.இலட்சுமணன். எதிர்பார்த்ததை விட வேகமாக நூல் விற்றுத் தீர்ந்தது.

முகம் தெரியாத தமிழர்கள் சிலர் நூலை வாங்கிப் படித்து எனக்கு எழுதினர். அன்பளிப்பாகவும் நூற்படிகள்

அனுப்பப் பெற்றன. நுணுகிப் படித்துக் காமம் செப்பாது கண்டது மொழிந்தனர் பலர்.

திருவனந்தபுரத்தில் நடந்த இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கின் ஒருநாள் இடைவேளைப் பொழுதில் பேரா. தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரிடம் 'விடுதலை'யைக் கொடுத்தேன். ஒரு நன்மாணாக்கனைப் போலச் சற்றொப்ப அரைமணிநேரம் படித்தவாறே பக்கங்களைப் புரட்டினார். 'படைவேண்டும்' என்னும் பாடலைப் பார்த்தவுடன் 'இது தமிழா? தமிழில் இவ்வாறெல்லாம் எழுதலாமா?' என்று கேட்டார். தமிழ்ப்பகைவரைக் கடுமையாகச் சாடும் அந்தப்பாடல் பலராலும் வரவேற்கப்பட்டதாகும். தமிழ்வழிக்கல்வி தொடர்பான ஒரு கருத்தரங்கில் 'பாவேந்தர் விருது' பெற்ற புலவர் வெற்றியழகன் அப்பாடலை இசையோடு பாடி இறுதியில் என்னால் எழுதப்பட்டது என்பதையும் குறிப்பிட்டார். ஆரவாரத்தோடு அவையினர் பாடலை வரவேற்றனர். மதிப்பிற்குரிய மறைந்த வேலா.அரச மாணிக்கனார் அவர்கள் உடனே என்னைப் பாராட்டிச் சிறப்புச் செய்தார்.

ஒருநாள் மாநிலக் கல்லூரியில் மருத்துவர் ஒருவர் என்னைக் காண வந்தார். வந்தவர், தான் பட்டுக்கோட்டையில் பணியாற்றியபோது 'விடுதலை' கவிதைத் தொகுப்பை வாங்கிப் படித்ததாகவும், அதிலுள்ள பல பாடல்கள் தனக்குப் பிடிக்கும் என்றும், தான் நடத்திவரும் 'வாழ்வுமையம்' என்னும் சமூகப்பணி இயக்கக் கூட்டத்தில் அக்கவிதைகளிலிருந்து ஒன்றை எடுத்துச் சொல்லி உங்கள் பெயரையும் குறிப்பிட்டபோது கூட்டத்திலிருந்த ஒருவர் 'அவர் இங்குச் சென்னையில்தான் இருக்கிறார்' என்று விவரமாகச் சொன்னதாகவும் அப்படித்தான் உங்களைப் பார்க்க வந்தேன்' என்றும் சொன்னார். அப்படி வந்தவர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னணியிற் செயலாற்றியவரும் மருத்துவத் தமிழ் வளர்ச்சிக்குத் தொடர்ந்து பாடுபட்டு வருபவருமாகிய மரு. தோமினிக் சுவாமிநாதன் ஆவார். எங்கள் தொடர்பு பின்னர் இணைந்து செயற்படும் தோழமையானது.

முகமறியாத, தமிழுணர்வுமிக்க பொறியாளர் ஒருவர் விடுதலையைப் படித்து மதிப்பார்ந்த - குணம் நாடிக் குற்றமும் நாடும் ஆய்வுரை ஒன்றை மடலாக வரைந்தார். அம்மடல் முழுமையாக இம்முகவுரையின் முற்பகுதியில் அளிக்கப் பெற்றுள்ளது. எனை நன்கறிந்த நண்பர்கள் பலர் எழுதிய மடல்களில் ஒரு மடலின் சில பகுதிகளும் இன்னொரு மடலின் பெரும்பகுதியும் இணைக்கப் பெற்றுள்ளன.

இதழ்கள் பலவற்றில் வந்த மதிப்புரைகளில் சில இறுதியில் இடம்பெறுகின்றன. அப்போது 'வாசகர் வட்டம்' நடத்திய புத்தகப்பணி ஏடாகிய 'நூலகம்' தனித்துக் குறிப்பிடத்தக்கது. அம்மாத ஏட்டில் பெரியவர் மு.சண்முகம்பிள்ளையவர்கள் 'புத்தக விமரிசனம்' பகுதியில் விடுதலையை மதிப்பிட்டிருந்தார். 'இந்தியன் எக்சுபிரசு', 'விடுதலை' நாளிதழ் மதிப்புரைகள், தமிழ்க் குடிமகனின் 'கைகாட்டி' இதழில் பறம்பை அறிவன் எழுதிய நூல்நிறை. ஓவியப்பாவலர் வலவனின் 'வண்ணச் சிறகு' இதழில் எழுதப்பெற்ற ஆய்வுக்கூட மதிப்பீடு ஆகியவற்றின் சில பகுதிகள் மட்டும் இங்கு இணைக்கப் பெற்றுள்ளன. காய்தல் உவத்தல் இன்றி அவர்கள் கண்டன காட்டப்பெற்றுள்ளன.

**மடல்களில்...**

1. **இ.அப்பாஸ் மந்திரி**
உதவிப் பொறியாளர், பொதுப்பணித்துறை,
வெள்ளப் பாதுகாப்பு உட்கோட்டம்
பட்டுக்கோட்டை

'விடுதலை' பாடல் தொகுப்பின் ஆசிரியர் உயர்திரு இரா.இளவரசு அவர்கள் திருவிற்கு. அருட்சால்பு நிலவுக. இக்கடிதத்தை, நான் எழுதுவதன் நோக்கம், தங்கள் ஏட்டைப் படித்ததால் ஏற்பட்ட விம்மித உணர்வை, அது தணியுமுன்னரேயே தங்களுக்குத் தெரிவித்து இந்த எளியேனின் பாராட்டைத் தங்களிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்பதே! எனவே, முதன்முதலாக எழுதும் இக்கடிதத்தில் என்னைப் பற்றி, குறைந்த பக்கம்,

அறிமுகமாகவேனும் சில சொல்லாமல் - பிறகு, சொல்வேன் - நேராக 'விடுதலை' வானுக்குள் சிறகடித்து உலாச்செய்யப் போகிறேன்!

பாரதிதாசனுக்குப் பிறகு அவரைப் போன்ற ஆற்றல் படைத்த கவிஞர் இன்னும் உருவாகவில்லையோ என்று கவலையுடன் ஐயுற்றுக் கிடந்தேன். உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. தாங்கள் அந்த இடத்தை நிறைவு செய்துவிட்டீர்கள். எனக்கு மனமெல்லாம் பூரிப்பு; நிறைவு ததும்புகிறது. தனித்தமிழ்ப் பாங்கு; சொல்வீச்சிலே வேகம்; தெளிவான மணிச்சொற்கள்; திண்ணவண்ணமான கருத்து வெளியீடுகள்; புதிய புதிய உவமைகள்; புதிய சொற் சேர்க்கைகள். இனி என்ன வேண்டும் தமிழ்ப்பாச்சோலை தழைக்க?

இருபத்தியொரு பாடல்கள்தாம் விடுதலையில் உள்ளன என்றாலும் எல்லாமே மணிக்கல் வேலைப்பாடு கள்! வள்ளுவன் ஒரேயொரு நூலைத்தான் எழுதினான். ஆனால் அது அளவிலும் வளனிலும் பெரியது. அதுபோல் விடுதலையின் அடங்கல் வரிசை தொடர்தல் வேண்டும்.

தமிழ் என்பதைத் திரும்பத் திரும்பச் சொன்னால் அமிழ்தம் கிடைக்கும் என்ற கருத்தைத் தற்கால மேடை களில் பலரும் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். அது, தங்கள் கண்டுபிடிப்பு என்பதை விடுதலையில் உணர்ந் தேன்.

''மாது, காலைப்பெற்றிருக்கும் மது'' - ஐயோ!

''பெற்றோர் மெய்க்கு வண்டுவிழி மகவின் உதை இனிமை'' - உண்மை!

''உடலின் சுமையாய் உறுப்புகள் மீறின!'' - அருமை!

(வண்ணாத்தி) ''துணி வெளுக்கின்றாள்'' என்ற பாடலில், அதுபோன்ற காட்சியைக் கண்டு உள்ளுக்குள் கள்ளம் செய்யும் காதலை, சாதியின் காரணமாக, வெளியிடாமல் போகும் உள்ளத்தின் உணர்வுகளை வெளு வெளு என்று வெளுத்துக் காட்டிவிட்டீர்கள். நல்ல துணிச்சல்.

தம்பிக்கும் தங்கைக்கும் நல்ல அறிவுரைகள்

படைவேண்டும் என்ற பாடலை, நல்ல இசைஞரைக்கொண்டு பாடச்செய்து, (Gram-Phone record) வரிப்புத்துழனிப்பதிவு செய்யவேண்டும். தமிழகமெங்கும் அப்பதிவுத்தட்டுகள் வாயிலாக, அப்பாடல் ஒலிபெருக்கியில் முழங்குதல் வேண்டும். திண்ணமாக, உடனே இம்முயற்சியை மேற்கொள்ளுதல் கட்டாயத் தேவையாகும்.

வேலவன் மறைவுக்கு இரங்கல்; 'கூப்பிடுகிறேன்' அன்பு கூர்ந்து இப்பாடலை அடுத்த பதிப்பில் அகற்றி விடுங்கள். இரங்கல், 'இறவாப் பெருஞ்சாவு' என்ற பாடலைப் போல் இருத்தல் வேண்டும். இத்தொடர் மெய்யறிவுச் செழுமை வாய்ந்ததொன்றாகும்.

'புலரும் பொழுது' நல்ல காட்சிவிருந்து. 'அச்சோ! கிழக்கில் ஆரோ பெருந்தீ மூட்டினர்... காணாய்!'' என்ற வரிகள் குழந்தையின் கும்மாள முதிர்ச்சியைக் காட்டு கின்றன. பளிங்கு நெஞ்சில்தான் இத்தகைய துள்ளல் எழும்! என்றும் இளமையுடன் தாங்கள் விளங்க என் வாழ்த்துக்கள்!

'விடுதலை' - வியன்வெளியின் ஒருபகுதி. அது விரிந்துகொண்டே போக வேண்டும். 'கற்பனை' என்ற பொய்ச் சிறகடித்து அல்ல, உண்மைநுகர்வு என்ற இறக்கைகளைப் பெற்றே நாள்தோறும், நாழிகை தோறும், நனவுக்கு நுண்மையான நொடிப்பொழுதுதோறும் உயரே, உயரே, உயரே - மேலும், மேலும், மேலும், பறந்து, குமுகாயத்தை குழூஉப்பார்வலாகக் கண்டு பாக்கோலம் புனைக! ''இவ்வளவும் எழுதுகின்ற நீங்கள்...?'' - தங்களுக்கு எண்ணத் தோன்றும்! ஆம், நான் ஒரு எளிய தமிழ்மாணவன். இளமையிலிருந்தே தமிழ்ச் சொல்மீது தணியாத காதலை வளர்த்துக் கொண்டவன். அதனாலேயே, 'நானும் எழுதுவேன்' என்று வேட்கை கொண்டு சில பாடல்களை எழுதியதும் உண்டு; அவை தாளிகைகளில் புறம்போந்ததும் உண்டு. ஆயினும் நான் புகுந்துள்ள துறையில், வேறோர் அரங்கம் இப்பொழுது என்னை ஈர்த்துக் கொண்டிருப்பதால், அவ்வரங்கில் வட்டாடத்

துவங்கியுள்ளேன். அதுதான், தமிழில் பொறியியல் குறியீடுகள் சமைத்தல். இது உடனடியாக மொழித்தேவை - என் தாய்மொழிக்கு ஆற்றவேண்டிய பணிவிடை - என்று துணிந்து 'பொறியியல் குறியீடுகள்' என்ற ஏட்டினை எழுதி, அஃது வெளியிடப் பெற்றுள்ளது. அதன் தொடர் பிலேயே 'பொறியாண்மை நுட்பவிளக்கம்' என்றதொரு சிற்றேடும் வெளிவரலாயிற்று. இவ்விரண்டையும் இத்துடன் தங்கள் பார்வைக்கு அனுப்பியுள்ளேன். பெருமைப்பட்டுக் கொள்வதற்காக இவற்றை அனுப்பினே னில்லை. நம்மைப் போன்றார்கள் இடையே ஒரு தொடர்பு வேண்டும் என்று அவாவுகிறேன். தனித்தனியாக நம்மவர்கள் ஆங்காங்குச் செயல்புரிதல், பெரும்பயன் விளைக்காமல் இருக்கிறது. எனவே, நாமெல்லோரும் ஒன்றுபடுதல் வேண்டும்.

மேலே கண்ட கருத்தின் தொடர்பில் இன்னோர் அரும்பலை தங்கள்பால் முன்வைக்கிறேன். வரலாறு, அறிவியல், பொருளியல் இன்னோரன்ன துறைகளில் தமிழில் நூல்கள் எழுத நம்மவர்களில் பெரும்பாலோர், தங்களுக்குத் திறனிருந்தாலும் சோம்பல் காரணமாக எழுதுவதில்லை. ஆனால் பார்ப்பனர்கள் எதிலும் வாய்வைப்பார்கள், குறைந்த திறன் பெற்றிருந்தாராயினும். இயல்பாகவே, அவர்களின் 'வகுசி'க் கேற்ப அந்த நூல்களில் தமிழ்க்கொலையும், கருத்துக்கொலையும் அமையவே செய்யும். அவர்களிடமிருந்து அவற்றைத் தானே எதிர்பார்க்க முடியும்? நம்மவர்கள் வாளாவிருந்து விட்டு, பிறகு, ''பார்ப்பனர்கள் இப்படி எழுதுகிறார்களே'' என்று வருந்துவதால் என்ன ஆதாயம்? நம்மவர்கள்தாமே பெரும்பான்மையினர். பின் எழுதிக்குவிக்க வேண்டாமா? குவித்திருந்தால், பார்ப்பனர் கைகள் தாழ்ந்திருக்காவா? எழுதினாலும், வெளியிட இயலாத இடர்ப்பாடுகள் உண்டு என்பதை மறுக்கவில்லை. அதற்குத்தகுந்த வகைமால் காணுதல் வேண்டும். காண்போம். இதற்காகவே, நம்மவர் களிடையே முதற்கண் தொடர்பு வேண்டும் என ஆழ்ந்து எண்ணுகிறேன்.

குருவிக்கரம்பை என்றதோர் ஊரில் இலக்கியக் கழகக் கூட்டம் ஒன்றில் அடியேன் தெரிவித்தேன்.

இந்தியாவின் பொதுமொழியாகத் தமிழ்தான் வரவேண்டும் என்று. தலைமைவகித்தவர் பேராயக் கட்சியைச் சேர்ந்தவர்; தமிழர்; தமிழ்ப்பற்றுடையவர். என் உரைகேட்டு வியந்தார். ஆம், இந்தியாவின் பொது மொழியாகும் அளவுக்குத் தமிழை நாம் கடைப்பிடிக்க வேண்டும். அதற்கு முதற்படியாக, தமிழகத்தில் உள்ள தமிழ் ஆர்வலர்களை, கட்சி வேறுபாடின்றி, இன்னும் சொல்லப்போனால் அரசியல் கலவாமல் ஒருங்கு படுத்தியாக வேண்டும்.

இவை எண்ணங்கள்... தங்கள் 'விடுதலை'வானில் உலாவியதால் விம்மிய வண்ணங்கள். இவற்றின்மீது தங்களுக்குக் கருத்து வேறுபாடு இருக்கலாம். இயற்கை. அளவளாவுவோம்.

முடங்கலின் முகப்பிலே என் முகவரியுள்ளது. தங்கள் அலுவலுக்கிடையூறில்லாத வாய்ப்பு நேரும் பொழுது விடை வரையுமாறு வேண்டுகிறேன்.

அனைவரின் நலங்களுக்காகவும் திருவருளை இறைஞ்சுகிறேன்.

தங்களின் அன்பார்ந்த,
**இ.அப்பாஸ் மந்திரி**

**2. எழுத்தாளர் வ.அழகுமுத்து சென்னை**

தங்களிடம் சொற்களைக் கோக்கும் திறன் அதிகம் காணப்படுகிறது. வார்த்தைகளைக் கொண்டு மாளிகை எழுப்பும் ஆற்றல் கவிகளுக்குக் கிடைத்தற்கரிய கருவூலமாகும். கவிகளுக்குக் கற்பனையும் ஈடுபாடும் முதன்மைத் தேவை என்பது பொதுக்கருத்து. அவை இரண்டும் தங்களிடம் இயற்கையாகவே அமைந்திருப்ப தாக நான் எண்ணுகிறேன்...

'என்னடா நெஞ்சமிது' என்னுள்ளத்தையே எனக்கு அறிமுகப்படுத்தியது. 'எச்சில் இலை நாய்போல்' என்னை அலைப்பதை அது எடுத்துக்காட்டக் கண்டேன். தங்களின் கடல் நண்பனோடு நானும் கலந்துரையாடிக் களித்தேன்...

தங்களிடம் கற்பனை இருக்கிறது. புதிய உவமைகள் இருக்கின்றன. சொல் வளமை இருக்கிறது. சொற்களை அடுக்கும் திறன் இருக்கிறது. நல்லபுலமை இருக்கிறது. இவைகளை விடக் கவித்துவம் இருக்கிறது...

இவை இருந்தும் - இவை எல்லாமிருந்தும் - தங்களிடம் ஒரு பெருங்குறை இருப்பதை என்னால் அறிய முடிகிறது.

எல்லாத் திறமையும் வாய்ந்த தாங்கள் ஏன் மற்றவர்களைச் சார்ந்து நிற்க விழைய வேண்டும்? தங்களின் சொந்த ஆற்றலின்மேல் ஏன் மாற்றுமுலாம் பூச ஆசைப்படுகிறீர்கள்? அதாவது, தாங்கள் ஏன் பெரும் பகுதியும் பாரதிதாசனைச் சார்ந்து நிற்க விரும்புகிறீர்கள் என்றுதான்கேட்க நான் விழைகிறேன்.

**3. ஆய்வாளர் சி.சத்தியமூர்த்தி, திருவனந்தபுரம்.**

''விடுதலை'' தங்கள் வாழ்வோடு பிணைந்த சூழ்நிலைகளிலிருந்து எழுந்தமையால் நெஞ்சந் தொடும் வண்ணம் உள்ளது. ''இவற்றினும் எழில் கூடிய மகவுகளை நாளை நான் தரலாம்'' என்று நீங்கள் எழுதியிருப்பது எங்களுக்கு மகிழ்ச்சியளித்துள்ளது...

உள்ளம், தாழ்ந்தது உயர்ந்தது இரண்டும் சேர்ந்த ஓர் அமைப்புத்தானோ? புரியாத புதிர் - உள்ளம் என்றும் (பக். 17), உடல் மாய்ந்து உயிர்போய்விடினும் ''உணர்வுக் கேதடா உறக்கமும் அழிவும்'' (24) என்றும் நீங்கள் பாடியிருப்பது சித்தர் பாடல்களில் ஆழ்ந்து கிடக்கும் தமிழர் தத்துவத்தை எனக்கு நினைவூட்டியது. ''சிவனுலகில் பதவி'' (68) ஓங்காரக் (பிரணவர்) கூச்சல் (19) ''புத்தனைப் போல்'' (61) ''முடம்படா உணர்வுக் கோயிலில் இறை நான்'' (24) என்பவையும் தத்துவத்தை அடியொற்றிய சிந்தனைகளே! மெய்யுணர்வுத் துறையில் தமிழனைப் போல் தலைநின்றார் யார்? சித்தர் பாடல்களின் தத்துவப் புரட்சிகள் இன்னும் தங்கள் பாடல்களில் இடம்பெற வேண்டும் என்பது என் வேண்டுகோள்.

இயல்பு நவிற்சி - இடையிடைவரினும் - ஏராளமாக வரினும் - பாடற்சுவை மேலோங்கும்.

*''கோழி அடைத்த கூண்டைத் திறந்தனர்,*
*வாளி குடத்தொடு தண்ணீர் வார...*
*மென்றுபற் குச்சியை விரலிடை வைத்தே*
*பச்சை வயல்வெளி படர்ந்தனர் ஆடவர்'' (10)*

இவை அவ்வகையைச் சார்ந்தவை.

**இயற்கை எழில்**, ''அச்சோ...'' (10) ''புல்லின் நுனியில்... (11) ''ஒளி முத்தை... உண்மை'' (19) என்ற பாடல்களில் இன்பம் சொட்டுகிறது. ''ஒளி முத்தை...'' (19) என்ற பாடல் சுவையான வெளியீட்டு உத்திக்கு ஒரு சான்று.

சிவபிரானைச் செந்தமிழால் ஏத்தும்போது திருவாசகத்தில் (அச்சோப்பதிகம்) கேட்ட ''அச்சோ'' (10) என்னும் அழகுதமிழைக் காலங்கடந்து தங்கள் கவிதையில் கண்டபோது நான் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை!

**அழகிய அடிகள்** பல பாடலில் வருகின்றன. அவை நினைவில் நிற்கும் சுவை தருபவை.

*''கண்படு இடமெலாம் கவின் கவின் கவினே'' (12)*

*''ஒய்வெடுத்துக் கொள்வாய் நீ உடல் நலிந்து போகும்!*
*பாடுகிறேன் தமிழ்ப்பாட்டு, நல்லுறக்கம் வாய்க்கும்''*
*(20)*

*''தக்காளிப்பழக் கன்னம்...''*
*மடிபோட்டுத் தலை படுப்பேன்...'' (28)*

*''மைநிரப்பித் தூவலினைக் கொடடி''*
*தாளையெடு! கொடுகையில்! தள்ளிப்போ நீ'' (33)*

*''ஆற்றினில் மீன்போல் நீச்சலடி!*
*அந்தியில் செவ்வான் அழகினைப்பார்'' (39)*

*''பயிற்றங்காய்ச் சிறுவிரலைக் கடித்த காட்சி'' (51)*

*''தண்ணீரில் குளிக்கின்றேன், மேனி ஏனோ*
*தணலாக எரிகிறது'' (52)*

*''எயிற்றகத்துத் துரும்பெடுக்கும் முயற்சிகூட*
*இயற்றாமல்'' (57)*

*''ஒவ்வொரு பாடலும் வரிப்புலி உறுமல்'' (59)*

அடுத்துக் கருத்துவளம் - பாடல் ஓசையுடன் கைகோத்துச் செல்லக் காண்கிறேன். ஏழ்மை வளமை இரண்டின் ஏற்றத்தாழ்வையும் சாவு சமப்படுத்திவிடுகிறது (15) கொள்ளையிடுவோர், இழி பிறப்பினர் ஆகியோரைக் கொல்லும்படி கூற்றுவனைக் கேட்பது (15) ஒரு புதுமை; நல்ல உத்தி. ''அமைதியில்லாத இக்கடலை நாடி அமைதியைத் தேடி வருகிறார்களே'' (18) - இது நல்ல சிந்தனை. இவ்வாறு கருத்துவளம் கவிதைத் தொகுதிக்கு எழுச்சி தருகிறது.

உங்கள் கவிதை முகப்புரைகளும் கவித்தன்மை யுடன் இன்பஞ் செய்கின்றன.

சங்க இலக்கியச் சுவடுகள் (பாரியிசை - 20...), புராணக் குறிப்பு (எருமைக் கடா... கயிறு... 24), இதிகாச நினைவு (வீடணக்குழு - 37) ஆகியவை ஆங்காங்கு உப்புப்போல அளவாக அமைந்து சுவை தருகின்றன. இவை மரபு எண்ணங்கள்.

கோதை, பூவை என்பனவற்றிற்கும், அவற்றிற்கு மேலாகக் கள்வன் மகனுக்குத் தரும் விளக்கம் (67) இலக்கிய இரசனையைத் தட்டி எழுப்புகிறது. ''விடுதலை'', உருவகம் நிறைவுடைய ஒரு நல்ல கவிதை.

அனைத்துப் பாடலிலும் சொற்சுவை, அழகுணர்ச்சி ஊடுருவிச் சென்றாலும், எனக்கு நிரம்பப் பிடித்த பாடற்பகுதிகள் பின்வருவன :

''யாரங்கே...'' (34)

''நூலெடுத்து...'' (47)

''தமிழ்நாட்டார்...'' (62)

''நிலவுக் கீற்றாம்... குலுங்கத்'' (44)

''அச்சோ... தேனில்'' (10)

''அச்சோ... தேனில்'' இனிக்கிறது இப்பாடல்.

குறைகளையும் சுட்டத்தான் வேண்டும். அப்போது தான் என் பார்வை நிறைவு பெறும். ''தஞ்சாவூர்க் கோபுரமே!'' (29) - இது சரியன்று எனத் தோன்றுகிறது. தஞ்சைப் பெருங்கோவிலில் வானளாவ நிமிர்ந்து

கருவறைமேல் நிற்பது ''விமானம்'' எனப்படும்; கோபுர மன்று. கோபுரம் என்பது கோவில் வெளிவாயிலின்மேல் இருப்பது. தமிழக அரசுச் சின்னத்திலுள்ளது கோபுரம். தஞ்சை போன்ற பிற்காலச் சோழர் கோவில்களில் விமானத்தை உயர்த்திக் கோபுரத்தைத் தாழ்த்திக் கட்டும் சிற்பக்கலை தலையெடுத்தது. எனவே, உயர்ந்த தலைவியைத் ''தஞ்சைக் கோவில் விமானமே!'' என அழைத்திருக்கலாம். இன்னொன்று முரண்பாடுபோல் தோன்றுகிறது. ''நன்மொழி ஆங்கிலம்'' (30) ''வடமொழி ஆங்கிலப் புகழ்ச்சியே பாடி'' (36) என வருவன அவை.

**இதழ்களில்...**

1. **நூலகம்**, புத்தகப் பணிஏடு ஜூலை 1972 ப. 44 - 45.

புத்தக விமரிசனம் - மு.சண்முகம் பிள்ளை

...ஒவ்வொரு பாடலும் அவ்வப் பாடலுள் அமைந்த ஓர் அழகிய உயிர்நிலைத் தொடரைத் தலைப்பாகக் கொண்டுள்ளது. பாடல் தோன்றிய ஆண்டினைத் தலைப்புடன் கவிஞர் சுட்டியுள்ளார்.

மேலும், ஒவ்வொரு பாடலும் தோன்றுவதற்கு நிலைக்களமாயிருந்த கால இட நிகழ்ச்சிச் சூழ்நிலைகளை நன்கு விளக்கும் தோற்றுவாயும் தரப்பட்டிருக்கிறது. கவிதைக் கருத்துக் கருக்கொண்டது எப்போது? பாடல் உருப்பெற்றது எந்நிலையில்? இவற்றையெல்லாம் தெளிவுற எடுத்து இயம்புகிறார் ஆசிரியர். இக்கவிஞரின் உள்ளம் தோய்ந்து உணர்ச்சி ஊற்றெடுத்த காலத்தில் கவிதை பிறந்த வகையைத் தகைபெற விளக்கியுள்ளார். எனவே, இத்தோற்றுவாயுரைகள் பாட்டினைச் சுவைப்ப தற்குப் பெருந்துணை புரிகின்றன.

ஆசிரியரின் தமிழுணர்வும் பாவேந்தர் பாரதிதாச னாரின் பாவமுதில் படிந்த உள்ளமும் பாடல்களில் மிளிரக் காணலாம். ஒருசில பாடல்கள் சங்கப் பாடல்களை நினைவூட்டுகின்றன. பொருளுக்கு ஏற்ற கவி நடையழகு. தமிழில் கருத்தோட்டமும் கற்பனை வளமும் உவமை

நலமும் தோய அமைந்த அழகிய கவிக் குழந்தைகளை இவர் ஈன்றுள்ளார். இவர் ஈன்ற கவிக் குழவிகள் இன்றைய உலக நிலையையே பெரிதும் சித்திரிக்கின்றன. என்றாலும், இவற்றுள் சில காலத்தை வென்று நிற்கும் தரத்தன.

சமூக நல ஈடுபாட்டுடன் அமைந்த கவிதைகள் பல இத்தொகுதியில் உள. காதற் காட்சிகளுக்கும் குறைவில்லை. உவமைகள் பழமையும் புதுமையும் கலந்து கற்பார் உள்ளத்தை ஈர்க்கும் இயல்பின. இருபதாம் நூற்றாண்டுக் கவிதை இலக்கிய வரலாற்றில் இடம்பெறும் தகுதி படைத்தது இக்கவிதைத் தொகுப்பு.

2. கைகாட்டி நூல்நிறை 16.7.73 தி.பி. 2004, கடகம் 1

திறனாய்வு : பறம்பை அறிவன்

பாட்டெழுதும் பலர், பாட்டெழுத வேண்டும் என்ற உணர்ச்சி எவ்வகைத் தூண்டுதலுமின்றித் தமது தூவலைத் தொட்டவுடன் 'சர சர' வென்று ஊறிப் பெருகி விடுவதாகக் கூறுகின்றனர். இப்படிப்பட்டவர் பாட்டிற்குக் களம் கிடையாது. 'மாயை' தம்மை இயக்குவதாகவும் - கருவிலே திருவுற்றவர் போலவும் கூறித் திரிவர்! ஆனால், பாவலர் இரா.இளவரசு தம் பாட்டெழுந்த சூழலைக் கூறித் தாம் ஒரு உலகியல் பாவலர் என்பதை நிறுவிக் கொள்கிறார். எந்த ஒரு வெளிப்பாடும் தம்முள்ளத்திலிருந்து சுரப்பதில்லை; புறப்பாதிப்பே தம்மகவெழுச்சியாக முகிழ்க்கின்றது என்பதைப் பாவலர் நன்கு தெளிந்தவராக இருத்தல் வேண்டும்! பாவலர் இளவரசு பாவேந்தரை 'ஒத்தநடை' யில் எழுதியுள்ளார்...

'இறவாப் பெருஞ்சாவு', 'வெறுமனே' நனிப்புலம்பலாக இல்லால், 'எள்ளித் தாழ்த்தும் இழிபிறப்பைக் கொள்ளையிடுக' என்று 'வியங்கோள் விடுக்கும்' பாட்டறம் பாராட்டுக்குரிய சீற்றமாகிச் செம்மாந்து செல்கிறது.

'விடுதலை' ஒரு பட்டியல்; பட்டியலில் பாச் சூடுள்ளது; சுவையுள்ளது. 'கொடு, தலை' எனினும் கொடுத்தே மணக்க விடுதலை மகளே விழைகிறேன்

உனையே!' என்ற பாடும் இளவரசு, 'ஆண் பெண்' காதல் - மணவுறவுகளை வைத்தே தம்முணர்ச்சிகளை எழுது கிறார்... இது விடுதலையை - இக்காலக் கருத்து மலர்ச்சி யில் - சிதைத்துக் கொச்சைப்படுத்தி விடும். ஆனாலும், 'கருப்பர், வெள்ளையர்' வேறுபாட்டால் மேலை நாகரிக நாடுகளும் தாழ்வுற்றுள்ளதைப் பாடி 'நடைமுறை'யையும் தொடுகின்றார்.

'ஏழையர்' என்ற தலைப்பில் 'ஏளனம்' கண்டேன் - ஏழையின் கந்தலுக்குக் காரணம், நேரடியாக வந்து பாமேடையில் ஆடுகிறது. ஆம்.

*'கந்தலைப் பாரடா! எத்தனை கிழியல்!*
*காசு படைத்தவன் தந்த பரிசிது;*
*மந்தை மாடல்ல, மக்கள் டாஅவர்!*

என்று, பாட்டு வில்தெறித்த அம்பென - வேட்டெஃகம் விட்டுப் பாய்ந்த எரிகுண்டென வருகிறது.

''ஏடா, தோழா! இந்நிலை தகர்த்தெறி''

என்று இன்றுள்ள முழுமையான கோளாறுகளை முழுமையாக எதிர்க்கும் வரிகள் 'தேசஎல்லை' கடந்து செல்ல வல்லது!...

'நாளை தான் பிறவேலை' - பெண்ணை நோக்கிப் பாடும் இடை தழுவிய பாடல். இதில், பாட்டாளி, தொழிலாளிகளின் எழுச்சிக்காகப் பாடுவதே தம் முதல் வேலையாக்கிக் கொள்கிறார். காலம் இவர் கொள்கையில் 'புதிய கோலம்' கூட்டுகிறது. இப்படி இவர் நடை போடும்போது, 'நடைபாதை'க்காரனும் கொஞ்சம் நிமிர்ந்து - கொஞ்சத் தொலைவு கூடவரலாம்...

'துணிவெளுக்கின்றாள்' பாட்டு பாரதிதாசனை நினைவிற் கொண்டுவரும் - பழைய சரக்கு - படித்து மகிழலாம் - காதலை, இடம் மாற்றி இடம் மாற்றிப் பாடுவதால் மட்டும் 'புதுமை' பிறக்கப் போவதில்லை. ஆனாலும், 'மாலை முரசு', 'தினத்தந்தி' படிக்கும் ஆர்வத்தோடு இதனையும் பாடலாம்! கனவு காணலாம்; காதலில் முயங்கி மயங்கலாம்!...

3. விடுதலை - நாளிதழ் 15.10.1972

தமிழ் மொழியின் இளங்கவியுலகில் குறிப்பிடத் தக்க இடம்பெறக்கூடிய தகுதிகள் பலவற்றைப் பெற்றிருப்ப வர் இளங்கவிஞர் இரா.இளவரசு... கவிதைகள் பெரும்பாலும் மரபையொட்டிய அமைப்பிலேயே இருந்தாலும் கருத்துக்கள் புதுமையாக உள்ளன. தமிழ்க் கவிஞர்களில் பெரும்பான்மையோரிடம் மூர்க்கத்தன மாகத் தலைதூக்கி நிற்கும் மொழிப்பற்று இவரிடமும் இல்லாமல் இல்லை. மொழி விஷயத்தில் இவர்கள் காட்டும் அக்கறையில் ஒரு பகுதியை இன உணர்வுத்தீக்கு விறகாகப் போடமாட்டார்களா என்ற நமது ஏக்கத்தை இவருக்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

துணி துவைக்கின்ற பழனியின் மகள் சலவைத் தொழிலாளர் குலப்பெண். இவளைச் சும்மா காதலிக்க மட்டும் செய்துஅப்படியே விட்டுவிடாமல் ''போலிக் குலவெறிப் புரட்டினைப் போக்கி'' திருமணமே செய்ய முன்வரும் இவரது சமூகப் புரட்சிக் கண்ணோட்டத்தை நாம் வெகுவாகப் பாராட்டுகிறோம்.

''பொருளில்லா வறியவள் நான்; சாதி வேறு - போட்டு விடும் தடை'' என்றேன்; நிலையில்லாத - பொருளெதற்கு? பண்புடைமைபோதும், இன்றே - பொசுக்கிடுவோம் சாதியினை'' என்று - கூறி... கனல்கக்கும் வரிகள். ''பிரிந்திடப் போகிறேன்'' என்ற கவிதையில் வரதட்சிணைக் கொடுமையை வகையாகச் சாடுகிறார்.

இவை போன்ற சமூக சீர்த்திருத்தக் கருத்துக் களுக்கே முக்கியத்துவம் தரும் வண்ணம் மேலும் பல கவிதை மலர்களை தமிழ் சமுதாயத்துக்கு உருவாக்கித் தருவார் என்று எதிர்பார்க்கிறோம்.

3. வண்ணச்சிறகு - இலக்கியத் திங்களிதழ் மே 1997

ஆய்வுக் கூடம் : புலவர்க் கினியன்

இந்நூல் இளவரசரின் பாத்திறத்தை முழக்கும் புகழ் முகை எனலாம்.

இந்நூலில் பாடல்கள் எச்சூழ்நிலையில் எவ்வாண்டில் எழுதப் பெற்றவை என்பதைக் குறித்திருப்பது நனி சிறப்புடைய குறிப்பாகும். இம்முறையை ஏனைய பாவலர்களும் பின்பற்றுவது நல்லதாகும்.

'விடுதலை' சீரிய பா, 'உயிர்கள் பூக்கையில் உடன் நீ பூத்தாய், உயிர்கள் வளர்கையில் உனைச்சிலர் பறித்தார்;பறித்தவர் தலைகளைப் பறித்தபின் அன்றோ, சிரித்தவ் வுயிர்களைச் சேர்கிறாய் மலரே!'' என்னுமிடமும், ''நான் ஓர் அடிமை! 'கொடு, தலை' எனினும் கொடுத்தே மணக்க, விடுதலை மகளே விழைகிறேன் உனையே!'' என்னுமிடமும் சிறந்தன.

'வழிவிடு பெண்ணே', 'பைந்தமிழ்ப்பணி', 'நாளை தான் பிற வேலை', 'படைவேண்டும்', 'தமிழே அமிழ்து', 'வரலாற்றில் முதல்வன்', 'தென் பொதிகைப் பூங்காற்றே' என்னும் தலைப்புடைய பாக்கள் தமிழுணர்ச்சித் தீச்சுடர்கள். 'துணிவெளுக்கின்றாள்', 'பிரிந்திடப் போகிறேன்', 'வள்ளல் பாவேந்தன்' மூன்றும் நல்ல இசைப்பாக்கள். 'போதுமடா காதல்', 'மணப்பீர் போலும்' இரண்டும் வாழ்க்கைப் படங்களாகும். 'ஏழையர்! உருக்கமான பாடல் 'தம்பீ', தங்கையே! 'இரண்டும் அரிய சிறுவர் பாக்களாகும்.

அருமையான தனித்தமிழ் நடை ஆசிரியருக்குக் கைவந்திருக்கிறது. எதையும் நேராகவும் சுருக்கமாகவும் நறுக்குத் தெறித்தாற் போலவும் பாடும் திறன் பாராட்டத் தக்கதாகும்.

**4. Indian Express** 19.5.1973

"Viduthalai" is a collection of modern poems by the author on various themes as and when they suggested themselves to him. At the beginning of each poem there is a short introduction indicating the circumstances which compelled the author to compose it and its theme. The first poem describes the beautiful rural scenery in the author's native village. It glitters with similes, metaphors and fancies. The description of dew drops on grass blades

in the morning as the 'Sweat of night' is very striking and original. The second poem describes how death is a 'leveller'. Thoughts kindled by the ebullient sea, the liberation of Bangladesh, the death of a friend, the lot of the poor, the state of Tamil, the misguided modern youth, the beauth of the Tamil Language etc., form the themes for other poems. All the poems are written in simple and lucid style.

*- R.Krishnamoorthy*

மடல்கள் வழியும் இதழ்கள் வழியுமான மற்றவர்களின் மதிப்பீடுகள் மேலே அளிக்கப் பெற்றுள்ளன. மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை என்பவன் எழுதவேண்டியதேயில்லை. எனக்கு நானே எழுதிக் கொள்கிறேன் என்பவன் தன் அகத்திற்குள்ளேயே அதனை அடக்கம் செய்துகொள்ளலாம். 'மற்றவர்களோடு சேர்ந்து வாழ்கிறோம், அவர்கள் வாழ்வும் நம் வாழ்வும் ஒன்றையொன்று சார்ந்து நிற்பன' என்னும் அடிப்படை அறிவு உள்ளவன் மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கணக்கில் கொள்வான். அதுவும் எழுதுகோல் ஏந்தும் படைப்பாளி நோய்நாடி அதன் காரணத்தை அறிந்து அதைப் போக்கும் வழியை நாடும் மருத்துவனை விடச் சமூகப் பொறுப்புணர்வு மிக்கவனாக இருத்தல் இன்றியமையாதது. உள்ளங்களோடு உறவாடும் எழுத்தாளன் 'நான் உங்களுக்காகத் தான் எழுதுகிறேன், உங்களைப் பற்றித்தான் எழுதுகிறேன்; நீங்கள் மறந்திருக்கும் உங்கள் மாண்புகளை, இயல்பாகிப்போன உங்கள் அவலங்களை, சமுதாயம் பூசிய அழுக்குகளை உலகுக்கு உணர்த்தும் பரிவோடு எழுதுகிறேன்' என்று மக்களிடம் எட்டி நிற்காமல் ஒட்டி உரையாடவேண்டும்.

பாட்டுத்திறத்தாலே வையத்தைப் பாலிப்பதற்கு எழுதுகோல் ஏந்தியவர் பாரதி. இருக்கும் நிலை மாற்றப் புரட்சிமனப்பான்மையை ஏற்படுத்துவதைத் தன் எழுத்தின் குறிக்கோளாகக்கொண்டவர் புரட்சிக்கவிஞர். அவர்கள்

வழியில் கால வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு நடையிடுபவன் நான். என் பாடல்களின் முழுத்தொகுப்பு உங்கள் கைகளில். படியுங்கள். முன்னர்ப் பலர் எழுதியதைப் போல நீங்களும் எழுதலாம். உங்கள் கருத்து உரிய மதிப்புப் பெறும்.

என் கெழுதகை நண்பர் மொழிக்காவலர் கோ.இளவழகன் தனது தமிழ்மண் பதிப்பக வாயிலாக இத்தொகுப்பைக் கொணர்கிறார். அவர்க்கும் அவர்க்குத் துணை நிற்கும் நண்பர் மதிவாணன், தம்பி அரங்கராசு முதலிய அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

நிறைந்த அன்புடன்
இரா.இளவரசு

## தாய்மொழி

ஆம்! தாயின் மொழிஇது.
உங்கள் கைகளில் உள்ள
'விடுதலை' வீட்டில் சிறைப்பட்டிருக்கும்
பாடல் மகவுகளின் தாய்தான் பேசுகிறேன்.

உலகத்தை மணந்துகொண்டவள் நான்.
உலகக்கணவன் என் உள்ளக் கருப்பையில்
ஊன்றிய வித்துக்களில் உருவான மகவுகள் இவை.

சற்றும் வலியின்றிப் பெற்றதாய்க் கதையுமுண்டோ?
இவை ஓரளவேனும் என்னை உலுக்கியே புறம்போந்தன.

பிள்ளைகளில் பெற்றோரைக் காண்பது உலகியற்கை.
இப்பாடல் மகவுகளிலும்
தாயாகிய என்னையும் தந்தையாகிய உலகத்தையும்
காணலாம்.

'காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு'
என்மகவுகள் எனக்கு இனியன. எழிலுடையன.
உங்கட்கு...?
மனக்கண்ணின் பார்வையில் மாறுபாடுகள் இயற்கை.

என் மகவுகள் எனக்குக் காட்டாத சில அழகுகளை
உங்கட்குக் காட்டலாம்.

என் மகவுகளில் எனக்குத் தெரியாமல் ஏதோ ஓர் உறுப்பில் ஒட்டிக்கொண்டிருக்கும் தூசி துரும்புகள் உங்கட்குத் தெரியலாம்.

இவற்றினும் எழில்கூடிய மகவுகளை நாளை நான் தரலாம்.

இப்படிச்சொல்வதனாலேயே இவை எழில் குறைந்தவை என்று எண்ணி விடாதீர்கள்.

உள்ளது சிறத்தல் வளர்ச்சியின் இலக்கணம்.

இவ்விடுதலை வீட்டின் மகவுகள் பலவும் பாவலர் பெருஞ் சித்திரனாரின் 'தென்மொழி'க் கைகளால் ஏந்தப் பெற்றவை.

வீட்டைக் காணும்போது ஏதோ ஒருவகையில் இந்த வீட்டோடு தங்கட்குத் தொடர்புண்டு என்று எண்ணுதற்குரியவர்கள் தங்கட்குத் தொடர்புடைய ஒரு வீடுகட்டி முடிக்கப்பட்டிருக்கிறதே என்று மகிழ்ச்சியடையுங்கள்.

நன்றி சொல்லவில்லையே என்று வருத்தடையாதீர்கள்.

## 1
## புலரும் பொழுது (1965)

நகரம் ஒரு தொழிற்சாலை.

நகர மக்கள் அத்தொழிற்சாலையில் உருவாக்கப்பெறும் உணர்வற்ற கருவிகள்; உயிரற்ற பொறிகள்.

சிற்றூர் ஓர் எழிற்சோலை.

சிற்றூர் மக்கள் அச்சோலையில் ஆடி அழைத்து நிற்கும் நிழல்தரு மரங்கள்; மணந்தரு மலர்கள்.

சிற்றூர்ச் சோலையில் பிறந்து தவழ்ந்த குழந்தை நான். கல்வியின் பொருட்டு நகரத்திலேயே காலங்கழித்தாக வேண்டிய நிலை. 'எப்போது விடுமுறை வரும், இறக்கை விரித்து இன்பமாகப் பறக்கலாம்' என ஏங்கித் தவிப்பேன், தேர்வு முடியும். தாயை நோக்கித் தாவும் மகவாய் ஊருக்கு ஓடுவேன். ஊரில் திளைத்த பல பொழுதுகளில் ஒரு காலைப் பொழுதில் என் உள்ளம் ஈன்ற பாடற் குழவியே இப்புலரும் பொழுது.

காலைக் கோலங்கள், ஆகா, என்னென்பேன்!

இரவு விடைபெறப் போகிறது என்னும் விடிவெள்ளியைப் பார்ப்பேன்.

பகல் இடம்பெற வருகிறது என்னும் பறவையிசை கேட்பேன்.

என் வீட்டிற்குச் சிறுதொலைவில் ஒரு கேணி!

கேணியின் வடக்கே ஏழெட்டு வீடுகள்!

வீடுகளின் உள்ளும் புறமும் ஓர் இயக்கம் !

வீடுகளைத் தாண்டினால்...

செந்நெற் கழனிகள்! செங்கரும்பு வயல்கள்!

கண்தொடும் இடமெலாம் கவின் விளைக்கும் குழவிக் கதிரவன்.

இத்தகு காலைக் கோலங்கள் கண்வழிப் புகுந்து நெஞ்சைக் கவ்விக்கொண்டன. இவற்றிற்கோர் இலக்கிய வடிவம் தரவேண்டுமென்ற வேட்கை எத்தனையோ முறை கிளர்ந்தது. எனினும் எழுத இயலவில்லை.

ஓர் இரவு இந்நினைவோடே உறங்கினேன். காலையில் எழுந்ததும் கண்முன் தெரிந்த கோலங்கள் என்னை விடவில்லை. சூலுற்ற நெஞ்சம் ஈன்ற பாடற்குழவி இதோ!...

**வெளுத்த கீழ்வான்**

*வெள்ளி முளைத்தது, வெள்ளரிப் பூவே!*
*அள்ளிச் சுண்ணம் அடர்கரும் பானையிற்*
*பூசிய தென்னப் புதையிருள் தேய*
*வீசிய தாரோ? வெளுத்தது கீழ்வான்!*

**துயிலும் புள்ளினம்**

*எச்சம் அணைத்தும் இன்துணை புணர்ந்தும்*
*குச்சியிற் கட்டிய கூட்டினும் பொந்தினும்*
*துயிலும் புள்ளினம் தூவிழி மலர்த்திப்*
*பயிலும் மாணவர் பள்ளியை நோக்கித்*
*தொகைதொகை யாகப் புத்தகம் தூக்கி*
*வகைவகை யான வண்ண உடையுடன்*
*செல்லும் காட்சியைப் போலச் சிறப்பொடு*
*மெல்லிய இறக்கை விண்ணில் விரித்து*
*'காகா' என்றும் 'கீகீ' என்றும்*
*'கூகூ' என்றும் கூவிப் பறந்தன.*

**சிறுவாய்ச் சேவல்**

*ஆய்வுக் கால்கள், அம்மென் சிறகு,*
*சாய்வுப் பார்வை, தன்பெடை ஈர்க்கும்*
*நீண்ட கழுத்து, நிமிர்ந்த கொண்டை,*
*பூண்டுச் சிறுதலை, பொடிச்செவி, எழிற்கண்*
*புன்மைக் கழிவைப் பூச்சி புழுவைத்*
*தின்னும் அலகுடைச் சிறுவாய்ச் சேவல்*
*'கொக்கரக் கோ'வெனக் கூவிக் கூவி*
*''மக்களே! விழிப்பீர்! மாதரே! எழுவீர்!*
*பெருக்குக முற்றம்! பிறநலம் சேர்க்க!*
*கருக்கலைத் தொலைத்துக் கதிரவ வேந்தன்*
*நிலாமுகம் காண நீள்விசும் பேறி*
*உலாவரு முன்னே உரியவை செய்க''*

என்றொரு பொருளை இசைக்க இசைக்க
ஒன்றும் அறியா துறங்கினர் சிறுவர்!

### ஒன்றிய காதலர்

தலைமுடி குலையத் தடங்கண் சிவப்ப
மலைப்பழக் கன்னம் இதழ்நிறம் மாற
உயிரும் மெய்யும் ஒன்றிடுங் காலை
உயிர்மெய் தமிழில் உருவா தல்போல்,
ஒட்டும் பசையின் ஒட்டிய தாளாய்
ஒட்டிய ஈருடல் ஓருடல் ஆகக்
காற்றிடைப் போகாக் கவவுப் புணர்ச்சி
ஊற்றில் திளைக்கும் ஒன்றிய காதலர்
''பாழாய்ப் போக பகலவன், அவனொடு
பாழாய்ப் போக பகைமைச் சேவல்''
என்றே சீற்றம் எழும்பத் துயரொடு
ஒன்றிய உடலம் ஓரிரண் டாக்கினர்!

### விழிப்பின் இயக்கம்

வாசல் தெளித்தனர், வகைபெறக் கூட்டினர்,
ஓசைக் கலங்கள் ஒளிபெறத் துலக்கினர்,
கோழி அடைத்த கூண்டைத் திறந்தனர்,
வாளி குடத்தொடு தண்ணீர் வார
நாணம் படர நடந்ததை எண்ணிக்
கேணியை நோக்கினர் கிளிமொழிப் பெண்டிர்!
பழுத்த கிழங்கள் திண்ணையைப் பார்த்தன!
விழித்த பிஞ்சுகள் 'விறால் விறால்' என்றன!
கைகால் அசைத்தனர் கன்றுச் சிறுவர்!
கைமெய் பூட்டக் களித்த புதியவன்
மனைவியைப் பார்க்க நாணிய மனத்தின்
குனிந்த தலையொடு கூனிக் குறுகி
நடந்ததைக் கடைக்கண் நாட்டி அறிந்த
மடந்தையின் பூவிதழ் மலரும் இளநகை!
கன்று காலிகள் தீனியைக் கண்டன!
மென்றுபற் குச்சியை விரலிடை வைத்தே
பச்சை வயல்வெளி படர்ந்தனர் ஆடவர்!

### கிழக்கில் பெருந் தீ

*அச்சோ! கிழக்கில் ஆரோ பெருந்தீ*
*மூட்டினர்! அதனால் விண்ணெலாம் செம்மை*
*காட்டுதல் காணாய்! கண்மணி சுழற்றிப்*
*பாரடா குளத்தை! பம்பரம் போலக்*
*காரிருள் கிடந்த கவின்தா மரைஇதழ்*
*விரித்தது தேர்வில் வென்ற மாணவன்*
*சிரித்ததைப் போலே! என்ன செய்தியோ!*
*அல்லிக் கென்ன தாமரை அலர்ந்தால்?*
*எல்லியைக் காணின் இனையும் கள்ளனாய்*
*குழவிகள் கைவிரல் குவிந்த தென்ன*
*அழகிதழ் கூம்பும், அந்தோ இரக்கம்!*
*மயக்கிப் பண்ணால் மலரைத் தும்பி*
*முயக்கம் கொள்ளும் மூழ்குந் தேனில்;*

### தென்றற் குறும்பன்

*கொழுந்தில் புரண்டு குளநீர் அலைத்துப்*
*பழங்களில் முத்தம் பதித்துக் கோட்டுக்*
*குயிலிசை எடுத்துக் கொய்யாக் கனியிதழ்*
*மயில்புரை மாதர் மலருடல் தோய்ந்தே*
*எங்கணும் சிரித்த எண்ணிலாப் பூக்களில்*
*தங்கிய நறுமணத் தாதினைப் பூசித்*
*தென்றற் குறும்பன் திருவுலாப் போந்தான்!*
*பொன்றிய திருளே! பூத்தது புவியே!*

### இரவின் வெயர்வை

*புல்லின் நுனியில் பூவின் இதழில்*
*நெல்லின் பயிரில் நெடிய கரும்புத்*
*தோகையில் எங்கும் துளிதுளி யாகப்*
*போகிய இரவின் பொடிவியர் தண்பனி*
*''நீண்ட தென்னை, நிலாத்தொடு மாடம்*
*காண்டகு குன்றக் கலையழ கெல்லாம்*
*என்னுள் அடங்கும்'' என்றே தருக்கி*
*மன்னவ நினைப்பின் மகிழ்வது பாராய்!*

### குருதிக் கதிரவன்

*ஏ! ஏ! கிழக்கில் இருவிழி நாட்டு!*
*ஓவென முழங்கும் ஓய்வறு முந்நீர்*
*எப்படி நெருப்புக் கோளம் ஈன்றது?*
*செப்படி வேலை! தெரிய வில்லையே!*
*பெருங்கனி யோஅது? பிறங்குவான் பொட்டோ?*
*அருந்தமிழ் காக்க ஆருயிர் தந்தோர்*
*சிந்திய குருதி திரண்டிவ் வாறு*
*விந்தைக் கதிராய் விளைந்தது கொல்லோ?*
*என்னே புதுமை! எழுந்த செங்கதிர்*
*மின்னல் தகடுகள் விளைக்கிறான் நீரில்*
*பூசுகின் றானே பொன்னை, உலகின்*
*காட்சி எல்லாம் கதிரவன் ஆட்சி!*

### பனித்துளிப் பாடம்

*மின்னிய பனித்துளி மன்னவன் எங்கே?*
*அன்னோ! தொலைந்தான், அவற்குநம் இரங்கல்*
*தன்னை மிகுத்துத் தருக்கித் திரிவார்*
*பின்னை பனித்துளிப் பாடம் பெறுவார்;*

### அழகின் துள்ளல்

*எங்கணும் புதுமை! எங்கணும் பொலிவு!*
*முங்கிய தொளியில் உலகம் முழுதுமே!*
*குளிரோ பறந்தது, இன்பமோ கொள்ளை!*
*தளிரில் இளமைத் தளதளப் பொலிவு!*
*பூக்களில் பூவையர் புன்னகைப் பாங்கு!*
*பாக்களில் பொருளாய்ப் பரவிய நறுமணம்!*
*காயில் மெருகு! கனியில் மினுக்கு!*
*தோயும் நீரில் அழகின் துள்ளல்!*
*கண்படு இடமெலாம் கவின்கவின் கவினே!*
*விண்படு கதிரின் விளையாட் டென்னே!*
*வீட்டில் மகிழ்ச்சி வெளியில் மலர்ச்சி*
*நாட்டிக் காலைப் பொழுதை நடாத்தும்*
*வேலையில் பிறந்து விண்ணில் இவரும்*
*காலைக் கதிரவன் காட்சி காட்சியே!*

## 2
## இறவாப் பெருஞ்சாவு! (1965)

என் இளமை நண்பன் ஒருவன், பெயர் வடிவேலு. 'அண்ணா அண்ணா' என்று என்னை அழைப்பான். இல்லத்தாருக்குத் தெரியாமல் பொரித்த ஆட்டுக்கறியையும் கோழிக்கறியையும் எனக்குத் தருவதில் அவனுக்கொரு மகிழ்ச்சி. உயர்நிலைப் பள்ளியிலேயே நின்றுவிட்டான். நான் கல்லூரியில் கால் வைத்தேன். வீட்டு வேலைகளில் இறங்கிவிட்ட அவனுக்கு விரைவில் திருமணமும் நடந்தது. பெண் குழந்தைக்குத் தந்தையானான். ஈராண்டுக்குப் பிறகு திடுமென ஒருநாள் இறந்து போனான். வயிற்று வலியால் துடித்தானாம். மருத்துவமனையில் சேர்த்தார்களாம். பிணத்தோடு வீட்டிற்குத் திரும்பினார்கள் என்ற செய்தி கிடைத்தது. இரண்டாம் மகவை வயிற்றில் தாங்கிய அவன் மனைவியின் துயரை என்னென்பது? இயற்கையின் கொடுமையை எண்ணியெண்ணி நெஞ்சந்துடித்தேன். துடிப்பு அடங்கிய நிலையில் சாவைக் கருவாக்கி ஒரு பாடல் உருவாக்க விழைந்தேன். விழைவு விளைவாகவில்லை. ஓராண்டு ஓடியிருக்கும். இடையில் ஏற்பட்ட ஓர் இளங்குழந்தையின் சாவும் என்னை உலுக்கியது. கனன்று கொண்டிருந்த நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்தது. இறவாப் பெருஞ்சாவு பிறந்தது.

**வைதல்**

*மண்ணில் நழுவி எழிற்கனியாய்*
*மலர்க்கை காலால் தாளமிட்டு*
*விண்மீன் விழியில் மொழியவிழ*
*விளைதேன் மலர்வாய் மழலைமொழிப்*
*பண்ணில் உலகைக் குளிர்விக்கும்*
*பச்சை மகவுகள் தம்மையும்,யாம்*
*கண்ணீர் சொரியக் கொடுஞ்சாவே!*
*கைக்கொள் கின்றாய். முறையிதுவோ?*

*கட்டிளங் காளையர் கன்னியரைக்*
*கடிமணம் புரிந்த நல்லிணையை*
*வெட்டுகின் றாய்நீ, அம்மட்டோ!*
*வெந்துயர் அடக்கி, விருப்படக்கிக்*
*கட்டிக் கரும்பைப் பெறுந்தாயைக்*
*கண்ணிலி யேநீ முறிக்கின்றாய்.*
*பட்ட மரமோ? வல்லிரும்போ?*
*பாறாங் கல்லோ நின்னுளமே?*

*ஊரின் நடுவே கனிகுலுங்கும்*
*உயர்ந்த மரமாய், உலகென்னும்*
*தேருக் காணி போல்நாளும்*
*திறந்த விழிகள் மூடாமல்*
*பாருக் குழைற்றும் தொண்டரையும்*
*பறிக்கின் றாய்நீ கொடுஞ்சாவே!*
*ஆரே பொறுப்பார் எம்விழிநீர்*
*அருவி யாக்கும் நின்செயலே?*

**வாழ்த்தல்**

*மீமிசை மாடம் மிதக்குநரும்*
*மிகச்சிறு மண்குடில் முடங்குநரும்*
*காமனை வென்றிகொள் கவினியரும்*
*காணக்கண் கூசும் பிணியினரும்*
*ஆமை அடிமை விழையுநரும்*
*அரிமா விடுதலை முழக்குநரும்*
*ஊமை, சொன்மழை பொழியுநரும்*
*ஓர்ந்திடில் உன்முன் ஒன்றாவார்.*

*வாழ்வெனும் ஒருவன் அணைப்பினிலே*
*மனவளம் செல்வம் சிலருக்கே;*
*தாழ்வெனும் ஆழ்கடல் அமுக்குண்டே*
*தளர்வார் தவிப்பார் பலர்இங்கே;*
*ஏழ்மை, செல்வ முடைமையெனும்*
*ஏற்றத் தாழ்வை நின்னுலகில்*
*ஆழ்ந்து தேடினும் கண்டிலனே*
*அதனால் நின்னை வாழ்த்துவனே!*

**வேண்டல்**

*உள்ளமும் உதடும் வேறானோர்,*
*ஊர்முதல் அடித்தே உலையிடுவோர்,*
*கொள்ளைப் பொருளைப் பெரும்பாலோர்*
*கும்பி கருகக் குவித்திருப்போர்,*
*கள்ளர் தம்மையும் சாவே! நீ,*
*கதறக் கதற உலகுய்ய*
*அள்ளிக் கொள்க! வாழ்வளிக்க*
*அன்பர் தூயர் ஏழையர்க்கே!*

*பள்ளன் பறையன் படையாட்சி*
*பார்ப்பான் எனுங்குலத் தாழ்வுயர்ச்சி*
*உள்ளத் தேற்று நடப்பவரை*
*உயர்ந்த தாய்மொழி, தாய்நாட்டை*
*எள்ளள வேனும் போற்றாமல்*
*எள்ளித் தாழ்த்தும் இழிபிறப்பைக்*
*கொள்ளை யிடுக! வரலாற்றைக்*
*கொடுக்கும் இறவாப் பெருஞ்சாவே!*

## 3
## என்னடா நெஞ்சமிது! (1968)

ஆய்வுத்துறையில் அமர்ந்திருந்தேன், மணி மாலை ஆறரை. தெற்குப் புறத்தில் உள்ள மாதா கோயில் மணி புலம்பியது. 'அவள்' நினைவில் உள்ளத்திற்குள்ளேயே ஓர் ஓலத்தவிப்பு. எதையும் செய்ய இயலவில்லை. பலகணி வழியே துறையின் பக்கத்தில் நிற்கும் புன்னை மரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதன் உச்சிக்கிளையில் ஒற்றைக்குயில் அமர்ந்து, விட்டுவிட்டு ஓலமிட்டது. எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றினால்... தாங்கமுடியவில்லை! 'என்ன நெஞ்சம் இது? கண் சிமிட்டும் விண்மீன்களோடு கதை பேசவும் வெண்ணிலவைப் பந்தாக்கி விளையாடவும் விரும்பும் இதே நெஞ்சம் பெண்ணிலவின் பின்னே போய்ப் பெருந்தவிப்பில் சுழல்கிறதே' என்றெண்ணி அலமந்தேன். இருக்கையை விட்டெழுந்தேன், புன்னை மரத்தினருகே பசும்புற்றரையில் அமர்ந்தேன். அமைதி வாய்த்தது. நெஞ்சத்தின் விந்தைக் கிளர்ச்சிகளை நீள நினைந்தேன். நினைவின் கனியே

*என்னடா நெஞ்சமிது! சின்னேரம் வான்முகட்டில்*
*எண்ணத் தொலையாத எத்தனை எத்தனையோ*
*பென்னம் பெரிய பிறரால் இயலாத*
*பின்வருவோர் நெஞ்சில் பெயர் பொறிக்கும் நற்செயல்கள்*
*இன்னே தொடங்கி இனிதே செயவேண்டும்*
*என்னும் நினைவில் இறக்கைகள் தாம்விரித்துச்*
*சின்ன மணிக்குயிலாய்த் தேன்வழியும் பாட்டிசைத்துத்*
*தெம்பாய்ப் பறந்து திமிராய்த் திரிகிறது!*

*பின்னைப் பெரும்பொழுதில் விண்ணைத் துறந்துவிட்டுப்*
*பேசினால் நாஅழுகும் பீழை பலநிறைந்த*
*மண்ணில் சிறுகோழி குப்பை மலக்குழியில்*
*வாய்க்கும் புழு, பூச்சி மற்ற இழிபொருட்காய்ச்*
*சின்னஞ் சிறிய சிவந்திருக்கும் தன்காலால்*
*சீய்த்துக் களிப்பதைப்போல் செம்மையிலாப் புன்னினைவில்*

என்னடா நெஞ்சமிது! இன்பத்தைக் காண்கிறது!
எச்சில் இலைநாய்போல் ஏனோ அலைகிறது!

மின்னும் தளிர்மெத்தை மீது துயின்றெழுந்து
மெல்ல மலர்க்கிண்ணத் தேனில் உடல்குளித்துச்
சின்ன குழந்தையைப்போல் தெற்கில் இருந்துவரும்
தென்றலென நெஞ்சம் சில நாள் தவழ்ந்திருக்கும்!
பின்னை ஒருநாள் பேரிரைச்ச லோடெழும்பிப்
பேணும் மரங்கள் பிறசெல்வம் தானழித்தே
என்ன இனிஉளது? என்னும் கொடும்புயலாய்
என்னடா நெஞ்சமிது! சீறி இரைகிறது!

சின்ன மணிக்குயிலா? சீய்கோழி தானிதுவா?
தென்றல் இளங்காற்றா? சீற்றக் கொடும்புயலா?
என்னஇது, நெஞ்சம் இரும்பா? நறும்பஞ்சா?
இல்லை,கருங் கல்லா? இதழ்விரிந்த மென்மலரா?
பொன்னியின் நீரா? பொசுக்கும் எரிமலையா?
புள்ளிமான் தானோ, கொலைசெய் புலித்போத்தோ?
என்னடா நெஞ்சமிது? இத்தனையும் சேர்ந்ததுவோ?
எண்ணியெண்ணிப் பார்க்கின்றேன், ஏதும் புரியவில்லை!

## 4

## கடல் நண்பா! (1967)

ஒரு வளர்பிறைக்கால மாலை.

திருவனந்தபுரம் கடற்கரையில் அமர்ந்திருந்தேன்.

அமைதியில்லாத இக்கடலை நாடி அமைதியைத் தேடி வருகிறார்களே என்னும் வியப்பு!

கடலின் பேரழுகையைக் கேட்டுத்தங்களின் அவலத்திற்கு ஆறுதல் தேடிக்கொள்கிறார்களோ என்னும் ஐயம்!

எதிரே இரண்டு இளஞ் சிறுவர்கள் மணலில் எழுந்தும் விழுந்தும் ஆடி மகிழ்ந்தனர்.

இடப்பக்கத்தே சிறிது எட்டிய தொலைவில் ஒரு காதல் இணை.

அங்கங்கே மனிதப் பறவைகள்!

கடலைப் பார்த்துக்கொண்டே இருந்தேன்.

அடங்கா ஆர்ப்பொலியைக் கேட்டுக் கொண்டேயிருந்தேன்.

உள்ளம் கடலோடு உறவாட உரையாடத் தொடங்கி விட்டது. உரையாடலே...

### நண்பனின் சீற்றமும் என் தூண்டுதலும்

*மலைப்பாம்பாய்ப் புரண்டுருண்டு மிக்கமது வுண்ட*
*மாந்தனைப்போல் விழுந்தெழுந்து படமெடுத்துச் சீறும்*
*கொலைநாகக் கடும்பாம்பாய்க் கரைநோக்கிச் சீற்றக்*
*கொதிப்போடு கணமேனும் ஓய்வொழிச்ச லின்றி*
*அலையெறியும் கடல்நண்பா! உனக்கேனிச் சீற்றம்?*
*ஆர்மீது போர்தொடுக்க அடங்காமல் என்றும்*
*ஒலிமுரசை ஆர்க்கின்றாய்? உண்மையினைச் சொல்க!*
*ஓ! ஓ! ஓ! நிலப்பகைவன் மீதெழுந்தாய் போலும்!*

*பொருகளத்தில் ஒன்றன்பின் ஒன்றுபடை வரிசை*
*புறப்பட்டுப் பகைமோதி வலியுடைதல் போல*
*நிரைநிரையாய் நிலப்பகையைத் தகர்த்திடுதல் வேண்டி*
*நீவிடுக்கும் திரைப்படைகள் சிதைந்திடுதல் கண்டா*
*நுரையெழுப்பி ஓங்காரக் கூச்சலிடு கின்றாய்?*
*நுவல்கின்றேன் ஒருண்மை நண்பனென்ற முறையில்;*
*ஒருநாளும் ஆர்ப்பரிப்போ அமைதியை வெல்லாது.*
*உணர்ந்திடுக! கரைமோதிப் பயனில்லை தோழா!*

*''ஒளிமுத்தைப் புரிவளையைச் செம்பவளந் தன்னை*
*ஓ! இந்த மாந்தனெனும் பெருந்திருடன், என்னைத்*
*துளியேனுங் கருதாமல் அள்ளிக்கொள் கின்றான்;*
*துள்ளியென்றன் மடியினிலே தவழ்ந்துண்டு திரியும்*
*கிளர்மீனாம் பிள்ளைகளைக் கொள்ளையிடு கின்றான்.*
*கீழ்மையிதை ஒழித்தபின்தான் எனக்கமைதி'' என்றோ*
*வளர்சீற்றம் கொண்டுள்ளாய்? வாழ்கஉன்றன் சீற்றம்!*
*மாந்தன்பெருங் கொடுங்கள்வன், உண்மைமிக உண்மை!*

*பாருண்டோ மழையின்றேல்? மழையுண்டோ வானில்*
*படர்கின்ற முகிலின்றேல்? கரியமுகிற் கூட்டம்*
*நீருண்ட துன்னிடமே, முகிலுன்றன் சேயே.*
*நீயின்றேல் உலகெங்கே? மாந்தனுயிர் எங்கே?*
*சீரெல்லாம் உன்னாலே எனத்தெரிந்தும் காற்கீழ்ச்*
*செருப்பைப்போல் உன்னுடலைக் கட்டுமரம், தோணி,*
*தேரென்னும் பெருங்கலங்கள் விட்டுமிதிக் கின்றான்!*
*சிறிதளவு மதிப்பேனும் தருகின்றா னிலையே!*

**நண்பனின் புலம்பலும் என் ஆறுதலும்**

*மணமுடித்துப் பல்லாண்டு கழிந்தபின்றை பெற்ற*
*மகனொருவன் மணப்பருவ மெய்திநின்ற வேளை*
*பிணமான நிலைகண்டு வாய்வயிற்றி லடித்துப்*
*பிறபிள்ளை இல்லாத்தாய் புரண்டழுதல் போலக்*
*கணமேனும் ஒழிவின்றி ஏன்புலம்பு கின்றாய்?*
*காண்! இந்தக் கரையினிலே களித்துவிளை யாடும்*
*மணமுல்லைச் சிறுவர்களை; காதலர்கள் தம்மை;*
*மனக்கவலை உதறியெறி! மகிழ்ந்துசிரிப் பாயே!*

ஏட்டினிலும் நாட்டினிலும் எத்தனையோ வள்ளல்
இருக்கின்றார்; எல்லோரும் இரவலர்கள் சென்று
கேட்டதன்பின் பொருள்தருவார்; அதுவுமள வோடு.
கேளாமல் விருப்பம்போல் எடுத்துக்கொள் கின்ற
பூட்டில்லாப் பொருட்பேழை உன்னுடைய தன்றோ?
போயிற்றே என்றெண்ணிப் புலம்பாதே, உன்னைப்
பாட்டுத்தேர் தனிலேற்றி உலகெங்கும் விடுவேன்;
பாரியிசை குன்றிவிட வாரியுனைப் புகழ்வர்!

காய்கின்ற செங்கதிரோன் கங்குலிலே துயில்வான்!
கன்னிநிலாப் பெண்மயிலும் ஒளிப்பகலில் துயில்வாள்!
ஓய்வின்றிச் சீறிமனம் உலைகின்ற நண்பா!
ஓய்வெடுத்துக் கொள்வாய்நீ! உடல்நலிந்து போகும்!
மேய்கின்ற துயரத்தை என்னிடத்தில் விடுக.
மிதந்துவருந் தென்றற்பெண் மென்மேனி தழுவிப்
பாய்கின்ற இன்பத்துள் படிந்துமகிழ்ந் திடுக,
பாடுகிறேன் தமிழ்ப்பாட்டு, நல்லுறக்கம் வாய்க்கும்!

## 5
## விடுதலை (1972)

விடுதலை ஓர் அணையாத்தீ!
ஒளியைப்பெற உறுதி பூண்டவன்
சூட்டின் கடுமையைத் தூசாகக் கருதுவான்.
சூடு ஏற ஏற ஒளியும் ஏறும்.
யாகியாகானை வாழ்த்துகிறேன்!
சூட்டின் கடுமையைக் காட்டியதற்காக;
தங்க வங்கத்தினர்க்குத் தலைதாழ்த்துகிறேன்.
ஒளியின் பெருமையை உணர்த்தியதற்காக;
வங்கத்தைக் களமாக்கி உலகை நோக்கினேன்
ஊறிய எண்ணங்கள் பாட்டுக்கரையெடுத்து
ஓடி வருகின்றன. நெஞ்சத்தைக் குளிக்க விடுங்கள்.

*விடுதலை மகளே! விடுதலை மகளே!*
*அடிமைக் கருப்பின் கழுத்தினை அறுத்தே*
*உரிமைச் சிவப்புக் குருதியை உறிஞ்சி*
*விரிமன வானில் எரிகிற நெருப்பே!*
*கயவர் வித்திய கருவே! எழுச்சி*
*வயவர் நெஞ்சக் கருப்பையில் வளர்கிறாய்!*
*தாயர் பற்பலர் தருமோர் மகவுநீ!*
*பாயலாம் உயிர்நூல் பாவிய விரிப்பில்*
*உறங்குவாய், உயிர்களின் உறக்கந் தொலைப்பாய்!*
*பிறங்கும் இமைகளைப்பிரிவினை செய்வாய்!*
*நேற்றை மாந்தன் இன்றுள் அடங்கினான்;*
*நேற்றும் இன்றும் உன்னுள் அடங்கின!*
*காலத் திருடனின் கைப்படா வைரமே!*
*ஞால முழுமையும் நடந்திடும் வெள்ளமே!*
*அரச நரிகளின் ஊளையை அழித்த*
*அரிமா மக்களின் உரிமை மனைவியே!*

மாடி கைவிரல், மண்குடில் தலைமயிர்,
மாடிக் கழிவுநீர் மண்குடில் நனைக்கும்.
மண்குடில் விழித்து மாடியைப் பார்க்கையில்
'விண்கதிர் நான்'என விழிகளில் எரிகிறாய்!
கருப்புத் தோல்களைக் காலடிச் செருப்பென
வெறுப்பால் உமிழ்வன வெள்ளைத் தோல்கள்!
கருப்பினுள் வெள்ளையால் கனலும் சிவப்புநீ!
கரைந்திடுங் காக்கைகள் குயில்களைக் கண்டே
'நிறைந்துள எமைப்போல் நீங்களும் கரைமின்!
கூவுதல் ஒழிமின்!' எனுமோர் கூற்றில்
பாவினுள் பொருளாய்ப் படிந்திருக் கின்றாய்!
இருப்புக் கூண்டில் சிறைப்படு கிளியைத்
திறந்து விடுங்கால் சிறகினை விரித்தே
பறந்து திரிவதில் பார்க்கிறேன் உன்னுரு!
உயிர்கள் பூக்கையில் உடன்நீ பூத்தாய்
உயிர்கள் வளர்கையில் உனைச்சிலர் பறித்தார்;
பறித்தவர் தலைகளைப் பறித்தபின் அன்றோ
சிரித்தவ் வுயிர்களைச் சேர்கிறாய் மலரே!
பன்மையின் சாவில் பிறக்கும் ஒருமைநீ!
பன்மையின் வாழ்வைப் படைக்கும் திறமைநீ!
பன்மையை மணந்தும் 'ஒருமை மகள்' நீ!
உண்மையைச் சொல்கிறேன். நான்ஓர் அடிமை!
'கொடு,தலை' எனினும் கொடுத்தே மணக்க
விடுதலை மகளே விழைகிறேன் உனையே!

## 6
## கூப்பிடுகின்றேன் (1969)

'வேலவன் இறந்து விட்டார்'
இப்படித் தொலைவரி வந்தது.
நாங்கள் முதலில் நம்பவில்லை.
எங்களோடு ஆய்வு செய்த நண்பர் - ஏறத்தாழ முப்பது
அகவையுடையவர் - ஓரளவு தேறிய உடலோடு ஒரு வாரத்தின்
முன்தான் ஊர்க்குச் சென்றார்.
அதற்குள் இறந்து விட்டாரா?
செய்தி பொய்யாக இருக்கவேண்டும் என விரும்பினோம்.
நாம் விரும்புவதாலேயே உண்மை பொய்யாகி விடுமா?
உள்ளார்ந்த நண்பரின் உடலைக்கூட பார்க்க முடியவில்லை.
போகுமுன்பே எரித்து விட்டார்கள்.

நண்பரின், வியப்பில் விழித்தற்குரிய கொழுத்த அறிவுக் கூர்மையை என்னென்பேன்! சுருங்கச் சொன்னால் திராவிட மொழியியல் ஓர் இளம்பேரறிஞனை இழந்துவிட்டது. உள்ளடக்கிய மணத்தை உலகம் உயிர்ப்பதற்கு முன்பே ஒரு மனோரஞ்சித மலர் கருகி விட்டது.

இயற்கையின் கொடுமையை என்னென்பது!

கொடிய இயற்கையைக் கடிய விரும்பினேன்.

விருப்பம் விளைவாகாமல் காலங்கடந்தது. இடையில் எதை நான் தாங்க இயலாது என்றெண்ணிக் கொண்டிருந்தேனோ அது - அண்ணாவின் விழியாத்துயில் - அகத்தைப் பிழிந்தது.

நிறைந்த துயரில் பிறந்த சினமே இயற்கையைக் கடியும் எழுச்சியைத் தந்தது.

இறப்புத் தொடர்பில் எழுந்த கற்பனையாம் காலனை முன்னிறுத்தினேன். பிறந்த பாடலே பின்வருவது.

*கூற்று வனைநான் கூப்பிடு கின்றேன்*
*ஆற்றல் இருந்தால் அருகினில் வாடா!*

எருமைக் கடாவினை எட்டி உதைக்கிறேன்!
ஏதோ கயிறு இருக்கிற தாமே!
உருவங் காட்டி என்முனே வாடா!
ஒளிந்து திரிபவன் ஒருபெருங் கோழை!

உனக்கு மட்டும் இறப்பிலை யாமே!
ஒவ்வோர் உயிரையும் கொய்வதுன் தொழிலோ?
பிணக்கு வியலில் எதையடா கண்டாய்?
பேதையே வாஉனைப் பிய்த்தெறி கின்றேன்!

தோன்றிய அனைத்துமுன் தூண்டிலில் படுமோ?
தொங்கிடும் வானைத் தூள்செய் தனையோ?
கான்றிடுஞ் சுடரொளிக் கதிரவன் முன்னே
காலைப் பனியடா உன்கை ஆற்றல்!

பிறந்தவர் அனைவரும் இறந்து போவாரோ?
பெரும்புகழ் அண்ணா மறைந்து போனாரோ?
உறைகிறார் நாவில் உளத்தினில் எல்லாம்;
உன்னால் என்னடா செய்திட ஒல்லும்?

உயிரிலார் எல்லாம் உலகில் இலாரோ?
உடலை இயக்கும் உயிரைப் பறிப்பாய்;
உயிரை இயக்கும் உணர்வையென் செய்வாய்?
உணர்வுக் கேதடா உறக்கமும் அழிவும்?

உடம்புக் கூட்டை உதறி எறிகுவேன்
உயிராங் காற்றை ஊதித் துரத்துவேன்
முடம்படா உணர்வுக் கோயிலில் இறைநான்!
மூடனே! உன்னால் என்செய முடியும்?

## 7

## ஏழையர் (1966)

முன்னிரவுப் பொழுது. திருவனந்தபுரத்தை ஒரு நகரமாகக் காட்டிக் கொண்டிருக்கும் நெடுஞ்சாலையில் நடந்து வருகின்றேன். நிறையச் சுமையேற்றிய ஒருகைவண்டி, நெஞ்செலும்பெல்லாம் தெரிய வியர்வை வழிய ஒருவன் இழுக்கிறான். பின்னிருந்து இருவர் தலையை முட்டுக்கொடுத்து மூச்சுவாங்கத் தள்ளிக் கொண்டிருக்கின்றனர். மேட்டை நோக்கி வண்டி அங்குலம் அங்குலமாக நகர்ந்து கொண்டிருக்கிறது. இக்காட்சி என்னை வாட்டி எடுத்துவிட்டது. நெஞ்சுக்குள்ளேயே அழுதேன். அறைக்கு வந்தும் உறக்கம் இல்லை. இதற்குமுன் எங்கெங்கோ கண்ட இப்படிப்பட்ட காட்சிகள் கண்முன் ஓடின. நாயினுங்கீழாய் என்னுடன் பிறந்தோர் நலிகின்றாரே என்று நைந்தேன்.

ஏன் இந்த இழிநிலை?

இத்துணை முரண்பாடு இருக்கலாமா?

இதற்கொரு விடைகாண வேண்டாமா?

என்றோ எழுந்துவிட்ட கேள்விகள் இவை. இன்றும் எழுகின்றன. இரண்டும் இரண்டும் நான்கு என்பதுபோல் இதற்கொரு விடைகாண இயலாதா?

வறுமையில் உழலும் ஏழையரிடம் தான் எத்துணை வளமான நெஞ்சம்! அவர்களில் ஒருவனாய்ப் பழகிய என்னால் அவர்கள் படும்பாட்டை நெஞ்சளவிலேயே தாங்கமுடியவில்லை. தாங்கமுடியாச் சுமையின் ஒரு பகுதியே இங்கே இறங்கியிருக்கிறது.

*ஏழையர் தாமிக நல்லவர் - பெரும்*
*பேழை வழிபொருள் பெற்றவர் தம்மினும் (ஏழை)*

*காய்ந்த தலையினர் கருகிய புல்லென;*
*காட்டெலி வளையுள் வண்டெனும் கண்ணினர்;*
*தேய்ந்த செருப்பெனப் பிறரால் தேய்ந்தவர் (ஏழை)*

'கொட்டாங் கச்சி'யாய்க் குழிந்த கதுப்பினர்;
கொட்டும் வெய்யிலிற் கரிந்த முகத்தினர்;
தட்டான் உருக்கும் தனிப்பொன் மனத்தினர் (ஏழை)

வற்றிய இலுப்பைக் காயவர் வாயிதழ்;
வரிவரி எலும்புக் கூடவர் மார்பகம்;
வற்றிய ஓடையாய் ஒட்டிய வயிறுடை (ஏழை)

காய்ப்புக் காய்த்துச் சொரசொரப் பானகை;
கண்ட துண்டோ கால்கள் மிதியடி?
மூப்பா? நோவா? முடங்கின ரிலரே! (ஏழை)

கந்தலைப் பாரடா! எத்தனை கிழியல்!
காசு படைத்தவன் தந்த பரிசிது;
மந்தை மாடல்ல, மக்கள டாஅவர். (ஏழை)

உழுவார், விதைப்பார், ஓம்புவார் அறுப்பார்
ஒருவன் பயனை உறிஞ்சிக் கொழுப்பான்,
அழுவார் கூழுக் குழல்வார் அந்தோ! (ஏழை)

கழுத்தை வளைத்தெனைக் காணென நிமிர்ந்த
கட்டிடம் கட்டுவார், கழிபொருட் கிடங்கில்
விழுந்து கிடப்பார், வீடின்றி மாடாய் (ஏழை)

கதிரவன் காய்வா? கடும்பனிக் குளிரா?
காடா? மேடா? கல்லா? முள்ளா?
எதையும் பாரா துலகை இயக்கும் (ஏழை)

மாடென வண்டி இழுக்கிறான் ஒருவன்;
மகிழுந் தேறிப் பறக்கிறான் ஒருவன்;
ஏடா, தோழா! இந்நிலை தகர்த்தெறி! (ஏழை)

## 8

## வழிவிடு பெண்ணே! (1964)

மொழி வல்லாண்மையை எதிர்க்கும் உணர்வு காலைக் கதிராக ஏறிக்கொண்டிருக்கிறது. தமிழ் நெஞ்சர்கள் அவ்வுணர்வை எழுத்தாலும் பேச்சாலும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் வளர்த்தும் வாழ்த்தியும் வந்தனர். சிறு கதைஞரும் புதினரும் இலக்கியக் களமாகக் கொள்ள மறந்த அவ்வெழுச்சியைப் பாவலர்கள் நெஞ்சம் துள்ளப் பாடினர். ஓரினத்தின் ஒருகாலக்கட்டப் பேருணர்வை எதிரொலிக்கும் பாடல்கள் கிளைத்தன. அவற்றுள் ஒன்றே இது.

கற்பனைக் காதலியை முன்னிறுத்தி அவளின் புற நாணல் கோணல்களையும் அகநெளிவு சுழிவுகளையும் எத்தனையோ முறை எண்ணி எண்ணி மகிழ்ந்திருக்கிறேன். அப்படி மகிழ்ந்த ஒருகாலைப் பொழுதில்தான் இப்பாடல் மலர்ந்தது. மொழிப்போரில், ஒதுங்கும் பெண்மையாய்க் கலையெழில் வாய்ந்த என் காதலி தோன்றினாள். மொழிப்போரை நடத்தும் ஆண்மையாய் நான் நின்றேன். அகக்காதலும் புறக்கடமையும் மோதிக் கொள்ளும் ஓவியக்காட்சி உருவானது. களம் நோக்கிய ஆண்மையைக் காட்ட விரும்பினேன். காலையில் அரும்பிய இப்பாடல் போதாகி மலர நண்பகலாயிற்று. காலைச் சிற்றுண்டியைப் பொருட்படுத்தாது பாடல் நிறைந்த பிறகு நண்பகல் உண்டேன். உளநிறைவால் உடற்சோர்வு பறந்து போயிற்று.

*கருங்குழலைக் கரும்பாம்புப் பிணையல் என்னக்*
*காற்குதியைத் தொடுமளவு பின்னல் போட்டு,*
*மருப்புநுதல் கவின்பொலிய மாலை நேரம்*
*மறிகடலில் விழுங்கதிர்போல் பொட்டு வைத்துப்*
*புருவவில்லில் மைதீட்டி இந்திப் போர்க்குப்*
*போகின்ற எனைத்தடுக்கப் பார்க்கின் றாயா?*
*செருமுனையில் பகைபொடியாய்ப் போன பின்தான்*
*திரும்பியுனைப் பார்ப்பேன்நான், போடி, போ, போ!*

வடுவிழியால் விடுகின்றாய் கணைகள்; என்னை
வாவாவென் றழைக்கின்றாய் இமையால்; நாணம்
படர்கின்ற தக்காளிப் பழக்கன் னத்தைப்
பார்த்தபின்னே உனைப்பிரியேன் எனும் நினைப்போ?
அடிபோடி! தொன்றுமுதிர் தமிழர் நாட்டில்
அடிபோட வருமிந்தி தொலைத்தால் தான்உன்
மடிபோட்டுத் தலைபடுப்பேன், மறந்தி டாதே!
மயக்கிடநீ முயன்றாயோ முடியா திங்கே!

எள்ளுப்பூச் சிறுமூக்கில் ஆவல் மேவ
ஏக்கமொடு மூச்சுவிடு கின்றாய்; தேனை
அள்ளும்பூ இதழிகளிலே மொட்டு முல்லை
அழகுப்பல் வரிசையுற 'கொன்னி' காட்டிக்
கொள்ளையிட்டு நெஞ்சத்தை வீட்டுக் குள்ளே
குந்திவிடச் செயும்நினைப்போ? இந்தி என்னும்
வெள்ளமடி வருகிறது, துயின்றால் செத்தோம்!
விரைவிலணை போடுதற்குப் போகவேண்டும்!

வெட்டுகின்றாய் கழுத்தை, உன் பெற்றோர் போட்ட
விலையுயர்ந்த முத்துவடம் 'ஐயோ' என்னும்!
'கட்டுகின்றாய் இலையேநீ தாலி, சங்குக்
கழுத்தைத்தான் பாராயோ' எனும்பொ ருள்தான்
சுட்டுகின்றாய், அறியாத மூட னாநான்?
சுடர்தமிழாம் செங்கரும்பை ஆள்வோன் அந்தோ
வெட்டுகின்றான், உணராயோ? மணம்மு டித்து
விளையாட நேரமிதா? விலகி நில் நில்!

கடைந்தெடுத்த பூங்கையை அசைக்கின் றாய்நீ
கண்ணாடி வளைசிரிக்கும், நெஞ்சை அள்ளும்;
'அடைந்திடுவோம் பேரின்பம்; தென்றற் காற்றும்
அத்தானே! புகாவண்ணம் கையாற் பூட்டி,
தடையேனோ?' எனுங்குறிப்பை அறிவேன், ஆனால்
தஞ்சாவூர்க் கோபுரமே! வடவன் வேட்டால்
உடைந்துவிடும் தமிழ்க்கோயில், அழிந்து போவோம்
உடன்போக வேண்டுமடி காப்ப தற்கே!

விம்முகின்ற மார்பெழிலைக் காண்பேன் என்றோ
விலகாத ஆடையினைச் சரிசெய் கின்றாய்?
தும்முகின்றாய், நன்னிமித்தம் இல்லை யென்று
தொடர்போரை விடுகின்ற மூட னோயான்?
நம்முயிராம் தமிழழிக்க அடிமை யாக்க
நடைபோடும் இந்தியினைத் தொலைத்தால் தான்உன்
கொம்மைமுலை நினைப்புவரும், கண்ணே என்று
கொஞ்சிமகிழ் காலம்வரும் உணர்க பெண்ணே!

குடமேந்தும் ஒடுக்கிடையில் ஒசிவைக் காட்டிக்
குறங்கெழிலைக் காணுகின்ற ஆவல் மூட்டி
நடமேந்தும் அடியில்மரு தோன்றி தீட்டி
நாடேந்தும் பேரறிஞர் நடந்து காட்டுந்
தடமேந்திக் களங்காணப் போகும் இந்தத்
தமிழேந்தும் உளத்தானை மயக்கா தேநீ,
படமேந்தும் நச்சரவ இந்தி வீழப்
படையேந்தப் போகின்றேன், பலிக்கா திங்கே!

மான்போலப் பார்க்கின்றாய், மயங்கு வேனா?
மயில்போல அசைகின்றாய், மாறு வேனா?
கான்குயில்போல் பேசுகிறாய், நானா வீழ்வேன்?
கட்டுமலர்ச் சிரிப்பென்னை என்ன செய்யும்?
தேன்தமிழைத் தென்னாட்டைக் காக்க இந்தித்
திணிப்பெதிர்த்துக் களம்காணும் நோக்கம் ஒன்றே
தான்மனத்தில் கொண்டுள்ளேன், அறிக பெண்ணே!
தயங்காமல் போகவழி விடுக கண்ணே!

## 9
## பைந்தமிழ்ப்பணி (1963)

விளையாட்டு அம்மை எனும் நோய் என்னுடன் விளையாடியது. விளையாட்டா அது? இரவு பகல் எந்நேரமும் முடிதொட்டு அடி முடிய ஒரே எரிவு! தந்தை, அருகில் அமர்ந்து ஆறுதல் கூறியவாறே விசிறிக் கொண்டிருப்பார். அவர் இல்லாத நேரத்தில் உடல் வெம்மையை மறக்க உள்ளத்தைத் தமிழோடு உறவாட விடுவேன். நெஞ்சம், அரிமாப் புலவன் பாரதியின் 'தேடிச் சோறு நிதம் தின்று...' 'நல்லதோர் வீணை செய்தே...' எனும் இரு பாடல்களையும் பன்முறை எடுத்து எடுத்து உண்ணும். வரிப்புலிப் பாவேந்தனின் 'கனியிடை ஏறிய சுளையும்...' 'துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து...' எனும் இரு பாடல்களையும் கட்டித் தழுவி இளைப்பாறும். இளைப்பாறிய ஓர் இரவுப் பொழுதின் வைகறையில் என் உணர்வுக் குருதியின் விடி வெள்ளியாய் முளைத்ததே...

*தாயெனக் குள்ளாள்; தமிழ்தான் அவள்பெயர்*
*தருவேன் உயிரவட்கே!*
*மாய்வது திண்ணம், மண்ணொடு பிறந்தவள்*
*மலர்ந்திட எருவாவேன்!*

*நாடெனக் குண்டு; நற்றமிழ் நாடே!*
*நாடேன் பிறநாட்டை!*
*பாடெலாந் தந்து பைம்பொழி லாக்கிப்*
*பாரில் உயர்த்திடுவேன்!*

*ஏடெனக் குண்டு; இன்றமிழ் இலக்கிய*
*இலக்கணங் கற்பேன்யான்!*
*நாடுவேன் பின்றை நன்மொழி ஆங்கிலம்*
*நலஞ்செய் வேன்தமிழ்க்கே!*

*துயில்பவர் எழுப்பித் துணிவொடு தூய்பணி*
*தொடங்கிடச் செய்திடுவேன்!*
*பயில்பவர் நரம்பில் பைந்தமிழ்க் குருதி*
*பாய்ச்சுதல் என்பணியே!*

ஆளுக் கொருநெறி அரசியல் கண்டிடும்
அவல நிலைஒழிப்பேன்!
நாளுக் கொருநிலை நாடிடும் புல்லரை
நாயினுங் கீழ்மதிப்பேன்!

பாலிலே நஞ்சா? பைந்தமிழ்ப் பாலில்
பன்மொழிச் சொற்கலப்பா?
காலிலே தளையா? கனிதமிழ் காத்தால்
காரிருட் சிறைபரிசா?

வந்தவ ரெல்லாம் வாழ்க்கை வளமொடு
வளர்வதைக் காணுகின்றேன்!
இந்தமண் பெற்றவர் எங்கெங்கோ ஓடி
இரப்பதை யான் தவிர்ப்பேன்!

நூற்றுக்கு நூறு நூற்களில் தெருவில்
நுவலும் மொழியிலெல்லாம்
போற்றிடத் தனித்தமிழ், புதுப்பணி யாற்றிடப்
புறப்பட்டேன்! அடடா

## 10
## நாளைதான் பிறவேலை (1968)

பாரதிப்புலவன் -
தன்னம்பிக்கையின் தேயா முழு நிலவாகத் திகழந்தவன்.

நாட்டு மக்களின் பிணியையும் வறுமையையும் தன் பாட்டுத் திறத்தாலே ஓட்டிவிட முடியும் என்று நம்பியவன்.

'எழுதுகோல் தெய்வம்' எனக்குத் தொழில் கவிதை எனக் கற்பு நெஞ்சின் செம்மாப்போடு முழங்கியவன்.

'வெறும் புகழிற்காகவோ வீண்பொழுது போக்கிற்காகவோ எதையும் எழுதாதே' என்பது என் மனச்செவியில் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கிற அவன் ஆணை. அவ்வாணையே இப்பாட்டின் ஆணிவேர்.

கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் வாயிலாகக் கையெழுத்து மலர் ஒன்று வெளியிடும் முயற்சி நடந்து கொண்டிருந்தது. என் பாடல் மலரில் இடம்பெறவேண்டும் என்று விரும்பினேன். விருப்பம் உடனே விளைவாகவில்லை. சில நாட்கள் சென்றன. எதை எப்படி எழுதுவது?

எழுத்துப் பரத்தரும் நாட்டின் இழிநிலையும் என் தன்னம்பிக்கையும் பாடற்பொருளாக என்முன் வந்தன.

வருங்கால மனைவியும் நிகழ்கால நண்பர்களும் பாடல் வடிவத்தைத் தந்தனர். பிறப்பெடுத்த பாடலே...

*மைநிரப்பித் தூவலினைக் கொட்டி பெண்ணே!*
*மறிகடலாய் முழங்குகின்ற தென்றன் நெஞ்சம்;*
*பொய்நிரப்பிப் புரட்டுகளை அவிழ்த்து விட்டுப்*
*புற்றீசல் இதழ்நடத்தும் போலிக் கும்பல்*
*பைநிரப்ப எதையெதையோ எழுதித் தள்ளும்*
*பரத்தைஎழுத் தாளர்குழு நடுங்கி ஓட*
*மைநிரப்பித் தூவலினைக் கொடடி பெண்ணே!*
*மளமளவென் றெழுதுகிறேன் வேட்டுப் பாட்டு!*

தாளையெடு! கொடுகையில்! தள்ளிப் போநீ!
தையலுனைப் பார்ப்பதற்கு நேர மில்லை,
பாளையினைச் சீவுதல்போல் செந்த மிழ்த்தாய்ப்
பழிப்பவனின் தலைசீவிப் பரணி பாடுங்
காளையரின் கைவாளாய் ஈட்டி வேலாய்க்
கனல்துள்ளும் பாட்டெழுதிக் குவிப்ப தற்கு
வேளையிது தான்வேளை, இன்று வேறு
வேலைகளுக் கிடமில்லை விலகி நில்நில்!

செவிடாநீ? சொல்கின்றேன், நிற்கின் றாயே!
சிவந்திருக்கும் பழக்கன்னம் கன்றிப் போகும்.
''குவி'டாநீ பாட்டெழுதி'' என்றென் நெஞ்சம்
குதிக்கிறது, நாள்தோறும் உழைத்து ழைத்துப்
புவியியக்கம் தொழிலாளர்ப் பசிநோய் போக்கும்
புத்துணவாய்ச் சிலபாடல், உறையு ளின்றித்
தவிதவிக்கும் ஏழையர்க்குத் தங்கும் வீடாய்த்
தரமான சிலபாடல் தரப்போ கின்றேன்.

விரிமலராய்ச் சிரித்தென்னை வீழ்த்தப் பார்க்கும்
வெறுங்கனவு காணாதே; உழைப்போன் வாழ்வு
திரிமெழுகாய்ப் போனதடி, தேம்பு கின்றான்.
திரட்டிக்கொண் டான்பொருளைத் திருட்டுச் செல்வன்;
எரிமலையாய்ப் பாட்டாளி சீறிப் பாய்ந்து
'ஏ நரியே! எடுபொருளை' என்று கேட்க
வரிப்புலியின் உறுமலைப்போல் பாடல் நூறு
வரைந்தாக வேண்டுமடி இன்றே இன்னே!

யாரங்கே? நண்பர்களா? கடற்க ரைக்கு
யான்வருவேன் என்றழைக்க வந்தீர் போலும்
தேரிங்கே வந்ததென நின்றி ருந்த
திரண்டஎழில் மனைவியையும் விரட்டி விட்டுப்
பாரிங்கே சாதியெனும் சேற்றில் வீழ்ந்து
படும்பாட்டைப் போக்கி, குளிப்பாட்டு தற்கு
நீரிங்கே எனும்நிலையில் பாடல் கொட்டும்
நிறையுணர்வில் மிதக்கின்றேன் நீவிர் செல்க!

ஏன்மேலும் நிற்கின்றீர்? சொன்னால் கேட்பீர்
இமைபோலும் நண்பர்களே! எலும்புக் கூடாய்க்
கூன்விழுந்த ஏழையர்தம் ஊன்று கோலாய்,
குள்ளநரிச் செல்வர்களைக் கொளுத்தும் தீயாய்,
'தான், தனது' என்பவரைத் தகர்க்கும் காற்றாய்,
தமிழ், நாடு காப்பவரைத் தழுவும் தாயாய்
நான்பாடல் பொழிவதற்கு முனைந்து விட்டேன்
நாளைதான் பிறவேலை நடப்பீர் நன்றே!

## 11
## படை வேண்டும் (1966)

என்னுடன் ஆய்வுசெய்த நண்பர்களில் ஒருவர், தமிழையும் தமிழறிஞரையும் தாழ்த்திக் கொண்டிருப்பதே தமிழ்ப்படித்த அத் 'தமிழர்' தம் தலையாய 'தொண்டு'. ஒரு நாட்காலை என் அறைத்தோழர் அறவாணன், 'ஆய்வு நண்பர் நேற்றுமாலை இரண்டு மலையாளிகளிடம் தமிழையும் தமிழறிஞரையும் இகழ்ந்து பேசுகையில் மறைமலையடிகளை மடையனடிகள் என்று எள்ளினார். இதை அவரிடம் கேட்டு விடாதீர்கள்' என்றார். எண்ணெயிற் பணியாரமாய் என் உணர்வுகள் கொதித்தன. மாற்று மொழியினரிடம் இப்படிப் பேசியிருக்கிறாரே என மனம் துடித்தேன். நெஞ்சம் அழுகிய அப்புல்லியர் செயலை நினைத்து வருந்துகையில் 'அவர் மட்டுமா, இதோ, நாங்களும் இருக்கின்றோம்' என்று வேறு சிலரும் மனக்கண்முன் நிழலிட்டனர்.

இவர்களை என்ன செய்வது?

வினா எழுந்தது.

'பக்கத்திலிருந்து பண்பில்லாத செய்பவன் பகையை விலைகொடுத்து வாங்கு'

'எயிறுடைக்குங் கூர்ங்கையனாகு'

'கரும்புபோல் கொல்லப்பயன்படுங்கீழ்' எனும் வள்ளுவன் குரலே விடையாக வந்தது.

விடையில் விளைந்த நெருப்புத்துண்டே...

*உதைத்துத் திருத்த ஒருபடை வேண்டும் தமிழ்க் காளையே! - அதில்*
*உன்னையும் உறுப்பின னாக்கிக் கொள்வாய் இந்த வேளையே!*

*என்ன தமிழில் இருக்கிற தென்பான்;*
*இருக்கும் நூல்களைப் பார்த்தும் இரானவன்;*
*பின்னை மொழிகளின் பெருமையே எங்கும்*
*பேசித் திரியும் தமிழனைப் பிடித்தே (உதை)*

இளங்கோ என்றிடில் 'கிழங்கோ?' என்பான்;
'இணையாய் வால்மீகிக் கேது தமிழில்?'
அளப்பான் இப்படி; கம்பனை அறியான்
'ஆகா மில்டன்!' எனப்புகழ் வானை (உதை)

இன்றைய பாவலர், சிறுகதை, புதின
எழுத்தா ளர்தம் படைப்பினைப் பாரான்
'ஒன்றுந் தமிழில் இல்லை இலை'யென
உரத்துப் பேசுவோன் குடுமியைப் பற்றி (உதை)

எடுத்ததற் கெல்லாம் வடமொழி ஆங்கில
இலக்கிய இலக்கணப்புகழ்ச்சியே பாடி
அடைதேன் தமிழை அறியாத் தமிழனை
அறிந்தும் ஒளிக்கும் நஞ்சுநெஞ் சானை (உதை)

''ஆட்டுக்கு நான்குகால் மாட்டுக்கும் நான்கே,
ஆதலால் மாட்டை ஈன்றது ஆடே''
ஏட்டினில் ஆராய்ச்சிப் பெயரால் இப்படி
எழுதுகின் றவனைப் பற்றி இழுத்தே (உதை)

தனித்தமிழ்த் தாளிகை பார்க்க மறுத்தும்
தமிழ்ப்பெரி யார்தம் வாழ்வைப் பழித்தும்
தனித்தமிழ் பேசின் எள்ளி நகைத்தும்
தன்னலத் திற்காய்த் தாயை விற்பானை (உதை)

செந்தமிழ் ஒதுக்கி இந்திக் கரியணை
தேட முனையும் வீடணக் குழுவை
நைந்த வடமொழிச் சொற்களை இன்னும்
நாட்டிற் பரப்பும் தாளிகை யாளனை (உதை)

தூங்குவோ ரைநாம் தட்டி எழுப்பலாம்;
துயில்பவர் போன்று நடிப்பவர் தம்மை
ஓங்கி அறைந்து செவிப்பறை கிழித்தே
ஒவ்வொரு பல்லையும் எண்ணிக் கொடுத்தே (உதை)

ஒரு வித்து. அதற்குள் எத்தனை கொடிகள்! எத்தனை இலைகள்! பூவும் பிஞ்சும் காயும் கனிகளும் தாம் எத்தனை எத்தனை!

ஒரு வித்துள் பல வித்துகள் உறங்குகின்றனவே!

இளைஞர்கள் இவ்வுலகின் வித்துகள்.

வித்துகளின் தரத்தைப் பொறுத்ததன்றோ விளைவு?

வித்தே பழுதாயிருந்தால்... விளைவைக் கேட்கவா வேண்டும்!

'முதற்கோணல் முற்றுங் கோணல்'

'இன்றைய இளைஞர் நாளைய உலகம்'

அகம் கூம்பியும் புறம் சாம்பியும் போன இன்றைய இளமை, நாளை நன்றாயிருக்கும் என்ற நம்பிக்கையை எனக்குத் தரவில்லை.

தம்பியரும் தங்கையரும் இப்படி இருக்கிறார்களே என்று வருந்தினேன். அவ்வெண்ணமே பின்வரும் இரு பாடல்களாய் உடலெடுத்தது.

## 12
## தம்பீ! (1966)

காற்றினில் உடம்பைத் தவழவிடு!
கதிரவன் ஒளியில் மூழ்கிமகிழ்!
ஆற்றினில் மீன்போல் நீச்சலடி!
அந்தியில் செவ்வான் அழகினைப்பார்!

பறவை விண்ணில் மிதக்கிறதே!
பசும்பயிர் காற்றில் தவழ்கிறதே!
கறவைக் கன்று குதிக்கிறதே!
கவலை உனக்கேன்? மகிழ்ந்தாடு!

அழுக்கை வெளுத்தே உடையணிக!
அளவாய்க் காலம் அறிந்துண்க!
ஒழுக்க நெறியில் நடையிடுக!
உயர்ந்தோர் வாழ்வை அறிந்திடுக!

அரிமா நோக்கு வேண்டுமடா!
அஞ்சாக் களிறாய் நடந்திடடா!
நரிமா நினைவு போக்கிடடா!
நாயென நன்றி காத்திடடா!

மலையெனக் கொள்கை நிலைவேண்டும்!
மண்போல் பொறுமை உளம்வேண்டும்!
அலைகடல் அறிவு நிறைவேண்டும்!
அகில்போல் புகழ்மணம் பெறவேண்டும்!

தென்னை வாழை மாமரம்பார்!
தென்றல் கதிரவன் நிலவினைஓர்!
அன்னை இயற்கை தரும்பாடம்
அறிக; உதவுக ஏழையர்க்கே!

*சாதிப் பிரிவினில் மூட்டுகதீ!*
*சமயச் சழக்கினை ஓட்டுகநீ!*
*ஓது தமிழ்உளம் ஏற்றுகவே!*
*உழைப்பை இறையெனப் போற்றுகவே!*

## 13
## தங்கையே! (1967)

விடியுமுன் அல்லி விழியை மலர்த்து!
வீட்டை வெளியைத் துலக்குக நன்றே!
படியுதல் வேண்டும் பின்தூங்கி முன்னெழும்
பழக்கம் உனக்குப் பைங்கிளி இன்றே!

விண்மீன் கூட்டம் விரைந்தோடி வந்து
வீட்டின் முன்னே விழுந்ததோ என்ன
மண்மகள் சிரிக்க மாவினாற் கோலம்
வகைவகை யாகத் தீட்டுக கண்ணே!

பொன்துகள் வாரிப் புவியெலாம் வீசிப்
பொங்கும் கடலுள் புகுந்திடும் கதிராய்
நின்முகம் ஒளிர மணப்பொடி நீக்கி
நீராடு கையிற் பூசுக மஞ்சள்!

வெள்ளை மல்லிகைக் குள்ள மணங்காண்!
விழியைப் பறிக்கும் வெறிநிறம் உண்டோ?
உள்ளம் பண்பால் மணம்பெறல் வேண்டும்!
உடையிற் பகட்டால் உறுபயன் இல்லை!

தும்பைப் பூப்போல் சோறு சமைக்க!
சுவைசுவை யாகக் கறிகள் படைக்க!
அம்புவி எங்கும் ஆரே இவள்போல்
அடிசில் படைப்பார் எனும்புகழ் பெறுக!

சோம்பலை நீக்கு, சுறுசுறுப் பாயிரு!
துள்ளித் திரியும் புள்ளிமான் நீயே!
தேம்பலைப் போக்கு, திண்ணிய நெஞ்சுகொள்!
சிரித்து மகிழ்வாய், செந்தமிழ்ச் சிட்டே!

வெள்ளரிப் பழம்போல் இனியசொற் பேசு!
வேப்பங் காய்ச்சொல் விலக்குக, மாசு!
பிள்ளையுன் நடத்தை பேச்சினைப் பார்த்துப்
பெற்றவர் நெஞ்சம் குளிர்ந்திட வேண்டும்!

வன்பெனும் செந்தீ வாழ்வைப் பொசுக்கும்,
வஞ்சகம் பொய்மை பொறாமை வளர்க்கும்;
அன்பெனும் ஊற்றால் உலகம் தழைக்கும்;
அன்பினால் மற்றவர் நெஞ்சினை அள்ளுக!

ஆற்றை நிலவை அளவிலாப் பொருள்தரும்
அன்னை நிலத்தைப் புலவர்கள் பெண்ணாய்ப்
போற்றுவ தெதனால்? வேற்றுமை இன்றிப்
புவிமிசை உயிர்களைப் புரப்பதா லன்றோ?

கதிரவன் ஒளிமுன் காரிருள் உடையும்,
கற்பவை கற்றால் அறிவு வளரும்,
இதுவரை உலகம் பயன்பெற வாழ்ந்த
ஏந்திழை யார்தம் வாழ்வை அறிக!

இன்றுநீ நெஞ்சில் இடுகிற வித்தே
எதிர்கா லத்தில் காய்கனி நல்கும்;
இன்றே பூம்பொழி லாகுக நெஞ்சம்!
எண்ணிலா மணமலர் பூத்துப் பொலிக!

தாய்மைப் பேறே தனிப்பெரும் பேறாம்;
தங்கையே! நாளைத் தாயல் லவோநீ?
சேய்மை வளர்ப்பில் உலகை வளர்க்கத்
தெரிந்து கொள்நீ, தீந்தமிழ்க் குயிலே!

மூத்த மகளிர் மொழியை மறந்தனர்,
முழுமை மடமைச் சிறையில் முடங்கினர்,
பூத்தெழும் பிறையே! புரட்சி வெடித்திடப்
புத்தொளி பாய்ச்சுதல் நின்கட னன்றோ?

உயிர்முத லாகும் தமிழினைப் போற்று!
உன்னெழில் கூடும், இல்லையேல் வாடும்!
பயிரிற் படிந்த பசுமையாய் நெஞ்சில்
பைந்தமிழ் துயின்றால் உடல்வளம் எய்தும்!

## 14

## துணி வெளுக்கின்றாள் (1964)

விடுமுறையில் ஊர் சென்றிருந்தேன். வீட்டிலிருந்து கிழக்கே அரைகல் தொலைவில் பச்சைப்பசும் வயல்கள். வயல்களின் நடுவே சிறு கிணறு. கிணற்றின் அருகே ஒரு மாமரம். நண்பகற்பொழுதில் மாமரத்தினடியில் அமர்ந்து பாவேந்தரின் இசையமுதைப் படித்துக் கொண்டிருந்தேன். இல்லை, குடித்துக்கொண்டிருந்தேன். அதன் எளிமையில் மணக்கும் இனிமையும் ஆழமும் என்னை மயக்கின. மயக்கத்தோடே வீட்டிற்குக் கிளம்பினேன். வழியில் சிறு வாய்க்கால் ஒன்று ஓடுகிறது. அவ்வாய்க்காலின் படித்துறையில் ஒரு பெண் துணி துவைத்துக் கொண்டிருந்தாள். பாவேந்தரின் நுண்ணோக்கு என்னை அக்காட்சியை நோக்கச் சொன்னது. வீட்டிற்கு வந்தேன். கற்பனையில் ஒரு வண்ணாத்தி வந்தாள். அவள் தந்த பாடலே

*துணி வெளுக்கின்றாள் - ஆகா!*
*தொப்புத் தொப்பென்றே துப்புரவாகத்*
*துணி வெளுக்கின்றாள்!*

*சிற்றலை ஆடை தென்றலில் நெளியச்*
*சேல்கெண்டை மீன்கள் துள்ளித் திரிய*
*நற்றமிழ்ப் பெண்ணாய் நடக்கும் சிற்றோடையில்* (துணி)

*நிலவுக் கீற்றாம் நெற்றி வெயர்க்க*
*நீண்ட கருங்குழல் கொண்டை குலையக்*
*குலவும் மார்பெழில் குலுங்கக் குலுங்கத்* (துணி)

*மலர்க்கைக் கித்துணை வலிவோ? கால்கள்*
*மரத்துப் போகாவோ? இடைநோ காதோ?*
*பலநாள் அழுக்கைப் பிழிந்து பளீரெனத்* (துணி)

*கேணிக் கருகிலே பேசிய கிண்டலும்*
*கெண்டைக் குறும்பு விழியினாற் கொன்றதும்*
*நாணி நடந்த நடப்பும் அறியாள்போல்* (துணி)

போலிக் குலவெறிப் புரட்டினைப் போக்கிப்
பொதுமைக் குறள்நெறி போற்றிக் கழுத்தினில்
தாலியைக் கட்டும் தலைவனைப் பாராது (துணி)

கனியிதழ்ப் புன்னகை காட்டினா லென்னாம்?
கடைவிழி பாய்ச்சின் கண்ணா பறிபோம்?
எனநினைத் திருக்குமென் நெஞ்சம் புண்ணாகத் (துணி)

துணியா துவைக்கிறாள்? தூண்டிற் கயலாய்த்
துடிக்குமென் நெஞ்சைத் துவைக்கிறாள்; இங்கே
மணியிரண் டாக மடிபவன் பாராமல் (துணி)

பக்கத்துக் கல்லில் படீர்படீ ரென்று
பாவையின் தந்தை பழநி வெளுப்பதால்
வக்கணைக் காரியென் வரவறி யாள்போல் (துணி)

## 15
## போதுமடா காதல் (1963)

சட்டக் கல்லூரியில் படிக்குங்கால் நடந்த ஒரு நிகழ்ச்சியே இப்பாடற்கு அடிப்படை. தமிழ் தெரியாத குடகுப்பெண் ஒருத்தியும் படித்தாள். புறப்பொலிவு மிக்க அவள், வஞ்சகம் செய்யாமல் பார்வைக் கொடையை வாரி வழங்குவாள். சேலம் பகுதியைச் சார்ந்த மாணவ நண்பர் ஒருவர்க்கு அவள்மீது ஒரே மையல்! வாய் வலிக்க ஆசிரியர் நடத்தும் பாடத்தைக் கேட்காமல் கண்வலிக்க அப்பெண் கொடியைப் பார்த்துக் கொண் டிருப்பதே நண்பரின் வேலை. அவளும் அவரை ஒருமுறைக்கு இருமுறை பார்ப்பாள். சிற்சிலகால் 'நண்பர்க்கும் அவளுக்கும்... உண்டோ' என்று நான் கூட ஐயுற்றிருக்கிறேன். நண்பர் பித்தாகிப் போனார். கல்லூரி முடிந்ததும் அவளைப் பின்தொடர்வதும் உண்டு.

கல்வியாண்டின் இறுதிப் பகுதி, ஒருநாள் மாலை வேறொரு நண்பரொடு மாணவ விடுதியின் மாடியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தேன். அவர் 'அவளுக்கும் ஒரு மலையாள மாணவர்க்கும் ஏற்கனவே தொடர்புண்டு. இருவரும் திரைப்படத்திற்குச் சேர்ந்து வந்ததைப் பார்த்திருக்கிறேன்' என்றார்.

நண்பர்க்கு இச்செய்தி தெரிந்தால்...? நெஞ்சிற்குள்ளேயே கிடந்த அச்செய்தி ஒருவாரத்தின் பின் தந்த பாடலே.

*நேர்வகிடு, சாண்கூந்தல், இருபின்னல், நெற்றி*
*நெல்லறுக்கும் சிற்றரிவாள், கருஞ்சாந்துப் பொட்டு!*
*நேர்நின்று பொருதவரின் நெஞ்சத்திற் பாயும்*
*நெடும்புகழார் மூவேந்தர் வாள்மழுங்கிப் போகும்*
*கூர்புருவம்! குறுகுறுத்த நறும்பார்வைக் கண்கள்!*
*கொவ்வையிதழ், குழந்தைமுகம், குங்குமப்பூக் கன்னம்!*
*கார்கிழித்துப் பொன்வெள்ளக் கதிர்பாய்ச்சும்மின்னல்*
*கன்னியவள் மெல்லுடலில் படிந்ததுபோல் மேனி!*

வேர்ப்பழுத்த செழும்பலவின் விழுஞ்சுவையை மாய்க்கும்
வெண்முத்து வாய்மலர்ந்து வெடிக்கின்ற பேச்சு!
தேர்இழுக்க அசைவதுபோல் சிற்றிடையும் ஒசியச்
சிறியமலர் அடியெடுத்துக் குறுநடையும் இடுவள்!
மார்பணைத்த நூலோடு மயிற்சாயல் பயில
மங்கையவள் வருங்காலை மாணாக்கர் கூட்டம்
''பார்அங்கே 'குழலி' வரும் பான்மையினை'' என்றே
பருந்துவிழி பதித்திடுவர். எடுத்திடுதல் எளிதோ?

இளங்கொழுந்தோ பசுங்குருத்தோ மரைமுகையோ என்ன
இளமைநலம் விளைந்தொழுகும் வளப்பமுடை குழலி
உளங்காண வேண்டுமெனும் வேட்கையுடன் யானோ
ஓரவிழி தனைப்பாய்ச்ச வகுப்பறையில், அன்னாள்
களங்கொண்ட போர்மறவன் கைவாளின் கொடிய
கண்வாளை என்மீது கடிதோச்சி அல்லிக்
குளங்கொண்ட எருமையடி சிதைகின்ற மலராய்க்
குலைத்துவிட்டாள் நெஞ்சமதை; குறையாரைச் சொல்வேன்!

நூலெடுத்துப் படிப்பதற்கு விரித்துவிடின் நெஞ்சம்
நூலிடையாள் பின்தொடரும்; படிப்பதற்கா முடியும்!
கோலெடுத்தே எழுதுதற்குத் தாள்சேர்ப்பின் எங்கும்
'குழலி'எனும் அவள்பெயரே குறுநடனம் புரியும்!
பாலெடுத்துக் குடிப்பதற்கு வாய்மருங்கே கொணரின்
பாவையவள் பால்வடியும் முகம்முன்னே தோன்றும்!
காலெடுத்து வெளியுலவத் தொடங்கிவிடின் கண்முன்
காட்சிதரும் பொருள்களவள் கதைபேசி நகைக்கும்!

விண்மலரும் கதிர்கண்டு தாமரையாள் மலர்வாள்!
வெள்ளிநிலா வருகையினால் அல்லிமகள் சிரிப்பாள்!
பண்மலரும் மகுடிதனில் என்கின்ற ஞான்று
படம்விரித்துப் பாம்புகளும் ஆடிடுதல் உண்மை!
மண்மலரும் சிரித்தாடும் மரஞ்செடிகள் கொடிகள்
மழைகண்டால்! அதுபோலென் நெஞ்சுகவர் மங்கை
கண்மலரும் போதென்றன் கட்டுண்ட நெஞ்சம்
களித்தாடும். கள்ளுண்ட மாந்தன்நிலை ஒக்கும்!

வான்பூக்கும் மதியெடுத்துக் கறைதுடைத்த தென்ன
வடிவழகு மிகவுடைய முகமுடையாள் தன்னை
நான்நோக்க அவள்நோக்க நடமாடும் விழிகள்
நாள்தோறும் காதலெனும் நாடகத்தைத் தீட்டத்
தேன்தேக்கும் எண்ணங்கள் சிந்தைதனில் தேங்கத்
திளைத்திருந்தேன்; ஒருநாளில் முத்தழகாம் நண்பன்
'நான்கேட்க விழைகின்றேன் நடையுடையில் மாற்றம்
நாட்சிலவாய்க் காணுகின்றேன் காரணமென்?' என்றான்.

ஒன்றுமிலை உன்விழியில் கோளாறோ என்றேன்.
உரைத்தாயேல் உற்றுழியான் உதவிடுவேன் என்றான்
இன்றுவரை அவட்கெனக்கும் கண்வளர்த்த உறவை
எடுத்துரைத்துப் பெயர்'குழலி' எனமொழிந்த வுடனே
''கொன்றழிக்கும் கூற்றமடா குறைநெளியும் பெண்கள்!
குழலியவள் என்றனையும் நோக்கினளே'' என்றான்.
''குன்றத்தோள் முத்தழகு! ஒருசேதி தனியே
கூறிடவே இவண்வந்தேன்'' எனவந்தான் சுப்பன்.

''சுப்பாநீ கொண்டுவரும் சேதிதனை இங்கே
சொல்லுவதால் தவறில்லை'' என அழகு கூற
''எப்படியான் எடுத்துரைப்பேன். நீயுன்றன் நெஞ்சில்
ஏற்றிவைத்த பெண்'குழலி' கடற்கரையில் இன்று
குப்பண்ணன் என்பவனின் கைபிடித்துச் சென்ற
கொடுமைமிகு காட்சியினை'' எனச்சுப்பன் சொல்ல
அப்படியா எனச்சாய்ந்தேன்; ''போதுமடா காதல்
ஆளைவிடு'' எனவருந்தி முத்தழகு விரைந்தான்.

## 16
## மணப்பீர் போலும் (1963)

வாய்க்காலின் குறுக்கே அணையிடப் பெற்று வயலில் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது. அணையை எவரும் அகற்றாமலிருக்கக் கரையில் புளிய மரத்தின் கீழ் கட்டிலிலமர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன். வாய்க்காலில் குளித்துக்கொண்டிருந்த ஒரு பெண் விழியால் தின்று கொண்டிருந்தாள். குளித்து முடித்து வீடு திரும்புகையிலும் விழிவீச்சு! நண்பகற் பொழுதின் நடப்பு இது. இரவு வரையிலும் விழிகொடுத்த அடியின் வலியைத் தாங்க முடியவில்லை. அவளின் நினைவாக ஒரு பாடல் எழுதவேண்டும் என்று விரும்பினேன். அவளே காதலனால் கைவிடப் பெற்ற கன்னியாக என் கற்பனையில் தோன்றித் தன் துயர்ச்சுமையை இங்கே இறக்கியிருக்கிறாள்.

*வீட்டுக்குப் பக்கத்துக் கிணற்றில் நாளும்*
*விடிந்தவுடன் நீரெடுத்துச் செல்லும் போதும்*
*காட்டுக்குப் புல்லறுக்கக் கூடை யோடு*
*கருக்கரிவாள் கையெடுத்துப் போகும் போதும்,*
*மாட்டுக்குத் தவிடுவைக்கத் தம்பி யோடு*
*மாலையில்யான் தொழுவத்தை அண்டும் போதும்*
*நாட்டுக்கு நல்லவரே! தூண்டிற் கண்ணால்*
*நலித்தின்று வேறொருத்தி மணப்பீர் போலும்!*

*வாய்க்காலில் குளிக்கின்ற பொழுதில் வந்து*
*வயலுக்குச் செல்வதுபோல் போக்குக் காட்டி,*
*ஏய்க்காமல் ஏய்த்துவிட்டு, மருங்கில் நின்றே*
*எடுக்காமல் இமைக்காமல் விழியால் கவ்வி*
*'காய்க்காது பூவின்றிச் செடியும்; வாழ்வு*
*கனியாது நீயின்றி அன்பே!' என்று*
*மாய்க்காமல் என்னுயிரை மாய்த்து விட்டு*
*மற்றொருத்தி தனைமணக்க முனைந்தீர் போலும்!*

வயல்சூழ்ந்த சிறுமேட்டில் நெற்றொ லிக்கும்
வாகையின்கீழ் பின்னிலவுக் காலந் தன்னில்
அயலெவரும் அறியாமல், வறுத்து வைத்த
ஆட்டிறைச்சி கொணர்ந்தேனே; அணைத்துக்கொண்டு
'கயற்கண்ணீ! முதலில்நீ உண்க' என்று
கடித்தசிறு கறித்துண்டை ஊட்டச் சொல்லிப்
பயிற்றங்காய்ச் சிறுவிரலைக் கடித்த காட்சி
பழங்காட்சி! புதியவளை மணப்பீர் போலும்!

தென்றலினை இலைக்கையால் வருக என்னுந்
தேன்வாழைத் தோட்டத்தில், வைக்கோல் போரில்
கொன்றழிக்கும் வாள்போலுந் தோகை கொண்ட
குளமருங்குக் கரும்புவயல் தன்னில், முன்னர்
அன்றிலைப்போல் நாமிணைந்து பெற்ற இன்பம்
ஆட்சியுளார் உறுதிமொழி அழிதல் ஒப்ப
இன்றொழிந்து போனதுவோ? நினைவே இன்றி
இன்னொருத்தி தனைமணக்க முனைந்தீர் போலும்!

விண்பூத்த முழுமதிமேல் உறுதி சொன்னீர்;
விரைவிலது தேயுமெனச் சொன்னேன்; உம்மைக்
கண்பூத்து வளர்த்திட்ட தாயின் பேரால்
'கடிமணம்யாம் செய்திடுவோம்' என்றீர்; மேலாய்
மண்பூத்த பழம்நாளே பூத்த, இந்த
மாஞால மொழிகள்குல முதல்வி யான,
எண்பூத்த எழுத்துமணங் கமழு கின்ற
என்றுமுள தென்றமிழ்மேல் உறுதி சொன்னீர்!

தாய்தமிழ்மேல் தாயின்மேல் ஆணை யிட்டுத்
'தரைநிலவே! புல்கண்ட இடங்க ளெல்லாம்
மேய்கின்ற மாடல்லேன், உன்றன் நெஞ்சில்
மேவுகின்ற அச்சத்தை விடுக' என்றீர்.
ஆய்கின்ற அறிவுடையீர்! அடியேன் செய்த
அணுவளவுச் சிறுபிழைதான் என்ன சொல்வீர்?
தேய்கின்ற மதியாகிப் புயலில் வீழ்ந்த
திசையற்ற கலமாகித் தேம்பு கின்றேன்!

'பொருளில்லா வறியவள்நான்; சாதி வேறு
போட்டுவிடும் தடை'யென்றேன்; 'நிலையில் லாத
பொருளெதற்கு? பண்புடைமை போதும், இன்றே
பொசுக்கிடுவோம் சாதியினை' என்று கூறித்
தெருளூட்டி மலர்விட்டு மலரை நாடித்
தேனுண்ணும் வண்டாக மாறி என்னை
இருளிட்ட புலிமுழைஞ்சில் வீழ்த்தி வேறோர்
ஏந்திழையை மணஞ்செய்யத் துணிந்தீர் போலும்!

கண்ணீரைத் துடைக்கின்றேன், நெஞ்சி னுள்ளே
கனல்கின்ற துயரத்தை என்ன செய்வேன்?
தண்ணீரில் குளிக்கின்றேன், மேனி ஏனோ
தணலாக எரிகிறது? தண்மை பாய்ச்சும்
வெண்ணிலவுக் கதிரெல்லாம் வேலாய் மாறி
வீழ்த்துவதை என்னென்பேன்! இரண்டு நாளில்
பெண்ணொருத்தி தனைமணக்கப் போகின் றீர்நீர்!
பேதைநான் சாகின்றேன், வாழ்வீர் நன்றே!

## 17
## பிரிந்திடப் போகிறேன் (1968)

இப்பாடல் உயிர்பெற நிலமாகவும் நீராகவும் எருவாகவும் ஒளியாகவும் இருந்த நிகழ்ச்சிகள் எத்தனையோ! ஒவ்வொரு நிகழ்ச்சியும், பணம் பதவி ஆகியவற்றின் பின்னே ஓடிக் கொண்டிருக்கும் மனித நாய்களின் வேட்டைக் காடாக இவ்வுலகத்தை எனக்குக் காட்டியது.

பெண் மண்ணால் செய்யப்பட்ட பொருளா? அவளுக்கு நெஞ்ச மில்லையா? அங்கே உணர்வுகள் பூக்காவா? மாட்டினும் இழிந்த பிறவியா அவள்? பணத்தைக் கொடுத்து மாட்டை வாங்கும் மனிதன் பணத்தைப் பெற்றுக் கொண்டுதான் பெண்ணை ஏற்பேன் என்கிறானே! மாடு உயர்ந்த பிறவியோ!

நாஞ்சில் நாட்டில் புழக்கத்திலிருக்கும் திருமணக் கையூட்டு முறை கொடுமையிலும் கொடுமை! வாழ்க்கைச் சந்தையில் திருமணத்தை ஏலம் போடுகிறார்கள்.

ஒருநாளின் மாலையும் இரவும் மயங்கிக் கொள்ளும் நேரம். ஆசிரிய நண்பரொருவரின் வீட்டில் எங்களிருவருக்கும் தெரிந்த ஒரு பெண்ணின் திருமணம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். 'பெண்பெயரில் சொத்துக்களை முன்கூட்டியே எழுதி வைத்தால்தான் மணம் நடக்கும்' என்று 'அதிகம்' படித்த மாப்பிள்ளை வீட்டார் கூறிவிட்டார்களாம்.

நண்பரிடம் விடைபெற்றுச் சாலையில் நடந்தேன். வானம் அழுதது. விரித்த குடையின் கீழ் நடந்துகொண்டிருந்த என் நெஞ்சமும் அழுதது.

நானே ஒரு பெண்ணாகப் பிறந்திருந்தால்...? நடக்கும் கொடுமைகள் கண்முன் நின்றன. 'பிரிந்திடப் போகிறேன்' நெஞ்சத்தினின்று விழுந்தது.

இந்தக் கொடுமை என்றுதான் தீருமோ?
ஏ,என் தோழி! இனியென்ன நேருமோ? (இந்தக்)

அன்றுநான் பிறந்ததும் அழிந்திருந் தாலோ
அன்னையென் கருவை அழித்திருந் தாலோ
என்றும்நான் குழந்தையாய் இருந்திருந் தாலோ
என்னுயிர்த் தின்னுமித் தொல்லையோ இல்லை. (இந்தக்)

உடலின் சுமையாய் உறுப்புகள் மீறின!
உள்ளச் சுமையாய் நினைவுகள் ஊறின!
தடிமர மாநான்? நெஞ்செனக் கில்லையா!
சந்தையின் மாடாய் வந்தெனைப் பார்க்கும் (இந்தக்)

ஈராண் டாக எத்தனை பேர்கள்
'இந்த' ஊர் 'அந்த' ஊர் என்றுவந் தார்கள்!
நேரே அவர்முன் நில்லெனச் சொல்லினர்!
நின்றேன் கண்டனர்; நினைத்தேன் மறந்தனர்! (இந்தக்)

உற்றுப் பார்த்தனர் ஒருசிலர்; எனைப்போல்
ஓர விழியாற் பார்த்தனர் ஒருசிலர்!
சற்றும் அழகிலா நான்குபேர் வந்தனர்!
தகுந்தவர் சிலரும் வந்தெனைத் தள்ளினர்! (இந்தக்)

கண்ணுக் கினியரைக் கண்டபிற் பாடு
கட்டினேன் வானிலே கற்பனை வீடு!
பெண்ணுக் கொருமனம் எதற்கடி தோழி?
பிறர்கைப் பாவையாய்ப் பெண்ணிருக் கின்ற (இந்தக்)

இத்தனை ஆயிரம் எண்ணிவைத் தால்தான்
ஏற்கலாம் பெண்ணை என்றனா ராம்சிலர்!
ஒத்துவ ரவில்லை பிறப்பெலாம் என்றே
உதறின ராம்சிலர்! உலகமா ஈது? (இந்தக்)

மூக்கும் விழியும் பூக்களென் றாயே!
முற்றிய அழகின் தேக்கமென் றாயே!
நோக்கடி! இவ்வெழில் யார்க்கடி வேண்டும்?
நொள்ளைப் பணமன்றோ கொள்ளையாய் வேண்டும்! (இந்தக்)

*பண்பை எவனடி பார்க்கிறான் நன்று?*
*பணத்தை யல்லவோ கேட்கிறான் இன்று!*
*துன்பமாம் துன்பம் படித்தவன் பெரிய*
*தொகையெதிர் பார்த்தல்! தொடர்கதை யான* (இந்தக்)

*ஏழையென் தந்தை, தங்கையர் இருவர்*
*எப்படிப் பெரும்பொருள் கொடுத்திட இயலும்?*
*கோழைகள் பெண்ணினும் பொருளையே குறியாய்க்*
*கொள்கையில் நாம்செயக் கூடுவ தென்ன?* (இந்தக்)

*ஏழைக்கு மகவாய் எதற்கடி பெண்கள்?*
*இறைவன் படைப்பில் ஏதடி நேர்மை?*
*பீழை உலகில் வாழ்ந்திட வோநான்?*
*பிரிந்திடப் போகிறேன்; வருந்தா தே! நீ!* (இந்தக்)

உள்ளத்தை அசைக்கும் நிகழ்ச்சிகள் சில.

உள்ளத்தை ஆளும் மனிதர்கள் சிலர்.

அசைக்கும் நிகழ்ச்சிகளையும் ஆளும் மனிதர்களையும் பற்றி ஆசை தீரப் பேசவேண்டும் என்பது மாந்த மனத்தின் இயற்கை.

தன்னை அசைக்கும் நிகழ்ச்சியோ ஆளும்மனிதனோ மற்றவர்களையும் அசைக்கவும் ஆளவும் வேண்டும் என்பது இலக்கிய நெஞ்சின் விழைவு. நெஞ்ச விழைவு கல்மேல் எழுத்தாய் நிலைபெற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே இலக்கியம் பிறக்கிறது.

பின்வரும் மூன்று பாடல்களில் என் நெஞ்சத்தை ஆளும் மனிதர்கள் சிலரில் மூவரைப் பாடியிருக்கிறேன். பாடற் பொருளாய் அவர்கள் அமைந்ததன் காரணம் பாடல் வரிகளில் கிடக்கின்றது. இப்பாடல்களில், ஏனைய பாடல்களைப் போல் பாடற்பொருளையோ பாடும் முறையையோ பிறப்புச் சூழல் அவ்வளவாகத் தாக்கவில்லை. எனினும் பாடவேண்டுமென்ற ஆவலைத்தூண்டும் வாய்ப்புகள் ஏற்பட்டன. சான்றாக ஒன்றைச் சுட்டுவேன்.

செந்தமிழ் மறவன் சின்னச்சாமியின் முன் சிறியவனாய்ப் போய்விட்ட எனது நெஞ்சம் அவன் பெருமையைப் பாடத் தவித்தது. தவிப்பு பாடலாக வடிவெடுக்க ஒரு தூண்டுதல் வாய்த்தது. அதுவே 1964ஆம் ஆண்டின் இடைப்பகுதியில் தமிழ்நாடு இதழில் வெளிவந்த 'தியாகச் செம்மல் சின்னச்சாமி கவிதைத் தொடர்'.

## 18
## வரலாற்றில் முதல்வன் (1964)

*ஏன் பிறந்தோம் இவ்வுலகில்? உண்டு ழைத்தே*
*இணைமருவிப் பிள்ளைகளைப் பெறுதற் கென்றே*
*கான்பிறந்த விலங்கொப்பக் காலம் போக்கிக்*
*கணக்கற்றோர் வயிறுவளர்க் கின்ற நாளில்*
*தேன் பிறந்த செந்தமிழைக் காக்க இந்தித்*
*திணிப்பெதிர்த்துத் தீக்குளிக்கத் தமிழ நாட்டில்*
*நான்பிறந்தேன் எனமுழங்கி எரியில் வீழ்ந்தாய்!*
*நல்லோர்கள் வணங்குகின்ற தெய்வ மானாய்!*

*துள்ளுகின்ற இளங்காளைப் பருவம், வாழ்வைச்*
*சுவைக்கின்ற பலஎண்ணக் கோட்டை, இன்பம்*
*அள்ளுகின்ற தேனூற்றாய் இளமை மாறா*
*அருந்துணைவி, 'அப்பப்பா அப்பா' என்றே*
*விள்ளுகின்ற மழலைமொழிக் குழந்தைப் பிஞ்சு,*
*வீரமொடு தனைவளர்த்த பெற்றோர் எல்லாம்*
*உள்ளுகின்ற போதினிலே தாழ்வே, என்றன்*
*ஒண்டமிழே உயர்வென்றே வெந்தாய் சாமி!*

*வயிற்றகத்தும் வாயகத்துந் தமிழை வைத்து*
*வருகின்ற பொருள்பதவி நெஞ்சில் வைத்துக்*
*கயிற்றகத்துச் சென்றாடும் பாவை என்னக்*
*காவடிகள் பலதூக்கித் தமிழைக் காக்க*
*எயிற்றகத்துத் துரும்பெடுக்கும் முயற்சி கூட*
*இயற்றாமல் 'பெரியோர்'வாழ் நாட்டில் செந்தீ*
*வயிற்றகத்துத் தமிழ்காக்கப் புகுந்த தாற்றான்*
*வாயகத்தும் நெஞ்சகத்தும் வாழ்கின் றாய்நீ!*

பிறந்தவரின் தொகைஅதிகம்; தனக்காய் வாழ்ந்து
பிறந்தபயன் ஓராது விலங்கை ஒப்ப
இறந்தவரின் தொகைஅதிகம்; நாட்டிற் காக
இன்னுயிரை எருவாக்கி வரலாற் றேட்டில்
சிறந்தவரின் தொகைகுறைவு; தாய்மொழிக்காய்ச்
சேய், துணைவி நினைவகற்றிச் செந்தீ மூழ்கித்
துறந்தவரின் தொகைகாணேன், ஒருவன் நீயே!
தொல்லுலக வரலாற்றில் முதல்வன் நீயே!

முழங்கிக்கொண் டேயிருக்கும் பரவை; தேனில்
மொய்த்துக்கொண் டேயிருக்கும் ஈக்கள்; மானம்
புழங்கிக்கொண் டேயிருக்கும் தமிழ நாட்டில்
புகைந்துகொண் டேயிருக்கும் விடுத லைத்தீ;
வழங்கிக்கொண் டேஇருக்கும் துளிகள் வானம்!
வாழ்ந்துகொண் டேயிருப்பாள் தமிழாம் நந்தாய்;
வழங்கிக்கொண் டேயிருக்கும் சின்னச் சாமி
வையகத்தில் எந்நாளும் நின்றன் பேரே!

## 19
## வள்ளல் பாவேந்தன் (1967)

வள்ளல் பாவேந்தன் வாரி வழங்கிய
தெள்ளு தமிழ்த்தேன் அள்ளிப் பருகிட
கூடி வாரீர் உலகீர்! - இன்னே
ஓடி வாரீர் உலகீர்!

இருட்டறை யூடே எழுந்தசெஞ் ஞாயிறு!
ஏங்கும் பயிர்க்கென இழிதரு வான்மழை!
புரட்டரை வேரொடு புரட்டும் மறப்புயல்!
பூவினும் மென்மனப் புதுவைத் தென்றல் (வள்ளல்)

அரிமா நோக்கு; ஆணை யிடுங்குரல்;
ஆண்ட எந்தமிழ் அரியணை நெஞ்சம்.
விரிமா நிலத்தில் எவர்க்கும் அஞ்சா
வேங்கை; புரட்சிப் பூங்கா வான (வள்ளல்)

சாதி நெருப்பினைத் தகர்க்கும் நிலைகடல்!
சமயப் புளுகினைப் பொசுக்கும் எரிமலை!
பாதியிற் புகுந்த பழிதரு கொள்கைகள்
பஞ்சாய்ப் பறந்திடப் பகுத்தறி வூட்டிய (வள்ளல்)

அச்சம் பறக்கும், ஆண்மை சுரக்கும்,
ஆமையும் முழங்கு அரிமா ஆகலாம்,
உச்சி வானிடி மார்பினில் ஏற்கலாம்,
ஒவ்வொரு பாடலும் வரிப்புலி உறுமல்! (வள்ளல்)

இருண்ட வீட்டில் இருக்கின் றீரா?
எடுத்துக் கொள்க குடும்ப விளக்கை!
மருண்ட நெஞ்சர் சஞ்சீவிச் சாரல்
வஞ்சியின் பேச்சில் நெஞ்சந் திளைக்க! (வள்ளல்)

சிரித்தறி யாதார் அழகின் சிரிப்பைத்
திறந்தாற் போதும் தீர்ந்திடும் துன்பம்;
உரித்தசெவ் வாழை உயர்சுவைக் காதல்
ஒவ்வொரு நூலிலும் உமைவர வேற்கும். (வள்ளல்)

பாண்டியன் பரிசு வேண்டுமா? வருக!
பைந்தமி ழியக்கப் பாசறை புகுக!
ஈண்டென் அழைப்பினை ஏற்றுவந் தீரேல்
எதிர்பா ராத முத்தமுங் கிடைக்கும். (வள்ளல்)

அள்ளும் நகைச்சுவை நாடகங் காணலாம்;
ஆடை நனையாமல் அருவியிற் குளிக்கலாம்;
பிள்ளைகட் கான பாடலும் உண்டே!
பெற்ற மகாரொடு சுற்றமுஞ் சூழ (வள்ளல்)

## 20
## தென்பொதிகைப் பூங்காற்றே! (1964)

'நிறங்காட்டி மாந்தர்தமை
நீகீழோன் நான்மேலோன்
எனப்பி ரித்தல்

அறமன்று; பிறப்பாலே
அனைவருமே ஒன்றாவர்;
சிறப்பால் பண்பால்

சிறந்தவரைத் தாழ்ந்தவரைத்
தேர்வதுவே முறை என்னும்
செந்நாப் போதன்

குறள்நெறியில் வெள்ளையர்செய்
கொடுமையினை வெளிநாட்டில்
எதிர்த்த வேந்தே!

கத்தியொடு வேட்டெஃகக்
கணத்தோடு பலஉயிரைக்
காவு தந்தே

இத்தரையில் விடுதலையை
எய்துகிற இழிநிலைமை
இருந்த போது

புத்தனைப்போல் வாய்மையொடு
பொறைநிறைந்த அறப்போரில்
ஈடு பட்டு

வித்தகனே! காந்தியண்ணால்!
விடுதலையைப் பெற்றுலகம்
வியக்க வாழ்ந்தாய்!

'பிள்ளையைப்போல் உயிர்களையே
பேணுமவர் பிறிதோர்நாள்
தசையை நச்சிக்

கொள்ளையிடல் முறையாமோ?
கொடுமையிலும் கொடுமை'எனப்
புரட்சி செய்து

'கள்ளருந்திப் புலன்மயங்கிக்
கணிகையரின் தசைநச்சிக்
காசைப் போக்கி

விள்ளரிய படுகுழியில்
வீழாதீர்; உலகத்தீர்!
விழிப்பீர்!' என்றாய்!

தமிழ்நாட்டார் உடைகண்டு
தன்னுடையை மதுரைநகர்
தன்னில் மாற்றித்

தமிழ்நாட்டார் வெளிநாட்டில்
தன்னோடு பாடுபட்ட
தகைமை எண்ணித்

தமிழ்நாட்டில் மறுபிறப்பில்
தமிழ்மகனாய்ப் பிறந்திடவே
ஆவல் கொண்டு

தமிழ்நாட்டில் சிலர்க்கில்லாத்
தமிழ்ப்பற்றால் கையெழுத்தும்
தமிழில் இட்டாய்!

செந்தமிழின் தொகைப்பாட்டே!
தென்பொதிகைப் பூங்காற்றே!
செந்நாப் போதன்

தந்தவொரு திருக்குறளே!
தமிழ்மன்னர் செங்கோலே!
உயிர்கள் வாழ

வந்தவொரு காவிரியே!
வற்றாத தேனூற்றே!
வாழ்வே! எங்கள்

சிந்தையணு ஒவ்வொன்றும்
செறிந்திருக்கும் காந்தியென்னும்
செம்மால்! போற்றி!